# சிதம்பராக் கல்லூரி நூற்றாண்டு

# மலர்

## 1896 - 1996









வெளியீடு :
சிதம்பரக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
வல்வெட்டித்துறை.

# சிதம்பரக் கல்லூரி
# Chithambara College
# நூற்றாண்டு விழா மலர்
# CENTENARY SOUVENIR
# 11-11-1896—10-11-1996

**சிதம்பரக் கல்லூரி**

**பழைய மாணவர் சங்கம்**

CHITHAMBARA COLLEGE

PAST PUPIL'S ASSOCIATION

**வல்வெட்டித்துறை**

VALVETTITURAI

வல்வெட்டித்துறை

VALVETTITURAI

இலங்கை

SRI LANKA

2000

LIBRARY
J/CHITHAMBARA COLLEGE
VALVETTITURAI

## மலர்க்குழு

**திரு. சூ. சே. குலநாயகம்**
தலைவர், பழைய மாணவர் சங்கம்

**திரு. பா. மீனாட்சிசுந்தரம்**
உப தலைவர், பழைய மாணவர் சங்கம்
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச்சங்கம்

**திரு. ஜ. இரத்தினசிங்கம்**
பொருளாளர், பழைய மாணவர் சங்கம்

**திரு. மு. இரவீந்திரன்**
பொருளாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்க

**திரு. சு. குகப்பிரச[illegible]**
நிர்வாக உறுப்பினர், பழைய மாண[illegible]ம்

**திரு. தெ. யோகச்சந்திரன்**
அதிபர்

**செல்வி ஞா. ஞா. மார்சலீன்பிள்ளை**
உப அதிபர்

## கல்லூரிக் கீதம்

திருவளர் கலைதரு சிதம்பரக் கல்லூரி

சேண்புகழ் ஓங்கியே வாழ்க!

மெஞ்ஞான இன்பம் மிகுஞான நிலையை

விஞ்ஞானந் தந்திட வாழ்க!

கல்வியே கண்ணெனும் நன்மகா வாக்கியம்

கற்பவர் நெஞ்சினை யள்ள

சிதம்பரப் பிள்ளை வள்ளல்

செயலரசு தையல் பாகர்

சேவா நிலையமே வாழ்க! மணிக்கொடி

வல்வை மாநகர் எடுத்தே

வானபுகழ் ஓங்கியே வாழ்க

வா[illegible] வாழ்க வாழ[illegible]

சிதம்[illegible] கல்லூரி வ[illegible]ழ்க — எங்கள்

சிதம்பரக கல்லூரி வாழ்க!

எல்லாம் இறைவனில் இருந்து தோன்றி, அவனால் இயக்கப்பட்டு, அவனுள் ஒடுங்குகின்றன என்பதனை விளக்கும் "ஓம்" எனும் பிரணவ மந்திரத்தை உடையதும், எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழுமுயிர்க்கு எனும் பொருள் பொதிந்த "கல்வியே கண்" எனும் மகுட வாகிக்பத்தையும், பூரண கும்பத்தில் மலர்களால் அர்ச்சனை செய்யப்படும் ஏட்டையும் ஓர் கேடயத்தில் உள்ளடக்கியதே எமது கல்லூரியின் சின்னம். இச் சின்னத்தில் காணப்படும் கருநீலமும், வெளிர்நீலமும் எமது கல்லூரிக் கொடியின் நிறங்கள். இந்நிறங்கள் வல்வெட்டித்துறையின் பாரம்பரியத்தை பிரதிபலிப்பனவாகும்.

# பொருளடக்கம்


❊ ஆசிச் செய்திகள்: —06

❊ பிரம்மஸ்ரீ ப. மனோகரக் குருக்கள்

❊ திரு. பொ. பாலவடிவேல்

❊ திரு. கந்தையா கணேஷ்

❊ திரு. சி. சிவராசா

❊ Mr. V. Velummylum

❊ திரு. வே. தி. செல்வரத்தினம்

❊ வாழ்த்துச் செய்திகள்: —14

❊ திரு. இ. சி. சிவசுப்பிரமணியம்

❊ திரு. ந. யோகசிகாமணி

❊ திரு. பா. மீனாட்சிசுந்தரம்

❊ திரு. த. சே. குலநாயகம்

❊ திரு. பொன். வல்லிபுரம்

❊ சிட்னி வாழ் பழைய மாணவர் சங்கம் —19

❊ முன்னுரை —20

❊ அதிபர் அறிக்கை —22

❊ சிதம்பரக் கல்லூரியின் வரலாறும் அதன் வளர்ச்சியும்
*பா. மீனாட்சி சுந்தரம்* —25

❊ Down The Corridor of Time
*S. C. Manicavasagar* SLAS —50

❊ Our Teachers.
*R. Kathamuttu* B A. (London) —53

❊ Chithambara College - A Centenary
Some Footprints in the Sands of time.
*R. S. Sivasubramaniam* C. A. S —55

❊ Reminiscences
*M. Kanagalingham* —60

❊ Chithambara Remembered
*Somasundaram Sivanarulsundaram* —62

❊ Remembering Chithambara
*Mrs. Sunthary Nithanasundaram* —68

❊ Down Memory Lane
*S. Patkunarajah* —74

❊ எங்கள் அன்னைக்கு
*நடராசா சிவரத்தினம்* —77

❊ சிதம்பராவின் முன்னேற்றத்திற்கு பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்பு
*பூ. அகமணிதேவர்* —79

❊ நினைவிற்குள் தெரியும் ஆசிரிய முகங்கள்
*சி. செல்லத்துரை* B. A —84

❊ என் இனிய வளாம் சிதம்பராவும் நினைவில் நீங்காப் பெண்ணாசிரியர்களும்
*திருமதி தவமலர் சுரேந்திரநாதன்* —88

❊ வல்வைப் பெரியார் அமரர் ஞா. தையல்பாகர்
*ச. சத்தியமூர்த்தி* —91

❊ அதிபர்கள் வரிசை —96

❊ ஆசிரியர்கள் காலத்துக்குக் காலம் —97

❊ 60 ஆவது தருசின்னப் பாசறையும் எனது அனுபவமும்
*கு. அப்பாத்துரை* —100

❊ இயற்றமிழ் போதகாசிரியர் வல்வை
*ச. வயித்தியலிங்கபிள்ளை (1843—1901)*
*வல்வை ந' நகுலசிகாமணி* —106

* Some Notable Students of Chithambara —109

* வல்வையின் கப்பற் கலை
  பா. மீனாட்சிசுந்தரம் —123

* எங்கள் சிதம்பரா —130

* சர்க்கரை வியாதி
  டாக்டர் க. மயில்வேறும் பெருமாள் —131

* அறிகை ஒவ்வாமைக் கோட்பாடு ஒரு மீள் நோக்கு
  கலாநிதி சபா. ஜெயராசா —134

* தொண்டைமானாறு ஏரியை நன்னீர் ஏரியாக மாற்றும் திட்டம்
  ஓர் மீள்பார்வை
  பேராசிரியர் கார்த்திகேசு - சித்திரவடிவேலு —139

* Thiruvalluvar and Education
  *K. S. Krishnan M. A* —153

* வடமராட்சிப் பாரம்பரியக் கலைகள்
  கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை —156

* சிதம்பரக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்
  கொழும்பு —165

* சிதம்பரக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
  வல்வெட்டித்துறை —180


Lend a heart and lend a hand
  and lift the flag on high!
Let its glorious colours
  give a greeting to the sky!
Dark Sea Blue and Light Sky Blue
  and Blue that crowns the world
Set the flag a flying, boys
  Keep the flag unfurled.

# ஆசிச் செய்தி



''வல்வைசிதம்பரா'' என்ற பெயர் ஒரு மந்திரம் போன்ற மகிமையுடையது. அதேபோல நாடு முழுவதும் பெயர் பெற்ற சிறப்பும் உடையது.

நான் அக்கல்லூரியின் பழைய மாணவன். என்னை தாய் போல் அணைத்து அறிவும், பண்பும் ஊட்டி ஆளாக்கியது சிதம்பரக் கல்லூரி என்றால் அதை மறக்க முடியுமா? நான் மாணவனாயிருக்கும் போது அதிபராக விளங்கிய அருள்சுந்தரம், பதில் அதிபராக இருந்த நடராஜா ஆகியோரை நான் என்றும் மறக்க முடியாது. இவர்களது அன்பு நிறைந்த அரவணைப்பு ஒரு புறமும், கடுமையான கண்டிப்பு மறுபுறமும் மாணவர்களை நெறிப்படுத்தி வளர்த்து எடுத்தன. வல்வை சிதம்பராவின் அனைத்து ஆசிரியர்களும் சிறந்த சேவை மனப்பான்மை மிக்கவர்களாகவும், கண்டிப்பு மிக்கவர்களாகவும் இருந்தவர்கள். இன்று வரை இக்கல்லூரி மிகச் சிறப்பாக வளம்பல பெற்று ஓங்க காரணமானவர்கள் ஆசிரியப் பெருந்தகைகளே.

அது இன்னுமின்னும் வளர்ந்து ஓங்கி புகழ் பல பெறவேண்டும் என வாழ்த்தி, இச் சிறப்பு மலர் நன்கு மலர வேண்டும் என நான் தினமும் பூஜிக்கும் வல்வை வாலாம்பிகாசமேத வைத்தீஸ்வரப் பெருமானை பிரார்த்தித்து ஆசி பல கூறி அமைகின்றேன்.

''லோகா சமஸ்தா சுகினோ பவந்து''

பிரம்மஸ்ரீ ப. மனோகரக் குருக்கள்
பிரதம குரு,
வைத்தீஸ்வரர் சுவாமி தேவஸ்தானம்,
வல்வெட்டித்துறை.

நினைவில் இருக்கட்டும் எந்தப் புத்தகத்தைத் திறந்து பார்த்தாலும் அதில் உங்களுக்கு நிச்சயம் இலாபம் கிடைக்கும்.

— சீனப் பழமொழி

# ஆசிச் செய்தி

வடமாகாணம் வல்லையம்பதியில் அமைந்துள்ள சிதம்பரக்கல்லூரி தனது நூற்றாண்டு விழா கொண்டாடும் இத்தருணத்தில் ஆசிச்செய்தி ஒன்றினை வழங்குவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த காலத்தில் நம் ஊரில் இக்கல்லூரியே ஓர் தனிப்பெரும் சிறந்த ஆங்கிலக் கல்லூரியாக இருந்தது மட்டுமல்ல, நம் ஊரின் மண்ணுக்கும் அதில் வாழ்ந்து வந்த மக்களுக்கும் சிறந்த கல்வியையும் சிறந்த பண்பான கலாசாரத்தையும் வழங்கி வந்தது. இதனால் இவ்வூர் மக்களின் மேலான வாழ்வுக்கு வழியமைத்தது. இக்கல்லூரியில் பயின்ற பெருந்தொகையானோர் நீதிபதிகளாகவும், சட்டத்தரணிகளாகவும், டாக்டர்கள், பொறியியலாளர்கள், அதிபர்கள், பட்டதாரி மற்றும் ஆசிரியர்களாகவும் மற்றும் தனியார், அரசாங்க துறைகளில் கடமையாற்றியும் தற்போது தொடர்ந்தும் கடமையாற்றிக்கொண்டும் வருகிறார்கள் என் எண்ணிப் பார்க்கும் போது இக்கல்லூரி எவ்வாறான மகத்தான சேவையை ஆற்றியுள்ளது என்பது புலனாகும். மேலும் கடந்த காலங்களில் இக்கல்லூரியில் கல்வி கற்றவர்கள் வெளிநாடுகளிற்கும் சென்று பல்வேறு தொழிற்றுறைகளில் ஈடுபட்டு தமது ஊருக்கும் தமது கல்லூரிக்கும் நற்பெயரை ஈட்டிக் கொடுப்பது எல்லோருக்கும் பெருமையளிக்கிறது.

இவ்வாறு தனது மக்களுக்கு பணியாற்றிய மகத்தான இக்கல்லூரி இன்று நாட்டு நிலைமை காரணமாக மிகவும் பரிதாபத்திற்குரிய நிலமையையடைந்துள்ளது என்பது வேதனைக்குரிய விடயமாகும். எப்பாடுபட்டாவது இந்நிலைப்பாட்டை மாற்றி பழைய உன்னத தரத்துக்கு இக்கல்லூரியை உயர்த்துவதற்கு சகலரும் முயற்சி எடுக்க வேண்டும்.

ஊரிலுள்ள இன்றைய இளம் சமுதாயத்தின் விடாமுயற்சியின் மூலமும், இவ்வூர் மக்களின் பரிபூரண ஒத்துழைப்புடன் குறிப்பாக இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் பெற்றோர்களின் நற்பணி, சேவைகளால் இக்கல்லூரியை மீண்டும் ஒரு சிறந்த உன்னதமான நிலைக்கு கொண்டு வரமுடியும். அவ்வாறான முயற்சிக்கும் பணிக்கும் என் ஆசியையும் ஒத்துழைப்பையும் தெரிவித்து இக்கல்லூரி நீடூழி வாழ்ந்து மென்மேலும் சமூகத்திற்கு உன்னதமான பிரஜைகளை வழங்க தனது மாணவச் செல்வங்களிற்கு நல்வழி காட்டும் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணிக்க எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு இறைவனின் நல்லாசியையும் வேண்டி நிற்கின்றேன்.

1166, பாலையூற்று, பொ. பாலவடிவேல்
திருகோணமலை. முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி

உம்தலையில் ரம்பம் போல் நாக்கு இருக்கிறது. கவனமாக இருங்கள்.
அது உம் தொண்டையையே அறுத்துவிடும்.

— எஸ். கே. பெரேல்மேன்

சிதம்பரக் கல்லூரியின் நூற்றாண்டுவிழா

# ஆசிச் செய்தி

இளம் பராயத்திலிருந்து எம்மை வளர்த்து வழிகாட்டி, இன்று மக்கள் சேவைக்காகத் தயார்ப்படுத்திய எமது சிதம்பரக் கல்லூரியின் நூற்றாண்டுவிழா மலருக்குக் கட்டுரை ஒன்றை வழங்குவதில் மிகவும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது குடும்பத்தில் சிதம்பரக்கல்லூரித் தொடர்பு இரண்டாவது உலகயுத்த முடிவுடன் பொலிகண்டி நடராசா மாஸ்டர் அவர்களின் வழிகாட்டலுடன் தொடங்கியது. எனது மூத்த சகோதரர்களான வேலாயுதம், வேலும்மயிலும் ஆகியோரும் சகோதரி கண்மணியும் இக்கல்விக் கூடத்திலே கல்வி பெற வசதியும், வாய்ப்பும் கிட்டியது. அது மாத்திரமன்றி எமது ஊர், அயலூர்களிலுள்ள பெருந்தொகையான மாணவர்களும் எங்கள் ஆசிரியர் பெருந்தகையான நடராசா மாஸ்டர் அவர்களின் அமைதியான அன்பான அரவணைப்புடன் எமது கல்லூரியில் கல்வி கற்பதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. எமது வாழ்நாளில் என்றும் மறக்கமுடியாத, சைவப்பெரியார் மதிப்புமிகு சி. சிவபாதசுந்தரனார் அவர்களின் மாணாக்கரான நடராஜா மாஸ்டர் அவர்கள் பற்றிக் குறிப்பிடுவதாயின் அவரது அரும்பெரும் சமயத்தொண்டுகளும், சமூகத் தொண்டுகளும் அவரை எமது வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ளத் தூண்டியது. எமது ஊர் மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும். சமயத் தொண்டில் ஈடுபடவேண்டும், சமுதாய அபிவிருத்திப் பணியில் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். கிராமம் முன்னேற வேண்டும் என்ற உயரிய நோக்கங்களோடு சிதம்பரக் கல்லூரி ஆசிரியர் என்றரீதியிலே அக் கல்விக் கூட மாணவர்களை நன்கு பிரயோசனப் படுத்திக் கொண்டார்.

எமது இனிய பள்ளி நாட்களை நினைவு கூரும் போது எமது ஆசிரியர் தினமும் உப்புக்கிணற்றடிப் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று கோவிற்பணி ஆற்றுமாறு அன்புக் கட்டளை இடுவார். அத்தோடு பாடசாலைக்கு காலை 8.55 றக்குத் தவறாது சென்றுவிடவேண்டும் எனவும் கட்டளையிடுவார். ஆசிரியரின் அன்புக்கட்டளையை நிறைவேற்றாமல் தப்ப இயலாது. வீட்டில் இருந்து மேற்கே பாடசாலை செல்லும் வழியில் கோவில் காலை 7.30 றக்குப் பூசை முடிந்தவுடன் காலைச் சாப்பாட்டுடன் ஓட்டமும் நடையுமாக மட்டுமட்டாக பாடசாலை வாசலில் செல்ல, எமது ஆசிரியரும் பைசிக்கிளில் வந்து இறங்குவார். ஒரு புன்சிரிப்பு இரண்டு கடமையையும் நிறைவேற்றுகிறோம் என்ற திருப்தியில், மாலை 3. 55 றக்கு முதலாவது பிரார்த்தனை மணி அடித்தவுடன், நாங்கள் வீடு சென்று உதைபந்தாட்டம் ஆடவேண்டும் எனத் தயார்ப்படுவோம். எமது வகுப்பு ஆசிரியரான நாடராஜா மாஸ்டர் கடைசிப் பாடத்தைத் தமக்காக வைத்து, அதுவும் சமய பாடமாக வைத்து அதற்குரிய பாடத்திட்டத்தை அரைவாசிக் காலத்தில் முடித்துவிட்டுத் தமது மாணவர்கள் ஆங்கிலத்தை நன்றாகப் படிக்க வேண்டும் என்பதற்காக முழுக் கவனத்தையும் அப்பாடத்திலேயே செலுத்தி ஒவ்வொரு நாளும் அன்றைய வேலை முடியாது விடின் முதல் prayer bell உடன் stay after 04 என்ற கட்டளையும் வரும். அதன்பின் தொண்டமானாற்றில் இருந்து கொடிகாமம் வரை ஓடிய தட்டி மெயில் பஸ்ஸில் வீடு வந்து சேர்வோம். அத்தினங்களில் பாலாவிப்பாடசாலை உதைபந்தாட்டத்தை மறக்க வேண்டியது தான். வீடுவர 6 மணியாகிவிடும். முகத்தைக் கழுவிவிட்டு அன்னையின் கட்டளைப்படி அப்போது மண்ணெண்ணெய் விளக்கில் மீண்டும் படிப்புத் தொடரும்.

1952ல் இருந்து 1959 வரை கல்விகற்ற இக்கலாசாலையில் தான் எமது வாழ்க்கைக்குத் தேவையான வழிகாட்டுதல்களையும் மனப்பக்குவங்களையும் தலைமைத்துவத்தையும் கற்றுக்கொண்டோம். கல்வி கற்ற மாணவர்களின் மனோவலிமை, சமயப் பற்று, சமுதாய உணர்வைக் கட்டிவளர்ப்பதில் கல்லூரி முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாக இருந்த தையல்பாகர் ஐயா, அதிபராக இருந்த திரு. எஸ். வீ. ஐயங்கார், வெவ்வேறு பாடங்களைக் கற்பித்த ஏப்ரகாம், சிவசைலம், கிருஷ்ண ஐயங்கார், அருள்சுந்தரம், கதிர்காமத்தம்பி, எஸ். வீ. நடராஜா, இரத்தினம், தியாகராஜா, ஜெகானந்தகுரு சுந்தரமூர்த்தி, போன்ற ஆசிரியர்களின் அரும்பணி இன்றும் பசுமரத்தாணி போல் பதிந்து நிற்கின்றது. சைக்கிள் ஓட்டமும், பாதை ஒழுங்குக் கட்டளைகளும் நற்பிரஜைகளை உருவாக்கின.

1960 ல் பாடசாலை விட்டு விலகிய யான் 1961 ல் 18 வது வயதில் எழுதுவினைஞர் சேவையில் சேர்ந்து எமது கல்லூரியில் கற்றுக்கொண்ட பாடமான விடா முயற்சி காரணமாகவும் வயது வந்தோரின் வழிகாட்டல் காரணமாகவும் இலங்கை நிருவாக சேவையில் சேர்ந்து இன்றைய காலகட்டத்தில் கஷ்டப்படும் எம் மக்களுக்குச் சிறிதளவாவது சேவைகளை ஆற்றுவதற்கு ஆண்டவன் அருள்பாலித்துள்ளார்.

''ஓம் கல்வியே கண்'' என்ற மகுட வாசகத்துடன் எமக்குக் கலங்கரை விளக்காக விளங்கி வழிகாட்டிய எமது கல்லூரியில் அரும்பணி ஆற்றிய ஆசிரியப் பெருந்தகைகளையும் நன்றிப் பெருக்கோடு நினைவு கூர்வதோடு, கல்லூரியின் கல்விப்பணி மென்மேலும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் பல்கிப் பெருகி வளர வேண்டும் எனப் பொலிகண்டி கந்தவனப் பெருமானை வேண்டி, வெளியிடும் நூற்றாண்டு விழா மலருக்கு எனது பங்களிப்பைச் செலுத்த சந்தர்ப்பம் அளித்த மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் எனது இதயங்கனிந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்

கந்தையா கணேஷ்
வவுனியா, அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்

முழுக்க முழுக்க சர்க்கரையாகவே இருந்துவிடாதே. உலகம் உன்னை விழுங்கிவிடும். முழுக்க முழுக்க எட்டிக்காயாக இருந்து விடாதே. உலகம் உன்னை உமிழ்ந்துவிடும்.

— பாரசீகப் பழமொழி

## வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர்

## திரு. சி. சிவராசா அவர்களின்

# ஆசிச் செய்தி

சைவமும், தமிழும், வீரமும் தழைத்தோங்க ஒரு நூற்றாண்டு காலமாக கல்வி ஒளி பிரகாசிக்கச் செய்த யாழ் வல்வை சிதம்பராக் கல்லூரியை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

புகழ்பூத்த இக்கல்லூரி கடந்த காலத்தில் பலஆயிரம் சான்றோர்களை உருவாக்கிய கலைக்கோயில். வல்வை மற்றும் அதனோடு இணைந்த கிராமத்து மக்கள் வாழ்வாங்கு வாழ்ந்து வாழ வழிகாட்டியது இக்கல்லூரி. அமரர் திரு. சிதம்பரப்பிள்ளை அவர்களின் பெரும் தியாகத்தால் ஆரம்பித்த இக்கல்லூரி தொடர்ந்தும் பல்லாயிரம் சான்றோர் களை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இருபத்தோராம் நூற்றாண்டில் வாழப்போகும் இன்றைய சிறார்களை அறிந்தவர் களாக, ஆற்றுபவர்களாக, ஆக்குபவர்களாக, இணைந்து வாழ்பவர்களாக பிரச்சினை களை, சவால்களை சமாளிப்பவர்களாக ஆக்கவேண்டியது இக் கல்லூரி அதிபரினதும், ஆசிரியர்களதும் ஏனைய நலன் விரும்பிகளதும் தலையாய கடமையும் பொறுப்புமாகும்.

வாழ்க 'வளர்க'

சி. சிவராசா

வலயக் கல்விப்பணிப்பாளர்,
வடமராட்சி.

எப்படி இருந்தாலும் நீ திருமணம் செய்துகொள். நல்ல மனைவி கிடைத்தால் மகிழ்ச்சியுடன் இருக்கலாம். மோசமான மனைவி கிடைத் தால் துறவியாகிவிடலாம். இரண்டிலும் இன்பம் இருக்கிறது.

— சாக்கிரட்டீஸ்

# Message of Felicitation

It gives me great pleasure to write a few words of felicitation on the eve of the centenary celebrations of Chithambara College which brought me to the present position in life.

I have studied in Chithambara College from 1945 to 1952 and having passed the G. C. E. (O / L) got into the Clerical service and then into the prestigeous SriLanka Administrative Service on 1976.

My remembrance go back to the days when we received our education under distinguished teachers like S. Vannamamalai Aiyangar Esq; Krishna Aiyangar Esq; T. Arulsundaram Esq; S. R. Ariyaratnam Esq; V. Nadarajah Esq; to name a few. I must categorically state that if not for the dedicated team of teachers of Chithambara College, Valvettiturai and surrounding villages would be poor of the educated and enlightened lot who now adore various important positons in public and private life not only in Sri Lanka but also abroad.

We remain grateful to the team of duty consious teachers who have guided most of us to keep our heads straight in the community.

Our gratitude also goes to the founder of the school late Mr. Sithambarapillai and the then Manager Mr. G Thaiyalpagar without whose benevolence Chithambara College would not have been a reality.


The almamater of Chithambara shall pray for the long life of the school and the betterment of the present and past pupils who form the bedrock of the community in and around the township of Valvettiturai.

May God's choicest blessings be showered on Chithambara College.

*V. Velummylum*

Trincomalee. Divisional Secretary,

# காலத்தால் அழியாத புகழ்பூத்த சிதம்பரக் கல்லூரி



யா / சிதம்பரக் கல்லூரி என்பது ஒரு பெரும் கலை விருட்சமாகும் இதன் நிழலில் பயன் பெற்றோர் பெரும் எண்ணிக்கையினர். அந்த வகையில் இக் கல்லூரி என்றும் சிறப்புற வாழவேண்டும் என்ற பெருநோக்குக் கொண்டவர்கள் இப்பாடசாலையின் மாணவர்களாவர்.

ஒரு பாடசாலையின் விருத்தியில் பங்களிக்கும் காரணிகள் பல இருப்பினும் இக் கல்லூரியின் விருத்தியில் பங்களிக்கும் முக்கிய காரணி இக் கல்லூரியின் மாணவர்களாகும். இதற்குச் சான்றாக இருப்பவை இக் கல்லூரியின் பழைய மாணவர்களால் நிர்மாணிக்கப்பட்டு இக் கல்லூரியில் நிமிர்ந்து நிற்கும் இரு பெரும் உறுதியான மாடிக் கட்டிடங்களாகும். வேறு எப் பாடசாலையிலும் பழைய மாணவர்களால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களைக் காண்பது அரிது. புதிய கல்விக் கோட்பாட்டிற்கமைய இப் பாடசாலையின் பழைய மாணவர்களின் பங்களிப்பு இப் பாடசாலையின் பராமரிப்பை நோக்கியதாக உள்ளது.

தற்போது அரச சார்பற்ற நிறுவனங்கள் கட்டிடம் நிர்மாணிக்கும் முன்பு பாடசாலைச் சமூகத்திடம் வாங்கும் உறுதியுரை, அமைத்துக் கொடுக்கப்படும் வளத்தை பராமரித்தலாகும். ஆனால் சிதம்பரக் கல்லூரியின் பழைய மாணவர்கள் உறுதியுரை வழங்காமலே தம்மால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களையும் ஏனைய கட்டிடங்களையும் காலத்துக்கு காலம் யாரும் கேட்காமலேயே சீர்செய்து கொடுப்பது இக்கல்லூரி அன்னைக்கு இப் பழைய மாணவர்களால் செய்யும் அபிஷேகம் போற்தோற்றுகின்றது.

இப் பாடசாலையில் பதின்மூன்று வருடங்கள் ஆசிரியர் பணி செய்தபோது கிடைத்த திருப்தி எனக்கு எப்போதும் ஏற்பட்டது இல்லை என்று கூறுவது மிகையாகாது. இப் பாடசாலைக்கு முதன் முதலில் என்னை நியமித்தபோது விருப்பமின்றி வந்தேன். ஆயினும் இக் கல்லூரியை விட்டுச் செல்லும்போது பெரும்பதவி கிடைத்த போதும் விருப்பமின்றியே சென்றேன். இதற்குக் காரணம் இக் கல்லூரியின் மாணவர்கள் தான். ஆசிரியர் மீது அளவு படாத மதிப்பு, விசுவாசம் கொண்டவர்கள் இக் கல்லூரியின் மாணவர்கள் தான். இப் பாடசாலையில் என்னிடம் கற்ற சகல மாணவர்களும் பாடசாலை விட்டகன்றாலும் என்னிடம் காட்டும் மரியாதை வார்த்தைகளால் கூற முடியாது. இப்பொதும் மிகவும் வயதாகிய பழைய மாணவர்கள் ஐயங்கார், எஸ். ஆர்., கே. வி. என் என்று தமது ஆசிரியர்கள் பற்றி மதிப்புடன் கதைக்கும்போது இக் கல்லூரி மாணவர்களின் வளர்ந்த பண்புதான் எத்தகையது என்பது தெரிகிறது.

யான் இக் கல்லூரியில் கல்வி கற்பிக்க வந்த போது ஒவ்வொரு வகுப்பிலும் மூன்று பிரிவுகள் இருந்தன. மனித வாழ்க்கையில் சுகதுக்கம், ஏற்றத்தாழ்வு வருவது போன்று இக்கல்லூரியிலும் மாணவர் எண்ணிக்கை குறைந்தது. இதற்குப் பல காரணங்கள் இருப்பினும் முக்கிய காரணி எனக் கூறக்கூடியது இக் கல்லூரி அன்னைக்கு அருகில் உள்ள பாடசாலைகளின் தரமுயர்வு, ஊர் மக்களின் புலம் பெயர்வு, புதிய பாடசாலை

யொன்றின் உதயம் என்பனவேயாகும். எனினும் இத்தகைய காலத்து வீராப்புடன் எதிர் நீச்சல் போட்ட கல்லூரி என்னும் பெருமையும் இது கொண்டது. ஏனெனில் தேய்வு ஏற்பட்ட போதும் ஒவ்வொரு வருடமும் குறைந்தது ஒரு மாணவனாவது பொறியியல்/ மருத்துவ பீடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டமையே இதன் எதிர் நீச்சல் பெற்ற வெற்றியாகும். இதற்கு புள்ளிவிபரங்கள் சான்றாக அமையும். இதேபோன்று சாரணீயம், விளையாட்டு என்பனவற்றிலும் முதன்மை பெற்றமை குறிப்பிடக்கூடியது.

''உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்கை நன்றே''

என்னும் புறநானூற்றுப் பாடலுக்கமைய இப் பாடசாலை தேய்வுற்ற காலத்தில் இப் பாடசாலை வளர்ச்சிக்கு உதவி, பழைய மாணவர் சங்கம் புதுமெருகு பெற்று பாடசாலை விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா, புனர்நிர்மாணம், கட்புல செவிப்புல சாதனம், ஆசிரிய வளம் என்பவற்றிக்கு அண்மைக்காலமாக பெரும் நிதி உதவி வழங்குவது ஒரு சிறப்பம்சமாகும். இப் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் இன்னொரு சிறப்பம்சம் பாடசாலை நிர்வாகத்தில் தலையிடாததும், தாம் வழங்கும் உள்ளீடுகளுக்கான வெளியீடு பற்றி நிர்வாகத்தை கேட்காதிருப்பதும் ஆகும். இது ஏனைய சங்கங்களுக்கு ஒரு முன்னோடியான எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

இக் கல்லூரியின் சிறப்பம்சங்களில் ஒன்று இக் கல்லூரிக்குக் கற்பிக்க வந்த ஆசிரியர்கள் பலரும் பதவியுயர்வு பெற்றமையாகும். இக் கல்லூரியில் ஆசிரியர்கள் கற்கக் கூடிய சிறப்பு இருப்பதும், இக்கல்லூரியின் ராசியும் என்று கூறுவது மிகப் பொருத்தமானதாகும்.

எனவே இக்கல்லூரி மென்மேலும் சிறப்புப் பெற்று சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வே. தீ. செல்வரத்தினம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
பருத்தித்துறைக் கல்விக்கோட்டம்.

பருத்தித்துறை

நீங்கள் எந்த வார்த்தையை அடிக்கடி சொல்லுகிறீர்களோ அந்த வார்த்தை ஒருநாள் உங்கள் வாழ்வில் உண்மையாகப் பலித்துவிடும். எனவே தன்னம்பிக்கையுடன் ''வெற்றி வெற்றி'' என்று சொல்லுங்கள்

— நெப்போலியன்

# வாழ்த்துச் செய்தி

வல்வெட்டித்துறை சிதம்பரக்கல்லூரியின் 100 வது ஆண்டுவிழா மலருக்கு இச் செய்தியை அனுப்புவதில் நாம் மிகவும் பெருமையும் பெருமிதமும் அடைகின்றோம்.

காலத்திற்குக் காலம் ஏற்படும் மாற்றங்களை கவனித்து அவற்றை அனுசரித்துப் போவதோடல்லாமல், அவற்றால் முழுமையாகப் பயனடைய வேண்டுமாயின், குறிப்பாக எங்கள் ஊர் மக்களும், அயலூர் மக்களும், ஆங்கிலக் கல்வியை கற்றாக வேண்டுமெனத் தனது தூரதிஷ்டியால் கண்டுகொண்ட பெரியார் திரு. சிதம்பரப்பிள்ளை அவர்கள் ஒரு நூற்றாண்டிற்கு முன்பு ஸ்தாபித்ததே சிதம்பர வித்தியாலயம் ஆகும்.

திரு. தையல்பாகர் அவர்களின் சிறப்பான முகாமைத்துவத்தாலும், மாமனிதரும் புத்திஜீவியுமான கல்லூரி அதிபர் திரு. எஸ். வி. ஐயங்கார் அவர்களின் திறமையான பரிபாலனத்துடன் கூடிய கல்விப் போதிப்பாலும் வழிநடத்தலாலும், சிதம்பரக் கல்லூரி நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக துரித வளர்ச்சியடைந்து ஒராயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலும் கல்லூரியாக பேரும் புகழுடனும் சிறந்து விளங்கியது. தொடர்ந்தும், திரு. ஐயங்கார் அவர்களுக்குப் பின்பு பதவியேற்ற அதிபர்கள் காலத்திலும் கல்லூரி மேன்மேலும் வளர்ச்சியடைந்து வந்தது. கல்லூரியின் வளர்ச்சிக்கு சகல ஆசிரியர்களும், ஊர் மக்களும், பழைய மாணவர்களும் தத்தமது பங்களிப்பைத் தொடர்ச்சியாகவும் மகிழ்ச்சியாகவும் செய்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சிதம்பரக் கல்லூரியின் மாணவர்கள், கல்வியால் உயர்ந்து, பல துறைகளிலும் - நம்நட்டிலும் வெளிநாடுகளிலும் பிரகாசித்து, தமது கல்லூரிக்குக் காலாகாலமாக பெருமை சேர்த்து வந்துள்ளனர். நீதித்துறை, நிர்வாகத்துறை, வைத்தியத்துறை, பொறியியல் துறை, கணக்கியல்துறை, கப்பலோட்டல்துறை, அரசியல்துறை, விளையாட்டுத்துறை, வர்த்தகத்துறை போன்ற எல்லாத் துறைகளிலும் கல்லூரியின் பழைய மாணவர்களைப் புகழுடன் காணலாம்.

இப்படியாகக் கல்லூரி ஓர் உச்சநிலை அடைந்திருந்த காலத்தில் நம்நாட்டில் 1983ம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்தாலும், அதன்பின்பு வடக்கு - கிழக்கு இலங்கையில் நடந்த இலங்கை இராணுவத்தினதும் இந்திய இராணுவத்தினதும் நடவடிக்கைகளின் அனர்த்தங்களாலும், ஊர்மக்கள் பெருமளவில் புலம் பெயர்ந்து தமது பாதுகாப்பிற்காக பிற மாவட்டங்களுக்கும் பிற நாடுகளுக்கும் செல்ல வேண்டிய அவலநிலை ஏற்பட்டதன் காரணமாக, மாணவர் வரவு மிகவும் வீழ்ச்சியடைந்தது. எமது அயல் கிராமங்களும் இக்காலத்தின் கோலத்திற்கு விதிவிலக்கில்லாமையால் அக் கிராமங்களிலிருந்து எமது கல்லூரிக்கு வரும் மாணவர் தொகையும் பாதிக்கப்பட்டது. ஆகவே இந்நிலையிலும் தற்போது எமது கல்லூரியில் பயின்றுவரும் மாணவர்கட்கும், இனி வர இருக்கும் மாணவர்கட்கும், வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியதில் உலகெங்குமுள்ள பழைய மாணவர்களுக்கு ஒரு பெரும் தார்மீகக் கடமை உண்டு. அக் கடமையை செயலாக்கும் வகையில் கொழும்பிலுள்ள பழைய மாணவர்கள் ஒரு மன்றத்தை மீண்டும் ஸ்தாபித்துள்ளனர். அதனூடாக, அரசிடமிருந்தும், இந்நாட்டிலும் வெளிநாடுகளிலுமுள்ள பழைய மாணவர்களிடமிருந்தும், இயன்ற அளவு ஆக்கபூர்வமான உதவிகளைப் பெற்றுக் கல்லூரிக்கு அளிப்பதே மன்றத்தின் நோக்கமாகும்.

எம்மையெல்லாம் வாழவைத்த எமது கல்லூரியை நாம் வாழவைப்போமாக!

இன்னும் பல நூற்றாண்டுகள் எமது கல்லூரி சீரும் சிறப்புடனும் பேரும் புகழுடனும் நிலைத்து சேவை செய்ய நாம் வாழ்த்துகிறோம்!!!

இ. சி. சிவசுப்பிரமணியம்
தலைவர்
பழைய மாணவர் சங்கம்-கொழும்பு.

கொழும்பு.

# வாழ்த்துச் செய்தி

எமது தாயகக் கல்லூரியாம் யா/ சிதம்பரக் கல்லூரியின் 100 ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வெளியிட இருக்கும் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தானங்களில் சிறந்த தானமாம் வித்தியா தானத்தை தம் ஊரவர்க்கு வழங்கும் நோக்கோடு சிதம்பரக் கல்லூரியை, தமது சொந்த வளங்கள் மூலம் ஸ்தாபித்தார் வள்ளல் சிதம்பரப்பிள்ளை. இதனால் பெரும்பேறு பெற்றார் அவர். இக்கல்லூரி இந்த சூழலில் இயங்கியதால் சாதாரணமாக நகரப்புறம் சென்று உயர்கல்வி பெற முடியாதவர்கள் கல்வி வளம்பெற்று தமது வாழ்வில் உயர்நிலை எய்தினர். உயர் நீதிமன்ற நீதியரசர், நீதிபதிகள், சட்டத்தரணிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், டாக்டர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள், மாலுமிகள், வியாபாரிகள் என்ற பட்டியலில் பலரை எமது கல்லூரி உருவாக்கியுள்ளது. சாரணீயத்தில் அகில இலங்கைத் திறமைக்குரிய ராணி கொடியை பல முறை பெற்றும், விளையாட்டு மற்றும் கலை இலக்கியத்துறைகளிலும் பல சாதனைகளை ஈட்டியுள்ளது.

திரு. சிதம்பரப்பிள்ளை அவர்கள் காலத்திலும், பின்பு திரு. ஞா. தையல்பாகர் அவர்கள் காலத்திலும் இக்கல்லூரியில் தொடர்ந்தும் கட்டணம் செலுத்தும் கல்வி முறையிலும், சிலருக்கு கட்டணம் இன்றியும், சிலருக்கு சலுகைக் கட்டணமாகவும் கல்வியை வழங்கியதால், வசதியற்ற பலரும் தமது கல்வி நிலையை மேம்படுத்த ஏதுவாகவிருந்தது. பின்பு இதே முகாமைத்துவத்தின் கீழ் இப்பாடசாலைக்கு அனுசரணையாக முதல்நிலை மாணவர்களை பயிற்றுவிக்கும் பாடசாலையாக சிவகுரு வித்தியாசாலையும் ஸ்தாபிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து வந்த காலங்களில் சிதம்பரக் கல்லூரியின் சுற்றுவட்டாரத்தில் இருந்து இக்கல்லூரிக்கு, உயர்கல்விக்கு மாணவர்களை அனுப்பிய பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட்டதாலும், பெரும் நகரக் கல்லூரிகளுக்கு பயணம் செய்வதற்கு விசேட சலுகை பேருந்துக் கட்டணம் மூலமும் மாணாக்கர்களுக்கு இலகுவாக்கப்பட்டதாலும் சிதம்பரக் கல்லூரியின் மாணாக்கர் தொகை குறையத் தொடங்கியது. பின்பு இந்நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலைமை மேலும் மோசமாகியது தற்போது எமது தாயகக் கல்லூரியின் நிலை நம் எல்லோருக்கும் கவலைப்படுவதற்குரிய ஒன்று என்பது கசப்பான உண்மை.

இதற்குப் பரிகாரம் தேடுவது பழைய மாணவர்களான எமது கடமை. பரிகாரம் பொதுவான சரித்திர, கலாசார, பின்னணியுள்ள பாடசாலைகளை சிதம்பராவுடன் இணைப்பது போன்ற ஒரு புதிய கண்ணோட்டத்திலேயே அமையமுடியும். இன்றைய வல்வையின் சனத்தொகை, மற்றும் வளங்கள் ஆகியவற்றையும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் சிதம்பரக் கல்லூரியில் ஸ்தாபிக்கப்பட்ட மாடிக்கட்டடங்கள், ஆய்வுகூடம், மனையியல்கூடம், விளையாட்டு மைதானம், நாடக அரங்கு, எல்லாவற்றிற்கும் மேலாக 100 (நூறு) வருட பாரம்பரியம், கீர்த்தி ஆகியவற்றைச் சீர்தூக்கி கல்லூரிக்கும், வல்வையையும் அதன் சுற்றாடல் கிராமங்களின் நன்மையையும் கருதி நீண்டகால நோக்கில் நல்லதொரு முடிவுக்கு வரவேண்டும்.

வாழ்க சிதம்பரா
வளர்க எம்மக்கள் கல்வி

மாவட்ட நீதிமன்று,
கொழும்பு.

ந. யோகசிகாமணி
மாவட்ட நீதிபதி, கொழும்பு.

சிதம்பரக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின்



# வாழ்த்துச் செய்தி

ஈழத்துக் கல்விப் பாரம்பரியத்திலும், வளர்ச்சியிலும் அந்த வளர்ச்சிக்கான பங்களிப்பை வழங்குவதிலும் வடமராட்சிப் பகுதிக்கு முக்கிய பங்குண்டு. சுருக்கமாகச் சொல்லப் போனால் மூளை வளத்திற்குப் பெயர்பெற்றது வடமராட்சி என்றே கூறலாம். இத்தகைய கல்விப் பாரம்பரியத்தினை வடமராட்சி கொண்டிருப்பதற்கும், வளர்ச்சியுறச் செய்வதற்கும் இப்பகுதியின்கண் அமைந்துள்ள கல்லூரிகளின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும் இந்த அடிப்படையில் சிதம்பராவும் தன் பங்களிப்பை வழங்கியுள்ளது என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

மனித இனத்தின் அழியாத சொத்தான கல்வியைப்பெற, ஏற்ற வசதிகள் இன்றி இருந்த கால கட்டத்தில் அதுவும் எமது நாட்டை பிரித்தானியர் என்கின்ற அன்னியர் ஆட்சி புரிந்த காலத்தில் வல்வையையும் அதனை அண்டிய அயலூரிலும் வாழும் சிறார்கள் ஆங்கிலக்கல்வியைப் பெற்றுக்கொள்ள ஓர் கல்விக்கூடம் இல்லாத குறை இருந்தது. இக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்குடன் சைவச் சூழலில் ஆங்கில மொழி மூலம் கல்வியைப் போதிக்கும் நோக்குடன் பெரியார் சிதம்பரப்பிள்ளை அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது எமது சிதம்பரக் கல்லூரி. அன்ன சத்திரம் ஆயிரம் கட்டல், ஆலயம் பதினாயிரம் எழுப்புதல் இப்படிப்பட்ட பணிகள் அனைத்திலும் சிறந்தது ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்ற பாரதி பாடலின் உட்பொருளை உன்னிப்பாகக் கவனிப்போமானால் கல்விப் பசி கொண்டு அலைபவர்களுக்கு அவற்றை வாரி வழங்கும் கல்விக் கூடங்களின் மாண்பையும் மதிப்பையும் காணலாம். இத்தகைய சீரும் சிறப்பும் மிக்க கல்லூரிகளில் ஒன்றான எமது சிதம்பரா நூற்றாண்டைப் பூர்த்தி செய்து நூற்றாண்டு விழா மலர் ஒன்றினை வெளியிட பழைய மாணவர் சங்கம் ஆவன செய்துள்ளதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இம் மலர் கல்லூரியின் நூற்றாண்டுகால வரலாற்றினை ஆவணப்படுத்தும் நூலாக அமைவதுடன் சிதம்பராவின் புகழையும், பெருமையையும் தெரியப்படுத்துவதோடு அறிஞர்கள் பலரது ஆக்கங்களையும் தாங்கி வருகின்றது. இம் மலர் சிறப்புடன் பவனிவர எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆசிரியர் பற்றாக்குறை, நிதிவளம் போதாமை போன்ற குறைபாடுகளுக்கு மத்தியில் பல பின்னடைவுகளைச் சந்தித்தும் கூட இக்கல்லூரியினால் ஆண்டுதோறும் உருவாக்கப்பட்ட அறிஞர்கள், கல்விமான்கள் போன்றோரது சேவையை எமது இளம் சந்ததியினர் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளார்கள். இந்த நிலமை மாறி எம் எதிர்கால சந்ததியினரும் இவர்களது சேவையைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும். அத்தோடு வசதி வாய்ப்புக் குறைந்த திறமை மிக்க மாணவர்கள் உயர்கல்வி கற்பதற்கு ஏதுவாக ‘‘புலமைப் பரிசில் நிதியம்’’ ஒன்று ஏற்படுத்தப்படல் வேண்டும். இப்பணிக்கு சகலரும் தமது பங்களிப்பினை வழங்குவதுடன் இளம் சந்ததியினர் புதிய வரலாறு படைக்க முன்வர வேண்டும்.

கல்லூரி மேலும் பல பணிகளைப் புரிந்து வருங்காலத்திலும் பல துறைகளிலும் சாதனை புரிய வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்.

பா. மீனாட்சிசுந்தரம்
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

வல்வெட்டித்துறை.

# வாழ்த்துச் செய்தி



வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் நூற்றாண்டை முன்னிட்டு கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ''நூற்றாண்டு மலர்'' ஒன்றினை வெளியிடுவது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். கல்லூரி ஆண்டு தோறும் சஞ்சிகை வெளியிடாத போதும் சில சஞ்சிகைகளை காலத்திற்குக் காலம் வெளியிட்டு வந்துள்ளது. ஆனால் இந் ''நூற்றாண்டு மலர்'' கல்லூரியின் அருமை பெருமையை பலரும் தெரிந்து கொள்ளவும் வரும் சந்ததியினர் அறிந்து கொள்ளவும் உதவும் என்பதில் ஐயமேதுமில்லை.

நூறு ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த பெரியார் கு. சிதம்பரப்பிள்ளை அவர்களால் ''English Boys' School'' என ஆரம்பிக்கப்பட்டு இன்று உயர்கல்லூரியாக சிதம்பரக் கல்லூரி விளங்குகின்றது. ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' என்பதை நன்குணர்ந்தே எமது கல்லூரிச் சின்னத்தில் ''கல்வியே கண்'' என்ற மகுட வாக்கு பொறிக்கப்பட்டுள்ளது. இச்சின்னம் பொறிக்கப்பட்ட கருநீலமும், வெளிர்நீலமும் கொண்ட மணிக்கொடி உயர்ந்து பட்டொளி வீசிப்பறக்க வேண்டும். இதற்கு இங்கும், வெளிநாடுகளிலும் உள்ள பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் பலவகையிலும் உதவ வேண்டும்.

எதிர்கால நாகரிகம் மிக்க சமுதாயத்தை உருவாக்கும் பாரிய கடமையை இக்கல்லூரி இன்னமும் கொண்டுள்ளது. குறிப்பாக விஞ்ஞானத்திலும், தொழில்நுட்பத்திலும் உலகம் வேகமாக முன்னேறி வரும் இக்கால கட்டத்தில் கொண்டிருக்கும் கடமை முக்கியமானது. கல்விமான்களை, நற்பிரஜைகளை, சமூக சேவகர்களை உருவாக்கிய எம் கல்லூரி கடந்த சிலகாலமாக சோதனைக்கு உட்பட்டிருந்தாலும், எதிர்காலத்தில் சிறந்து விளங்க வேண்டும். பலரும் பயன்பெற கல்லூரி நிர்வாகத்திற்கு உதவ யாவரும் முன் வர வேண்டும். வல்வெட்டித்துறையில், கொழும்பில், வெளிநாடுகளில் எம் கல்லூரிப் பழைய மாணவர் சங்கங்கள் இயங்குவது கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவுவது மட்டுமல்லாது. உற்சாகமூட்டி சமுதாய வளர்ச்சிக்குத் துணையாகவும் இருப்பதோடு கல்லூரிப்பாரம்பரியம் பண்பாடுகள் பேணப்படவும் உதவும்.

கல்லூரியின் தோற்றமும் வளர்ச்சியும் அதன் நோக்கிலிருந்து வழுவாது எதிர்காலத்திலும் சமூகம் பயன்பெற எம் கல்லூரி சேவிக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்க வளர்கவென வாழ்த்துகின்றேன்.

Let Us Attempt Great Things For Education!
Let Us Expect Great Things From Education!

ஆ. சே. குலநாயகம்
தலைவர், பழைய மாணவர் சங்கம்,
வல்வெட்டித்துறை.

# வாழ்த்துச் செய்தி



"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்ததுவே." இந்த தாரக மந்திரத்தை எங்களுக்கெல்லாம் படிப்பித்த எங்கள் உயிரிலும் மேலான கல்லூரிக்கு நூறுஆண்டுகள் முடிந்து விட்டது என்பதை எனது எழுபத்தொராவது வயதில் அறிந்து அளவிலா ஆனந்தம் அடைகின்றேன்.

திரு. தையல்பாகர் அவர்கள் முகாமையாளராகவும், திரு. வண்ணமாமலை ஐயங்கார் அவர்கள் அதிபராகவும் இருந்த காலகட்டத்திலிருந்து திரு. அருள்சுந்தரம் அவர்கள் அதிபராக கடமையாற்றிய காலம் மட்டும் சிதம்பரக் கல்லூரியோடு ஈடுபாடு கொண்டவன் நான். கொழும்பிலே பழைய மாணவர் சங்கம் உருவாகி நடைபெற்ற காலகட்டத்தில் நான் பல ஆண்டுகள் அதன் செயலாளராகப் பணியாற்றி மேல் மாடிக் கட்டிடமும் விஞ்ஞான கூடமும் அமைத்துக் கொடுத்தோம் என்பதை நினைக்கும் பொழுது பெருமையாகவுள்ளது.

இவ்வளவு இன்னல்களுக்கும், கஷ்டங்களுக்கும் மத்தியில் பழைய மாணவர் சங்கத்தின் முயற்சியால் நூற்றாண்டுமலர் வெளிவர இருப்பது மகிழ்ச்சிக்குரியது.

தங்கள் தொண்டு சிறக்க எல்லாம் வல்ல உலக மாதா மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தாழ்பணிந்து வேண்டிக்கொள்கின்றேன்!

பொன். வல்லிபுரம்
தர்மகர்த்தா,
மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்,

கொழும்பு.

உலகில் மிகக்கடினமானவை மூன்றே மூன்று மட்டுமே, அவை இரகசியங்களைக் காப்பது. நமக்குப் பிறர் செய்த தீங்கை மறப்பது. ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழிகளில் செலவழிப்பது.

— ஷிலோன்

# சேவையின் நற்பணி தொடரட்டும்

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவையொட்டி - சிறிது காலம் தாழ்த்தியேனும் — மலர் ஒன்றினை வெளியிடுவது குறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

வடமராட்சிக் கல்விப்பாரம்பரியத்தில் சிதம்பரக் கல்லூரி முக்கிய இடம் வகித்து வந்துள்ளது.



பருத்தித்துறை தொடக்கம் தொண்டைமானாறு வரையிலான மாணவர்கள் மட்டுமல்லாது பிறமாவட்டத்தவர் கூட, ஊரில் தங்கியிருந்து எமது கல்லூரியில் கற்றமை நேற்றைய வரலாறு.

கடந்த இரு தசாப்தங்களில் நாட்டின் இனப்பூசலால் ஏற்பட்ட யுத்தம் காரணமாக மக்கள் மட்டுமல்லாது கல்லூரியும் இடம் பெயர்ந்து இருந்தமை கசப்பான அனுபவமாகும்.

கல்லூரிக்கு ஏற்பட்ட சேதங்களும் அளப்பரியவை. இதன் பின்னணியில் எமது பிரதேசத்தின் பெரிய கல்வி நிறுவனமாக விளங்கும் எமது கல்லூரி 21ஆம் நூற்றாண்டில் வாழ்க்கைத் தேவைகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய உசந்த கல்வியை வழங்கவேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளது.

அதுமட்டுமல்லாது கல்வியிலும் கற்பித்தலிலும் சற்றுப் பின்னிற்கும் நாம், கணனிப் பயன் பாட்டையும் முன் எடுத்து நவீன உலகில் ஏனையவர்களுக்குச் சமமாக எமது மக்கள் முன்னேற வகை செய்யப்பட வேண்டியுமுள்ளது.

கடந்த காலங்களில் தன்னலமற்ற சேவை செய்த ஆசிரியர்கள், அதிபர்கள் பெரிதும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அவர்கள் இட்ட அத்திவாரத்தைப் பின்தொடர்ந்தவர்கள் சிறப்புற நிறைவேற்றி வந்தனர்.

அது மட்டுமல்லாது ஊர்ப் பெரியவர்களும் வள்ளல்களும் கல்லூரியின் வளர்ச்சியில் பெரிதும் உதவி வந்தமை குறிப்பிடத்தக்கது.

வள்ளல் சிதம்பரப்பிள்ளை அவர்களால் 1896 கார்த்திகை 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரியின் வளர்ச்சியில் முகாமையாளராக சுமார் 60 வருடங்கள் சேவை புரிந்த அமரர் தையல்பாகர் அவர்களும், தென்னிந்தியாவிலிருந்து வந்து சுமார் 30 வருடங்கள் அதிபராகக் கடமைபுரிந்த அமரர் வண்ணமாமலை ஐயங்கார், மற்றும் சிவசைலம்ஐயர், கிருஷ்ணன் ஐயங்கார் அவர்களும் என்றென்றும் நினைவு கூரப்பட வேண்டியவர்களாவர்.

கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டுத்துறையிலும், சாரணியத்திலும் முன்னைய காலங்களில் சிறந்து விளங்கியதுபோன்று எதிர்காலத்திலும் சிறந்துவிளங்க ஆவன செய்யப்பட வேண்டும்.

இந்த வகையில் பழைய மாணவர்கள் காட்டிவரும் ஆர்வம் பாராட்டப்பட வேண்டியதாகும்.

பெரும்பாலான மக்கள் இடம்பெயர்ந்துள்ள இன்றைய நிலையிலும் கொழும்பு பழைய மாணவர் சங்கம் வல்வெட்டித்துறைக் கிளையோடு இணைந்து பலவிதத்திலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஊக்குவித்து வருகின்றமை கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இதனைப் பெற்றோரும் நன்குணர்ந்து மாணவர்களை வளர்த்தெடுப்பதன் மூலம்-தாமும் தமிழ்ச் சமூகமும் பெருமைபெற வாழ்த்துகிறேன்.

தம் கடமையைச் சிறப்புற, நிறைவேற்றி வரும் அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துவதோடு, கல்வி உலகில் புகழ்வீசக் கல்லூரி வளர்ந்தோங்கிப் பல நூற்றாண்டுகள் காண எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

நகராட்சி மன்றம்,<br>வல்வெட்டித்துறை.

**ம. க. சிவாஜிலிங்கம்**<br>தலைவர்

சிட்னி வாழ் பழைய மாணவர்

## சிதம்பராவை வாழ்த்துகின்றோம்

வல்வை நகர் என்னும்
வளமான பதியிலே
கல்வியே கண் என்னும்
கருத்தாழம் மிக்க
நல் தாரக மந்திரத்தை
நாயகமாகக் கொண்டு
கல்விச் செல்வத்தைத் தந்து
கலங்கரை விளக்கமாய் நின்று
மெல்ல மெல்ல வளர்ந்து
மேதினியில் ஓங்கி நின்று
எல்லையில்லாப் புகழ் பெற்று
எங்களுக்குப் பெருமை தந்து
நல்லதொரு நாளினிலே
நூற்றாண்டு விழாக் கொண்டாடும்
உள்ளத்திலில் என்றும் இருக்கும்
ஊரின் கல்லூரி சிதம்பராவை
வெல்லும் எமது சிதம்பரக் கல்லூரி
செல்லும் இன்னும் பல நூற்றாண்டுடன்
சிட்னி வாழ் பழைய மாணவர்கள்
சிந்தை மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

ஆக்கம்:- வல்வை. ச. தேவராஜா
(சிதம்பரக் கல்லூரி - பழைய மாணவர், முன்னாள் ஆசிரியர்)

...RY
J/CHITHAMBARA COLLEGE
VALVETTITURAI

சிங்கம் இறந்துவிட்டால் அச்சிங்கத்தை எட்டி உதைக்கத் தன்னாலும் இயலும் என்று ஒவ்வொரு கழுதையும் எண்ணுகிறது.

— ஸாம்பல்பார்

# முன்னுரை

எமது கல்லூரி ஆரம்பமாகி நூறு ஆண்டுகள் கடந்து விட்டன. வெள்ளி விழா, பொன் விழா, வைர விழா என்பன கழிந்து பல்லாண்டுகளாகி நூற்றாண்டு விழாவில் கால் பதிந்துள்ளது. இக்காலப்பகுதியில் எமது கல்லூரி ஆற்றிய சேவைகள், புரிந்த சாதனைகள், முகம் கொடுத்த சோதனைகள் பலப்பல. பல்லாண்டுகாலம் பெரும் முயற்சி செய்து பெற்ற பேறுகளை, ஆற்றிய சேவைகளை, கல்லூரியின் வளர்ச்சி, பயன்பாடுகள் ஆகியவற்றை வெளிக்கொணர்வதற்கு ஏற்ற சாதனமாக விளங்குவது இத்தகைய மலர் ஒன்றே.

சென்ற 11-11-1996 ல் கல்லூரியின் நூற்றாண்டு விழாவுடன் மலர் ஒன்றை வெளிக் கொணர பழைய மாணவர் சங்கம் முயற்சியினை மேற்கொண்டது. நூற்றாண்டு காலமாக எமது சமூகத்திற்குத் தொண்டாற்றிய சிதம்பராவின் வளர்ச்சிப் பாதையின் அடிச் சுவடுகளை மீள ஒருமுறை பார்ப்பதற்கு இந்த நூற்றாண்டு மலர் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதன் மூலம் வருங்காலச் சந்ததியினரையும் கல்லூரியின் வளர்ச்சிப் பாதைக்குத் தங்கள் பங்களிப்பைச் செய்யத் தூண்டும் ஒரு உந்து சக்தியாக அமையும் என்ற நோக்கமும் இருந்தது. நூற்றாண்டு விழாவினை ஓரளவு திருப்தியாகச் செய்யும் நோக்குடனும் நூற்றாண்டு மலர் ஒன்றினை உரிய நேரத்தில் வெளியிடும் நோக்குடனும் எடுக்கப்பட்ட எமது முயற்சிகளுக்குப் பல முட்டுக் கட்டைகள், தடைகள் ஏற்பட்டன. நாட்டில் ஏற்பட்டிருந்த குழப்பநிலை காரணமாக பெரும்பாலான ஊர்ப் பொதுமக்கள் இடம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் சென்றுள்ளனர். இதனைச் சுட்டிக்காட்டி மலர் வெளியிடுவது அவசியம்தானா என்ற கேள்வியும் எழுந்தது. கல்லூரி இராணுவ முகாமுக்கு அருகாமையில் இருந்த காரணத்தினாலும், இராணுவ நடவடிக்கை காரணமாக கல்லூரி இருந்த இடத்தை விட்டு கொம்மந்துறை, வல்வைக் கல்விமன்றம், வல்வெட்டி ஆகிய இடங்களுக்குச் சென்ற காரணத்தாலும் எமது கல்லூரியின் வரலாற்றை, பாரம்பரியத்தை, சாதனைகளை எடுத்தியம்ப வல்ல முக்கிய ஆவணங்களில் பெரும்பாலானவற்றை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

எமது முயற்சிகளை மேற்கொள்ள ஏற்படும் செலவினங்களுக்கான நிதி வசதியும் போதுமானதாக இருக்கவில்லை. எனினும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரின் விடா முயற்சி, பேருதவி ஆகியவற்றினாலும், வெளிநாடுகள், பிற மாவட்டங்கள் ஆகியவற்றில் வாழும் பழைய மாணவர்களின் நிதி உதவியினாலும் இடையில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள், தடைகள் ஆகியவற்றைத் தாண்டி மலரினை வெளியிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இன்று உங்கள் கைகளில் இந்த மலர் தவழ்கிறது.

இயன்றவரை பெறக்கூடிய விபரங்கள், தகவல்கள், சான்றுகள், கல்லூரி புரிந்த சாதனைகள், மாணவர்கள் புரிந்துள்ள சாதனைகள் போன்றவற்றைப் பிழையறத் தருவதற்கு எம்மாலான முயற்சிகள் யாவற்றையும் மேற்கொண்டுள்ளோம்.

கல்லூரியின் நூற்றாண்டு காலச் சம்பவங்களை, நிகழ்வுகளை எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்க வேண்டுமென்ற எமது எதிர்பார்ப்பு இம்மலரின் மூலம் முழுமையாக இல்லாவிட்டாலும்கூட ஓரளவு வெளிக்கொணரப்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. இம்மலரினைத் தக்க வகையில் பேணி எதிர்காலச் சந்ததியினருக்கு எமது கல்லூரியின் நூற்றாண்டுகால வரலாற்றை வழங்க வேண்டியது இம்மலரினைப் பெற்றுக் கொள்ளும் ஒவ்வொருவரினதும் தலையாய பணியாகும்.

இம்மலரினை வெளிக்கொணர்வதற்கு எல்லா வகையிலும் உதவி புரிந்த சகலருக்கும் எமது நன்றிகள்.

மலர்க்குழு

இலட்சியத்தை அடிக்கடி மாற்றக் கூடாது, மாற்றினால் பிரகாசிப்பது கடினம் ஆனால் அவசியமானால் இலட்சியத்தை அடைவதற்கான வழிமுறைகளை, பாதைகளை மாற்றிக் கொள்ளலாம்.

— நெப்போலியன்

இரகசியத்தைக் காப்பாற்றுங்கள். அது உங்கள் அடிமை. அதை வெளியிடுங்கள். அது உங்கள் எஜமான்.

— வில் ஹென்றி

# அதிபரின் அறிக்கை

## கல்வியே கண்

இன்று எமது கல்லூரியின் நூற்றாண்டு மலருக்கான அறிக்கையை சமர்ப்பிக்கின்ற பணியை எனக்களித்த இறைவன் பாதங்களைப் பணிந்து மகிழ்ச்சியடைகின்றேன். கடலும் கடல் சூழ்ந்த நெய்தல் நிலத்தில் ஒரு நூற்றாண்டாக வளர்ந்து ஆலமரம் போல் விரிந்து இந்த வல்வைச் சிறார்களுக்கும், சூழவுள்ள ஏனைய பல கிராமத்து மாணவர்களுக்கும் கண்ணெனக் கல்வியைத் தந்த சிதம்பரக் கல்லூரியின் வரலாறு சிறப்பானது.

எம் மூத்த சான்றோர்கள் கல்லூரியின் நல்வாக்கியம் ''ஓம் கல்வியே கண்'' என வரைந்தனர். ''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு'' எனும் வள்ளுவர் வாக்கை கல்லூரியுடன் இணைத்தனர்.

குரு சிஷ்ய முறையில் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட கல்வி முறை இன்று மாணவர் மையம் கொண்டு, பற்பல சீர்திருத்தங்கள் கண்டு, அந்நிய மொழியில் இருந்து சர்வகலாசாலை வரை தாய்மொழிக்குப் புகுந்து எண்ணற்ற அறிவியல் சிந்தனைகளை சேர்த்து கூர்மையடைந்து புதிய நூற்றாண்டில் விஞ்ஞானத்தின் எல்லையைத் தொட்டு கணனியுகத்தில் பிரவேசிக்கின்றது.

நூற்றாண்டு காலத்தைத் தாண்டி நிற்கும் எமது சிதம்பரக் கல்லூரியைத் தோற்றுவித்த பெரியார் திரு. கு. சிதம்பரப்பிள்ளையை இந்தச் சந்தர்ப்பத்திலும் இனிவரும் எக்காலத்தும் நன்றியுடன் வல்வை மக்கள் நினைவு கூர்ந்து சிந்தையில் மறவாது போற்றுவார்கள்.

ஒரு கல்லூரியின் பிரதான பணி அக்கல்லூரி அமைந்துள்ள பிரதேச மக்களிடையே சிறந்த கல்விமான்களையும், தொழில் நுட்பவியலாளர்களையும், சிறந்த மருத்துவர்களையும் உருவாக்குவதுடன்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கொண்ட நற்பிரஜைகளை உருவாக்குவதே ஆகும். சிதம்பரக் கல்லூரி இப்பணியை திருப்திகரமாகப் பூர்த்தி செய்துள்ளது. தொடர்ந்தும் இப்பணியைச் செய்து வருகின்றது. சிதம்பராவின் மாணவர்கள் ஈழத்திருநாட்டில் சகல துறைகளிலும் சகல படிநிலைகளிலும் புகழ்பூத்த சேவை ஆற்றி வருகின்றார்கள். இவர்களின் தனிப்பட்ட சாதனைகளும், சேவைகளும் இம்மலரில் ஆங்காங்கே நினைவில் இருத்தி குறிப்பிடப்பட்டிருப்பதைக் காண்பீர்கள்.

பாடசாலையின் பரிணாம வளர்ச்சிப் படிகளில் மூன்று பிரிவாக அதிபர்கள் சிறந்த சேவை ஆற்றியுள்ளார்கள். ஆரம்பப் பாடசாலையாக இருந்த காலத்து அதிபர்கள் (1896-1923) இடைநிலைப் பாடசாலையாக இருந்த காலத்து அதிபர்கள் (1923-1955) உயர்தரப் பாடசாலையாக இருந்த காலத்து (1955 தொடக்கம் இன்று வரை) அதிபர்கள். இவர்களின் சேவைகளை ஏற்றியும் போற்றியும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு பாடசாலையின் உயர்ச்சியில் முக்கிய பங்காற்றுபவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள், பழைய மாணவர்களுமாவார்கள். கல்லூரியின் கொடி பட்டொளி வீசி, பறந்த காலத்தில் திருகோணமலைக் கிளை பழைய மாணவர் சங்கம், கொழும்புக்கிளை பழைய மாணவர் சங்கம், கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் சிறந்த

கல்லூரி அதிபர்



திரு. செ. யோகச்சந்திரன் SLPS II

சேவைகள் பாராட்டுக்குரியவை. திருகோணமலைக் கிளை மற்றும் கொழும்புக்கிளையைச் சேர்ந்த பழைய மாணவர் சங்கத்தினர் பாடசாலைக்கு அமைத்துத் தந்த (70 x 30) இரண்டு மாடி பௌதீக, இரசாயன, தாவரவியல், விலங்கியல், பரிசோதனைக் கூடங்கள் கல்லூரியின் மாணவர்கள் விஞ்ஞானக் கல்வியைக் கற்பதற்கு பேருதவியாக இருந்து வருகின்றது.

இன்று உலகம் அறிவியல் பூர்வமாகவும், விஞ்ஞான பூர்வமாகவும் இயங்குகின்றது. அறிவியலும், விஞ்ஞானமும் உலகததை ஆட்கொண்டு நடத்துகின்றது. பாடசாலையில் விஞ்ஞானக்கல்வி அறிமுறை செய்முறை எனப்பிரித்துப் போதிக்கப்பட்டது. திருமுருககிருபானந்த வாரியார் கூறினார்; கேட்பதை விட ஒன்றைப் பார்க்கும் பொழுது மூளையின் கலன்கள் சிறப்பாக அதைப் பதிக்கின்றது. அதற்கும் மேலாக அதைச் செய்கின்ற போது பசுமரத்தாணிபோல் மூளையில் பதிகின்றது. அன்று ஆசிரியர்கள் மாணவர்கள பயிற்சிகளைத் தினமும் திருத்தம் செய்து மாணவர்கள தவறுகளை உடனுக்குடன் சீர் செய்தார்கள். இன்று கணிப்பீட்டு முறையில் மீண்டும் இந்த நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் கல்விச் சீர் திருத்தம் இலங்கை கல்வி வரலாற்றில் ஏழாவது கல்விச் சீர்திருத்தமாகக் கூறப்படுகின்றது.

ஒரு கல்லூரி மாணவர்களின் வளர்ச்சிக்கு நூலகம், விளையாட்டு மைதானம், விஞ்ஞானகூடம், இன்றியமையாததாகும். கல்லூரியின் நூலகமும், விளையாட்டு மைதானமும் புதுப்பொலிவுடன் சீரமைக்கப்பட்டு வருகின்றது. உயர்தர வகுப்பு மாணவர்கள் தாமாகவே நூல்களைத்தேடி அறிவைப் பெருக்குகின்ற முயற்சி அற்றுப் போய்விட்டதென்றே கூறலாம். அதற்கு நூலகங்களில் சிறந்த தமிழ் நூல்கள், மற்றும் அறிவியல், விஞ்ஞானப் புத்தகங்கள் பற்றாக்குறையும் முக்கிய காரணங்களிலொன்றாகும். இதைக் கற்ற பெற்றாரும் பழைய மாணவர்களும் நிவர்த்தி செய்ய வேண்டும்.

பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் இலத்திரனியல் கல்வி 1980 ஆம் ஆண்டு தொடக்கம் கல்லூரியில் அறிமுகப்படுத்தப்பட்டு, இத்துறையில் துரித வளர்ச்சி மேற்கொள்ளப்பட்டது. வானொலி பேணல், கற்கை நெறியும் இங்கு நடாத்தப்பட்டது. இதில் மாணவர்கள் விருப்புடன் கலந்து கொண்டு கற்றனர். இவை யாவற்றுக்கும் தேவையான நிதி உதவியை தேவை ஏற்படும் போதெல்லாம் பழைய மாணவர் சங்கம் மனமுவந்து அளித்தனர்.

இந்தத் தொழில் நுட்ப அறிவின் வளர்ச்சியால் மாணவர்களிடமிருந்த ஆற்றல் வெளிக்கொணரப்பட்டது. இதை அடியொற்றி 1983 ஆம் ஆண்டு சிறந்த ஒரு பொருட்காட்சி கல்லூரியில் நடாத்தப்பட்டது. இன்றைய உலகில் அறிவியலும் தொழில் நுட்ப அறிவும் இணைந்து நாடுகளின் வளர்ச்சிக்கு ஊன்று கோலாக உள்ளது. கல்லூரியின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான தொழிற் கூடத்தை அமைக்கவும் உபகரணங்களைப் பெறவும் பேராசிரியர் சபா. இராஜேந்திரன் அவர்களின் உதவி போற்றுதற்குரியதாகும்.

கடந்த பதினைந்து ஆண்டு காலப் பகுதியில் கல்லூரியில் கணனி, இலத்திரனியல், கடலகவளக்கல்வி போன்ற பாடங்களை அறிமுகப்படுத்தி இத்துறையில் மாணவர்களை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களை நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

சிதம்பரக் கல்லூரி விளையாட்டுத் துறையிலும், சாரணியத் துறையிலும் அகில இலங்கை ரீதியில் பெயரும் புகழும் ஈட்டியது யாவரும் அறிந்ததே. இத்துறைகளில் கல்லூரிக்குப் புகழீட்டித் தந்த மாணவர் சாதனைகளும் வெற்றிகளும் மலரின் சிறப்புக் கட்டுரைகளாக இணைந்துள்ளன.

தமிழ்ப் போர் ஆரம்பமாகிய காலம் தொட்டு ஆகக் கூடுதலாக பாதிப்படைந்த பாடசாலையெனில் அது சிதம்பரக் கல்லூரியைத் தவிர வேறெதுவும் இல்லை. எண்பதாம் ஆண்டு அளவில் இருந்து போரின் மத்தியில் கல்லூரி துவண்டது. இருப்பினும் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் இவ்விரண்டினதும் பாரிய முயற்சியினாலும் கனடா, ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்களது உதவியினாலும், கல்லூரி தளர்வின்றி நடைபெறுகின்றது.

இவர்களுக்கும், 11-11-86 தொடக்கம் இதுவரை இக்கல்லூரியின் ஆசிரியர்களாகவும், அதிபர்களாகவும் கடமையாற்றுகின்ற எல்லோருக்கும், மற்றும் கல்லூரியின் வளர்ச்சிக்கு சகல துறையிலும் ஊக்கமும், உதவியும் அளித்த கல்வித்திணைக்கள அதிகாரிகளுக்கும் இந்நூற்றாண்டு மலர் வெளியீட்டு மகிழ்ச்சியான நிகழ்விலே சிதம்பரக் கல்லூரியின் சார்பிலே எனது நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்ன சத்திரம் ஆயிரம் கட்டுதல்

ஆலயம் பதினாயிரம் நாட்டுதல்

இன்ன யாவிலும் புண்ணியம் கோடி

ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

— பாரதியார்

நன்றி


திரு. செ. யோகச்சந்திரன்

அதிபர்

சர்க்கரையும் மணலும் ஒன்றாய்க் கலந்திருக்கலாம். ஆனால் எறும்பு மணலை நிராகரித்துவிட்டு சர்க்கரையை எடுத்துச்செல்கிறது. அது போலவே தூய்மையானவர்கள் நல்லதைக் கெட்டதிலிருந்து பிரித்து எடுப்பார்கள்.

— பகவான் ராமகிருஷ்ணர்


# நூற்றாண்டு நாள் அதிபர்



## திரு. சின்னத்தம்பி தங்கராசா

**B.Sc, Dip.in Edu.**

**1995 சித்திரை - 1998 பங்குனி**




நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்ச்சியில் பங்குபற்றியோர்




நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு 11-11-1996ல் நடைபெற்ற சமய வைபவம்

கல்லூரி நிறுவனர்



உயர்திரு. சிதம்பரப்பிள்ளை

கல்லூரியின் நீண்டகால முகாமையாளர்



உயர்திரு. நா. தையல்பாகர்

பா. மீனாட்சிசுந்தரம்
செயலர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

# சிதம்பரக் கல்லூரியின் வரலாறும், அதன் வளர்ச்சியும்

ஈழத்தின் வரலாற்றுப் பெருமை மிக்கது வல்வெட்டித்துறை என்னும் வல்வை நகர். வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய பெருமை, உலக மகாயுத்த காலங்களில் இலங்கை மக்களின் பஞ்சத்தைப் போக்கு முகமாக எண்ணற்ற பாய்க்கப்பல்களை உருவாக்கி இந்தியா, பர்மா, கடாரம் போன்ற நாடுகளிலிருந்து தேவையான உணவு வகைகளைத் தருவித்த பெருமை, சிதைந்து கிடந்த தமிழ்க் கட்சிகள் யாவற்றையும் ஒன்று சேர்த்து ''தமிழர் விடுதலைக் கூட்டணி'' என்ற பெயருடன் உருவாக்கி அதனது முதல் கூட்டத்தையே வல்வையில் நடாத்திய பெருமை போன்ற இன்னோரன்ன பெருமைகளைக் கொண்டுள்ளது வல்வை நகர். ஆறுமுக நாவலர் அவர்களுடன் சமகாலத்தில் வாழ்ந்த சென்னை நகரப் பேரறிஞர்களால் ''இயற்றமிழ்ப் போதகாசிரியர்'' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்ட வல்வை ச. வைத்திலிங்கபிள்ளை என்ற பெருமகனைப் பெற்றதும் வல்வையே. இப்படிப்பட்ட பெருமைகளைக் கொண்ட வல்வையின் கண் தலைசிறந்த கல்விப் பீடமாக விளங்கி ஒரு நூற்றாண்டு காலக் கல்விப் பணியைப் பூர்த்தி செய்து தலை நிமிர்ந்து நிற்கிறது எமது சிதம்பரக் கல்லூரி. இக்கல்லூரியின் வளர்ச்சியில் தங்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்களின் பணியே இக்கல்லூரி தலைசிறந்த கல்விப் பீடமாக மிளிர்வதற்குக் காரணமாகும். இத்துணை பெருமை மிக்க ''சிதம்பரக் கல்லூரியின்'' வரலாற்றை இந்த நூற்றாண்டு விழா மலரில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சிதம்பராவின் வரலாற்றை எழுதப்புகு முன்னதாக இக்கல்லூரியைத் தாபித்த வள்ளல் கு. சிதம்பரப்பிள்ளை அவர்களைப் பற்றி சில வார்த்தைகள் கூறுவது சாலப் பொருந்தும். இவர் 1861ம் வருடம் பிறந்தார். இலக்கண, இலக்கியங்களைக் கற்றுத் தேறியதோடு ஆங்கிலம் கற்று அரசசேவையில் சேர்ந்து பணியாற்றினார். இவர் மாணவராக இருக்கும் காலத்தில் வல்வெட்டித்துறையில் ஆங்கிலக் கல்லூரி இல்லாத காரணத்தினால் ஐந்து மைல்களுக்கு அப்பாலுள்ள பருத்தித்துறையிலுள்ள ''உவெஸ்லியன் மிஷன் மத்திய பாடசாலை'' என்ற பெயரைக் கொண்டிருந்த ''ஹாட்லிக் கல்லூரியில்'' கற்று வந்தார். அக்காலப் பகுதியில் போக்குவரத்திற்கு ஏற்ற வசதிகள் இல்லாத காரணத்தினால் காலையில் ஐந்து மைல்கள் நடந்து சென்று கல்வி கற்றுவிட்டு மாலையில் திரும்பவும் நடந்து வந்தே வீடு சேர்வார். அக்காலத்தில் மிஷனரி பாடசாலைகளில் சட்டதிட்டங்களுக்கமைய கட்டாயமாக மாணவர்கள் நடந்து கொள்ள வேண்டும். தனக்கு ஆங்கிலக் கல்வி கற்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது போல் ஏனையோருக்கும் அதே போல் எண்ணம் ஏற்படும் என்று

பலவற்றையும் சிந்தித்தார். இவையாவற்றையும் கருத்திற்கொண்டு வல்வையிலுள்ள பெற்றோர்கள் யாவரையும் வல்வை நெடிய காட்டுப் பிள்ளையார் கோவிலடிக்கு ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் படி அழைப்பு விடுத்தார். இக் கூட்டத்தில் தான் ஆங்கிலக்கல்வி கற்பதில் முகங் கொடுத்த சிரமங்களை எடுத்து விளக்கி வல்வையிலும் அதன் அயல் கிராமங்களிலும் வாழுகின்ற சிறார்கள் உலகுடன் உறவாட உதவும் மொழியாகிய ஆங்கிலத்தைக் கற்கவும் உயர் கல்வி பெறவும் முடியாதுள்ளவர்களாக இருப்பதாகவும் எடுத்துக்கூறி வல்வை மாணவர்களது முன்னேற்றத்திற்காக ஆங்கிலக் கல்லூரி ஒன்றினை ஸ்தாபிக்க இருப்பதாகவும் இதனை ஊர்ப் பொதுமக்கள் ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். பொதுமக்களின் ஏகோபித்த ஆதரவு கிடைக்கவே கல்லூரிக்கான கட்டடம் அமைப்பதில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு 1896ம் வருடம் கார்த்திகை மாதம் 11ம் திகதி வல்வை முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள ஆலடியில் ''சிதம்பர வித்தியாலயம்'' என்னும் பெயருடன் இயங்க ஆரம்பித்தது. வள்ளல் சிதம்பரப்பிள்ளையவர்கள் தான் மேற்கொண்ட பணியினை செவ்வனே நிறைவேற்றி 1903ம் வருடம் இறைவனடி சேர்ந்தார்.

ஆரம்பத்தில் ''சிதம்பர வித்தியாலயம்'' என்னும் பெயரோடு முதன்நிலைக் கல்லூரியாக இருந்த சிதம்பரா ஒருவருடத்தின் பின்னர் கல்வித்திணைக்களத்தினால் நன்கொடை வழங்கும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. ஆலடியில் இயங்கிவந்த இந்தப் பாடசாலைக்கு மாணவர் தொகை அதிகரிப்பினால் இடவசதி பற்றாக்குறை ஏற்பட்டது. இதன் நிமித்தம் ஆலடியில் இயங்கி வந்த இப்பாடசாலை 1912ம் வருடம் ஊரிக் காட்டில் அமைந்துள்ள தற்போதைய நிலையத்திற்கு மாற்றப்பட்டது.


ஆரம்பத்தில் 5 ஆம் வகுப்பு வரையிலேயே நடைபெற்றுவந்த இப்பாடசாலை 1923 ஆம் வருடம் இரண்டாம் தரக் கனிஷ்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டதுடன், 1928 ஆம் வருடம் கேம்பிரிஜ் சீனியர் பரீட்சைக்கு மணவர்கள் தோற்றுவதற்கும் அநுமதி வழங்கப்பட்டது. கல்லூரி மேலும் வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து 1935 ஆம் வருடம் லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுவதற்கு ஏதுவாக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவ் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் ஹாட்லிக் கல்லூரிக்கு அடுத்தபடியாக எமது பாடசாலை தரம் ''B'' யைப் பெற்றமையும் இங்கு குறிப்பிட வேண்டும். லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சை வகுப்புகளைத் தொடர்ந்து சிரேஷ்ட பாடசாலைத் தராதர வகுப்புகள் 1942 ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டன.

சர்வகலாசாலைப் புகுமுக வகுப்புகள் ஆரம்பிப்பதற்கு போதுமான வசதிகள் 1935 ஆம் வருடமே இருந்த போதிலும் கூட 1958 ஆம் வருடத்தில் தான் இவ் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

கல்லூரியினால் மேற்கொள்ளப்பட்ட பலதரப்பட்ட வேலைகளையும், நடவடிக்கைகளையும் கருத்திற்கொண்டு கல்வித் திணைக்களம் எமது கல்லூரியை தரம் IIற்கு 1958 ஆம் வருடம் தை மாதம் உயர்த்தியது. மறு வருடமே தரம் 1 க்கு உயர்த்தப்பட்டு ''சிதம்பரக் கல்லூரி'' என்ற பெயரையும் பெற்று இற்றைவரை இந்தப் பெருமையைக் கொண்டிருக்கின்றது.

கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக எமது பிரதேசத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் எமது கல்லூரிக்கு பாரிய சேதமேற்பட்டதுடன், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்ததுடன் கல்லூரியின் பெறுமதிமிக்க பொருள்கள், நூல்கள், முக்கிய ஆவணங்கள் ஆகியவற்றையும் இழந்துள்ளது. கல்லூரி விளையாட்டு மைதானத் திற்கருகாமையில் இராணுவமுகாம் இருந்தமையால் கல்லூரி முன் வாசல் வழியாக மாணவர்கள், ஆசிரியர்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டு

OUR MOST DISTINGUISHED OLD BOY



The Hon. Justice

**MR. P. SRI SKANDA RAJAH**

Judge of The Supreme Court

கல்லூரியின் பின்புறமாக தனியாருக்குச் சொந்தமான காணியூடாக அவர்களது சுவரை உடைத்து வழி செய்து கொடுக்கப்பட்டது. ஒரு கட்டத்தில் ஊரிக்காட்டில் இயங்க முடியாத நிலை ஏற்பட்டு 1985 ஆம் வருடம் வைகாசி மாதம் கொம்மந்தறை தமிழ்க் கலவன் பாடசாலையில் ஒரு பகுதியில் இயங்கி வந்தது. இங்கு இடப்பற்றாக்குறையின் காரணமாகவும், வேறு சில காரணங்களினாலும் கொம்மந்தறையில் தொடர்ந்து இயங்க முடியாத நிலை ஏற்பட்டு அதே வருடம் ஆனி மாதம் தனியார் கல்வி நிறுவனமான வல்வைக் கல்விமன்றத்தில் சில காலம் இயங்கி வந்தது. இதன் பின்னர் 1987 ஆம் வருடம் தை மாதம் வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் ஒரு பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. இங்கு பெரும்பாலான வகுப்புகள் ஓலையால் வேயப்பட்ட கொட்டில்களிலேயே நடைபெற்று வந்தன. இங்கும் எமது ஆசிரியர்களையும், மாணவர்களையும் துரதிஷ்டம் பின் தொடர்ந்தது. 1987 ம் வருடம் ஆடி மாதம் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது சில விஷமிகளால் எமது மாணவர்கள் கல்வி கற்று வந்த ஓலைக் கொட்டில்கள் தீக்கிரையாக்கப்பட்டன. ஒருவாறாக மாற்று இடம் ஒதுக்கப்பட்டு வகுப்புகள் நடைபெற்று வந்தன. 1990 ஆம் வருடம் சுமுக நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து வல்வெட்டியிலிருந்து எமது கல்லூரி பழையபடி ஊரிக்காட்டுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு போதிய வசதிகளற்ற நிலையில் கல்லூரி தற்போது இயங்கி வருகின்றது. இக் குறிப்பிட்ட காலப் பகுதியில் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் கல்லூரியினை இயங்க வைப்பதற்கு எடுத்தமுயற்சிகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

1896ம் வருடம் இக்கல்லூரி தாபிக்கப்பட்ட சமயம் பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. விநாயக முதலியார் அவர்களே முதல் முகாமையாளராக இருந்து பாடசாலையை நடாத்தி வந்துள்ளார். இவரைத் தொடர்ந்து திரு. ஏ. நாகமுத்து அவர்கள் சிறிது காலமும், அவரின் பின்னர் திரு. வீ. அருணாசலம் அவர்கள் சிறிது காலமும் முகாமையாளர்களாக இருந்து கல்லூரியை வழி நடாத்தி வந்துள்ளார்கள். 1901ம் வருடம் முகாமையாளராகப் பொறுப்பேற்ற திரு. ஞா. தையல்பாகர் அவர்கள் 1960ம் வருடம் கல்லூரி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்படும் வரை தொடர்ந்து அறுபது வருடங்கள் முகாமையாளராகப் பணியாற்றி வந்துள்ளார். கல்லூரியினை ஒரு உன்னத நிலைக்குக் கொண்டுவந்தவர் திரு. ஞா. தையற்பாகர் என்றால் மிகையாகாது. இவர் முகாமையாளராக இருந்த காலங்களில் இடைவிடாது புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டும் வந்ததை யாவரும் அறிவர். புதிய கட்டடங்கள் அமைக்கப்படும் போதும், திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும் காலங்களிலும் திரு. தையல்பாகர் அவர்கள் கால நேரம் பாராது தொழிலாளர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குவதுடன் எப்படிப்பட்ட சிரமமான வேலைகளையும் இலகுவாக செய்து முடிப்பதற்கு ஆவன செய்துள்ளார். சிறிய கொட்டில்களாக இயங்கி வந்த கல்லூரியை மாடமாளிகை கொண்ட கல்லூரியாக்குவதற்கு முன்னின்று உழைத்தவர் திரு. தையல்பாகர் அவர்கள். கட்டடங்கள் அமைப்பதற்குப் போதிய இட வசதியில்லாதிருந்த போது இவரது ஆலோசனையுடன் 1959ம் வருடம் களியாட்ட விழா ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டு இதன் மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா 15,000/= ஐக் கொண்டு கல்லூரிக்குத் தென்புறமாக உள்ள 5½ பரப்புக் காணித் துண்டொன்று கொள்வனவு செய்யப்பட்டது. இக் களியாட்ட விழாவில் கல்லூரி மாணவர்களும் பங்குகொண்டு மகிழ்வித்ததுடன் மாணவர்களான சி. கதிர்காமத்தம்பி, அ. சிவானந்தம் ஆகிய இருவர் நிலத்துக்குக் கீழாக ஒரு மணித்தியாலம் இருந்து பலரது பாராட்டையும் பெற்றுள்ளார்கள்.

கல்லூரி ஆரம்பித்த காலம் தொடக்கம் இற்றை நாள்வரை பின்வருவோர் அதிபர்களாக இருந்து கல்லூரியின் முன்னேற்றத்திற்குப் பேருதவி புரிந்துள்ளார்கள்.

01. திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை 1896 தொடக்கம்
02. திரு. ஈ. கே. சுப்பிரமணியம் B. A.
03. திரு. எஸ். இரங்கநாதன் B. A.
04. திரு. ஏ. எஸ். சுந்தரராஜன் B. A.
05. திரு. வீ. சின்னத்தம்பி 1st Class Eng. Trained 1923 — 1928
06. திரு. எஸ். வண்ணமாமலை ஐயங்கார் B. A. — 1929 — 1960
07. திரு. தை. அருள்சுந்தரம் B. Sc. — 1960 புரட்டாதி 1968 மார்கழி
08. திரு. வீ. நடராஜா B. A. — 1969 தை — 1969 ஆவணி
09. திரு. எஸ். சத்தியமூர்த்தி B. Sc. — 1969 புரட்டாதி — 1970 சித்திரை
10. திரு. ஆர். சச்சிதானந்தம் B. Sc. — 1970 வைகாசி — 1970 மார்கழி
11. திரு. எஸ். சத்தியமூர்த்தி B. Sc. — 1971 தை — 1971 புரட்டாதி
12. திரு. எஸ். சிவகுருநாதன் M. A. — 1971 புரட்டாதி — 1973 ஐப்பசி
13. திரு. எஸ். சண்முகராசா 1st Class Maths Trained. 1973 ஐப்பசி — 1973 கார்த்திகை
14. திரு. எஸ். சிவநேசன் B. Sc. — 1973 கார்த்திகை — 1974 மார்கழி
15. திரு. கே. பாலச்சந்திரன் B. Sc. — 1975 தை — 1975 வைகாசி
16. திரு. கோ. செல்வவிநாயகம் B. Sc., S. L. E. A. S. 1975 ஆனி — 1994 மாசி
17. திரு. செ. யோகச்சந்திரன் 1st Class Eng. Trained. S. L. P. S. II 1994 மாசி — 1996 பங்குனி
18. திரு. சி. தங்கராசா B. Sc. — 1996 சித்திரை — 1998 மாசி
19. திரு. செ. யோகச்சந்திரன் 1998 பங்குனி —


ஆசிரியர் திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை அவர்களே முதல் அதிபர் என்ற பெருமையைப் பெற்றவர். திரு. வீ. சின்னத்தம்பி அவர்கள் அதிபராய் இருந்த காலத்தில் கல்லூரியில் குறிப்பிடத்தக்க சில முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இவரது அயராத முயற்சியினாலும் ஊர்ப்பொதுமக்களது ஆதரவினாலும் எமது கல்லூரி 1923 ம் வருடம் இரண்டாம் தரக் கனிஸ்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப் பட்டதுடன் 1928ம் வருடம் தொடக்கம் கேம்பிரிஜ் சீனியர் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்யும் நிலைக்கும் முன்னேற்றமடைந்தது. திரு. எஸ். வி. ஐயங்காரினது காலத்தில் இவர் எடுத்துக்கொண்ட முயற்சியினாலும் முகாமையாளர் திரு. ஞா. தையல்பாகர் அவர்களினதும், பொதுமக்களினதும் அயராத உழைப்பினாலும் 1935ம் வருடம் லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றக்கூடிய வகையிலான வகுப்புக்களும், 1942 ம் வருடம் சிரேஷ்ட பாடசாலைத் தராதர வகுப்புக்களும் (S. S. C.), 1958ம் வருடம் சர்வகலாசாலைப் புதுமுக வகுப்புக்களும் (H. S.C) ஆரம்பிக்கப்பட்டன. திரு. கோ. செல்வவிநாயகம் அவர்கள் அதிபராய் இருந்த காலத்தில் இவரது முயற்சியினாலும், பாடசாலை அபிவிருத்திச் சங்க, பழைய மாணவர்கள் சங்க உறுப்பினர்களது உதவி




திரு. எஸ். வண்ணமாமலை ஐயங்கார் B. A.
முன்னாள் அதிபர்



திரு. கோ. செல்வநாயகம்
B. Sc., Dip. in-Edu.



திரு. தை. அருட்சுந்தரம்
B. Sc., Dip. in Edu



திரு. எஸ். ஆர். அரியரத்தினம் B. A.
கல்லூரியில் கால் நூற்றாண்டு
கற்பித்த ஆசிரியர்

யுடன் கல்லூரிப்படிப்பை முடித்து வெளியேறும் மாணவர்களுக்கு தொழில் நுட்பப் பாடங்களான, வானொலி, தொலைக் காட்சி பேணலும் பழுது பார்த்தலுக்குமான பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. திரு. சி. தங்கராசா அவர்களது காலத்தில் பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவுடன் கணனிப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட பயிற்சி வகுப்புக்கள் போதிய அடிப்படை வசதியின்றியே மேற்கொள்ளப்பட்டு சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. தென்பகுதி மாணவர்கள் அனுபவிக்கும் வசதிகள் எமது கல்லூரி மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கிடைக்கப் பெறுமாயின் பெறுபேறுகள் உச்சக் கட்டத்தில் இருந்திருக்கும்.

நாம் எமது கல்லூரியின் நூற்றாண்டு விழா எடுக்கும் காலம் வரை வைத்திய கலாநிதிகள், விசேட வைத்திய நிபுணர்கள், பொறியியலாளர்கள், நீதிபதிகள், கணக்காளர்கள், அரசாங்க நிர்வாகசேவை உத்தியோகத்தர்கள், பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், தீரர்கள், கலைஞர்கள், உயர்நிலை நிர்வாகிகள் போன்ற பல துறைகளிலும் ஈடுபட்டவர்களை எமது சிதம்பரா உருவாக்கியுள்ளது. 1896 ல் ஆரம்பிக்கப்பட்ட சிதம்பரா எமது பிரதேசத்தில் மட்டுமல்லாது அகில இலங்கை ரீதியிலும் பல துறைகளிலும் புகழ் பெற்ற கல்லூரியாகத் திகழ்கின்றது. இக் கல்லூரியிலிருந்து வெளியேறிய மாணவர்கள் இலங்கையில் மட்டுமன்றி சர்வதேச ரீதியாகப் பிரபல்யம் அடைந்து தாய் நாட்டிற்கும், வல்வை நகருக்கும் பெருமைதேடித் தந்துள்ளார்கள். இக் கல்லூரியில் கல்வி பயின்று வெளியேறிய மாணவர்கள் மட்டுமன்றி, இக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தோர் கூட வெளிநாடுகளில் சாதனை புரிந்துள்ளார்கள். 1958 ம் வருடம் தொடக்கம் 1968 ம் வருடம் வரை இக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை புரிந்த எல்லோராலும் 'கேவிஎன்' என்றழைக்கப்பட்ட திரு. கே. வி. நடராஜா அவர்கள் புரூணை நாட்டின் சுல்த்தானினால் தலைசிறந்த ஆசிரியர் என்று பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார். இந்த நாட்டினால் வெளிநாட்டு ஆசி ஒருவர் கௌரவிக்கப்பட்டது இதுவே முதல் தடவை என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டும்.

எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தின் கையினையே எதிர்பார்க்கும் மனப்பான்மை கொண்ட மக்கட் சமுதாயத்தில் இக்கல்லூரி முகாமையாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் புறம்பானதோர் செயலை நிலைநாட்டியுள்ளார்கள். இவர்கள் ''தன்கையே தனக்குதவி' என்பதற்கொப்பவும் ''தானங்களிலே வித்தியா தானம் மிகச்சிறந்தது'' என்பதற்கொப்பவும் அரசாங்கத்தை எதிர்பாராது தாங்களாகவே பெரும் பொருள் திரட்டி கல்லூரி மண்டபங்கள் விளையாட்டு மைதான எல்லைச் சுவர் போன்றவற்றை அமைத்துக் கொடுத்தும், விளையாட்டு உபகரணங்கள், தொழில்நுட்ப உபகரணங்கள், நூலகத்துக்குத் தேவையான நூல்களை வழங்கியும், கல்லூரிக்கு வேண்டிய போது நிதி உதவி வழங்கியும் உள்ளார்கள். இத்தகைய செயல் பழைய மாணவர், பெற்றோர் போன்றோர் தங்களுக்குக் கல்வியூட்டிய கல்லூரியின் மேல் கொண்டிருக்கும் பாசத்தை எடுத்துக் காட்டுகிறது. இக்கல்லூரியின் நூறு ஆண்டு காலச் சாதனைக்கு நினைவு கூரப்பட வேண்டியோர் பலர். இதுபோன்ற நிலை எதிர் காலத்திலும் உருவாக வேண்டுமென்ற நோக்கில் இன்றைய மாணவர் சமுதாயம் தமது கடமைகளை மேற்கொண்டு எமது கல்லூரிக்கு மேலும் மேலும் புகழை ஈட்டிக் கொடுக்க வேண்டும்.

எமது கல்லூரி மாணவர்கள் கல்வியில் மாத்திரமன்றி விளையாட்டுத்துறை, சர்ரணீயம், நாடகம், சங்கீதம், பொருட்காட்சி, சாகசங்கள் போன்ற பலதரப்

பட்ட துறைகளில் தமது திறமைகளை வெளிக்கொணர்ந்து பலராலும் பாராட்டப்பட்டு எமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

### சாரணீயம்

பெரியார் பேடன் பவல் பிரபு அவர்களால் 1907ம் வருடம் 120 பேருடன் ஆரம்பிக்கப்பட்ட சாரணீயம், இலங்கையில் 1912ம் வருடமும் யாழ் மாவட்டத்தில் 1916ம் வருடம் 5 துருப்புக்களுடன் (Troops) 120 பேருடனும் ஆரம்பிக்கப்பட்டது. எமது கல்லூரியில் 1942ம் வருடம் 13 இளஞ்சிறார்களுடன் தொடக்கி வைக்கப்பட்டது.

கல்லூரியில் சாரணீயத்தை ஆரம்பித்து அதனை ஒரு உன்னத நிலைக்குக் கொண்டு வந்த பெருமை எமது கல்லூரியின் பழைய மாணவரும் ஆசிரியருமான திரு. எஸ். ஆர். அரியரத்தினம் அவர்களையே சாரும். அன்னார் 1942ம் வருடம் சாரணீயம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் 1967ம் வருடம் வரை எமது கல்லூரிச் சாரணர்கள் பங்குபற்றிய ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பங்குகொண்டு சாரணர்களது முன்னேற்றத்துக்கும், பெற்ற வெற்றிகளுக்கும் உறுதுணையாக இருந்துள்ளார். அன்னார் வவுனியா மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்று அம் மாவட்டத்தின் சாரண ஆணையாளராகப் பொறுப்பேற்றுக்கொண்டது நாம் பெருமை கொள்ளவேண்டிய தொன்றாகும். திரு. எஸ். ஆர். அரியரத்தினம் அவர்களின் நல்லெண்ணத்தோடு ஆரம்பிக்கப்பட்ட சாரணீயம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து யாழ் குடா நாட்டில் மட்டுமின்றி இலங்கையிலேயே முன்னணியில் நின்றதும் நாம் பெருமைப் படக்கூடியதாகும்.

திரு. எஸ். ஆர். அரியரத்தினம் அவர்களைத் தொடர்ந்து கல்லூரியின் பழைய மாணவரும், ஆசிரியருமான திரு. வி. இரத்தினசிங்கம் அவர்கள் சாரணர் குழுத் தலைவராகப் பொறுப்பேற்றார். சிரேஷ்ட பிரிவிற்கு எமது கல்லூரியின் பழைய மாணவரும், முன்னாள் அதிபருமான திரு. கோ. செல்வவினாயகம் அவர்கள் இப்பொறுப்பினை ஏற்றுக் கல்லூரிக்கு மேலும் பல பெருமைகளைச் சேர்த்தார். இவர் அகில இலங்கை சாரணாளர் பயிற்சிக்குழுவின் அங்கத்தவர்களில் ஒருவராகவும், 1980ம் வருடம் யாழ் மாவட்ட சாரண உதவி ஆணையாளர (சாரணீய பயிற்சி) ராகவும், இதன் பின்னர் யாழ் மாவட்டம் நான்கு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டதன் பின்னர் பருத்தித்துறை மாவட்ட ஆணையாளராகவும் பொறுப் பேற்றார்.

கல்லூரிச் சாரணர் குழு பெற்ற வெற்றிகளுக்கு சாரணாசிரியர்களான திருவாளர்கள் கோ. குழந்தைவேல், எஸ். சரவண பவானந்தன், நா. சுவாமிநாதன், சு. சாந்தமூர்த்தி, ஏ. சுந்தரம்பிள்ளை, கு. அப்பாத்துரை, கோ. சற்குணபாலன், சு. பழனிவடிவேல், து. சக்திவேல். ஆகியோரும் உறுதுணையாக இருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கல்லூரிச் சாரணர்குழு பல சமூக சேவையிலும் பொதுநலத் தொண்டிலும் காலத்துக்குக்காலம் ஈடுபட்டு ஆற்றிய சேவைகள் உரிய அதிகாரிகளினால் பாராட்டப்பட்டதை யாவரும் அறிவர். அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுவது பொருத்த மானதாகும்.

(1) தொண்டைமானாறு செல்வச்சந்நிதி வருடாந்த உற்சவ காலங்களின்போது அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டி பக்தர்களுக்கும், ஆலயநிர் வாகத்துக்கும் உதவியமை.

(2) கல்லூரியில் புதிதாகக் கட்டிடங்கள் அமைக்கப்பட்ட போதும், திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட காலங்களிலும், கல்லூரிப் பொருட்காட்சிகள் நடைபெற்ற தினங்களிலும் பல சிரமதானப்பணிகளை மேற்கொண்டமை.



ஆரம்பகால சாரணர்கள், சாரணாசிரியர்கள், அதிபர், ஆணையாளர் ஆகியோருடன்

(3) நீருரியல் ஆராய்ச்சிக் கழகத்தின் வேண்டுகோளின் பிரகாரம் ஒவ்வொரு தவணையிலும் நீர் படுகைகளில் அவர்களின் ஆராய்ச்சிக்கான தளத்தை அமைத்துக்கொடுத்தமை.

(4) சுகாதார வாரங்கள் நடைபெறும் காலங்களின்போது பருத்தித்துறை சுகாதார வைத்திய உத்தியோகத்தரின் வேண்டுகோளை ஏற்று சுகாதார விழாவினை திறம்பட நடத்துவதற்கு உதவி புரிந்தமை.

(5) வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையைச் சுத்தப்படுத்தியும், வல்வை மகளிர் கல்லூரியைப் புதிதாக அமைத்தபோது கல்லூரிக்கட்டிடங்கள் அமைக்கப்பட இருந்த காணியைத் துப்பரவு செய்தும் கொடுத்தமை.

(6) கௌரவ முன்னாள் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா அவர்களின் காங்கேசன்துறை வருகையின்போதும், கௌரவ முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா அவர்களின் வல்வெட்டித்துறை வருகையின் போதும், இந்திய ஜனாதிபதி திரு வி. வி. கிரி அவர்களின் பலாலி வருகையின் போதும், மாட்சிமை தங்கிய மகா தேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா அவர்களின் பலாலி வருகையின் போதும் மரியாதை அணிவகுப்பை நடாத்தி சிறப்பித்தமை.

7) 1958 ம் வருடம் நடைபெற்ற இனக் கலவரத்தின் போது பிற மாவட்டங்களிலிருந்த அகதிகள் கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்திறங்கிய போது வேண்டிய உதவிகளைப் புரிந்தமை.

8) கைதடியிலுள்ள நவீல்ட் பாடசாலையில் பாசறை அமைத்து அப்பகுதியில் வீதி ஒழுங்குகளை மேற்கொண்டும், காயமுற்ற பொது மக்களுக்கு அரசினர் பொது மருத்துவ மனையில் உடனுதவும் பணியில் ஈடுபட்டும் ஏழுநாட்கள் வரை தொடர்ந்து உதவியமை.

9) 1958 ம் வருடம் யாழ் மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற சீன கலைக் கண்காட்சியின் போது பொருட்காட்சியினைத் திறந்து வைப்பதற்காக வருகை தந்திருந்த கல்வியமைச்சின் உதவிச் செயலாளரை கௌரவிக்கும் முகமாக அணிவகுப்பு மரியாதையை நடாத்தியமை.

10) கோப்பாய் பகுதிச் சாரணர்களுக்கான பயிற்சிப் பாசறை ஒன்றை எமது கல்லூரியில் அமைப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து கொடுத்தமை.

11) 1992, 1993 ம் வருடங்களில் மாவட்ட அணித்தலைவர் பாசறையை எமது கல்லூரியில் நடாத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தமை.

12) சாரணத்தலைவர்களுக்கான பயிற்சி நெறிகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களில் வேண்டிய உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கியமை.

மேற்படி சம்பவங்கள் யாவும் எமது சாரணர்கள் காட்டிய திறமைக்கும், கொடுக்கப்பட்ட கடமைகளைக் கச்சிதமாகவும் திறம்படவும் செய்து முடிப்பார்கள் என்ற நம்பிக்கையிலும் இவர்களுக்கு அளிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் என்று சொன்னால் மிகையாகாது.

கல்லூரிச் சாரணர் குழு மேலே குறிப்பிட்ட கடமைகளைப் புரிந்ததோடுமட்டும் நில்லாது யாழ் மாவட்டத்திலும், அகில இலங்கை ரீதியிலும் பல போட்டிகளிலும், விழாக்களிலும் பங்குபற்றி பல சாதனை

களைப் புரிந்ததுடன் வெற்றிகளையும் ஈட்டியது. நடைபெற்ற போட்டிகளின் போது ஒவ்வொரு தடவையும் வழமையான உயர் தரத்தை நிலை நிறுத்தியதுடன் பலரது பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டது. இவர்கள் ஈட்டிய வெற்றிகள், சாதனைகள் சிலவற்றை கீழே குறிப்பிடுவதில் பெருமையடைகிறேன்.

1) யாழ். பழைய பூங்காவில் 1957 ம் வருடம் நடைபெற்ற வருடாந்தப் போட்டியில் முதல் முதலாகக் கலந்து கொண்டு பெரும்பாலான பார்வையாளர்கள், இதர சாரணர்கள், சாரணாசிரியர் ஆகியோரது பாராட்டைப் பெற்றது.

2) 1960, 1961, 1962, 1965 ம் வருடங்களில் யாழ் பழைய பூங்காவில் நடைபெற்ற போட்டிகளில் பங்கு பற்றி சிதம்பரா சாரணர்கள் யாழ் மாவட்டத்தில் சிறந்த சாரணர் குழுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு "ரோட்டரிக் கேடயத்தைப்" பெற்றுக்கொண்டது. 1952 ம் வருடம் சாரணர்களுக்கான போட்டிகள் யாழ் மாவட்டத்தில் தொடங்கப் பெற்று 1965 ம் வருடம் வரை நடைபெற்ற 14 போட்டிகளில் நான்கு போட்டிகளில் சிறந்த சாரணர்குழுவாக சிதம்பரா சாரணர் குழு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

3) 1962 ம் வருடம் அகில இலங்கை ரீதியாக நடைபெறும் போட்டிகளில் பங்கு பற்றும் தரத்தை எமது சாரணர் குழு பெற்றது.

4) 1963 ம் வருடம் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற போட்டியில் பங்கு பற்றி "லோறன்ஸ் பெர்னாண்டோ" கொடியினை யாழ் இந்துக்கல்லூரி பெற்றுக்கொள்ள, விசேட பாராட்டு (Honourable Mention) என்ற ஸ்தானத்தை சிதம்பரா குழு பெற்றுக்கொண்டது.

5) 1965, 1968, 1970 ஆகிய வருடங்களில் அகில இலங்கையிலுமே ஆகக்கூடிய இராணிச் சாரணர்களை உருவாக்கி அதற்கான கொடியினைப் பெற்றுக் கொண்ட பெருமையும் சிதம்பரா சாரணர் குழுவுக்கு உண்டு


6) 1968, 1969, 1970 ஆகிய வருடங்களில் தொடர்ச்சியாக அகில இலங்கையிலுமே சிறந்த சாரணர் குழு என்ற ஸ்தானத்தைப் பெற்றதுடன் "சேர் அன்று கொல்டிக்கொற்" வெற்றிக் கிண்ணத்தையும் மேன்மை தங்கிய மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா அவர்களிடமிருந்து இராணி மாளிகையில் பெற்றுக் கொண்டது.

7) 1969 ம் வருடம் யாழ் மாவட்டத்தில் மீண்டும் சிறந்த குழுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு "ரோட்டரிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டது.

8) 1970 ம் வருடம் "பீற்று" (நுவரஎலியா) பாசறையில் நடைபெற்ற "தருசின்ன"ப் பயிற்சியில் சிதம்பராக் குழுச் சாரணாசிரியர் திரு. வி. இரத்தினசிங்கமும், சிரேஸ்ட சாரணாசிரியர் திரு. கு. அப்பாத்துரையும் சித்தியடைந்து "தருசின்ன" விருதையும் பெற்றனர்.

9) 1970 ம் வருடம் தொடக்கம் 1980ம் வருடம் வரை யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற சாரணர் விழாவில் பங்கு கொண்டு 1973 ம் வருடம் தவிர்ந்த ஏனைய வருடங்களில் தொடர்ச்சியாக 'இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

## பிரதம சாரண ஆணையாளர் அவர்கள் கல்லூரி விஜயம்



பிரதம சாரண ஆணையாளர் திரு. ச. டபிள்யூ. கன்னங்கரா அவர்கள் 1964ம் வருடம் கல்லூரிக்கு விஜயம் செய்த சமயம் சாரண ஆணையாளர் (யாழ். மாவட்டம்) சாரணாசிரியர்கள், சாரணர்கள் ஆகியோருடன்.

இதில் 1976 ம் வருடம் நடைபெற்றவிழா வில்:-

| | |
|---|---|
| பாசறைப் பரிசோதனை | - முதலிடம் |
| திடற்காட்சி | - ,, |
| அரங்கக் காட்சி | - ,, |
| பாசறைத்தீ | - இரண்டாமிடம் |
| சமூக சேவைகள் | - ,, |
| பதிவேடுகள் | - ,, |

1980 ம் வருடம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற விழாவில்:-

| | |
|---|---|
| பாசறைப் பரிசோதனை | - முதலிடம் |
| திடற்காட்சி | - ,, |
| அரங்கக் காட்சி | - ,, |
| பாசறைத்தீ | - ,, |
| பதிவேடு | - ,, |
| அணிநடை | - ,, |
| சமூக சேவை | - இரண்டாமிடம் |

இந்த வருடம் சாரண பிரதம ஆணையாளர் திரு. ஹேமபாலா ரத்னசூரியா அவர்கள் பங்கு கொண்டு சிறப்பித்தார்கள்.

10) 1976 ம் வருடம் தொண்டமானாறு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற உப மாவட்ட விழாவில் பங்குபற்றி தனி ஒரு போட்டியான பாசறைப் பரிசோதனையில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

11) பலவருடங்களின் பின்னர் 1980 ம் வருடம் மீரிகமவில் தமிழ்மொழியில் நடாத்தப்பட்ட ''தருசின்னப்'' பயிற்சியில் எமது கல்லூரியிலிருந்து திரு. கோ. குழந்தைவேல், திரு. மு. இரவீந்திரன், திரு. எஸ். வேலாயுத பிள்ளை, திரு. சி. சிவகுமார், திரு. நா. காந்தரூபன், திரு. இ. அருணாசலம் ஆகியோர் கலந்துகொண்டார்கள், இப்பயிற்சி நெறியின் தலைவராக கல்லூரி அதிபரும் தலைமைப் பயிற்றுனருமான கோ. செல்வவினாயகம் அவர்கள் கடமையாற்றினார்கள். இவர்களில் திரு. மு. இரவீந்திரன் அவர்கள் ''தருசின்ன'' விருதைப் பெற்றுக் கொண்டார். இவர்களில் திரு. கோ. குழந்தைவேல் அவர்கள் மாவட்ட உதவி ஆணையாளரா (நிர்வாகம்) கவும், திரு. மு. இரவீந்திரன் அவர்கள் மாவட்ட உதவி ஆணையாளரா (சாரணர் பிரிவு) கவும் நியமனம் பெற்றார்கள்.

12) 1983 ம் வருடம் நடைபெற்ற அகில இலங்கை சாரணர் ஜம்போறியில் எமது சாரணர் குழுவினர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இதனையொட்டி எமது சாரணர் குழுவினருடனும் கல்லூரி அதிபரும் மாவட்ட ஆணையாளருமான திரு.கோ.செல்வவினாயகம் அவர்களுடனும் இலங்கை வானொலி சார்பில் பேட்டி கண்டு அதனை வானொலி மூலமாக ஒலி பரப்பியதும் குறிப்பிடத்தக்கது.

13) 1991, 1992 ம் வருடங்களில் பருத்தித்துறை மாவட்ட வருடாந்த சாரணர் விழாக்களில் பங்குபற்றி பாசறைத்தரப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்கள்

14) 1993 ம் வருடம் தொண்டமானாறு சந்நிதி கோவிலில் நடைபெற்ற பருத்தித்துறை மாவட்ட சாரணர் பாசறையில் பங்குபற்றி 40அடி உயரமான கோபுரம் ஒன்றினைக் கட்டி முடித்தமைக்காக எமது குழுவிற்குப் பாராட்டுக்கிடைக்கப்பெற்றது. நிலைக்காட்சியில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டதுடன் நிலைக்காட்சிக்கான முழுப் புள்ளிகளும் கிடைக்கப்பெற்றன.

15. கல்லூரித் தேவைகளுக்காக நிதி தேவைப்பட்ட போது வல்வைப் பொது மக்களுடைய அனுசரணையுடன் களியாட்ட விழா ஒன்று 1959ம் வருடம்

கல்லூரி மைதானத்தில் நடாத்தப் பட்டது. இக்களியாட்ட விழாவின் போது கல்லூரிச் சாரணர்களும் தங்க ளது சாதனைகளைச் செய்து காட்டி னார்கள். அதில் திரு. சி. கதிர்கா மத்தம்பி, திரு. ஏ. ஏ. சிவானந்தம் ஆகிய இருவரும் நிலத்தின் அடியில் ஒரு மணித்தியாலத்திற்கு மேலாகத் தங்கி இருந்து சாதனை புரிந்ததும் ஒன்றாகும்.

16. பிரதம சாரண ஆணையாளர் திரு. ஈ. டபிள்யூ. கன்னங்கரா அவர்கள் 1964ம் வருடம் (28. 05. 64) கல் லூரிக்கு விஜயம் செய்த போது எமது கல்லூரிசாரணர் குழுவை இலங்கைத் தீவினிலேயே தான் பார்த்தவற்றுள் முதற்தரமான குழுவென்றும், இது வரைதான் பார்த்தவற்றுள் திறமான தொரு சாரணர் அறையைக் கொண் டிருப்பது எமது கல்லூரியின் சாரணர் அறையாகும் என்றும் கூறிப் பிட்டுள்ளார்.

17. இராணிச்சாரணர் கொடியினை யாழ் மாவட்டத்தில் முதன் முதலா கப் பெற்றுக்கொண்ட பெருமையும், இலங்கையிலேயே தொடர்ந்து மூன்று தடவைகளாகச் சிறந்த குழு என்ற பெருமையும் சிதம்பரா சாரணர் குழுவிற்கே உண்டு. 1971ம் வருடம் வரை இராணிச் சாரணர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரிச் சார ணர்கள் எண்ணிக்கை வருமாறு

1960 — 06

1961 — 07

1962 — 06

1963 — 04

1964 — 06

1965 — 08 ஆகக் கூடிய இராணிச் சாரணர்களை உருவாக்கியதற்கான விருது

1966 — 07

1967 — 01

1968 — 07 ஆகக் கூடிய இராணிச் சாரணர்களை உருவாக்கியதற்கான விருது

1969 — 01

1970 — 10 ஆகக் கூடிய இராணிச் சாரணர்களை உருவாக்கியதற்கான விருது

1971 — 08

1972 ஆம் வருடம் தொடக்கம் ஜனாதிபதி சாரணர் என்று மாற்றம் பெற்றதன் பின்னர் ஜனாதிபதி சாரணர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட சாரணர்களின் எண்ணிக்கை:

1972 — 02

1973 — 02

1974 — 01

1980 — 02

1981 — 01

## இராணிச் சாரணர்கள்



1970 ஆம் வருடம் அகில இலங்கையிலும் ஆகக் கூடிய இராணிச் சாரணர்களை
உருவாக்கியமைக்காக வழங்கப்பட்ட கொடியுடன் இராணிச் சாரணர்கள்

## விளையாட்டுத்துறை

சிதம்பரக் கல்லூரி தனது வரலாற்றில் பல துறைகளிலும் சிறந்த பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிறது. இவ்வாறே விளையாட்டுத்துறையிலும் வியத்தகு சிறந்த சாதனைகளை நிலை நாட்டியுள்ளது. முன்னைய காலங்களில் இக்கல்லூரி மாணவர்கள் அகில இலங்கைப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டமையும் குறிப்பாக கரப்பந்தாட்டத்தில் தேசிய தரத்தை அடைந்தமையும் கல்லூரி வரலாற்றில் மறக்க முடியாத சாதனைகளாகும். தரமான, சொந்தமான விளையாட்டு மைதானம், போதிய விளையாட்டு உபகரணங்கள் இன்றி விளையாட்டுப் போட்டிகள் (மெய்வல்லுநர் போட்டி, கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம்) நடாத்தி முடிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையிலும் எமது கல்லூரி மாணவர்கள் புரிந்துள்ள சாதனைகள் சிலவற்றை இங்கு குறிப்பிட வேண்டும்.

### அ) கரப்பந்தாட்டம்

1) 1948 ஆம் வருடம் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் எமது கல்லூரி வீரர்கள் கலந்து கொண்டு இரண்டாம் இடத்தைப் (Runners up) பெற்றுக் கொண்டதை முதலில் குறிப்பிட வேண்டும்.

2) 1951 ஆம் வருடம் எமது கல்லூரிவீரர்கள் அகில இலங்கை ரீதியில் நடந்த கரப்பந்தாட்டப் போட்டியில் பங்கு கொண்டு முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது அடுத்துக் குறிப்பிட வேண்டும். இந்தப் போட்டியில் திருவாளர்கள் எஸ். ஏ. துரைசிங்கம் (அணித் தலைவர்) நாதன் என்று அழைக்கப்படும் சி. பத்மநாதன், வீ. சபாபதிப்பிள்ளை, விஜயன் என அழைக்கப்படும் ஆர். சோமசுந்தரம், எஸ். கணபதிப்பிள்ளை, வெ. பொன்னம்பலம் ஆகியோர் திறமையாக விளையாடி எமது கல்லூரிக்குப் புகழை ஈட்டித் தந்துள்ளார்கள். இவர்கள் இந்த வெற்றியை பெற்றுத் தந்தமைக்கு ஆசிரியர்களான திரு. பொ. பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். அரியரெத்தினம் ஆகியோர் பயிற்றுவிப்பாளர்களாக இருந்து உதவி புரிந்துள்ளார்கள். மேற்படி கரப்பந்தாட்டப் போட்டியில் எமது கல்லூரி வீரர்கள் ஹன்வெல்ல சென். ஜோன்ஸ் பொஸ்கோ கல்லூரிக்கு எதிராக விளையாடி வெற்றியீட்டினார்கள். இக்கல்லூரி மாணவர்கள் பிறிதொரு தடவை வல்வைக்கு விஜயம் செய்து மீண்டும் எமது கல்லூரிக் குழுவினருடன் விளையாடிய மூன்று போட்டிகளில் எமது கல்லூரி இரண்டில் வெற்றியீட்டியது. எமது கல்லூரியின் இதே குழுவினர் கொழும்பு த்திட்டப் பொருட்காட்சியின் போதும் ஆறு குழுக்களுக்கு எதிராக விளையாடிய போட்டிகளில் பலப்பிட்டிய, கம்பஹா, மீரிகம, துடல்ல ஆகிய குழுக்களை வென்றதும் குறிப்பிடத்தக்கது.

3) 1955 ஆம் வருடம் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் பங்கு கொண்டு வெற்றியீட்டினார்கள்.

4) 1959ஆம் வருடம் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றி பங்குபற்றிய ஐந்து போட்டிகளிலும் வெற்றியீட்டி சுழல் கோப்பையை சுவீகரித்துக் கொண்டமையும் நாம் பெருமைப்படக் கூடியதொன்றாகும். அதே நேரம் இந்தப் போட்டிகள் உரிய வேளையில் முடிவுறாது போனமையினால் எமது கல்லூரி அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பை இழந்தது.

5) மேற்படி சங்கத்தினால் 1961-1966 ஆம் வருட காலப்பகுதிகளில் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றியீட்டியதுடன் 1964-1966 ஆம் வருட காலப் பகுதிகளில் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றியீட்டியது.

9) 1966 ஆம் வருடம் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் எமது கல்லூரி அரைஇறுதிப் போட்டியிலும் கலந்து கொண்டு துர் அதிர்ஷ்டவசமாக வெற்றியீட்டும் வாய்ப்பை இழந்தது. களுத்துறையில் நடைபெற்ற இந்த அரை இறுதிப் போட்டியில் 16 க்குப் 14, 15க்குப் 13 என்ற புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெறும் வாய்ப்பை எமது கல்லூரி இழந்தது.

7. வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் 1967ம் வருடம் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டியதுடன் கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான போட்டியிலும் கலந்து கொண்டது.

8. 1968 ஆம் வருடம் கல்வியமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் பங்கு பற்றி முதலாமிடத்தைப் பெற்று ''நவீன விக்னானி'' கேடயத்தையும் எமது கல்லூரிக் குழுவினர் சுவீகரித்துக் கொண்டார்கள்.

9. கரப்பந்தாட்டப் போட்டியில் சில காலம் எமது குழுவினர் பிரகாசிக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்த போதும் முன்பு இருந்த நிலையை மீண்டும் நிலைநாட்டும் முகமாக மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தும் கூட இருப்பவர்களைக் கொண்டு பயிற்றுவித்து கோட்ட மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியதுடன் மட்டுமல்லாமல் வலய மட்டப் போட்டிகளிலும் கலந்து கொண்டதையும் குறிப்பிட வேண்டும்.

ஆ) உதைபந்தாட்டம்:

1. 1956 ஆம் வருடம் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் எமது கல்லூரி (1st ELEVEN) முதற் பிரிவினர் கலந்து கொண்டு வெற்றியீட்டியதுடன் யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டியிலும் பங்குபற்றும் தகுதியைப் பெற்றுக் கொண்டார்கள்.

2. 1957 ஆம் வருடம் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் கல்லூரியின் (3rd ELEVEN) மூன்றாம் பிரிவினர் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளார்கள்.

3. 1959ஆம் வருட யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட சுற்றுப் போட்டியில் கல்லூரியின் (1st ELEVEN) முதற் பிரிவினர் கலந்து கொண்டு வெற்றிவாகை சூடிக் கொண்டார்கள்.

4. 1961ஆம் வருடம் யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் கல்லூரியின் (1st ELEVEN) முதற் பிரிவு பங்கு கொண்டு வெற்றியீட்டியது.

5. எமது கல்லூரி உதைபந்தாட்டக் குழுவில் கோல் காப்பாளராக இருந்த திரு. ஏ. ஆர். இரத்தினசிங்கம் அவர்கள் 1965 ஆம் வருட காலப்பகுதிகளில் யாழ்மாவட்ட உதைபந்தாட்டக் குழுவிற்கு தொடர்ச்சியாக மூன்று வருடம் கோல் காப்பாளராக இருந்ததையும் இங்கு குறிப்பிடுவதில் கல்லூரி பெருமையடைகிறது.

## உதைபந்தாட்ட அணி



1943 ஆம் ஆண்டு உதைபந்தாட்ட அணி (முதலாம் பிரிவு)

6. 1967 ஆம் வருடம் யாழ் உதைபந்தாட்டச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட போட்டியில் கல்லூரியின் உதைபந்தாட்டக் குழுவினர் பங்குகொண்டு வெற்றியீட்டினார்கள்.

7. 1995 ஆம் வருடம் மாவட்ட மட்டப் போட்டியில் கல்லூரியின் 1ம் அணியினர் பங்குபற்றி விளையாடி வரும் சந்தர்ப்பத்தில் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக போட்டிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டமையினால் வெற்றியீட்டும் வாய்ப்பினை கல்லூரி இழந்தது.

8. எமது கல்லூரி மாணவர்கள் உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாட்டிலும் உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்டு சாதனை புரிந்ததையும் இங்கு குறிப்பிட வேண்டும். லண்டனில் இயங்கிவரும் யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களின் பாடசாலைகளின் பழைய மாணவர்களுக்கிடையே 1995 ஆம் வருடம் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் சிதம்பராவின் பழைய மாணவர்கள் கலந்துகொண்டு வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டார்கள்.

## இ) மெய்வல்லுநர் போட்டிகள்!–

1. 1949ம் வருடம் யாழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் கல்லூரி மாணவன் எஸ். ஏ. துரைசிங்கம் 100 யார், 200 யார் ஓட்டப் போட்டிகளில் பங்கு கொண்டு இரண்டிலுமே முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற போட்டிகளிலும் கலந்து கொண்டார்.

2. 1955ம் வருடம் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் எமது கல்லூரி மாணவர்கள் பங்கு கொண்டு பல வெற்றிக்கிண்ணங்களைச் சுவீகரித்துக் கொண்டார்கள். இ. துரைலிங்கம் அவர்கள் தத்திமிதித்துப் பாய்தல், குண்டெறிதல், பரிவட்டம் எறிதல் ஆகிய மூன்று போட்டிகளில் பங்குபற்றி மூன்றிலுமே முதலாமிடத்தைப் பெற்று வெற்றி வீரர் (CHAMPION) ஆனார். யாழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட போட்டிகளிலும் பங்குபற்றி, தத்தி மிதித்துப் பாய்தலில் இரண்டாம் இடத்தையும், பரிவட்டம் எறிதல், குண்டெறிதல் ஆகிய இரண்டிலும் 3ம் இடத்தையும் பெற்றுக் கொண்டதுடன் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற போட்டிகளிலும் கலந்து கொண்டார். இதே வருடம் அ. வி. அருணாசலம் அவர்களும் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் நீளம் பாய்தல், ஒரு மைல், அரை மைல் ஓட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு நீளம் பாய்தலிலும், ஒரு மைல் ஓட்டப் போட்டியிலும் 1ம் இடத்தையும் அரை மைல் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார். யாழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளிலும் கலந்து கொண்டு நீளம் பாய்தல், அரைமைல் ஓட்டம் ஆகியவற்றில் இரண்டாமிடத்தையும் பெற்று அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளிலும் கலந்து கொண்டார். இந்த வருடம் யாழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் எமது கல்லூரிக்கு இரண்டாமிடம் கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது.

3. I) 1963 ஆம் வருடம் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் 13 வய

துக்கு கீழ்ப்பட்டோர் பிரிவில் திரு. கே. எஸ். சிவனருள்சுந்தரம் பங்கு கொண்டு 100 யார் ஓட்டப் போட்டியில் 12.7 செக்கனில் ஒடி முடித்து புதிய சாதனையை நிலை நாட்டினார். அதே வருடம் யாழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்கு கொண்டு உயரம் பாய்தலில் 4 அடி 9 அங்குலம் பாய்ந்து புதிய சாதனையை நிலை நாட்டினார்.

II 1964 ஆம் வருடம் அகில இலங்கை ரீதியில் கொழும்பில் நடைபெற்ற போட்டியில் திரு. கே. எஸ். சிவனருள்சுந்தரம் பங்கு கொண்டு உயரம் பாய்தலில் இரண்டாமிடம் பெற்றுக்கொண்டதையும் குறிப்பிட வேண்டும்.

III 1965 ஆம் வருடம் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் திரு. கே. எஸ். சிவனருள்சுந்தரம் கலந்து கொண்டு 200 மீற்றர், 100 மீற்றர் ஓட்டப் பந்தயங்களிலும், நீளம் பாய்தலிலும் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாமல் இப்பந்தயங்களில் புதிய சாதனையையும் நிலை நாட்டியுள்ளார். இதே வருடம் யாழ் விளையாட்டுச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட போட்டிகளிலும் மேற்படி போட்டிகளில் பங்குபற்றி முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டதோடு 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தினை 25.3 செக்கனில் ஒடி முடித்து புதிய சாதனையையும் நிலை நாட்டினார். அதே வருடம் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் பங்கு கொண்டு நீளம் பாய்தலில் 1 ஆம் இடத்தையும், 200 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டார்.

4. திரு. கே. பாலசிங்கம் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் 1963 ஆம் வருடம் நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்கு கொண்டு ஒரு மைல், அரைமைல் ஓட்டப் போட்டிகளில் 2 ஆம் இடத்தைப் பெற்று அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற போட்டிகளிலும் பங்குபற்றினார்.

5. திரு. ப. விஜயராஜா 1971ம் வருடம் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டு 100 யார், 200 யார் ஓட்டப் போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டதுடன், யாழ் பாடசாலைகள் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளிலும் பங்கு கொண்டு மேற்படி இரண்டு ஓட்டங்களிலும் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டு அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளிலும் பங்கு பற்றினார்.

6. திரு. கி. நிரஞ்சன் 1971ம் வருடம் யாழ் பாடசாலை ஆசிரியர் சங்கத்தால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டு பரிவட்டம் எறிதலில் 1ம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

7. திரு. ஏ. அருள்பவான் 1970 ஆம் வருடம் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளில் ஒருமைல், அரை மைல் ஓட்டப்போட்டிகளில் பங்கு கொண்டு 1ஆம் இடத்தையும், என். ரீ. நாகேஸ்வரன் 100 யார், 200 யார் ஓட்டப் போட்டியில் 1ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

## அகில இலங்கையில் சிறந்த சாரணர் குழு




1968 ம் வருடம் அகில இலங்கையில் சிறந்த சாரணர் குழு என்ற சிறப்பினைப் பெற்ற சாரணர்கள், சாரணாசிரியர்களுடனும் அதே வருடம் இராணிச் சாரணர்களாகத் தகுதி பெற்றவர்களுடனும்

8. 1992ஆம் வருடம் நடாத்தப்பட்ட மாவட்ட மட்டத்திலான போட்டியில் 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் தத்திமிதித்துப்பாய்தலில் செல்வன் இ. சாந்தரூபன் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

9. 1995 ஆம் வருடம் நடாத்தப்பட்ட மாவட்ட மட்டத்திலான போட்டியில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் செல்வன் த. சதீஸ்குமார் 500 மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டு இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

விளையாட்டுத் துறையில் கல்லூரி மாணவர்கள் சிறப்பிடத்தைப் பெற்றுக் கொண்டதோடு நில்லாமல் தாம் கல்லூரியை விட்டு விலகிய பின்னரும் மாணவர்களுக்குப் பயிற்சியை வழங்கியும், வெள்ளிக் கேடயங்களையும், வெள்ளிக் கோப்பைகளையும் வழங்கியுமுள்ளார்கள். பயிற்சியை வழங்கியவர்களில் சிறந்த விளையாட்டு வீரராக இருந்து அகால மரணமான திரு. அ. வி. அருணாசலம் அவர்களும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கட்டடம்

கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் கல்லூரியினை அரசாங்கம் 15-12-1961ல் சுவீகரித்த பின்னரும் பெரும்பாலான கட்டடங்களும், வகுப்பறைகளும் கல்லூரி முகாமையாளரினாலும், ஊர்ப் பிரமுகர்களினாலும் நலன் விரும்பிகளினாலும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 1964ம் வருடம் கல்விப் பகுதியினர் ஒதுக்கிய ரூ. 15,000/= ஐக் கொண்டு 70' × 18' பரிமாணம் கொண்ட வகுப்பறைகள் கட்டப்பட்டன.

கல்லூரியின் இரசாயன ஆய்வு கூடம் முதன் முதலில் 1929ம் வருடம் கட்டப்பட்டது. 1948ம் வருடம் கல்லூரியை விஸ்தரிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பௌதீக ஆய்வு கூடமும் கட்டப்பட்டது. முதலியார் எஸ். கார்த்திகேசு அவர்களினால் இரசாயன பௌதீக ஆய்வு கட்டங்களும் திரு. வ. இராமசாமிப்பிள்ளை அவர்களினால் பாடசாலை முகப்பில் இருந்த வகுப்பறைகளும் கட்டிக் கொடுக்கப்பட்டன. 1951ம் வருடம் உயிரியல் ஆய்வு கூடத்திற்கான கட்டடம் கட்டப்பட்டது. இதனைக் கட்டி முடிப்பதில் முன்னின்றுழைத்தவர் அக்காலப்பகுதியில் உயிரியல் ஆசிரியராகக் கடமையாற்றியவரும் இந்தியாவின் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவருமான திரு. ஜோர்ஜ் எப்ரஹாம் என்பவராகும். 1957ம் வருடம் மனையியலுக்கான ஆய்வு கூடம் கட்டப்பட்டது.

கல்லூரியில் எஞ்சியிருந்த கட்டடப் பொருள்கள் மரங்களைக் கொண்டும் ஒரு சிறு தொகை நிதியைக் கொண்டும் 60' × 18' பரிமாணம் கொண்ட தச்சுக் கூடம், சங்கீத வகுப்பறை என்பன 1964ம் வருடம் கட்டி முடிக்கப்பட்டன.

கல்லூரி கட்டட விஸ்தரிப்பிற்காக அதிபரின் வேண்டுகோளின் பேரில் கட்டட விஸ்தரிப்புக்குழு ஒன்று 1965ம் வருடம் அமைக்கப்பட்டது. இதில் பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர், கொழும்பு பழைய மாணவர் சங்க உறுப்பினர், திருகோணமலைப் பழைய மாணவர் சங்க உறுப்பினர் ஆகியோர் இணைந்து வல்வை, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களில் நிதி திரட்டி 1966ம் வருடம் இரண்டுமாடிக் கட்டடம், ஆய்வுகூட மேல் மாடி ஆகியவற்றைக் கட்டிக் கொடுத்தார்கள். இதற்கெனத் திரட்டப்பட்ட நிதி விபரம் வருமாறு:

| | |
|---|---|
| வல்வைப் பிரமுகர்கள் | ரூ. 35,461 00 |
| திருகோணமலை பழைய மாணவர் சங்கம் | ரூ. 7,061 00 |
| கொழும்பு பழைய மாணவர் சங்கம் | ரூ. 3,345 00 |
| கொழும்பு பழைய மாணவர் சங்க ஆதரவுடன் நாடகமூலம் வசூலான தொகை | ரூ. 4,062 00 |
| கொழும்பு ப. மா. சங்கம் அதிர்ஷ்டலாபச் சீட்டு மூலமும் நாடகம் மூலமும் | ரூ. 9,778 00 |
| ஆசிரியர்களினால் வழங்கப்பட்டது | ரூ. 705 00 |
| மேலதிகம் | ரூ. 2,440 00 |
| மொத்தம் | ரூ. 62,852 00 |

திரு. காஞ்சிமாவடிவேல் அவர்கள், கட்டி முடிக்கப்பட்ட ஆய்வு கூடத்தின் யன்னல்களைப் போட்டுக் கொடுத்துள்ளார்.

எமது பழைய மாணவர் சங்கங்களினதும் ஊர்ப்பொதுமக்களினதும் மேற்படி முயற்சிகளைப் பலரும் பலவாறு பாராட்டியுள்ளார்கள்.

''இந்த நாட்டில் பொதுமக்கள் தாமாக முன்வந்து இது போன்ற உதவிகளைச் செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லையெனவும், எந்த ஒரு சிறிய வேலைக்காயினும் மக்கள் அரசாங்கத்தையே எதிர்பார்ப்பதாயும், எமது பழைய மாணவர் சங்கங்களும் இதர பொது மக்களும் சேர்ந்து கல்லூரிக்கான கட்டடங்களைக் கட்டிக் கொடுத்தது ஒரு முன் உதாரணமாக இருக்கிறதென'' காலம் சென்ற முன்னாள் பிரதமர் கௌரவ டட்லி சேனநாயக்கா அவர்கள் பாராட்டியுள்ளார்.

''புதிய கட்டடங்களை அமைக்க ஒரு சிறியளவு முயற்சியையாவது மேற்கொள்ளாமல் இவற்றை அமைத்துத் தரும்படி இடைவிடாமல் வற்புறுத்தும் இதர பெற்றோர் ஆசிரியர் சங்கங்களைப் போலல்லாமல் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களும், பெற்றோர் ஆசிரியர் சங்கமும் முன் உதாரணமாக விளங்கி இரண்டு மாடிக் கட்டடங்கள் அமைத்துக் கொடுத்துள்ளார்கள்'' என முன்னாள் கல்வி அமைச்சர் ஐ. எம். ஆர். ஒ. இரிய கொல்ல அவர்கள் பாராட்டியுள்ளார்கள்.

பெற்றோர் ஆசிரியர் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து கல்லூரிக்கு கட்டடம் ஒன்றினை அமைத்துக் கொடுத்தமைக்கு என்றென்றும் நினைவில் வைத்துக் கொள்ளப்படவேண்டியவர்கள் என முன்னாள் கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி ஆனந்த குருகே அவர்கள் பாராட்டியுள்ளார்கள்.


கடந்தகால இராணுவ நடவடிக்கைகளின் போது எமது கல்லூரி கட்டடங்கள் பல தடவைகள் சேதமடைந்தன. 09-07-1995 அன்று கல்லூரியின் மேற்குப் புறமாக வீசப்பட்ட இரு பாரிய குண்டுகளின் தாக்கத்தினால் பின்வரும் கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

(அ) விஞ்ஞான ஆய்வுகூட கூரையும், யன்னல் கதவுகளும் முற்றாகவும்

(ஆ) காரியாலய, நூலக, கதவுகளும், யன்னல்களும் முற்றாகவும்

(இ) மனையியற் கூட கூரை, யன்னல்கள் முற்றாகவும்

## 1948 ஆம் வருடம் அகில இலங்கையில் இரண்டாம் இடத்தைப் பெற்ற கரப்பந்தாட்ட அணி தேசாதிபதி அவர்களுடன்



திரு. எஸ். இராஜதுரை (செயலாளர்), திரு. எஸ். ஆர். அரியரத்தினம் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்), திரு. எஸ். அழகரத்தினம் (செயலாளர்), திரு. ஆர். எப். எஸ். த. மெல் (மேயர் கொழும்பு மாநகரசபை), மாட்சிமை தங்கிய மகாதேசாதிபதி சேர். ஹென்றி மூர், கௌரவ சேர் ஜோன் ஹாவாட் (பிரதம நீதியரசர்), திரு. தை. அருள்சுந்தரம் (விளையாட்டுத்துறை உதவிப் பொறுப்பாசிரியர்), திரு. எஸ். தேவராஜா (அணித்தலைவர்),

*நிற்பவர்கள்:* திரு. சி. நாகேஸ்வரராஜா, திரு. கே. தியாகராஜா, திரு. எம். திருநாவுக்கரசு, திரு. எஸ். ஏ. துரைசிங்கம், திரு. எஸ். ஏ. இரத்தினசிங்கம், திரு. ஆர். அனந்தராஜா.

(ஈ) மேல்மாடிக் கட்டட மேற்குப்புற கூரையும் கடல்வள அறை, ஓவியக் கூட அறை ஆகியவற்றின் கூரைகளும், யன்னல்களும் முற்றாகவும் சேதமடைந்துள்ளன. இவை தவிர புதிதாகக் கட்டடம் அமைக்கும் நோக்குடன் கல்லூரியின் முன் வகுப்பறை உடைக்கப்பட்டது. கல்வித் திணைக்களத்தினாலும் அரச சார் பற்ற நிறுவனங்களினாலும் கல்லூரியின் முகப்பிலும், இரண்டுமாடிக் கட்டடத்திற்குத் தென்புறமாகவும் புதிய கட்டடங்கள் கட்ட ஆரம்பிக்கப்பட்டபோதும் ஏதோ ஒரு காரணத்தினால் இந்த முயற்சி இடை நடுவில் நிறுத்தப்பட்டுவிட்டது.

1990ம் வருடத்திற்கு முன்னர் கல்லூரி கட்டடங்கள் இருந்த விபரமும் தற்போது எஞ்சியுள்ள கட்டடங்களின் விபரமும் கீழே குறிக்கப்பட்டதுடன் இவற்றின் வரைபடம் (Plan) பிறிதொரு பக்கத்திலும் தரப்பட்டுள்ளது.

| உபயோகம் | கட்டடம் | பரப்பு (ச. அ) | 1990ற்கு முன் | தற்போது |
|---|---|---|---|---|
| பிரார்த்தனை | மேல்மாடி | 2800 | இருந்தது | உண்டு |
| வகுப்பறை | கீழ்மாடி | 2800 | ,, | உண்டு |
| வகுப்பறை | தெற்குமண்டபம் | 3318 | ,, | இல்லை |
| வகுப்பறை | மேற்குமண்டபம் | 1490 | ,, | இல்லை |
| வகுப்பறை | முன் மண்டபம் | 2340 | ,, | இல்லை |
| ஆசிரியர் அறை | ஆண்கள் | 459 | ,, | இல்லை |
| ஆசிரியர் அறை | பெண்கள் | 374 | ,, | இல்லை |
| விளையாட்டு | மெய்வல்லுநர் கூடம் | 374 | ,, | இல்லை |
| சாரணியம் | சாரணர் | 165 | ,, | இல்லை |
| நூலகம் | நூலகம் | 1600 | ,, | உண்டு |
| மனையியல் | மனையியல் கூடம் | 920 | ,, | உண்டு |
| சித்திரம் | சித்திர கூடம் | 1200 | ,, | உண்டு |
| விற்பனை | போசனசாலை | 180 | ,, | இல்லை |
| ஆய்வு கூடம் | இரசாயனம் | 720 | ,, | உண்டு |
| ஆய்வு கூடம் | பௌதிகம் | 720 | ,, | உண்டு |
| ஆய்வு கூடம் | உயிரியல் | 720 | ,, | உண்டு |
| அலுவலகம் | நிர்வாகம் | 720 | ,, | உண்டு |
| | | 20900 | | |

20,000 க்கு மேற்பட்ட சதுர அடி கொண்ட கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்த எமது கல்லூரியில் தற்போது 12,200 சதுர அடி கொண்ட கட்டடங்களே எஞ்சியுள்ளன.

## நூலகம்


ஒரு கல்லூரியில் மாணவர்கள், ஆசிரியர்கள் தமது திறமையை வெளிக்கொணர்வதற்கு நூலகம் பெரிதும் இன்றியமையாததாக விளங்குகின்றது. கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. வண்ணமாமலை ஐயங்கார் அவர்களது காலத்திலே அப்போதய முகாமையாளர் திரு. தையல்பாகர் அவர்களது முயற்சியினால் எமது கல்லூரியில் நூலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. காலம் சென்ற பிரபல வர்த்தகர் திரு. எஸ்.வீ. நடராஜா அவர்களின் உதவியினால் நூலகம் மேலும் வளர்ச்சியடைந்து திறம்பட இயங்க ஆரம்பித்தது. இவரது உதவியினால் அப்போதைய காலத்தில் பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்த நாவல்கள், ஆங்கில இலக்கியம், கதைகள், சொற்களஞ்சியம் போன்ற பலதரப்பட்ட நூல்களை எமது நூலகத்தில் சேர்த்துக் கொள்ள முடிந்தது. பின்னர் காலத்துக்குக் காலம் கல்வித்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நூல்களும் பழைய மாணவர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நூல்களும் வசதிக் கட்டண நிதியிலிருந்து வாங்கப்பட்ட நூல்களுமாகச் சேர்ந்து நான்காயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள் எமது நூலகத்தில் இருந்தன.

கடந்த 1985ம் ஆண்டு ஊரிக்காட்டில் இருந்து எமது கல்லூரி இடம் மாறிய போது நூலகத்திலிருந்த நூல்களையும் இதர ஆவணங்களையும் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இக் காலப் பகுதியில் சில நூல்கள் கறையானால் சேதமாக்கப்பட்டதுடன் இயற்கையின் அனர்த்தத்தினாலும் சேதமாக்கப்பட்டன. காலகெதியில் பாடசாலைக்குச் சென்று எஞ்சிய நூல்களையும், தளபாடங்களையும் கொண்டு செல்ல முடியாத நிலை கூட ஏற்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் அப்போதிருந்த அதிபர் திரு. கே. செல்வவினாயகம் அவர்களின் முயற்சியினால் பழைய மாணவர்கள் சிலரது உதவியுடன் உயிரினைப் பணயம் வைத்து பெருத்த சிரமத்தின் மத்தியில் எஞ்சிய நூல்களும், தளபாடங்களில் ஒரு தொகுதியும் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. இந்த நூலகத்தினை முன்னர் இருந்த நிலைக்கு கொண்டு வரவேண்டியது பழைய மாணவர்களினதும், வல்வை மக்களினதும் தலையாய கடமையாகும்.


தற்காலம் கல்வித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடத்திட்டத்தில் தொழில் நுட்பப் பாடங்கள் உட்படப் பல பாடங்களின் அறிவினை வளர்ப்பதற்கு தொழில் நுட்பம் தொடர்பான நூல்களும், உசாத்துணை நூல்களும் இன்றியமையாததாக உள்ளன. இப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கு யாவரும் குறிப்பாக இந்த நூல்களை வெளிநாடுகளில் இருந்தே பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் இருப்பதால் வெளிநாடுகளில் வசிப்போர் போதியளவு தொழில் நுட்பங்களை வழங்கி எமது நூலகத்தை ஒரு சிறந்த நூலகமாக அமைத்துத்தரமுன்வரவேண்டும்.

ஆரம்பத்தில் 27' × 17' அளவில் உள்ள சிறிய அறையில் ஆரம்பிக்கப்பட்ட எமது நூலகம் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரது பாவனைக்கு இடம் போதாத காரணத்தினால் மேற்படி அறையுடன் 22' × 17' அளவு கொண்ட இன்னொரு அறையும் இணைத்துக் கொள்ளப்பட்டது. பின்னர் 1977ம் வருடம் காலம் சென்ற பருத்தித்துறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரெத்தினம் அவர்களால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 10,000/= ஐக் கொண்டு கல்லூரியின் தெற்கு எல்லையில் 80' × 20' அளவு கொண்ட நூலகம் அமைக்கப்பட்டு நூலகத்திற்குத் தேவையான தளபாடங்களையும் கொண்டதாக அது விளங்கியது

கல்லூரியின் நூலகத்திற்கு நிரந்தர நூலகர் ஒருவர் இல்லாத காரணத்தினால் கலாநிதி திரு. ச. இராசேந்திரன் அவர்களினால் அனுப்பப்பட்ட நிதி உதவியுடன் நூலகர் ஒருவர் நியமிக்கப்பட்டு நூலகம் திறம்பட இன்றுவரை இயங்கி வருகின்றது.




நூலகத்தில் மாணவர்



நூலகத்தில் மாணவர்

## 1966ம் வருடம் வடமராட்சி ஆசிரியர்சங்கத்தினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் முதலாமிடம் பெற்ற அணி.



இருப்பவர்கள் இடமிருந்து வலம்:- திரு. கே. தியாகராஜா (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்), திரு. ஜே. ஜெயபாலசிங்கம், திரு. தை. அருள்சுந்தரம் (அதிபர்), திரு. ஏ இரத்தினசிங்கம் (அணித்தலைவர்), திரு வீ. சண்முகராஜா,

நிற்பவர்கள் இடமிருந்து வலம்: திரு. பா. பாலச்சந்திரன், திரு. சி. தங்கவடிவேல், திரு. சு. குகப்பிரசாதன், திரு. சோ. சிவனருள்சுந்தரம், திரு. ந. சக்திவேல், திரு. பொ. புவனேந்திரன்.

### சஞ்சிகை

1929ம் வருடம், அக்காலப் பகுதியில் எமது கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றியவரும் பின்னர் இந்தியாவின் ஆந்திரா மாநில சர்வகலாசாலையின் ஆங்கிலப் பிரிவின் தலைவராக இருந்தவருமான பேராசிரியர் கே. ஆர். ஸ்ரீநிவாசன்ஐயங்கார் (M. A. D. LIT) அவர்களால் சஞ்சிகை வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அக்காலப் பகுதியில் இவரது முயற்சி கைகூடாமல் போய் விட்டது. 1958ம் வருடம் அப்போதைய கல்லூரி அதிபர் எஸ் வண்ண மாமலை ஐயங்கார் எடுத்துக் கொண்ட முயற்சியினால் கல்லூரியின் முதலாவது சஞ்சிகை வெளியிடப்பட்டது. 1959ம் வருடம் திரு. எஸ். வீ. ஐயங்கார் அவர்களது காலத்திலே இரண்டாவது சஞ்சிகை வெளியிடப்பட்டது.

கல்லூரியின் மூன்றாவது சஞ்சிகை 1961ம் வருடம் வெளியிடப்பட்டது. ஐந்து வருடங்களின் பின்னர் புதிய மாடிக் கட்டிடத்தின் திறப்பு விழா சிறப்பு மலரொன்று அதிபர் திரு. தை. அருள்சுந்தரம் அவர்கள் அதிபராயிருந்த போது வெளியிடப்பட்டது. இதனையடுத்து நீண்ட கால இடைவெளியின் பின்னர் அதிபர் திரு. கோ. செல்வவினாயகம் அவர்கள் அதிபராயிருந்த காலத்தில் உயர்தர மாணவர்களின் பெரு முயற்சியின் காரணமாக 1977ம் வருடம் வெளியிடப்பட்டது. இதற்கடுத்த மலர் பதினாறு வருடங்களின் பின்னர் திரு. கோ. செல்வவினாயகம் அவர்கள் அதிபராயிருந்த காலத்தில் 1993ம் வருடம் வெளியிடப்பட்டது.

### முறைசாராக்கல்வியும் தொழில் நுட்பமும்

பாடசாலையை விட்டு வெளியேறிய ஆண், பெண் ஆகிய இருபாலான மாணவர்களும் அவர்கள் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள ஏதுவாகவும் அன்றி சுயதொழில் ஒன்றினை மேற்கொள்வதற்கு வசதியாகவும் கல்வித்திணைக்களத்தினால் வருடந்தோறும் முறைசாராக் கல்வி போதிக்கப்பட்டு வருகின்றது. எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும் இத்துறையில் போதிய அனுபவமுள்ளவருமான திரு. கோ. செல்வவினாயகம் அவர்களினால் 1986ம் வருடம் வானொலிபேணலும் பழுதுபார்த்தலுக்குமான பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. யாழ் குடாநாட்டிலுள்ள பல்வேறு பாடசாலைகளில் தட்டச்சு பயிற்சி கட்டட அமைப்புப் பயிற்சி(Building Construction) வரைபட தயாரிப்புப்பயிற்சி (Dranghtmans ship) போன்ற இன்னோரன்ன பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இறுதிப் பரீட்சைகளில் இப்பயிற்சியினைப் பெற்ற மாணவர்கள் தோன்றி நூற்றுக்கு எண்பது வீதமானோர் தேர்ச்சி பெற்றமை இங்கு குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். 1990/91ம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிய 15 மாணவர்களில் 11 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.

மாணவர்கள் தாங்கள் இத்துறையில் பெற்ற தொழில்நுட்ப அறிவினைக் கொண்டு அவ்வப்போது கண்காட்சிகளை நடாத்திப் பலரது பாராட்டுக்களைப் பெற்றார்கள். எமது கல்லூரியில் இலத்திரனியல் கண்காட்சி நடைபெறுகின்ற தென்பதைக் கேள்விப்பட்டு தொலை தூரங்களிலுள்ள இத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் இக் கண்காட்சியைக் கண்டு பயன் பெற வந்துள்ளதையும் நாம் பார்க்கக் கூடியதாக இருந்தது. எமது கல்லூரியில் முறை சாராக் கல்வியைப் பயின்ற மாணவர்களான தி. மோகேந்திரன், க. நந்தகுமார் ஆகியோர் பல்கலைக்கழகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு இலத்திரனியல் பொறியியல் பயிற்சியை மேற்கொண்டதையிட்டு நாம் பெருமைப் பட வேண்டும்.

எமது முந்நாள் அதிபர் திரு. கோ. செல்வவினாயகம் அவர்களின் முயற்சியினாலும், பாடசாலை அபிவிருத்திச் சபை, வெளிநாடுகளில் வாழ்கின்ற வல்வை மக்கள் ஆகியோரின் நிதி உதவியுடனும் கணனி வகுப்புக்களும் எமது கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பத்தில் ''கீபோட்'' ( Key Board ) ஒன்றுடன் தொலைக்காட்சிப் பெட்டியை இணைத்து பயிற்சிகள் வழங்கப்பட்டு வந்தன. இப் பயிற்சியை மேற்கொள்வதற்கு ஒரு மின் பிறப்பாக்கியை பா. அ. சபையினர் அன்பளிப்புச் செய்துள்ளார்கள். துரதிஷ்டவசமாக இப்பயிற்சி நெறியைப் போதிப்பதற்கு கொள்வனவு செய்யப்பட்ட பெரும்பாலான உபகரணங்களை இழந்தமையினால் பயிற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாதுபோய்விட்டது. மீண்டும் இப்பயிற்சிகள் கடந்த 1997ம் ஆண்டு தொடக்கம் போதிக்கப்பட்டு வருகின்றன.

*வாழ்க்கைத்திறன்*
*தொழிற்கல்வி*
*தொழில் முன்னிலைப்பாடம்*

வளரும் ஒரு கல்விக் கூடத்தின் தேவைகளுக்கேற்ப சில துறைகள் வளர்ச்சியடைவதும், புதிய துறைகள் அறிமுகமாவதும் இயல்பே. கல்விப் பகுதியினர் எமது கல்லூரியில் வாழ்க்கைத் திறனுக்கான கல்வியைப் போதிப்பதற்கு 1943ம் வருடம் சிபார்சு செய்திருந்தும் போதிய பயிற்சி பெற்றோர் இல்லாத காரணத்தினால் அதனை உடனடியாக நடைமுறைப்படுத்த இயலாது போய்விட்டது. எமது கல்லூரி ஆசிரியர்களில் ஒருவரான திரு. எஸ். ஆர். அரியரெத்தினம் அவர்கள் இத்துறையில் ஒருவருடப் பயிற்சியை முடித்துள்ளார்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் தொழில் முன்னிலைப் பாடங்களுள் ஏதாவது இரண்டினைத் தெரிவு செய்ய வேண்டுமென்ற கல்வித் திணைக்களத்தின் சிபார்சுக்கிணங்க கீழ் வரும் பாடங்கள் எமது பாடசாலையினால் தெரிவு செய்யப்பட்டன. எமது பாடசாலையில் இப்பாடங்களைக் கற்பிப்பதற்குரிய ஆசிரியர்கள், கற்பித்தலுக்குரிய பெரும்பாலான உபகரணங்களும், தளபாடங்களும் போதிய இடவசதிகளும் உடனடியாகப் பெறக்கூடிய நிலையில் இருந்தமையால் கற்பித்தலை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது.

*மரவேலை:-*

மரவேலைக்கான வகுப்புக்கள் 1959ம் வருடம் ஆசிரியர் திரு. முருகுப்பிள்ளை அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது திரு. முருகுப்பிள்ளை ஆசிரியர் இளைப்பாறியதைத் தொடர்ந்து திரு. சு. பழனிவடிவேல் அவர்களினால் இவ்வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வந்தன. சிறந்த உபகரணங்களைக் கொண்ட மரவேலைக்கூடம் ஒன்றும் எமது கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்தது. நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களையடுத்து கல்லூரி இடம் பெயர்ந்தபோது பெரும்பாலான உபகரணங்களை கல்லூரி இழந்துவிட்டது தற்போது புதிய பாடத் திட்டத்திற்கமைவாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு ''கட்டிட நிர்மாணம்'' (Building Construction) என்ற பெயருடன் போதிக்கப்பட்டு வருகின்றது. இதில் முன்பு தனித்தனியாக இருந்த பல துணைப்பாட வகுப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

*கடற்றொழில்:-*

தொழில் முன்னிலைப் பாடம் ஒன்று தெரிவு செய்யப்படும் போது அப்பாட நெறி பாடசாலை அமைந்துள்ள சூழலிலே கூடுதலானோர் ஈடுபட்டுள்ள தொழிலாக இருக்க வேண்டுமென்ற கல்வியமைச்சின் அறிவுறுத்தலுக்கிணங்க கடற்றொழில் தெரிவு செய்யப்பட்டு 1972ம் வருடம் தொடக்கம் கற்பிக்கப்பட்டு வருகின்றது. இப் பாடத்தினைப் போதிப்பதற்கு சிறப்புத் தகமையுடைய ஆசிரியர் ஒருவரைப் பெற முடியாதிருந்த போதும் கணிசமான மாணவர்களும் பெற்றோரும் இத்தொழிலில் தேர்ச்சியுடையவர்களாய் இருந்தமையினால் அவர்களது அனுபவங்களையும் பெறக்கூடியதாய் இருந்தது. கடற்றொழில் பாடத்திட்டத்தில் மீன் பிடித்தல் மட்டு

மல்லாமல் கப்பல் கட்டும் தொழில், கப்பல் ஓட்டும் தொழில், கடலிலிருந்து உப உற்பத்திகள் தயாரித்தல் போன்றன அடங்கியுள்ளன. மேற்படி கடற்றொழில் பயிற்சியை மாணவர்கள் பெறும் நோக்கத்துடன் எமது கல்லூரியில் கடற்றொழில் ஆய்வு கூடம் ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டு 18-06-93ல் திறந்து வைக்கப்பட்டது. இந்த ஆய்வு கூடத்தை 10ம் 11ம் ஆண்டு மாணவர்கள் பயன்படுத்துவதோடு கல்லூரியைச் சூழவுள்ள இதர பாடசாலை மாணவர்களும் உபயோகிக்கக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு கூடத்தில் செயலமர்வுகளும், கண்காட்சிகளும், கருத்தரங்குகளும் கடற்றொழில் போதனையை வளர்க்கும் முகமாகக் காலத்திற்குக் காலம் நடாத்தி வைக்கப்பட்டன.

**மனையியல்:-**

மாணவிகளுக்கு மனையியலும், புடவையும் - உடை அமைத்தலும் தொழில் முன்னிலைப் பாடமாகக் கற்பிக்கப்படுகின்றன. மனையியல் ஆய்வு கூடம் ஒன்றும் கற்பிப்பதற்கு வசதியான உபகரணங்களுடன் அமைந்துள்ளது.

## மாணவத் தலைவர்கள் (Prefects)

எமது கல்லூரியின் மாணவத் தலைவர் அமைப்பு முறை ஏறத்தாழ 39 வருடங்களாக இயங்கிவருகிறது.

கல்லூரியின் வளர்ச்சிக்கு மாணவத் தலைவர் அமைப்பு பங்காளராக இருப்பதுடன் நல்லதோர் மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதிலும் முக்கிய பங்காற்றுகிறது. இந்த மாணவத்தலைவர் அமைப்பு கல்லூரி நிர்வாகத்தில் மாணவர் ஒரு வகையில் பங்கு கொள்ளவும், மாணவர்களிடையே தலைமைதாங்கும் இயல்பு, பொறுப்பு மீளாமை, காலம் தவறாமை, செயற்திறன், நேர்மை முதலிய குணநலன்களை வளர்க்கவும் உதவுகிறது.

கல்லூரி நாட்களின் அமைதி, ஒழுங்கு கட்டுப்பாடு ஆகியவைகளைக் காப்பதும், கல்விக்குரிய சூழலையும், கல்லூரி பாரம்பரியத்தை நிலைநாட்ட உதவுவதும் இம் மாணவத் தலைவர்களின் பணியாகும்.

இம் மாணவத் தலைவர் மன்றம், அதிபர் அவர்களைப் போஷகராகவும், சிரேஷ்ட ஆசிரியரை ஆலோசகராகவும் கொண்டு இயங்கிவருகின்றது. மன்றத்தின் அங்கத்தவர்கள் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் தெரிவு செய்யப்படுவர். 1988 வருடம் 12 பேரும், 1989ம் வருடம் 9 பேரும், 1990ம் வருடம் 14 பேரும், 1991ம் வருடம் 12 பேரும், 1992ம் வருடம் 14 பேரும், 1993ம் வருடம் 12 பேரும், 1994ம் வருடம் 11 பேரும், 1995ம் வருடம் 14 பேரும், 1996ம் வருடம் 8 பேரும், 1997ம் வருடம் 11 பேரும், இந்த அமைப்பில் திறம்படக் கடமையாற்றினார்கள்.

## இந்து மாணவர் மன்றம்

மாணவ மாணவிகளை சைவநெறியில் வாழப் பயிற்றுவதற்காகவும், சைவ சமய அறிவை ஊட்டுவதற்காகவும் எமது கல்லூரியில் இந்து மாணவர் மன்றம் 1957ம் வருடம் தை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. மன்றத்தின் கூட்டங்கள் மாதமொரு தடவை நடைபெற்றன.

இந்து மாணவர் மன்றத்தினால் சமய குரவர் நால்வரினது குருபூசைகளும், நவராத்திரி பூசைகளும் தொடர்ந்து சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. இவ் விழாக்காலங்களில் கூட்டுப் பிரார்த்தனைகளும், கருத்தரங்குகளும், சொற்பொழிவுகளும், இசை விழாக்களும், கதா கால ஷேபங்களும் நடைபெற்றன. திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் சிஷ்யனும், சிதம்பராவின் பழைய மாணவரும், வல்வை வாசியுமான திரு. இரா. சிவ அன்பு அவர்களின் கதா காலஷேபம் இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

pillai was in charge of Geography. He had the subject in his fingure tips and made us memorise the names of rivers, mountains, countries of the world and their capitals. Noteworthy Science teachers of our period were Messrs. Vallipuram. Arulsundaram, Sathiyamoorthy and Abraham from South India. They were illustrious Science teachers and all those who studied under them considered themselves fortunate. It was unfortunate that except Mr Arulsundaram all the others left the school after some time. Mr. Mahadevan our Tamil teacher. was a genius. His method of teaching captivated the minds of his students. His excellent style made him a writer of articles and stories. Mr. R. Kulanthaivel, who did not mind much about anything taught us Religion in standard four. Mr. V. Nadarajah, a senior teacher devoted his entire service to Chithambara College. His favourite subjects were English and Arithmatic He made the students study and in his classes almost all the students passed in the above mentioned subjects. Mr. V. Sathasivam who taught hinduism and Tamil was not strict as his borother Mr. Nadarajah. His method of teaching was good and he made the classes lively by relating interesting stories in the course of his teaching. Mr. Muthucumarasamy who joined our school when we were in Prep S.S.C., was a very jovial type of person. He was a great Tamil scholar who taught us Tamil literature.

In our time too every encouragement was given to aesthetic subjects such as Art and Music. Going to the Art room was a great thrill to us because the room was adorned with lively portraits, beautiful scenery and lovely paintings drawn by our art teacher Mr. P. Balasubramaniam, who, was well known as 'Bala Master'. His paintings appeared lively and I lack words to describe their charm. Mr. Nadarajah our Music teacher, had great reputation as a very good carnatic musician. He had a musical gait. His musical recitals used to take place at our Sivan temple on Thiruvathirai Day'.

There were six lady teachers during our period Viz; Mrs. Arulsundaram, Miss J. Kanapathipillai, Miss G. Narayanasamy, Miss T. Veluppillai, Mrs. S. Selvaratnam and Mrs. P. Ratnam. All of them were very gentle and they never used harsh words or gave us server punishments. Needle work was a compulsory subject in

those days and with the help and guidance of our lady teachers, we could do attractive embroidary work. The intensive training given by Mrs. Arulsundaram, Miss Kanapathipillai and Miss Veluppillai helped us to secure places at V.T.A. and P. T. com petitions. Miss Kanapathipillai and Miss Velluppilai were very young then. I think they were in their teens and treated us as their sisters. I still remember the day we went to Palali Airport to bid farewell to Miss Veluppillai when she left for India for higher studies. When we were in standard four Miss Narayanasamy was our English teacher and she laid a firm foundation. She was an ideal teacher but she gave up teaching after her marriage.

Now I must come to the difficult subject - Discipline. We cannot think of discipline in those days without thinking of Mr. Ratnam Master of Udupiddy. Although he was a 'Man of Terror', he had the interest of the school and students at heart. He was a short, fair, medium sized man whose chief duty was to maintain the discipline of the school. He carried a cane in his hand and plied it not only on the backs of mischievous boys and girls but also on the backs of innocent students. According to him, good discipline was necessary to train students to tread on the correct path. Even when we complained about our teachers with tears in our eyes and pain in our hearts, our parents did not pay a heed to us. In their opinion, the teachers were 'infalliable' and were held in high esteem. So there was no 'Court of Appeal' for the punishments meted to us.

During those days there were not many extra curricular activities. The sports meet was held annually on a grand scale and it was the happiest day not only for the students but also for the entire village. When I think of sports, the senior teacher who comes to my memory is Mr. S. R. Ariyaratnam of Udupiddy. His contribution in the field of sports and scouting was remarkable. During his period our college shone in various sports activities. He was also a painstaking teacher who has a high place in the minds of his students. He was our only 'Logic' master then and he instilled the power of reasoning and taught us to differentiate between right and wrong. We learnt many excellent lessons on the sports field - obedience, the principles of justice and fairplay, respect for

the rules, punctuality, loyalty, compromise and give and take. These helped us to live with courage and determination. Another sports master I cannot forgot is Mr. K. M. Ariyaratnam. He was a good commentator. During the sports meets his running commentaries captivated the minds of the spectators. His words and commanding voice are still ringing in my ears. The other event we enjoyed was the Saraswathy pooja. Film shows were organised from time to time and we had weekly 'Literary Meetings' which helped us to cultivate our different talents. Another interesting personality is Mr. S. Namasivayampillai who was noted for his curious habit of adhering to Ghandian principles. He was a much respected man in religious and cultural circles. He could go on speaking for hours and hours and in his speeches he naver failed to mention about Ghandi his wit and wisdom.

The Manager, Principal and some of the teachers were residing in houses adjoining the school. Mr. G. Thaiyalpagar the manager of the school used to stroll round the school having a glance at the classes. Being a very pious man, he thought it was desirable to have a temple near the school. With this noble intention he built the Sunthareswarar Temple' and the 'Kumbabisekam' was done with much pomp and pageantry. We were not aware of School Development Societies in those days but there was co-operation between the parents and the staff and as such the school functioned very smoothly.

We studied in a congenial environment without any stress or fear. Our school was not second to any other school and it has the previlage of producing so many eminent men in all walks of life from time to time. Her old students work as eminent Doctors, Engineers, Accountants, Judges, Lawyers, Teachers and Businessmen in all parts of the world. After reading all these anyone may pause the question why Chithambara has not reached the zenith after 100 years of its inception. I must admit that now she is not what she was then but it is unfair to put the blame on the administrators, teachers or students. Students of feeder schools who pass the scholarship examination and those who are good at studies, seek admission to leading schools elsewhere. If parents send their children to Chithambara it will rise up to its former position. Chithambara has the

buildings, a good laboratory, a nice environment and teachers and above all the education authorities are ever ready to fulfil the needs of every school under their juri sdiction.

We must all join hands and march towards the goal of raising Chithambara to its former glory.

Arise, awake and stop not till the goal is reached be our motto.

"He who thinks in Weeks
plants grass,
he who thinks in Years
plants grass,
he who thinks in Centuries
Educates men"

*A. Chinese proverb*

Little mind are tamed and Subdued by misfortune but great minds rise about it.

Happiness is defined as satisfaction after full honest effort.

—Arnold Bennet.

*S. Pathunarajah*
Retired: Asst. Commissioner
Dept of Registration of Persons

# Down Memory Lane



When I grew up, and my parents decided that it was time I should enter school, they did not encounter any difficulty as there were the three big educational insittutions geographically dispersed in my village. to serve the educational needs of the children - the American Mission School popularly known as the Ariyakuddi Pallikkoodam, situated in the eastern side board of the town, Sivaguru Vidhyasalai known as the Aalady Pallikkoodam in the western sector of the village and the Chidambara Vidyalayam lying on the western outskirts of the town. For this, we should be grateful to the large hearted souls of our village who established these schools.

Long before Chidambara College was founded· those in our village who sought educational advancement, had to trek a distance of 5 miles to Pt. Pedro to attend school. The need to establish a fully - fledged school in our village itself was felt by many, but remained only a dream. It finally became a reality through the munificence of the Late Mr. Chidamparapillai, who spent his wealth, time and energy in founding this College. It is a matter of pride that this College has turned out many worthy and distinguished citizens who are adorning the administrative and social life of this country. It was a fitting and worthy remembrance to the selfless service of Mr. Chidamparapillai that this College was named after him.

Mr. Thaiyalpakar, who functioned as the Manager of the College for long years, managed it well and laid a solid foundation for the advancement of the College. It was the time, when the students had to pay for their education and the Manager had to disburse salaries to the teaching staff from the fees collected from the parents. Not all the parents paid regularly, and it was tight ropewalk for the Manager. But he, with his artful diplomacy, perseverance and dedication, managed the affairs, single handedly. He was a kind spirit, who would not turn away a student willing to study but who does not have the necessary wherewithal. These students were exempted from paying fees, but had to contribute to the welfare of the College, by performing certain specified services.

My memory is that I was a student of this College from 1938 till 1946. I can clearly remember the College was then staffed by a band of able and devoted teachers, who took up to their vocation, seriously. Most of them hailed from the surrounding villages. Transfer of teachers was not heard of then, and they became part and parcel of the school inventory. It was one family, from the Principal down to the school boy cum peon, distributing the attendance registers. The future and advancement of the teachers and students were intertwined. There was constant communication between the teacher and the parents and he was always available for consultation and advice. I could clearly remember the revered Mr. Nadarajah (popularly called as Polikandy Nadarajah Master), who was my Class Teacher for the 7th Standard, a strict disciplinarian, and a stickler for punctuality, trudging the entire distance of 1½ miles from Polikandy to the College, in spotlessly clean verti and national and returning home in the evening, being accosted by parents, anxious to know about the progress of their children. He is still living with us and may he live long. The close rapport built among the management. Staff, students and the parents flourished well, so much so that, the idea of having a Parents-Teachers Association never came into anybody's thoughts.

Those were the happy days that we spent in that College. With the passage of years and

with the transfer of management into Governmental hands new policies and thinking have been introduced. Chidambara College had to fall in line and is manfully battling to serve the needs of the student community in spite of the difficult situation in which the educational institutions in the North are facing now.

The College has completed 100 years of its existence and is celebrating its Centenary. It is the large heartedness and the generosity of the public spirited people of the town and the past students that have made this College to grow from strength to strength. This souvenir is an expression of our thankfulness to the Almighty and all those who laboured to build this College and bring it to the present standard of excellence. The organisers should be commended for the great courage and determination to bring out this souvenir which will be a fitting remembrance of the past history of this College, for posterity. ○

---

In His Life Christ is an example showing us how to Live,

In His death he is a sacrifice satisfying for our sins,

In His resurrection a conquer,

In His ascensions a king,

In His intercession, a high priest.

— Martin Lurther

நடராசா சிவரத்தினம்
முகாமையாளர் இலங்கை வங்கி
காங்கேசன்துறை.

# எங்கள் அன்னைக்கு......

எங்கள் ஆற்றலின் ஊற்றுக் கண்ணைத் திறந்து, நாம் சிறந்து வாழ அறிவுப் பாலூட்டிய அன்னை ''வல்வை சிதம்பரக் கல்லூரிக்கு'' வயது நூறு நிறைந்திருக்கிறது. இதை எண்ணும்போது மெய் சிலிர்த்து நிற்கின்றோம். அதன் கண்ணிறைந்த கோலத்தை உண்மையிலேயே மனக்கண்ணிலே கண்டுகளிக்க, எமது இளைய தலைமுறைக்கு அதனூடான தொண்டு சிறக்க மேலும் எம் கடன், பணி என்ன என்றதோர் பெரிய வினாவும் முன்னெழுகின்றது, எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்து அவர் சிந்தையில் ஆயிரமாயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்திடத்தன் சிறகுள் எமை வைத்து ஆளாக்கி வளர்த்த அன்னை சிதம்பரக் கல்லூரிக்கு நாம் இனி மிகமிக அவசரமாக ஆற்ற வேண்டிய - நிறைவேற்ற வேண்டிய அத்தியாவசியமான பங்கும் பணியும் எவை என்பதும் ஆராயப்படவேண்டும்.

ஆழிக்குமரன் ஆனந்தனையும், அருந்திறலோன் நவரத்தினசாமியையும், அகிலமே கண்டு வியப்படையும் அரிய தலைவர்களையும், அறிஞரையும், தம் உயிரை ஆகுதியாக்கிய தியாகிகளையும் கருவாய்ச் சுமந்து உருவாக்கித்தந்த அன்னைக்கு ஒவ்வொரு குடிமகனும் தன் தகுதிக்கும் தகைமைக்கும் ஏற்ப ஆற்ற வேண்டிய சேவை நிறைவேற்ற வேண்டிய தேவை சந்தர்ப்ப சூழ்நிலைகளாலே தடைப்பட்டிருந்தாலும் கட்டாயம் அக் கடமைகள் நிறைவேற்றப்படவேண்டும்.

அப்பணி தன்குடும்பத்திற்கு, ஊருக்கு, நாட்டிற்கு என்று அந்த வட்டம் விரிவடைந்து செல்லும்போது அந்த அபிலாஷைகள் நிச்சயம் பூரணத்துவமடையும். ''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது - தள்ளினும் தள்ளாமை நீர்த்து'' என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப எங்கள் இலக்கு உயர்ந்த எண்ணங்களாக எம்மை உருவாக்கிய அன்னை சிதம்பரக் கல்லூரியை நாம் எவ்வளவுக்கு எவ்வளவு மேம்பாடடையச் செய்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் விடுதலை பெறுவோம்; நாட்டைக் காத்தவர்களாவோம். மாந்தர் தம் உள்ளத் தனையது தான் உயர்ச்சி அதற்கான முயற்சிகள் உடன் செய்யப்படவேண்டியவை.

கடல்கடந்தும் விழுதுவிட்டுக் கனடா, பிரான்ஸ், சுவிஷ் என்றெல்லாம் சென்று வாழ்ந்தாலும் பெற்றதாயும், பிறந்த பொன்னாடும் கற்பித்தாளாக்கிய கல்லூரியும் நற்றவவானின் நனிசிறந்தனவே. அந்த வகையிலே அன்னை சிதம்பரக் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவிலே ஆற்றவேண்டிய புதுப்பணியும், பொதுப் பணியும் செயற்பாடும் அவசியம் திட்டமிட்டு முன்னெடுத்துச் செய்ய வேண்டியனவாகும். இவை காற்றில் கலந்த கதையாகப் போகாமல் ஊற்றில் சுரந்த நீராய் எம்மண்ணில் வல்வை வாழ் மக்களில் எம் அன்னை சிதம்பரக் கல்லூரியில் செறிய வேண்டும். அவற்றிலிருந்து புதியபல கிளை

யும், பூவும், பிஞ்சும், காயும், கனியும் பயனாகி வளங்கொழித்து ஊருணி நீர் போல் எம்திரு அமைய ஆவலுறவேண்டும்.

எம்மையெல்லாம் ஈன்ற பொழுதிற் பெரிது உவக்கச் செய்த அன்னை ''சிதம்பரக் கல்லூரி'' எம் இளைய தலை முறையையும், இனிவருந் தலைமுறை களையும் எம்மூத்த தலைமுறைபோலச் சான்றோராக்குவதற்கேற்ற நெறிகளைத் திறம்பட நடைமுறைப்படுத்த நம் புத்தி ஜீவிகள் எல்லோரும் ஒன்று திரண்டுழைக்க முன்வரவேண்டும்.

''எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க் கச் செய்யுமோ, விரித்த அறிவைத் தரு மோ, ஒருவனைத் தன்னுடைய சுயவலி மையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்கு வேண்டு மென்று சுவாமி விவேகானந்தர் அருளிய வாக்கைச் சிதம்பரக் கல்லூரி இன்னும் நிதர்சனமாக்க எங்கள் ஆத்மபலமும், பொருட்பலமும், ஒன்றிணைக்கப்பட வேண்டிய பணி இன்று எம்முன் காத்துக் கிடக்கிறது.

''இன்னறுங் கனிச்சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் அமைத்தல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினா யிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்''

எனக் கல்வி அறிவித்தலைப் பற்றிய பாரதியாரின் நோக்கத்தையும் தன் கருத் திற் கொண்டு செயற்பட்ட பெரியார் கு.சிதம்பரப்பிள்ளை அயரா முயற்சியின் பேறாக, 1896 கார்த்திகை 11 ஆம் நாள் ஆலடியில் ஆரம்பித்த ''அன்னை சிதம்பரக் கல்லூரி மஹாவிருட்ஷமாகி'' ஆன்றோ ரையும், சான்றோரையும் ஈன்று பெரிது வக்கும் தாயாகி நூற்றாண்டை நிறைவு செய்து எம்மைப் பூரிப்புள் ஆழ்த்தி நிற்கும் இவ்வேளை அவர் மைந்தராகிய மூத்த நம் கடமையை முன்னெடுத்துச் செல்ல எல்லோரும் ஒன்று சேர்ந்து எம் தாய் தளர்ச்சியுறா வகையில் மேலும் வளர்ச்சி பெற வெளியூர்களிலும், வெளிநாடுகளிலும் இருப்பவர்களையும் சேர்த்துச் செயற்பட வேண்டும்.


இன்றைய நிலையில் எம் அன்னை 'சிதம்பரக்கல்லூரி'யின் பின்னடைவு நிரந் தரமான ஒன்றல்ல. அதிவிரைவிலே எதிர் பாராத வகையிலே நாம் எல்லோரும் எம் பிறந்த மண்ணிலே அன்னையின் மடியிலே நிச்சயம் ஒன்று சேருவோம். எங்கிருந் தாலும் எங்களுக்கு அறிவூட்டி வளர்த்து ஆளாக்கிய அன்னைக்கு முன்னின்று ஆற்ற வேண்டிய கடமைகளை எம்மாலானவரை செய்து சிறப்பிக்கும் பொறுப்பை மறக் கவோ, செய்ய மறுக்கவோ கூடாது. அன்னைக்காக எம்மை அர்ப்பணஞ் செய் வோம். எம் அன்னையை நாம் காப்பாற் றினால் எம்மையே காத்தவர்களாவோம்.

எம் அன்னை; அறிவுக்கண்ணைத் திறந்த தாய்; மனதில் உறுதியையும், மாண்பையும் நிலை நிறுத்திய மாதா அநாதை அல்ல. அந்த நினைப்பே தோன் றாதவாறு செயற்படுவோம். அன்னை சிதம்பரக்கல்லூரிக்கு எவை எவை வேண் டுமோ அதையெல்லாம் அவள் காலடியில் வைத்து வணங்குவோம். ஏன் எம்மையே கொடுப்போம்.

வாழ்க அன்னை சிதம்பரக்கல்லூரி

பூ. அகமணிதேவர்
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
வல்வெட்டித்துறை.

# சிதம்பராவின் முன்னேற்றத்திற்கு பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்பு



கல்லூரி எமக்கு என்ன செய்தது என்பதை எதிர்பார்க்காமல் நாம் கல்லூரிக்கு என்ன என்ன செய்தோம் என நம்மை நாமே கேட்டுக்கொண்டு சிதம்பராவின் பழைய மாணவர் சங்கங்கள் பணியாற்றி வருகின்றன. பழைய மாணவர் சங்கங்கள் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இற்றைவரை சிதம்பரா மாணவர்களின் கல்வி விருத்திக்குப் பெரும் தொண்டாற்றி வருகின்றன. அத்தோடு கல்லூரியின் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் தொழிற்படுவதுடன், கல்லூரியிலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கு முறைசாராக் கல்வியைப் போதிப்பதற்கு ஏற்ற வசதிகளையும் செய்து வருகின்றது. சிதம்பரக் கல்லூரியின் பழைய மாணவர்கள் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் கல்லூரிக்கு அவ்வப்போது நிதி உதவி செய்தும் வேண்டிய உபகரணங்களை வழங்கியும் வருகின்றார்கள். இவர்கள் வாழும் நாடுகள் சிலவற்றில் பழைய மாணவர் சங்கங்களை ஆரம்பித்துள்ள போதும் தொடர்புகள் இல்லாமையால் இவ்விடத்தில் அவற்றின் செயற்பாடுகள் பற்றி குறிப்பிட முடியாதுள்ளது.

## வல்வெட்டித்துறைக் கிளை:

சிதம்பரக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வல்வெட்டித்துறைக் கிளை 1975 வருடம் சித்திரை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. கல்லூரியில் நடைபெற்ற பொருட்காட்சிகளின் போதும் கல்லூரி மலர் வெளியீட்டிற்காக நிதி சேகரிக்கும் பொருட்டு நடாத்தப்பட்ட கலைவிழாவின் போதும் இச்சங்கத்தினர் ஆற்றியபணி சிறப்பானதொன்று. நடைபெற்ற பொருட்காட்சிகளுக்கான செலவினங்களையும் இச்சங்கத்தினரே ஏற்றுக்கொண்டார்கள். இவர்கள் ஆற்றிய சேவையில் ஒருசிலவற்றை இங்கு குறிப்பிடுவதில் பெருமிதமடைகின்றேன்.

1) பேராதனைப் பல்கலைக்கழக விவசாயபீட மாணவனும், கல்லூரி பழைய மாணவனுமான பொன்.

ஆழ்வாப்பிள்ளை அவர்களைக் கொண்டு 14-04-77 அன்று விவசாயக் கருத்தரங்கு ஒன்று நடாத்திவைக்கப் பட்டது.

2) 1978ம் வருடம் வைகாசி மாதம் கல்லூரியில் நடத்தப்பட்ட பொருட் காட்சியில் மீதமாகக் கிடைத்த நிதி யின் மூலம் கல்லூரித் திருத்த வேலைகளும், கல்லூரியின் மேல் மாடிக் கட்டிடத்தை ஒளியூட்டுமுக மாக மின்குமிழ்கள் அமைத்தும் கொடுக்கப்பட்டன. அத்துடன் மாணவர்கள் இரவு வேளைகளில் கல்வி கற்பதற்கு ஏதுவாக நூல் நிலையத்திற்குக் குழாய் மின்குமிழ் களும் அமைத்துக் கொடுக்கப்பட்ட துடன் மாணவர்களுக்கு உதவுமுக மாக அவர்கள் கற்பதற்கு ஒதுக்கப் பட்ட நேரம் வரை சங்க உறுப்பினர் கள் அவ்விடம் பிரசன்னமாயிருந்து மாணவர்களுக்கு வேண்டிய ஒத்தாசை களையும் வழங்கினார்கள்.


3) 1983ம் வருடப்பகுதியில் கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு எல் லைச்சுவர் அமைக்கும் நோக்குடன் அதிபர் திரு. கோ. செல்வவிநாயகம் அவர்களைத் தலைவராகவும் திரு. வி. அமிர்தேஸ்வரராஜா அவர் களைப் பொருளாளராகவும் கொண்ட ஒரு உப குழு அமைக்கப் பட்டு நிதி திரட்டப்பட்டது திரு. து. விஜயரட்ணராஜா அவர்கள் விளையாட்டு மைதானத்தின் மேற்குப் பகுதி சுவரினை அமைத்துக் கொடுத்துள்ளார். திரட்டப்பட்ட நிதியினைக் கொண்டு ஒரு பகுதிக் கான அத்திபாரம் கட்டிமுடிக்கப் பட்டது. இப்பகுதியில் மேற்கொள்ளப் பட்ட இராணுவ நடவடிக்கையின் மூலம் கட்டிமுடிக்கப்பட்ட பகுதிகள் தரைமட்டமாக்கப்பட்டது யாவரும் அறிந்ததொன்று.

4) 1984ம் வருடம் மாசி மாதம் நடாத் தப்பட்ட பொருட்காட்சியின் மறு நாள் பழைய மாணவர் தினமும் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது. பரிசளிப்பு விழாவிற்கான நூல்களில் ஒரு பகுதி வல்வைக்கல்வி மன்றத்தி னாலும், மொடேண் கல்வி நிறுவ னத்தினராலும் வழங்கப்பட்டன. பழைய மாணவர் தினத்தன்று பக லில் விளையாட்டுப் போட்டியும், இரவு வெண்கொடி, மூக்குக்கு முப் பதினாயிரம், கழுவேறிய காத்தான் போன்ற நாடகங்களும் மேடையேற் றப்பட்டன. நடத்தி முடிக்கப்பட்ட பொருட்காட்சியில் ஜப்பான் நாட்டில் நடைபெற இருந்த ''எக்ஸ்போ'' பொருட்காட்சிக்கு மூன்று காட்சிப் பொருட்கள் தெரிவு செய்யப் பட்டிருந்தபோதும் பார்சல் செய்து அனுப்புவதில் ஏற்பட்ட சிக்கலினால் இம் முயற்சி கைகூடாமற் போனது.

5) வல்வையின் கல்விக் கோயிலான சிதம்பராவின் புகழை வானுற ஓங்க வைக்குமுகமாகவும், கல்லூரிக்கு அதிக எண்ணிக்கையிலான மாணவர் களை சேர்க்கும் நோக்குடனும் சங் கத்தினால் கம்பர்மலை, நெடியகாடு, உதயசூரியன் கடற்கரை, வல்வை சனசமூக நிலையம் போன்ற இடங் களில் 1984ம் வருடம் கருத்தரங்கு கள் நடத்தப்பட்டன.

6) திரு. கோ. செல்வவினாயகம் அவர் கள் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கான முறைசாராக்கல்வியை வழங்க முன்வந்த போது பயிற்சியை வழங்குவதற்கு இன்றியமையாத உபகரணங்கள் ஒரு சிலவற்றை வாங்குவதற்கு ரூபா 5000/- ஐ இச்சங்கத்தினர் வழங்கியுள்ளார்கள்.

# கொழும்பு பழைய மாணவர் சங்க செயற்குழு உறுப்பினர்கள் 1966



**இருப்பவர்கள் இடமிருந்து வலம்:** திருவாளர்கள் மா. நடனசிகாமணி, பொ. வல்லிபுரம் (செயலாளர்), ஆர். சிவகுரு (உப தலைவர்), சு. கந்தசாமி (தலைவர்), கே. சங்கரப்பிள்ளை (உப தலைவர்) எஸ். பற்குணராஜா (பொருளாளர்), அ. அம்பலவாணர்.

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்:** ம. கனகலிங்கம், ஆர். தனபாலசிங்கம், எஸ். கதிர்காமலிங்கம், பா. மீனாட்சிசுந்தரம் (உப செயலாளர்), ஜ. இரத்தினசிங்கம், வை. கதிர்காமதாசன் (உப பொருளாளர்), எஸ். ஞானமூர்த்தி, கு. செல்வச்சந்திரன்.
சமூகமளிக்காதோர்: திரு எஸ். சிவகுமாரசாமி (உபதலைவர்), திரு. சி. சிவஞானகுரு, திரு. ஆர். சோதிப்பிரமானந்தர்.

7) இளைப்பாறிய கல்லூரி அதிபர் திரு. கோ. செல்வவினாயகம் அவர்களுக்கு 09-03-1994 அன்று பாடசாலை அபிவிருத்திச் சபையினருடன் இணைந்து சேவைநலன் பாராட்டு விழா ஒன்றினையும் இச்சங்கத்தினர் மேற்கொண்டனர்.

இவைதவிர திரு. சு. குகப்பிரசாதனுடாக வெளிநாடுகளில் வாழும் எமது பழைய மாணவர்களிடமிருந்து ரூபா 50,000/-க்கு மேல் பெற்றுக்கொடுத்து, பழைய மாணவர்களைக் கொண்டு இலவச தனிமுறைப் போதனா வகுப்புக்களை நடாத்தியும், ஊரிலுள்ள பழைய மாணவர்களிடம் சென்று கல்லூரிக்கு இன்றியமையாத நூல்களைப் பெற்று கல்லூரி நூலகத்திற்கு வழங்கியும், பழைய மாணவர்களிடமிருந்து படமெறி கருவி (PROJECTOR) ஒன்று பெற்றுக் கொடுத்தும், றோணியோ மெஷின் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக ஒரு தொகை நிதி உதவியை வழங்கியும், கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருடன் இணைந்து நடாத்தியும், தங்கள் கைகளில் தவழும் இந்த மலரினை வெளியிடுவதற்கு சகல உதவிகளையும் இன்னும் பல உதவிகளையும் பழைய மாணவர் சங்கம் வல்வைக் கிளையினர் செய்துமுள்ளார்கள்.

### கொழும்புக்கிளை

அறிவு தந்து ஆற்றல் காட்டி எம்மையெல்லாம் ஆளாக்கிய ''சிதம்பரா'' வின் வளர்ச்சிக்கும், நற்புகழுக்கும் உழைப்பது நம் எல்லோருடைய கடன் என்னும் எண்ணத்தில் இச்சங்கம் 04-12-1960ல் கொழும்பு விவேகானந்த மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதற்கு முன்னரே கொழும்பில் பழைய மாணவர் சங்கமொன்று இயங்கிவந்த போதும் உரிய ஆவணங்கள் ஒன்றும் இல்லாமையால் இச்சங்கம் ஆற்றிய பணிகள், மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட முடியாதுள்ளது.

இச்சங்கம் கல்லூரியில் நடைபெற்ற முக்கிய விழாக்களான பெற்றார் ஆசிரியர் தின விழா, விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்றியும் கல்லூரித் தேவைகளுக்காக நிதி உதவிகளை வழங்கியும், கட்டிடங்களை அமைத்துக் கொடுத்தும், பழைய கட்டிடங்களைப் புனரமைத்துக்கொடுத்தும், மாணவர்கள் சுற்றுலாவின் நிமித்தம் கொழும்பு வந்த போது வேண்டிய உதவிகளைச் செய்தும் உள்ளது. இச்சங்கம் ஆற்றிய பணிகள் சிலவற்றை இங்கே குறிப்பிடுவது எனது கடமையாகும்.

1) 10-03-1962ல் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு இச்சங்க அங்கத்தினர்களிடமிருந்து நிதி சேகரித்து நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டது.

2) இச்சங்கத்தின் போஷகரும், கல்லூரியின் பழைய மாணவர்களில் ஒருவருமான திரு. பொ. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் உயர் நீதிமன்ற நீதி அரசராகப் பதவி உயர்த்தப்பட்டதை யிட்டு அன்னாருக்கு கொழும்பு கிறாண்ட் ஓறியன்டல் ஹோட்டலில் 19-01-1963ல் பாராட்டு விருந்து வைபவமொன்று அளிக்கப்பட்டது.

3) கல்லூரிக்கு நிரந்தர விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாமையால் அதனை சுவீகரிப்பதற்கு சங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டது.

4). சங்கத்தின் முயற்சியின் பயனாக 1964 ம் வருடம் அரசினால் ரூ 15,000/= கல்லூரிக்கு ஒதுக்கப்

பட்டது. இதனைக் கொண்டு '70 × 18' பரிமாணமுள்ள கட்டடம் அமைக்கப் பட்டது.

5) 1965 ம் வருடம் நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப் போட்டியின் போது வெற்றிக் கிண்ணம் ஒன்றை வழங்கியதுடன் செயலாளர் விளையாட்டுப் போட்டிக்குச் சமூகமளித்தும் இருந்தார்.

6) கல்லூரிக் கட்டட விஸ்தரிப்பிற்காக அதிபரின் வேண்டுகோளின் பேரில் 1965 ல் கட்டட நிர்வாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதில் அதிபருடன், பெற்றோர் ஆசிரியர் சங்கம், திருகோணமலை ப. மா. சங்கம் என்பன அங்கம் வகித்தன. சங்கத்தின் உப தலைவர் திரு. எஸ். சிவகுமாரசாமி அவர்கள் கட்டட நிர்வாகக் குழுவின் பொருளாளராகக் கடமையாற்றினார். சங்கத்தின் சார்பில் ரூ 3345/= வசூல் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டது. கட்டட நிர்மாண வேலைகளுக்கு நிதி போதாதிருந்தமையால் அப்போதைய செயலாளர் திரு. பொ. வல்லிபுரம் அவர்களின் ஊக்கத்தினால் கொழும்பு ''ராஜ் நகைச்சுவை நாடக மன்றத்தினரின்'' நாடகங்கள் இரண்டினை கல்லூரியில் நடாத்தி நிதி சேகரித்துக் கொடுக்கப்பட்டது. இதன் மூலம் ரூ 4062/= சேகரிக்க முடிந்தது.

7) கட்டடம் புதிதாக அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழாவையொட்டி மலர் வெளியீட்டிற்காக ரூ 2000/= நிதியை விளம்பரதாரரிடம் திரட்டி கல்லூரிக்கு வழங்கப்பட்டது.

8) ஊரில் பெண்களுக்கென தனியான பாடசாலையொன்றை அமைக்கும் நோக்குடன் ஊரிக்காட்டில் அமைந்துள்ள பாதிரி பங்களா உரிமையாளர்களுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டது. விண்ணப்பம் அவர்களினால் ஏற்றுக் கொள்ள முடியாது போய் விட்டபடியால் விருப்பம் நிறைவேறவில்லை.

9) 1966ல் புதிதாகக் கட்டப்பட்ட கட்டடத்திற்கு செலவழித்த வகையில் மேலதிகமான ரூ 12,217/85 ஐ அதிபரின் வேண்டுகோளின் பிரகாரம் 1967 ல் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு ஒன்றையும், தொடர்ச்சியாக நான்கு நாட்கள் நாடக விழாவையும் நடாத்தி இத்தொகை ரூ 2,439/67 ஆகக் குறைக்கப்பட்டது.


10) புதிதாகக் கட்டப்பட்ட கட்டடத்திற்கு 75 மாணவர்களுக்கான கதிரைகளும், 75 மேசைகளும், 10 நீள வாங்குகளும், 10 நீள மேசைகளும் கல்வித் திணைக்களத்திடமிருந்து சங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

11) வடமராட்சி ஆசிரியர் சங்கத்தால் 1967 ல் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்று கொழும்பில் நடைபெற இருந்த போட்டியில் பங்கு கொள்ள வந்த குழுவிற்கு மதிய போசனமும், இராப் போசனமும் வழங்கிக் கௌரவித்தது.

12) 10-11-69 அன்று பழைய மாணவர் தினமும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களான திரு. வீ. நடராஜா அவர்களுக்கும், திரு. ஜீ. வீ. இரத்தினம் அவர்களுக்கும் பிரிவுபசார வைபவமொன்றும் கல்லூரியில் நடாத்தப் பட்டது.

13) 1970 ம் ஆண்டளவில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையில் மனக் கசப்பு ஏற்பட்ட சமயம் சங்கத் தலைவருடன் மேலும் 3 நிர்வாகசபை

## திருகோணமலை பழைய மாணவர் சங்க செயற்குழு உறுப்பினர்கள் 1966.



இருப்பவர்கள் இடமிருந்து வலம்: திருவாளர்கள்: எஸ். மாணிக்கவினாயகம் (உப தலைவர்), எம். சுந்தரவினாயகம் (தலைவர்), வ. இ. ஆனந்தவேல் (உபபோஷகர்), வை. இராமனாததாசன் (செயலாளர்), ம. ஜேகதாசன் (பொருளாளர்), பீ. இ. கணபதிப்பிள்ளை. நிற்பவர்கள் இடமிருந்து வலம்: திருவாளர்கள்; கே. செல்வரெத்தினம், எம். பீ. மகாதேவன், எஸ். வி. வேலுப்பிள்ளை, அ. தர்மலிங்கம் (உப பொருளாளர்), என். பழனிவேல் (கணக்காய்வாளர்), கே. சரவணபவன்.

உறுப்பினர்கள் நல்லெண்ணத் தூதுக் குழுவாகச் சென்று சுமூகமான சூழ் நிலையை உருவாக்கினார்கள்.

14) 30-04-72 அன்று கல்லூரியில் பழைய மாணவர் தினமும் தேனீர் விருந்தும் நடைபெற்றது. அன்றைய தினம் பழைய மாணவர்களுக்கும், ஆசிரியர் களுக்குமிடையில் கைப்பந்தாட்டப் போட்டியும், பழைய மாணவர்களுக் கும், கல்லூரி மாணவர்களுக்குமிடை யில் உதைபந்தாட்டப் போட்டியும் நடைபெற்றது. தேனீர் விருந்தின் போது பழைய மாணவர்களின் இசை நிகழ்ச்சியும் இடம் பெற்றது. அன்று இளைப்பாறிய ஆசிரியர்களான திரு. எஸ். திசவீரசிங்கம் அவர்களும் திரு. எஸ். சுந்தரம்பிள்ளை அவர் களும் சங்கத்தினால் கௌரவிக்கப் பட்டு அன்பளிப்புகள் வழங்கப்பட் டது.

15) இவை தவிர தேசிய கல்வித் தராதர வகுப்புக்குரிய உசாத்துணை நூல் களும், உடற்றொழில் மதிப்பீட்டிற்கு உதவியாக ஒரு தராசும், பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர் களுக்கான பரிசில்களையும் சங்கம் வழங்கியது.

## திருகோணமலைக் கிளை:-

கல்லூரியின் பழைய மாணவர் சங்க திருகோணமலைக் கிளை 1965 ம் வருடம் ஆவணி மாதம் 19 ம் திகதி ஆரம்பிக்கப் பட்டது.

கல்லூரியின் மேல்மாடியை அமைத்துக் கொடுப்பதற்காக கொழும்பு பழைய மாண வர் சங்கத்துடன் இணைந்து நிதி திரட்டிக் கொடுத்ததுடன், சங்க நிதியிலிருந்து ரூ 7061/= ம் வழங்கப்பட்டது கல்லூரியின் சாரணியக் குழு கொழும்பு செல்லும் வழி யில் திருகோணமலைக்கு வந்த சமயம் அவர்களை வரவேற்றும், கல்லூரி மாண வர்கள் கல்விச் சுற்றுலா வந்த போது திருகோணமலைத் துறைமுகம், திருக்கோ ணேஸ்வரம் கோவில், கன்னியா வெந் நீரூற்று போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்றும் காண்பித்தது. இது தவிர விளை யாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர் களுக்கு வழங்குவதற்காக வெற்றிக் கேட யம் ஒன்றினையும் வழங்கியுள்ளது.

---

கடமையை ஆற்றுவது, ஒழுக்க நெறியைக் கடைப்பிடிப்பது இரண்டும் ஒன்றுக்கொன்று இணையானது.

— மகாத்மா காந்தி

கெட்டவனுக்கு உதவி செய்வது, நல்லவனுக்கு ஒரு தீங்கு செய்வது போலவே ஆபத்தானது.

— ப்ளாட்டஸ்

உண்மைகளைப் புறக்கணிப்பதால், அவை, உண்மைகளாய் இல்லாமற் போவதில்லை.

— ஆல்டஸ் ஹக்ஸ்லி

கி. செல்லத்துரை B.A.
டென்மார்க்.

# நினைவிற்குள் தெரியும் ஆசிரிய முகங்கள்

இலங்கைத் தமிழினத்தின் வாழ்வையும் வரலாற்றையும் முன்நகர்த்திச் சென்றதில் முக்கிய பங்காற்றியவை அவர்களது பாடசாலைகளே என்றால் அது மிகைக் கூற்றல்ல. நெப்போலியன் பொனபாட்டை வெற்றிகொண்ட தளபதி வெலிங்டன் அதற்கான பயிற்சியை தான் ஈஸ்டனி லேயே பெற்றுவிட்டதாகக் கூறுவார். ஈஸ்டன் என்பது அவரது பாடசாலையின் பெயர். இதன் கருத்து பாடசாலையே ஒரு மனிதனை உருவாக்குகிறது என்பதா கும். அந்த வகையில் சிதம்பரக் கல்லூரி தன் நூற்றாண்டு விழாவை நோக்கி நடந்து வந்த பாதையில் எண்ணற்ற ஆளுமை யுள்ள மாணவத் தலைமுறையினரை உருவாக்கிய பெருமைக்குரியது.

## திசவீரசிங்கம் மாஸ்டர்

பளிச்சென்று நீலம் போட்டுத் துவைத்த வெள்ளை வேஷ்டி நாஷனல், கையில் ஓர் குடைக்கம்பு, ஆஜானுபாகு வான தோற்றம், வாயைத்திறந்தால் ஆங்கிலம் நுங்கும் நுரையுமாகப் பிரவாகம் பண்ணும். ஆழ்ந்து அகன்று நுனித்துப் போன ஆங்கிலச் சமுத்திரம். ஆசிரியர் களில் இருவகையுண்டு. ஒன்று வகுப்பறை யில் மட்டும் ஆசிரியர்களாக இருப்பவர்கள், மற்றயது வாழ்க்கை முழுவதையும் ஆசிரியராக வாழ்ந்து முடிப்பவர்கள். இதில் திசவீரசிங்கம் மாஸ்டர் இரண்டா வது ரகம்.

கல்லூரி ஆரம்பிப்பதற்குப் பதினைந்து நிமிடங்கள் முன்னதாகவே, ''டாண்'' என்று ஆஜராகியிருப்பார். வகுப்பில் பராக்குப் பார்க்கும் மாணவர்களை கீற்ஸ்' பைரன், வெங்காயம், பிஞ்சுமிளகாய், நெய்யரி, இல்லிக்குடம் என்றுகூறி ஒரு பிடிபிடிப்பார். இதனால் பல மாணவர் களுக்கு அவர்மீது அதிக கோபம். அவர் வீதியால் போகும்போது கூக்காட்டி மறைவோரும் உண்டு. மாணவப் பருவத் தில் அவரிடம் இதுபற்றி விசாரிக்க முடிய வில்லை. அவர் ஓய்வுபெற்றபின் ஓர்நாள் கேட்டுக் கொண்டேன். சிரித்தபடியே பதில்சொன்னார்.

''தண்டனையிலும் மாணவர்கள் முன்னேற்றம் பெறவேண்டும். கீற்ஸ் என்று ஒரு மாணவனைத்திட்டினால் அன்றே அம்மாணவன் கீற்ஸ் என்ற கவிஞரைப் பற்றி அறிந்துகொள்ள முயல்கின்றான். நெய்யரி என்றால் பன்னாடை, இல்லிக் குடம் என்றால் ஓட்டைக்குடம். இதைவிட சிறந்த படிப்பு ஏதாவது இருக்கிறதா'' என்றும் கேட்டார். இனி இந்த மனிதர் ஒருநாளாவது லீவெடுக்க மாட்டாரா? ஒரு பாட நேரத்திலாவது நாம் ஓய்வாக இருக்க முடியாதா? என்று ஏங்குவோம். ஆனால் அவர் என்றுமே எமக்கு அந்தச் சந்தர்ப்பத்தைத் தந்தது கிடையாது. பதின்மூன்று வருடங்களாகக் காத்திருந் தோம் பதவியிலிருந்து ஓய்வெடுக்கும்வரை அவர் எமக்கு அந்தச் சந்தர்ப்பத்தைத் தரவேயில்லை. இதுதான் திசவீரசிங்கம்

மாஸ்டர். கடமை, காலம்தவறாமை, இளமைத்துடிப்பு இவைகளை அவரிடம் கற்றுக்கொண்டவர்கள் பலர்.

### திரு. க புவனசுந்தரம்

இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய நாடுகளின் வரலாற்றைப் படித்தால் சித்தியடைந்துவிடலாமே என்று கேட்டோம். அதற்கு அவர் உலகை ஆட்டிப்படைப்பது மேலைத்தேய அரசியல்தான். எனவே ஐரோப்பிய வரலாற்றையே படிக்க வேண்டும் எனக்கூறி, எம்மை அதற்குத் தயார்ப்படுத்தினார். பிஸ்மார்க், மெற்றேனிச், கபூர் போன்ற இராஜதந்திரிகள் எல்லாம் உலகை எப்படி உருவாக்கினார்கள் என்பதை விளக்க முழு வகுப்பையுமே வீட்டிற்கே அழைத்துச் சென்று, மேலதிகமாகக் கற்பித்து வைத்தார்.

புலம்பெயர்ந்து வந்தபின் ஐரோப்பியருடன் போட்டிபோடும் வாழ்வில் மூலை முடுக்கெல்லாம் ஒளிபோட்டுக் காட்டுவது புவனசுந்தரம் மாஸ்டர் காட்டிய ஐரோப்பிய வரலாற்றுத் தகவல்களே. அண்மையில் ஓர் டேனிஸ் உயர்மட்ட அதிகாரி இலங்கையின் சகல மட்டத்தவரையும் சந்தித்து வந்திருந்தார். இலங்கைப் பிரச்சினையில் சில இக்கட்டான கேள்விகளுக்கு ஐரோப்பியக் கோணத்தில் அவருக்குப் பதில் கிடைக்கவில்லை. அதே கேள்விகளை இலங்கையிலிருந்து வந்திறங்கியதும் இங்குள்ளவர்களிடமும் கேட்டார். உரிய பதிலைக் கூறினேன். திகைத்து விட்டார். இதை உம்மால் எப்படி விளக்க முடிந்தது? என்றும் கேட்டார். ''இது எனது பதில் அல்ல; எமது ஆசிரியர் புவனசுந்தரத்தினுடையது'' என்று கூறினேன். ஐரோப்பியாவின் அதி உயர்மட்ட அரசியல் வரலாற்றுச் சிந்தனை உங்கள் பாடசாலைகளிலும் சிந்திக்கப் பட்டிருக்கிறது என்று கூறினார்.

### அதிபர். ஆர். சச்சிதானந்தம்

சிதம்பரக் கல்லூரியின் அதிபர்கள் பற்றி மிகவிரிவாகவும், தனியாகவும் ஆய்வு செய்து ஓர் நூல் எழுதப்பட வேண்டும். ஏறத்தாழ எல்லோருமே நிறைந்த ஆற்றல் கொண்டவர்கள்தான். அவர்களில் ஒருவர் திரு. சச்சிதானந்தம். பாடசாலையில் திடீரென குறுங்காலத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர். இறைபக்தர், கண்டிப்பும், நீதியும் வழுவாத நிர்வாகி.

ஒவ்வொரு தவணைப் பரீட்சையிலும் அதிகூடுதலாகப் புள்ளிகள் எடுக்கும் மாணவர்களுக்கு பொதுக் கூட்டத்தில் பரிசளிக்கும் முறையை ஏற்படுத்திவைத்து, மாணவரிடையே பெரும் விழிப்புணர்ச்சியை தூண்டியவர். கடைசிப் பிள்ளையாக இருந்த மாணவர் கூட ஓர் குறுங்காலத்தில் முதல் இடத்திற்குச் செல்லுமளவிற்கு கல்வியில் வேகத்தை ஏற்படுத்தியவர்.

முழுப்பாடசாலை மாணவர்களையும் எப்போதும் தயார் நிலையிலேயே வைத்திருப்பார். வேறு நினைவுகளில் மூழ்கவிடாமல் ஒவ்வொரு குருபூசைக்கும் பேச்சுப் போட்டிகளை நடாத்துவார். நல்ல விடயங்களைப் பற்றிப் போட்டி போட்டுக்கொண்டே பேசுவதால் பொழுதும் நல்ல வழியிலேயே கழிந்தது. பிற்காலத்தில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பல பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற போதுதான் அவர் சிறப்பை என்னால் மேலும் உணரமுடிந்தது.

### அதிபர் ச. சத்தியமூர்த்தி

இவர் கொஞ்சம் வித்தியாசமானவர். கஷ்டமான வாழ்வுச் சூழலில் இருந்து வெளிவந்தவர். ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமானால் இப்படிப்பட்ட வசதிகள் வேண்டுமெனக் கேட்டு, காரியங்களைச் செய்யாது காத்திருக்கமாட்டார். இருப்பதைக் கொண்டு தேவைப்படும் காரியத்தை கச்சிதமாக முடித்துவிடுவார்.

ஒவ்வொரு மாணவரையும், அவர்தம் குடும்பப் பின்னணிகளையும் அறிந்து, அதற்கேற்ப அவர்களை வளர்ப்பதிலும்,

அவருக்கு நிகர் அவரே. கல்லூரியின் மர வேலைத் தொழிற்கூடத்திற்கான புதிய உபகரணங்களை எடுத்தமை, புதிய கட்டிடங்களை உருவாக்கியமை, மலிவுவிலையில் புத்தக விற்பனைச்சாலை, இருபது சதத்திற்கு சோறும் மூன்று கறியுமாக மதிய போசனம், வெள்ளிக்கிழமைகளில் பாயாசம் விசேடமாக வழங்குதலென சிற்றுண்டிச் சாலையைச் செயற்பட வைத்தார். இவ்விதமே இவரது பணிகள் நீண்டு சென்று, தொண்டைமானாறு வெளிக்கள நிலையக் கட்டிடத்தை பொறுப்பேற்றுக் கட்டும்வரை நடைபெற்றது. கடற்றொழில் புதிய பாடமாக அறிமுகமான போது அதிநவீன மீன்பிடி உபகரணங்களை ஜப்பானிய அரசிடமிருந்து பெற்று வந்தது இவருடைய திறமையே. தொண்டைமானாறு நீரேரியில் பாலை மீன் வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்தத் துணை நின்றவர்.

### திரு. கந்தசாமி

இவர் ஆசிரியரோ அதிபரோ அல்ல. சாதாரண ஊழியர்தான். எத்தனையோ அதிபர் ஆசிரியர்களைக் கண்டது சிதம்பரக் கல்லூரி. அத்தனை அதிபர்களின் குணாதிசயங்களையும் அறிந்து, அவர்கள் அனைவரினதும் நிறைவுகளை மட்டுமே பேசி, குறைகளைப் பேசுவதைத் தவிர்த்து, சிரித்த முகத்துடனேயே காரியாலய ஊழியராகவே வாழ்ந்து காட்டிய சேவையாளர். காலையில் எல்லா வகுப்புக்களுக்கும் இடாப்புக்களைக் கொண்டுவருவார். பின்னர் அவற்றைச் சேகரித்துச் செல்வார். ஆசிரியர்கள், அதிபர்களைவிட மாணவர்கள் இதயங்களை ஆழ்ந்து அகன்று உணர்ந்துகொண்ட சேவையாளர், சிதம்பராவில் படித்தவரெல்லாம் படித்த பாடங்களை மறந்திருக்கலாம். திரு. கந்தசாமி அவர்களின் என்றும் மாறாத சிரிப்பையும், அவரிடமிருந்த அழகான பவுண்பல்லையும் எவருமே மறந்திட முடியாது. சிரித்து வாழ வேண்டும் என்று எல்லோரும் பேசுவார்கள், ஆனால் சிரித்து வாழ்ந்து காட்டிய ஒரு பாத்திரம் திரு. கந்தசாமி அவர்கள்.

### செல்வரெத்தினம் மாஸ்டர்

கம்யூனிசம், மார்க்சிசம், சோசலிசம் போன்ற சொற்களை அவ்வப்போது பாடப்புத்தகங்களின் வழி கேள்விப்பட்டிருக்கிறோம். அவை பற்றி அறிய அப்போதைய பாடசாலைச் சூழலில் எந்த வகைய வழியும் இருக்கவில்லை. பத்தாவது வகுப்புப் படித்துக்கொண்டிருந்தபோது யாழ். இந்துக்கல்லூரியிலிருந்து மாற்றலாகி வந்திருந்தார். எமக்குப் புவியியல் படிப்பித்தார். அத்தோடு கம்யூனிசத்தையும் படிக்க வழி செய்தார். ஒவ்வொரு சனிக்கிழமையும் காலைமுதல் மாலைவரை தான் அறிந்த கம்யூனிசத்தின் சகல பக்கங்களையும் எடுத்துச் சொன்னார்.

மார்க்சிசம், கம்யூனிசம் ஆகியவை தூர விலக்கப்பட்டிருந்த பாடசாலைச் சூழலில் அவர் பிரவேசம் முற்றிலும் வித்தியாசமானதாக இருந்தது. மார்க்சிசம் வேறு மார்க்சிஸ்டுகள் வேறு என்பதை கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் வரை அவர் வகுப்புக்கள் ஆழமாக இருந்தன. கூர்ந்து பார்த்தால் சீர்மை பெற்ற சமூக வாழ்வின் மையத்தில் மார்க்சிசம் அழகோடு கொலுவிருக்கும் என்றார். மார்க்சிசத்தை ஏற்றுக் கொள்ளாத நாடுகள் பலவற்றில் மார்க்சிசம் அழகோடு துலங்குவதைக் காண்கின்றேன். ஆனால் அவர்கள் அதை மார்க்சிசம் என்று பெயர் மட்டும் சுட்டுவதில்லை. மார்க்சிசம் பேசப்படவேண்டியதல்ல செயற்படுத்தப்பட வேண்டியது என்ற செல்வரெத்தினம் மாஸ்டரின் கருத்தை டென்மார்க்கில் இலகுவாகக் காணமுடிகின்றது.

### இரத்தினம் மாஸ்டர்

இரத்தினம் மாஸ்டர் என்றால் எப்போதும் பிரம்புடனேயே திரிவார். இவரிடம் அடிவாங்காதவர் அப்பாடசாலை

யிலேயே இல்லை என்பது அனேகர் கருத்து. ஆனால் மாசுமறுவற்ற அன்பால் நிறைந்த இரத்தினம் மாஸ்டரை பலர் அடையாளம் காணவில்லை. ஒரு நாள் பரீட்சையில் தோல்வியடைந்த மாணவன் ஒருவன் நஞ்சருந்தி இறந்து விட்டான். அவனுடைய சடலம் பாட சாலை வழியாகப் போனது. மாணவர் கள் அஞ்சலி செலுத்த ஓடினார்கள். இரத்தினம் மாஸ்டர் பிரம்புடன் நின்று கோபமாகத் தடுத்தார். ''பரீட்சைத் தோல்வியை தாங்கமுடியாது தற்கொலை செய்தவருக்கு அஞ்சலி தேவையில்லை'' என்று கூறி இறந்த மாணவனைத் திட்டித் தீர்த்தார். இனி பரீட்சைத் தோல்வியால் இறப்பவருக்கு அங்கு எந்த மரியாதையும் கிடையாது என்ற கருத்தியலை மாணவரி டையே ஏற்படுத்தினார். ஆயிரம் புத்த கங்களைப் படித்தாலும் கிடைக்காத அறிவை தனது பிரம்பால் ஏற்படுத்தி வைத்தவர் இரத்தினம் மாஸ்டர். இங்கு ஐரோப்பாவில் பாடசாலையில் இரத்தினம் மாஸ்டரின் முறை சட்டரீதியாக தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் இளவயதி லேயே சீரழிந்து போகும் ஐரோப்பியத் தலைமுறையினரிடையே ஓர் ஒழுங்கை ஏற்படுத்திக் கொண்டிருப்பவர்கள் இரத் தினம் மாஸ்டரைப் போன்ற கண்டிப்பான ஆசிரியர்களே என்பதையும் மறக்கமுடிய வில்லை.

இவர்களோடு மேலும் பலரைப்பற்றி எழுத வேண்டும். விரிவஞ்சி எழுத முடிய வில்லை. மாணவரை உடனடியாக, ''அலேட்'' நிலைக்கு தள்ளும் பொலிகை நடராஜா மாஸ்டர், பல்கலைக்கழகத் திற்கு மாணவர்களைக் கொத்துக் கொத் தாக அனுப்பிய அற்புதநாதன், சுந்தர மூர்த்தி, கே. வி. நடராஜா, சித்திரவேல், நவரத்தினம் குழுவினர். கூரிய அறிவு மிக்க மகாலிங்கம், சண்முகராஜா போன்ற கணித ஆசிரியர்கள், அழகம்மா, ஜெகா னந்தகுரு, பரமானந்தம், இராஜேஸ்வரி, கமலா பெரியதம்பி போன்ற ஆசிரியைகள், சமயபாடப் புகழ் சாந்தமூர்த்தி, கதிர் காமத்தம்பி போன்றோர். ஓவியக் கலைஞர் பாலசுப்பிரமணியம், மரவேலைக் காக முருகுப்பிள்ளை மாஸ்டர், விளையாட்டுத்துறை அரியம் மாஸ்டர், தியாகராஜா மாஸ்டர், கி. நடராஜா, பரமகுரு, பெரியதம்பி, பகவத்சிங்கம், வட்டுக்கோட்டை பாலசுப்பிரமணியம், அ. சுந்தரம்பிள்ளை என்று அக்காலத்தில் 56 ஆசிரியர்களும் 1500 மாணவர்களுமாக பாடசாலை நிறைந்திருந்தது. அத்தனை யையும் விபரமாக எழுதமுடியவில்லை. அதிபர் செல்வநாயகம் அவர்களின் சேவை பற்றி தனிக்கட்டுரை எழுதவேண்டியது அவசியம்.

சிதம்பரக் கல்லூரியின் வாழ்வு முடிந்து பல்லாயிரக்கணக்கான மைல்கள் விலகி வந்து, அக்கல்லூரியால் நாம் பெற்ற பயன் யாதெனச்சிந்தித்துப் பார்க்கிறேன். பாடப்புத்தகங்களுக்கு வெளியால் ஆசிரி யர்கள் காட்டிய வழியே வாழ்க்கைக்கு பெரும் ஊன்று கோலாக இருப்பதைக் கண்டு அதிசயிக்கிறேன். ஆசிரியர்களுக்கு நாமெல்லாம் பட்டம் சூட்டி பழித்தோம். ஆனால் அவர்களோ நாம் பல்கலைக் கழகங்களில் படித்துப் பட்டம் பெற வழி செய்தார்களென ஒரு நூலில் வாசித்தேன். சிதம்பரக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் அது பொருந்தும். மாணவர்களிடம் பட்டம் பெறாத ஆசிரியர்கள் அங்கு எவரும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனாலும் கூட ஒவ்வொரு ஆசிரியரும் தாம் சிதம் பராவில் சேவையாற்றிய காலத்தையே தம் வாழ்வின் பொற்காலமாக எண்ணிப் போற்றுவதையும், சிதம்பரக் கல்லூரி மாணவர்களை தம் உயர்ந்த அன்புக் குரியவர்களாக நேசித்துப் பேசுவதையும் இன்றும்கூட போகும் நாடுகளிலெல்லாம் கேட்கின்றேன்.

திருமதி தவமலர் சுரேந்திரநாதன்
அதிபர்,
யா/ கெருடாவில் இ. த. க. பாடசாலை

# என் இனியவளாம் சிதம்பராவும், நினைவில் நீங்கா பெண்ணாசிரியர்களும்



கப்பல் ஓட்டிய தமிழன் வெல்வெற் இறக்குமதி செய்ததால் வல்வெட்டித்துறை என்னும் பெயரைப் பெற்று, இன்று எழிலுடன் காட்சி தரும் வல்வை நகரில், ஒரு சிறந்த பாடசாலை தான் என் இனியவளான சிதம்பரக்கல்லூரி. கெருடாவில் இ. த. க. பாடசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்று விட்டு இடைநிலைக் கல்விக்காக சிதம்பரக் கல்லூரிக்கு 1954ம் ஆண்டு காலடி எடுத்து வைத்தேன். கிராமப்புறத்திலிருந்து நகரத்திற்குச் சென்றபோது அங்கு சில விசேடமான காட்சிகளைக் காணக் கூடியதாக இருந்தது.

அக்காலத்தில் வல்வை நகரிலிருந்து பெண்கள் வண்டிலில் தான் பாடசாலைக்கு வருவார்கள். கந்தன் என்னும் கட்டையனும் வேலன் என்னும் நெட்டையனும் வியர்வை சிந்திய வண்ணம் ஒரு வண்டிலில் ஆறு மாணவிகளை ஏற்றி வண்டிலை இழுத்துக் கொண்டு வருவார்கள். 1300 மாணவர்கள் கல்வி கற்ற காலம் அது. அதில் 30% பெண்களாவர். பெண்களிற்கு பெண் பாடசாலையாகவும், ஆண்களிற்கு ஆண் பாடசாலையாகவும் காட்சி கொடுத்தவள் எம் இனியவள்.

ஒரு பெண் கல்வி கற்றால் அது அக் குடும்பம் முழுவதையும் கல்வி கற்கத் தூண்டுகிறது. அந்த வகையில் எங்கள் சிதம்பராவும் பல பெண்களை கல்வி ஊட்டி உயர்வடையச் செய்தது. அந்தக் காலத்தில் இங்கு கல்வி கற்ற பெண்கள் பூப்படைந்ததும் தாவணி போட வேண்டிய நிலையில் இருந்தார்கள். ஆகையால் பெண்களை பாவாடை தாவணியில் பார்க்கக் கூடியதாக இருந்தது. சுருங்கக் கூறப்போனால் ஒரு குட்டி இராமநாதன் கல்லூரியை இங்கு காணக் கூடியதாக இருந்தது. இந்த இடைக் காலத்தில் பல்கலைக்கழகம் சென்ற மாணவிகளும் இருக்கின்றார்கள் செல்வி இராஜேஸ்வரி மகாலிங்கம், செல்வி விசாகரதினம் சின்னத்துரை, செல்வி சுசிலா சேதுராஜா ஆகியோர் பல்கலைக்கழகம் புகுந்தவர்கள். இன்று செல்வி இராஜேஸ்வரி மகாலிங்கம் முதியோர் 'இல்லப்பணிப்பாளராக கைதடியில் ஒரு சிறந்த பதவியை ஏற்றுக் கொண்டிருக்கிறார். இந்த வகை

யில் எம் மனக்கண்ணில் நீங்காது நிறைந்து நிற்கும் ஆசிரியர்களின் மறக்க முடியாத நினைவலைகளாக.

### திருமதி பரமேஸ்வரி அருட்சுந்தரம்

இவர் ஒரு ஆசிரிய தராதரப்பத்திர தகைமையுடைய ஆசிரியராவார். சிவப்பு இல்லத்தாயுமாவார். வெள்ளை நிற முடைய இவர் நடுத்தர உயரமுடையவர். நீளமான கூந்தல், ஒற்றைப் பின்னலுடன் காட்சி கொடுப்பவர். மூக்குக் கண்ணாடி அணிந்திருப்பார். யாருக்கும் உதவும் கரங்களையுடையவர், மாணவர்களுக்குப் பாங்கான அறிவுரைகளை என்றும் கூறு வார்.

### திருமதி செல்வநாச்சி செல்வரத்தினம்

இவர் ஒரு பொதுப்பயிற்சி தகைமை யுடைய ஆசிரியராவார். வசிப்பிடம் உடுப் பிட்டி ஆகும். பொது நிறமுடையவர். உயரமானவர். இவர் தமிழ், சமயம் ஆகிய பாடங்களை கற்பித்தவர். இவரின் கற்பித் தலின் திறமையினால் மாணவர்களின் பகிரங்கப் பரீட்சையின் பெறுபேறுகள் திறமையாகவே இருக்கும். இனிமையான குரல் உடையவர். தேவாரம், வெண்பா போன்றவற்றை மிகவும் இனிமையுடன் பாடிக் காட்டுவார். மாணவர்களின் ஒழுக் கத்தில் கூடிய அக்கறை கொண்டிருந்தார். எல்லோரும் அவரிடம் மிகுந்த அன்பு கொண்டவர்களாக இருந்தார்கள். விருந் தோம்பல் என்பதை அவரிடம் இருந்தே நாம் கற்றுக் கொண்டோம்.

### திருமதி பொன்னம்மா இரத்தினம்

பொதுப் பயிற்சி தகைமையுடைய ஆசி ரியராவார். வசிப்பிடம் உடுப்பிட்டி ஆகும். பெயர்கேற்ப பொன்னும் இரத்தினமும் நிறைய அணிந்திருப்பார். கடுகடுப்பை இவரிடம் கண்டதில்லை. அடக்கம், அமைதி, பொறுமமை என்பவற்றைக் கொண்டு பெண்ணிற்கே இலக்கணமாக திகழ்ந்த பெண் ஆசிரியை இவர். தமிழ், சமயம், தையல் ஆகிய பாடங்களை மிகத் திறமையாக மாணவர்களுக்குப் போதித் தார்.

### செல்வி ஜானகி கணபதிப்பிள்ளை

இவர் ஒரு ஆசிரிய தராதரப்பத்திர தகைமையுடைய ஆசிரியராவார். இவர் அழகிய இளம் ஆசிரியை. வல்வெட்டித் துறையை பிறப்பிடமாகக் கொண்டவர். பாடசாலைக்கு வண்டிலில் வருபவர். சிரித்த முகமுடைய இவர், கவர்ச்சியான உடலமைப்பைக் கொண்டவர். நாகரி கமான முறையில் சேலை அணிவார். கணீர் என்ற குரல் உடையவர். நீண்ட கூந்தலையுடைய இவர், ஒற்றைப் பின்ன லமைப்பை விரும்புவார். சுருங்கக் கூறின் இவர் ஒரு புன்னகையரசி. ஆங்கிலம், மனையியல், உடற்பயிற்சி போன்ற பாடங் களை இனிதே கற்பித்தார். இவர் எங் களை துரிதமாகவும், வேகமாகவும், நடக் கச் செய்வதற்கு எல்லா நேரமும் தனது பாடத்துடன் தொடர்புபடுத்தி இடம் வலம் (Left, Right) என்று கூறுவார். நட னமும் நன்றாகச் செய்வார். இப்படிப் பட்ட ஆசிரியரைக் காண்பது அரிது. குயி லைப்போல் பாடும் இவர், மயிலைப் போல் நடனம் ஆடும் இயல்புடையவர். எங்களுக்கு பல சிற்றுண்டி வகைகளை சமைக்கக் கற்றுத் தந்தார். வலைப்பந்தாட்டம் எறி பந்தாட்டம் என்பவற்றில் எங்களுடன் சேர்ந்தே விளையாடுவார். அவரும் ஒரு மாணவியாகவே எங்களுடன சேர்ந்து செயற்பட்டு எங்களுக்கு இருக்கும் பயம், அறியாமை என்பவற்றை நீக்கி அறிவொளி பெற வைத்தார். மனையியற் செயற் பாட்டில் ஆர்வமுடையவர். அன்றைய மனையியல் பாடக்கல்வி அதிகாரி திருமதி விரசிங்கம் அவர்களின் பாராட்டுக்களையும் பெற்றவர். இவர்

பாடசாலையில் இடம்பெறும் கலை நிகழ்ச்சிகளில் கூடிய பங்கெடுத்து செயற்பட்டார் எனில் மிகையாகாது.

### செல்வி நேசமலர் வேலுப்பிள்ளை

இவர் பொலிகண்டியை பிறப்பிடமாகக் கொண்டவர். மெல்லிய உடலமைப்புடைய இவர், நீளமான கூந்தலை இரட்டைப் பின்னலாகக் கட்டி கொண்டு வருவார். குயில் போன்ற குரலோசை உடையவர். சுருங்கக் கூறின் ஓர் அழகிய சிலை, அன்னம் போல் நடை கொண்ட ஓர் அழகிய இளம் ஆசிரியை. இவர் ஆங்கிலம், கணிதம் போன்ற பாடங்களை திறமையாகக் கற்பித்தார். 1955ம் ஆண்டு ஜூன் மாதம் தனது பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு இந்தியா சென்று விட்டார்.

### தங்கராணி வேலுப்பிள்ளை

இவர் ஒரு பட்டதாரி ஆசிரியர். வசிப்பிடம் வவுனியா ஆகும். மஞ்சள் இல்லத்தின் தாயாவார். இவர் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் விடுதியில் சில காலம் தரித்திருந்து பின் ஊரிக்காட்டில் சிவப்பிரகாசம் வீட்டில் தங்கியிருந்தார். இவர் ஆங்கிலம், சரித்திரம் என்பவற்றை நன்றாகப் போதித்தார். பொது நிறமுடைய இவர் உயரமானவர். மிகவும் அழகானவர். இவர் மெல்லிடையே அந்த அழகிற்கான சிறப்பமைப்பாகும். எங்கள் எல்லோராலும் கவரப்பட்டவர். அலை வடிவான தலைமுடியழகு உடையவர். அழகாகக் கொண்டை போடுவார். போட்டிகள் நடாத்துவார். இவரைப்போல ஒரு சிறந்த ஆசிரியராக நானும் வரவேண்டும். என்ற அவா என்னிடம் குடிகொண்டது.

### செல்வி இராஜேஸ்வரி சம்பந்தர்

இவர் ஒரு பட்டதாரி ஆசிரியராவர். வசிப்பிடம் திண்ணைவேலி. மாநிறமுடையவர். கண்ணுக்கு மை தீட்டியிருப்பார். 'ஸ்ரைல்' ஆசிரியை. நன்றாகப் பாடுவார். வீணை வாசிப்பார். பின்பு எமது மாதாவின் புதல்வன் திரு. எஸ். ஜெகானந்த குரு (B. Sc.) அவர்களை திருமணஞ் செய்து திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்த குருவாக பெயர் மாற்றம் அடைந்தார். இவர் இலக்கிய மன்றங்களிற்கு பொறுப்பாசிரியர் ஆவார். பாடசாலையில் இடம்பெறும் கலை, கலாசார நிகழ்வுகளில் முன்னணியில் நின்று பங்கெடுத்து ஒத்துழைப்பு வழங்குவார். வட இந்து மகளிர் கல்லூரிப் பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்த போது பொறுப்பை அரசாங்கத்திடம் கொடுக்காததால் அங்கிருந்த அதிபர் செல்வி சரவணமுத்து உபஅதிபர் திருமதி கனகசுந்தரம் உட்பட ஐவர் இப்பாடசாலைக்கு வந்துசேர்ந்து பின்பு பொறுப்புக் கொடுக்கப்பட்ட பின் விலகி விட்டார்கள்.

### திருமதி அழகம்மா இராசரத்தினம்

இவர் ஒரு பட்டதாரி ஆசிரியராவார். வசிப்பிடம் ஊரிக்காடு, மாநிறமுடையவர். பெயரிற்கேற்ப அழகு உடையவர். நன்றாகக் கற்பிக்கும் திறனுடையவர். மாணவர்களின் ஒழுக்க நடவடிக்கைகளில் மிகவும் அக்கறை உடையவர், குயிலோசை உடையவர். தமிழ், சமயம் ஆகிய பாடங்களை திறம்படக் கற்பித்தார்.

எங்களை ஒளிர்கின்ற விளக்காக்கி ஏனைய விளக்குகளையும் ஒளிர வைத்த இந்த ஆசிரியர்கள் என்றும் எம் நெஞ்சில் நிறைந்தவர்கள்! நிலைத்தவர்கள்!

வாழ்க அவர்கள் நாமம்!
வாழ்க அவர்கள் புகழ்!
வாழ்க என்றும் வாழியவே.



ADVANCED LEVEL UNION MEMBERS WITH THEIR STAFF – 1968

ச. சத்தியமூர்த்தி
முன்னாள் அதிபர், சிதம்பரக்கல்லூரி

# வல்வைப் பெரியார் அமரர் ஞா. தையல்பாகர்

சுத்த சலவை செய்த வெண்ணிற ஆடை. நாலு முழ வேட்டி, பொடிஸ் (Bodice) இது கொட்டன் கையுடன் கழுத்தில் கொலரில்லாத பெனியன் போன்ற அணி) ஓர் நனைமுண்டு அதை இரண்டாக மடித்துத் தலையில் மொட்டாக்கான அணி, கழுத்தில் நூலில் கோர்த்த ஒற்றை உருத்திராக்கமணி, காலில் செருப்பு இவற்றுடன் ஓர் சந்நியாசித் தோற்றத்துடன் காணப்படுவார். பருத்தித்துறை உடுப்பிட்டி போன்ற இடங்கள் சென்று நித்திய கருமங்களை செய்யும் பணிக்கு ஓர் பழைய ரலி (Raleigh) சைக்கிள். இதன் பின் கரியர் ஸ்பிரிங் இல்லாமையால் இழைக்கயிற்றால் அதன் ஸ்ராண்ட் பிணைக்கப்பட்டிருக்கும். நெற்றியில் திரிபுண்டரமாக விபூதி அணிந்திருப்பார். இந்த எளிய தோற்றத்தைக் கொண்ட பெரியார் தான் சிதம்பர வித்தியாலயம் (பிற்காலத்தில் சிதம்பரக் கல்லூரி எனப் பெயர் மாற்றப்பட்டது) அத்துடன் சிவகுரு வித்தியாசாலையையும் நிறுவிப் பல பொருளாதார நெருக்கடிகளின் மத்தியிலும் ஈடுபாட்டுடனும் ஆத்ம சுத்தியுடனும் முகாமையாளராகப் பணியேற்று நடத்திய திருவாளர் ஞா. தையல்பாகர் ஆவார்.

இப்பெரியார் தாம் சாகும்வரை அதே எளிமையான சுத்த வெண்ணிற உடையுடனும், எளிமையான வாழ்க்கை முறையுடனும் ஓர் அரிய சிவபூசை செய்யும் பெரியாராகவும் திகழ்ந்தார். ஒரு பெரியாரை நாம் நினைவு கூரும் போது அவரிடம் திகழ்ந்த சிறப்புக் குணாதிசயங்களை எண்ணுவோம்.

சிவபக்தர்:- வல்வை வைத்தீஸ்வரன் கோவிலின் நித்திய தொழுகையாளராகவும், அக்கோவில் ஸ்தாபகர்களால் உறவினர் என்ற உரிமையுடனும், சைவப் பாடசாலைகள் இரண்டின் முகாமையாளர் ஆனபடியினாலும் கோவில் விஷேட உற்சவ காலங்களில் ஊர்ப்பிரமுகராக மதிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். ஒரு சந்தர்ப்பத்தில் கோவில் நிர்வாகிகளுடன் சில விடயங்களில் கருத்து வேற்றுமை தோன்றியபடியால் சிதம்பரக் கல்லூரி வளாகத்தில் ஈசான மூலையில் ஒரு சிறு கூடமமைத்து காசியிலிருந்து ஒரு செந்நிறமுள்ள ஸ்படிகலிங்கத்தை வருவித்து அந்த சிறுகூடத்தில் அதனை ஸ்தாபித்து முக்காலமும் சிவலிங்க பூசை நடாத்தி வந்தார். தன் போன்றே தனது மக்களையும் சிவபக்தர்களாக ஆக்கி அவர்களை நன்னெறியோடு வாழ்க்கை நடாத்தப் பழக்கினார். தினமும் காலையில் தானும் தனது மக்களும் மணிவாசகரின் சிவபுராணத்துடன் நக்கீரரின் திருமுருகாற்றுப்படையையும் ஓதுவார். அவரினது இச்சிறு கோவிலில் அன்றி வேறு கோவில்களில் அவரைக் காண்பது அரிது. ஆனால் வசதிப்பட்ட வேளைகளில் செல்வச்சந்நிதி முருகனைச் சுற்றிக் கும்பிட்டு வருவார்.

நான்கு சமய குரவர்களினதும் குரு பூசைத் தினங்களை பாடசாலையில் மாண வர், ஆசிரியர் எல்லோரையும் பங்கு பெறச் செய்து சிக்கனமான முறையில் நடாத்திப் பிரசாதமும் வழங்குவார். இனிமையான குரலில் அவர் திருமுறைகளைப் பாடும் போது கேட்க ஆசையாக இருக்கும். அவர் அத்தினங்களில் தாமே பூசைகள் யாவற்றையும் பய பக்தியுடன் செய்வார். அவர் பூசைக்கு வருகின்ற கோலம் - வெள்ளை வேட்டியும் அரையில் வெள்ளைச் சால்வையும், மேனியிற் துலங்கும் திருநீற்றுக் கீற்றுகளும், ஓர் கையில் மணியும் மறுகையில் தீபமும் முப்புரிநாண் தரிக்காத ஓர் சைவக் குருக்களின் தெய்வீகக் கோலத்துடன் - கண்ணுக்குத் தெவிட்டாத தெய்வக்கோலத்துடன் பொலிவார். தூப தீப ஆராதனைகளை தெய்வபக்தியோடு நடத்துவார்.

தாம் சிவலிங்க பூசை செய்த கூடத்தின் அருகாமையில் 1950 ம் ஆண்டளவில் ஓர் சிவாலயத்தை அமைத்து ''சுந்தரப் பெருமான் சிவாலய'' மெனப் பெயரிட்டு பிரம்மஸ்ரீ செந்தில்நாதக் குருக்களை பிரதம குருவாக நியமித்துச் சிறப்பாகத் திருவிழாக்களும் நடத்தி வந்தார். ஊதியம் குறைவாயினும் குருக்கள் அவர்கள் மிகவும் ஈடுபாட்டுடன் கடமை புரிந்து கோவிலைச் சிறப்பித்தார். கற்பூரதீபம் கோவில் பிரகாரச் சுவர் யாவற்றையும் கரிபடச் செய்யும் என்ற காரணத்தால் ஒற்றைக் கற்பூர தீபம், பஞ்சாராத்தி யாவும் தேங்காய் எண்ணெய்த்திரியாற் செயற்பட உருவாக்கி வைத்தமை, இக் கோயிலின் சிறப்பம்சமாகும். இச்சிவாலயம் குண்டுவீச்சினாலும் எறிகணை வீச்சினாலும் சிதிலமடைந்துள்ள நிலையில் தற்போதுள்ளது. நித்திய பூசைகளை வல்வை வைத்தீஸ்வர ஆலயப் பிரதம குரு பிரம்மஸ்ரீ ப. மனோகரக்குருக்கள் பொறுப்பேற்றுச் செய்து வருகின்றார். ஆலயத்தில் தெற்கே ஆரம்பத்தில் பூசிக்கப்பட்ட சிவலிங்கம் அதே கூடத்தில் பூசைகள் செய்து பேணப்பட்டு வருகின்றது. வல்வை மக்களுக்கும், சிதம்பரக்கல்லூரி, சிவகுருவித்தியாசாலை ஆசிரியர், மாணவர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும் ஓர் முக்கிய கடமைப்பாடு உண்டு. அமரர் தையல்பாகருடைய குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு, இந்த ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து, குடமுழுக்கு விழா நடாத்தி, ஓர் பிரதம குருவை நியமித்து வசதி படைத்தவர்களைக் கொண்டுவித்து திருவிழா, விசேட உற்சவங்களை நடாத்தி வர வேண்டும். குறிப்பாக சிதம்பரக்கல்லூரி, சிவகுருவித்தியாசாலை, ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் பங்கிட்டு நடாத்திச் சிறப்பிக்க வேண்டும்.

**சிறந்த நிர்வாகி:-** ஆரம்ப காலத்தில் மாணவர்கள் சம்பளப்பணம் செலுத்தியே கல்வி பயின்றனர். இவரினால் அறவிடப்பட்ட தொகை சுற்றாடலிலுள்ள மிஷன் பாடசாலைகளினால் அறவிடப்பட்ட தொகையிலும் மிகவும் குறைவானது. இத்தொகையிலிருந்தே பாடசாலைக் கட்டடம், தளபாடம், ஆசிரியர் சம்பளம், காகிதாதிகள் யாவும் சமாளிக்கப்பட்டன. ஒவ்வோர் வகுப்பு ஆசிரியரிடமுமே பணம் வசூல்செய்து பற்றுச்சீட்டு வழங்கும் பொறுப்பை ஒப்படைத்திருந்தார். ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் படித்தால் மூத்தவர்க்கு முழுச்சம்பளம், மற்றவர்க்கு அரைச் சம்பளம், மற்றவர்க்கு இலவசம் என்னும் ஒழுங்கைக் கைக்கொண்டார்.

சம்பளமிறுக்க முடியாத வறிய மாணவரை பெற்றோரின் வேண்டுதலின் பேரில் இலவசமாக ஏற்றுக் கொள்வார். இம் மாணவர்கள் நன்றியுபகாரமாக பாடசாலையில் சிரமதானத் தொண்டு செய்து உதவினார்கள். மாலையில் வகுப்பறைகளுடன் பாடசாலை வளவைக் கூட்டித் துப்பரவு செய்தல், வேலியடைத்தல், கிணறு சுத்தம் செய்தல், பாடசாலைக் கூரை வேய்தல், மற்றும் சில்லறை வேலைகள் இச்சிரமதானத் தொண்டில் அடங்கும். கூரை வேயும் போது வேய்தலுக்கு வசதி

யாக கூரையை 20 அடித்துண்டுகளாக இடையில் தராப் பூச்சு பூசப்பெற்ற நெளி தகடுகளைக் கொண்டு பிரித்திருந்தார். சிறுபிள்ளைகள் நின்று வேய்வதற்கு ஏது வாக காவார்கள் அமைத்து ஒருவருக்கு இரண்டு கட்டு வீதம் கொடுத்து அவர்கள் காவாரில் இங்குமங்கும் பெயர்ந்து விழாது இருக்கும் வண்ணம் ஒழுங்கு செய்வார். கீழ்த்தாவாரத்திலிருந்து மேல் முகடு வரை இடைச்சலாகைகளிற் சுற்றாது, உறுதியான தேடாக்கயிறுகளைக் கட்டி கிடுகுகளை ஈர்க்கினாலே கட்டுவிப்பார். கூரை பிடுங்குகின்ற சமயம் முகட்டில் தேடாக் கயிறுகளை வரிசையாக மாணவர்கள் நின்று அவிழ்த்து தாழ்வாரத்திலும் அவிழ்த்து மேலிருந்து சுருளாகச் சுருட்டி வீழ்த்துவார்கள். இதனால் ஒவ்வொரு ஈர்க்காக வெட்டும் அபாயகரமானதும், சிரமமானதுமான ,வேலையைத்தவிர்ப்பார். பழைய கிடுகுச்சுருள் ஆறு அடிக் கீலங்களாக வெட்டப்பட்டு வேலி அடைத்தல், பழமரங்களைப் பாதுகாத்தல் போன்றவற்றிற்குப் பாவிப்பார். முழுநாள் வேலையாளியின் சிரமதானி கட்டு காலை உணவுடன் மதிய உணவுமாக தாமும் தம் குடும்பத்தினரும் தினமும் சாப்பிடும் எளிமையான உணவைத் தாராளமாகக் கொடுப்பார்.

பாடசாலை ஆசிரியர்கள் தன் கீழ் வேலை செய்பவர்களாக இருந்தபோதும் வகுப்பு நேரங்களில் அவர்களைச் சந்திக்க வரும்போது ஆசிரியர் தனது கடமையை முடித்து வரும் வரை வகுப்பிற்கு வெளியே பொறுமையுடன் காத்து நின்று தனது கருமத்தை முடிப்பார். அதிபரைச் சந்திக்கச் செல்லும் சமயங்களில் மிக அமைதியுடன் நடந்து சென்று அவரைக் காண்பார். அதிபர் ஓர் பிராமணரானபடியால் அவரைச் ''சுவாமி'' என்றே கௌரவமாக அழைப்பார்.

1945ல் அவருடைய மகன் அமரர் தை. அருட்சுந்தரம் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். தமக்கு ஆங்கிலம் தெரியாத காரணத்தால் கந்தோர்க் கருமங்கள் யாவும் ஆங்கிலத்தில் மேற்கொள்ளப்பட்டமையினால் பாடசாலை முகாமை, மான்யம் போன்ற யாவற்றிலும் அதிபரையே பங்குபற்றச் செய்து கருமமாற்றினார்.

பாடசாலை மேலதிக கட்டடம் தளபாடத் தேவைகளை வட்டிக்குப் பணம் கடனாகப் பெற்றுத் தாமதமின்றி நிறைவேற்றி வைப்பார். பெரும்பாலான கட்டட அமைப்புக்கள் யாவும் அமரர் இளையதம்பி அவர்களால் திறம்படச் செய்து முடிக்கப்பட்டன. பாடசாலைத் தளபாடங்களில் ஒரு சட்டமேனும் பலகையேனும் சேதம் ஏற்பட்டிருந்தால் அவற்றைச் செப்பனிடும் பட்டறைக்கு உடனடியாக அனுப்பிவிடுவார். செப்பனிடும் வேலைகள் யாவும் எம்மால் ''தேவதச்சன்'' என்று பரிகாசமாக அழைக்கப்படும் திரு. இராமலிங்கம் என்பவரினால் மேற்கொள்ளப்பட்டன.

அந்தக் காலத்தில் வல்வையிலும் ஏனைய இடங்களிலும் 5 அங்குல கொங்கிறீற் கல்லினால்தான் கட்டடங்கள் அமைக்கப்பட்டன. ஆனால் திரு. தையல்பாகர் அவர்களோ 3 அங்குல கல்லில் கட்டடம் அமைத்து ஒரு புரட்சியை ஏற்படுத்தினார். பத்து அடி இடைவெளியுள்ள 9 அங்குலத் தூண்களுக்கிடையே இந்த 3 அங்குலக் கற்கள் அடுக்கப்பட்டு கட்டடங்கள் அமைக்கப்பட்டன.

வன்னிப் பகுதியிலிருந்து விறகுக்காகக் கொண்டு வரப்படும் விட்டம் பெருத்த 4 அடி நீளமான மரக்குற்றிகளை தெரிந்தெடுத்து விறகு விலைக்கு வாங்கி அவற்றைக் கொண்டு சிக்கனமான முறையில் தளபாடங்களைச் செய்விப்பார். மரங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் நாவல் மரங்களுடன் கொங்கிறீற்றால் வாங்கு, மேசைகளைச் செய்து சமாளித்தார்.

பாடசாலை வளவில் இலவசமாகக் கல்வி பெறும் மாணவரின் உதவியுடன் பூச்செடிகளையும், பழ மரங்களையும் நட்டார். தமது கட்டட, தளபாடவேலைகள், வெளிக்கருமங்கள், வீட்டில் தவறாது வளர்த்துவரும் பசுமாடுகளைப் பராமரித்தல் போன்றவற்றை கவனித்துக்கொள்வதற்காக ஊரிக்காடு சிவப்பிரகாசம் அவர்களை நியமித்திருந்தார். இவர் மேற்சொன்ன வேலைகளுடன் பாடசாலைக்கு கள்ளமொளித்து நெற்கொழு வயிரவர் கோவிலடியிலும், காட்டுப்பற்றைகளிலும் பதுங்கி ஒளித்திருக்கும் மாணவர்களை கையோடுபற்றி வந்து அதிபரிடமோ, முகாமையாளரிடமோ கையளிப்பார். இதனால் இவரை மாணவர்கள் ஏ. எஸ் .பி (A. S. P.) எனப் பரிகாசம் செய்வர்.

இவர் முகாமைத்துவம் செய்த காலத்தின் முற்பகுதி 1914 — 1918 ஆண்டு முதலாவது உலகமகாயுத்தம் நடந்துமுடிந்த காலமாகும். இதன் காரணமாக ஏற்பட்ட பண அமுக்கத்தினால் (Depression) வல்வையிற் பலர் தொழில் இல்லாதிருந்தனர். அவர்களின் பிள்ளைகளை சீவகாருண்யத்துடன் இலவசமாகவோ, குறைந்த சம்பளத்துடனோ படிப்பை மேற்கொள்வதற்கு வசதி செய்தார். இவர்கள் யாவரும் அவரின் பேருதவியை மறவாது அவரை மதிப்புடன் கௌரவித்து வந்தார்கள்.

நாம் இந்தப் பெரியாரை முதலில் தரிசித்த சந்தர்ப்பம் எம்மைப் பொறுத்தமட்டில் கசப்பானதும் அதேசமயம் போற்றப்படக் கூடியதுமான சம்பவமாகும். பாடசாலைக்கு வடமேற்கு மூலையில் வேலிக்கு வெளியே கால் நடைகள் தாகம் தீர்க்க ஓர் தண்ணீர்த்தொட்டி எந்நேரமும் நீர் நிறைந்தபடியே பராமரிக்கப்படுவது வழக்கம். நான் அமெரிக்க மிஷன் பாடசலையில் 4ம் வகுப்பு சித்தியடைந்து ஆங்கிலக் கல்விக்காகச் சேர்ந்த முதல் நாள் விளையாட்டு மைதானத்தில் தேகப்பயிற்சி முடித்துக் கொண்டு கல்லூரிவளவினுள் வரும்போது அத்தண்ணீர்த் தொட்டியில் நீர் எடுத்து கால் கை சுத்தி செய்தேன். இதனை அவதானித்த பாடசாலை வாசலில் நின்ற உணவு விடுதி உரிமையாளர் ஆறுமுகம் எனது கையைப் பற்றிக்கொண்டு போய் தேகப்பயிற்சி ஆசிரியர் திரு. இரத்தினத்திடம் விட்டார். என்ன குற்றம் ஏது குற்றம் என்று விசாரணைகள் ஏதுமின்றி என்முதுகிற் பிரம்பால் முறையான விளாசல்கள் கிடைத்தன. ஆறுமுகம் இத்துடன் விடவில்லை. இந்த விடயத்தை அதிபர் ஐயங்காரிடமும் முகாமையாளர் திரு. தையல்பாகர் அவர்களிடமும் ஏதோ ஒரு கொலைக் குற்றம் புரிந்தது போல் இந்த ஆறுமுகம் கூறியிருந்தார். மறுநாள் காலைப்பிரார்த்தனை முடிந்து வகுப்பறையில் இருந்தபோது அதிபர் அழைப்பதாகக் கட்டளை வந்தது. அதிபரின் அறைக்குள் பிரவேசித்ததும் 'ஏன்டா மாடே தண்ணீர்த்தொட்டியில் கால் கழுவினாய்' எனக்கேட்டு மேலும் முதுகில் முறையான மேளச்சமா நடந்தது. முதுகு வலியுடன் வகுப்பில் விம்மலுடன் வீற்றிருந்த என்னை முகாமையாளர் அழைப்பதாகக் கட்டளை கிடைத்தது. அவர் வீட்டிற்குச் சென்றேன். பாடசாலைத் தளபாடங்கள் செய்யப்படும், திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படும் பட்டறையின் ஓர் மூலையில் நாற்காலி ஒன்றில் ஓர் சந்நியாசி போன்ற பெரியார் வீற்றிருந்தார். அவரும் அதிபர் கேட்ட கேள்வியைக் கேட்டபடி ''போடடா நூறு தோப்புக்கரணம்'' என்று அதட்டலுடன் சொன்னார். பிள்ளையார் என ஆரம்பித்து ஒன்று இரண்டு மூன்று தொட்டு நூறு வரை எண்ணி குதிக்கால் குதத்தில் முட்டும்படியாகக் குந்தி எழுந்து முதற் தண்டனையை நிறைவேற்றினேன். அடுத்து நீட்டடா கையை எனப் பிரம்பால் பத்து உறைக்கும் அடிகள் பூசையாகக் கிடைத்தன. என்னையறியாது வேர்த்து வியர்த்து தேம்பித் தேம்பி அழுது அவ்விடம்

விட்டுப் பெயராது கண்ணீர் தாரையாக வடிய நிலை குலைந்து நின்றேன். என்னைப்பார்த்த பெரியவர் மனதில் இரக்கம் தோன்ற '' நீ யாருடைய மகன் எப்போது பள்ளியிற் சேர்ந்தாய்'' முதலிய ஆறுதலான கேள்விகளைக் கேட்டார். நான் அழுதழுது விடைபகர்ந்தபின் அவரிடம் அறியாது செய்த பிழைக்காக மூன்று பேரிடம் பாரிய தண்டனை பெற்றுவிட்டேன் எனக் கூறினேன். உடனே அவர் விடுதி ஆறுமுகத்திற்கு ஆள் அனுப்பி அழைத்து ஆசிரியர் அதிபரோடு எம்மிடமும் கூறி இந்த வஞ்சகமறியாத சிறுவனுக்கு மூன்று பேரிடமும் அளவுக்கு மீறிய தண்டனை பெற்றுக் கொடுத்து விட்டாய் என்று கண்டித்தபின் தனது மேசையில் வைத்திருந்த அணில் கோதிய மாம்பழத்தைக் கொடுத்து அங்கு நின்றே உண்ணும்படி கூறி அன்புடன் வகுப்பிற்கு அனுப்பிவைத்தார்.

தண்டித்த போது கொண்ட உருத்திரக் கோலம் மாறி அன்புடன் வழி அனுப்பிய அவருடைய தெய்வீகக் கோலம் இன்றும் பசுமையாக எம் உள்ளத்தில் மிளிர்கின்றது. இச்சம்பவத்தின் பின் பாடசாலை வளவிற் கண்டால் அன்புடன் எனது குடும்பத்தைப் பற்றியும் படிப்பைப் பற்றியும் விசாரித்து '' நீ படித்து முன்னேறி நல்லாய் இருப்பாய்'' என்று ஆசீர்வதிப்பார். அப்பெரியாரின் ஆசீர்வாதங்கள் பொய்யா மொழியாக என்வாழ்வில் அமைந்தன.

இப்பெரியாரின் அந்திமக்கிரியைகளில் பங்கு பற்றும் போது அவரை மனதார வழிபட்டு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்தேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி

ஞானகுருபரனே ஓம் நமச்சிவாய.

---

அறியாமை வெட்கப்பட வேண்டிய விஷயமல்ல. அறிந்துகொள்ள விருப்பமில்லாதிருப்பதே வெட்கப்படவேண்டிய விஷயம்.

— பெஞ்சமின் பிராங்ளின்

உயிரோடு உள்ளபோது உலகு அனைத்தையும் அடக்கி ஆள ஆர்வம் கொண்ட நாம், இறந்தபின் எவ்வளவு சிறிய மண் நம்மை அடக்கி விடுகிறது.

— இரண்டாம் பிலிப்

உண்மைகளைப் புறக்கணிப்பதை நம்பியே நடைமுறை அரசியல் நடக்கிறது.

— ஹென்றி அடம்

அரசியல்வாதிகள் தங்கள் அதிகார மோகத்துக்குப் போர்த்தும் மேலங்கி இலட்சியவாதம்.

— ஆல்டஸ் ஹக்ஸ்லி

## அதிபர்கள் வரிசை.......

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை | — | 1896 தொடக்கம் |
| 2. | திரு. ஈ. கே. சுப்பிரமணியம் | — | B. A. |
| 3. | திரு. எஸ். இரங்கநாதன் | — | B. A. |
| 4. | திரு. ஏ. எஸ். சுந்தரராஜன் | — | B. A. |
| 5. | திரு. வீ. சின்னத்தம்பி | — | I St Class Eng. Trained 1923 — 1928 |
| 6. | திரு. எஸ். வணமாமலை ஐயங்கார் | — | B. A. 1929 — 1960 |
| 7. | திரு. தை. அருள்சுந்தரம் | — | B. Sc. 1960 புரட்டாதி — 1968 மார்கழி |
| 8. | திரு. வீ. நடராஜா | — | B. A. 1969 தை — 1969 ஆவணி |
| 9. | திரு. எஸ். சத்தியமூர்த்தி | — | B. Sc. 1969 புரட்டாதி — 1970 சித்திரை |
| 10. | திரு. ஆர். சச்சிதானந்தம் | — | B. Sc. 1970 வைகாசி — 1970 மார்கழி |
| 11. | திரு. எஸ். சத்தியமூர்த்தி | — | B. Sc. 1971 தை — 1971 புரட்டாதி |
| 12. | திரு. எஸ். சிவகுருநாதன் | — | M. A. 1971 புரட்டாதி — 1973 ஐப்பசி |
| 13. | திரு. எஸ். சண்முகராஜா | — | I St Class Maths Trained 1973 ஐப்பசி — 1973 கார்த்திகை |
| 14. | திரு. எஸ். சிவநேசன் | — | B. Sc. 1973 கார்த்திகை — 1974 மார்கழி |
| 15. | திரு. கே. பாலச்சந்திரன் | — | B. Sc. 1975 தை — 1975 வைகாசி |
| 16. | திரு. கோ. செல்வவினாயகம் | — | B. Sc, S. L. E. A. S. 1975 ஆனி — 1994 மாசி |
| 17. | திரு. செ. யோகச்சந்திரன் | — | I St Class English Trained S. L. P. S. II 1994 மாசி — 1996 பங்குனி |
| 18. | திரு. சி. தங்கராசா | — | B. Sc, Dip. in Eucation 1996 சித்திரை — 1998 மாசி |
| 19. | திரு. செ. யோகச்சந்திரன் | — | I St Class English Trained S. L. P. S. II 1998 பங்குனி இன்றுவரை. |

# அதிபர், ஆசிரியர், அலுவலக உதவியாளர்




இருப்பவர்கள்:- திருமதி சா. அரியரட்ணம், திரு.யோ.ரவீந்திரன், திரு.நா.நாகேந்திரன், திரு.செ.யோகச்சந்திரன் (அதிபர்), செல்வி லூ.ஞா. மாசலீன்பிள்ளை (உபஅதிபர்), திருமதி சு.அருண்குமார், திருமதி க.செல்வசுந்தரம், திருமதி கே.நகுலேஸ்வரன்

நிற்பவர்கள்:- செல்வி.தி.கஜலஷ்மி, திருமதி.ச.லிங்கமூர்த்தி, திரு.இ.ஸ்ரீநடராசா, திரு.மு.ரவீந்திரன், திரு.பா.சிறிகுமரபரன், திரு.நா.மகேந்திரராசா, திரு.பா.பிரபாகரன், திரு.இ.நித்தனசுந்தரம், திருமதி.ஞா.சைவஇறைமணி, செல்வி.இ.சுப்பிரமணியக்குருக்கள், செல்வி.கி.தேவகி, திரு.வெ.மகாலிங்கம், திரு.சி.வைரவிப்பிள்ளை

## ஆசிரியர்கள் காலந்துக்குக்காலம்........
## 1957

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ். வி. ஐயங்கார் | — | B. A. அதிபர் |
| 2. | திரு. கே. சிவசைலம் | — | B. A. (உபஅதிபர்) |
| 3. | திரு. கே. எஸ். கிருஷ்ணன் | — | M. A. |
| 4. | திரு. வி. நடராஜா | — | B. A. |
| 5. | திரு. எஸ். ஆர். அரியரத்தினம் | — | B. A. |
| 6. | திரு. ரி. இரத்தினசபாபதி | — | B. Sc. |
| 7. | திரு. பி.கே. மகாலிங்கம் | — | B. Sc. |
| 8. | செல்வி ரி. வேலுப்பிள்ளை | — | B. A. |
| 9. | செல்வி ஆர். ரி. சம்பந்தர் | — | B. A. |
| 10. | திரு. எஸ். ஜெகானந்தகுரு | — | B. Sc. |
| 11. | திரு. என். சுந்தரமூர்த்தி | — | B. Sc. |
| 12. | திரு. கே. வி. நடராஜா | — | B. Sc. |
| 13. | திரு. எஸ். திசவீரசிங்கம் | — | G. T. C. |
| 14. | திரு. ஜீ. வீ. இரத்தினம் | — | G. T. C. |
| 15. | திரு. எம். வீ. இரத்தினவடிவேல் | — | G. T. C. |
| 16. | திரு. ரி. அருள்சுந்தரம் | — | Inter Science |
| 17. | திரு. கே. எம். அரியரத்தினம் | — | Inter Economics |
| 18. | திரு. ஏ. சிவசாமி | — | English Teachers Certificate |
| 19. | திரு. ஏ. சுப்பிரமணியம் | — | English Teachers Certificate |
| 20. | திருமதி பீ. அருள்சுந்தரம் | — | English Teachers Certificate |
| 21. | திரு. பீ. மகாதேவன் | — | Tamil Trained |
| 22. | திரு. ஆர். குழந்தைவேல் | — | Tamil Trained |
| 23. | திரு. வி. சதாசிவம் | — | Tamil Trained |
| 24. | திரு. எஸ். வேலும்மயிலும் | — | Tamil Trained |
| 25. | திருமதி எஸ். செல்வரத்தினம் | — | Tamil Trained |
| 26. | திரு. ஏ. சிவராஜா | — | Tamil Trained |
| 27. | திருமதி பீ. இரத்தினம் | — | Tamil Trained |
| 28. | திரு. எஸ். கதிர்காமத்தம்பி | — | Tamil Trained |
| 29. | திரு. கே. கனகரத்தினம் | — | Tamil Trained |
| 30. | திரு. கே. தியரகாராஜா | — | Physical Trained |
| 31. | செல்வி ஜே. கணபதிப்பிள்ளை | — | Physical Trained |
| 32. | திரு. எஸ். செல்வநாயகம் | — | S. S. C. |
| 33. | திரு. பீ. பாலசுப்பிரமணியம் | — | Art Teacher |
| 34. | திரு. ஏ. நடராஜா | — | Music Teacher |

## 1966

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. ரீ. அருள்சுந்தரம் | — | B. Sc. (அதிபர்) |
| 2. | திரு. வீ. நடராஜா | — | B. A. (உபஅதிபர்) |
| 3. | திரு. எஸ். ஆர். அரியரத்தினம் | — | B. A. |
| 4. | திரு. பீ. கே. மகாலிங்கம் | — | B. Sc. |
| 5. | திருமதி ஆர். ஜெகானந்தகுரு | — | B. A. |
| 6. | திரு. எஸ். ஜெகானந்தகுரு | — | B. Sc. |
| 7. | திரு. கே. வீ. நடராஜா | — | B. Sc |
| 8. | திரு. என். சுந்தரமூர்த்தி | — | B. Sc. |
| 9. | திரு. எஸ். செல்வநாயகம் | — | B. Sc. |
| 10. | திரு. கே. பரமகுரு | — | B. A. |
| 11. | திரு. வீ. ஜே. ஜெயராஜாசிங்கம் | — | B. A. |
| 12. | திரு. ஏ. சுந்தரம்பிள்ளை | — | B. Sc. |
| 13. | திரு. வீ. ரத்தினசிங்கம் | — | B. A. |
| 14. | திரு. கே. புவனசுந்தரம் | — | B. A. |
| 15. | திரு. எஸ். சத்தியமூர்த்தி | — | B. Sc. |
| 16. | திரு. எஸ். நவரெத்தினம் | — | B. Sc. |
| 17. | திரு. எஸ். கணேசமூர்த்தி | — | B. Sc. |
| 18. | திரு. ஜீ. வீ. இரத்தினம் | — | English Trained |
| 19. | திரு. எஸ். திசவீரசிங்கம் | — | English Trained |
| 20. | திரு. வீ. சண்முகராஜா | — | Special Maths Trained |
| 21. | திரு. எம். பாலசுப்பிரமணியம் | — | English Trained |
| 22. | திரு. ஏ. சுப்பிரமணியம் | — | English Teachers Certificate |
| 23. | திரு. ஏ. ராஜரத்தினம் | — | English Teachers Certificate |
| 24. | திரு. வீ. சுப்பிரமணியம் | — | English Teachers Certificate |
| 25. | திரு. வீ. சதாசிவம் | — | Tamil Trained |
| 26. | திருமதி ஆர். கணபதிப்பிள்ளை | — | Tamil Trained |
| 27. | திரு. எஸ். இராமநாதன் | — | Tamil Trained |
| 28. | திரு. எஸ். கதிர்காமத்தம்பி | — | Tamil Trained |
| 29. | திரு. எஸ். சின்னரத்தினம் | — | Tamil Trained |
| 30. | திருமதி கே. கணேஸ் | — | Tamil Trained |
| 31. | திரு. எஸ். சாந்தமூர்த்தி | — | Tamil Trained |
| 32. | திரு. பீ. பாலசுப்பிரமணியம் | — | Diploma in Art |
| 33. | திரு. கே. முருகுப்பிள்ளை | — | Vocational Trained |
| 34. | திரு. கே. தியாகராஜா | — | Physical Trained |
| 35. | திருமதி என். பரமானந்தம் | — | Physical Trained |
| 36. | திருமதி. சீ. பெரியதம்பி | — | Music Teachers Certificate |

## 1993

1. திரு. கோ. செல்வவிநாயகம் — B. Sc. (அதிபர்)
2. திரு. கோ. குழந்தைவேல் — B. A. (உப அதிபர்)
3. திரு. சி. வர்ணகுலசிங்கம் — B. Sc.
4. திரு. கு. வீமராசன் — B. Com.
5. திரு. சி. தங்கராசா — B. Sc.
6. திரு. யோ. ரவீந்திரன் — B. Sc.
7. திரு. சி. மு. தம்பிராசா — B. A.
8. திருமதி ச. விக்னேஸ்வரமூர்த்தி — B. A.
9. செல்வி ஹூ. ஞா. மரிசலீன்பிள்ளை — Special Trained Maths
10. செல்வி க. ஈஸ்வரலிங்கம் — B. A.
11. திரு. ம. பீ. ஜெயசீலன் — Special Trained Science
12. திரு. மு இரவீந்திரன் — Special Trained Electronics
13. திரு. தி. சமதர்மபாலன் — Special Trained English
14. செல்வி ஜெ. கந்தன் — B. A.
15. செல்வி நி. குலசேகரப்பிள்ளை — B. A.
16. திரு. இ. ஸ்ரீநடராஜா — Special Trained Art
17. திருமதி அ. அ. யோகீஸ்வரராசா —
18. திரு. நா. மகேந்திரராசா — Special Trained Building Construction
19. செல்வி இ. குமரகுருசாமி — தொண்டர் ஆசிரியர்

## 1998

1. திரு. செ. யோகச்சந்திரன் — (இ. அ. சேவை)
2. திரு. சி. தங்கராசா — B. Sc., Dip. in Education
3. திரு. ந. நாகேந்திரன் — B. Sc., Dip. in Education
4. திரு. சி. குணசீலன் — B. Sc.
5. திருமதி சு. அருண்குமார் — B. Sc., Dip. in Education
6. திரு. பா. சிறிகுமரபரன் — B. A.
7. திருமதி. நகுலேஸ்வரன் — B. Com , Dip in Education
8. திருமதி சா. அரியரட்ணம் — B. A., Dip. in Education
9. செல்வி எஸ். சுப்பிரமணியக்குருக்கள் — B. A., Dip. in Education
10. செல்வி கி. தேவகி — B. A.
11. செல்வி ஹூ. ஞா. மரிசலீன்பிள்ளை — Special Trained Maths
12. திரு இ. சிறீநடராஜா — B. A., Special Trained Art
13. திருமதி ஜீ. சைவஇறைமணி — Special Trained Science
14. திரு. மு. இரவீந்திரன் — Special Trained Electronics
15. திகு. நா. மகேந்திரராஜா — Special Trained Building Construction
16. திருமதி ச. லிங்கமூர்த்தி — Part Time English Teacher.

சு. அப்பாத்துரை
சிரேஷ்ட சாரணாசிரியர்

# 60 - வது தருசின்னப் பாசறையும் எனது அனுபவமும்

சாரண ஆசிரியர்களுக்கான தருசின்னப்பயிற்சிப் பாசறை ஏப்ரல் 17-ம் தேதி ஆரம்பமாகி 26ம் தேதியுடன் முடிவுற்றது. இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ளும் வாய்ப்புப் பெற்றமை நான் பெரும் பேறாகவே கருதுகிறேன். 17-ம் தேதி காலை 10 மணிக்கு நுவரேலியாவிலிருந்து 3 மைல் தூரத்திலுள்ள பீற்றூ தேயிலைத் தோட்டம் அமைந்துள்ள சந்திக்கு வந்து சேர்ந்தேன். அங்கிருந்து தோட்டத்தினுள்ளே ஒன்றரை மைல் தூரத்திலுள்ள பாசறைப் பூமியை நோக்கி வளைந்து செல்லும் பாதைகளினூடாக மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க நடந்து கொண்டிருந்தேன். எனது பெரிய சூட்கேஷைத் தலையிற் சுமந்தவண்ணம் கண்ணெதிரே தெரிந்த இயற்கை அழகை அள்ளிப்பருகிய வண்ணம் ஒற்றையடிப் பாதையினூடாக நடந்து பாசறை வாசலுக்கு வந்து சேர்ந்தேன். என்னைப்போன்று இன்னும் சிலர் வியர்க்க விறு விறுக்க வேறு பாதைகளினூடாக நடந்து வந்து பாசறை வாசலில் ஓய்வு பெற்றுக்கொண்டிருந்தனர்.

நான்கு தூண்களிலும் கொடிகள் சுற்றப்பட்டிருப்பது போன்று முழுவதும் மரத்திலேயே கலை அழகு சொட்ட செதுக்கப்பட்டிருந்த நுழை வாசலினூடாக பாசறைப் பூமியினுள்ளே கால்வைத்தேன்.

மரத்தில் செதுக்கப்பட்டிருந்த பெரிய பலகை ஒன்று கண்ணில் பட்டது. பாசறையில் நாம் ஒழுகவேண்டிய விதி முறைகள் அத்தனையையும் ஒருங்கிணைத்து மனதில் பதிந்துவிட்டமையைப் போன்ற உணர்வு எனக்கு உண்டானது.

அதைக்கடந்து 75 யார் தூரத்திலிருந்த ரெட்டியார் குடிசையினுள் நுழைந்தேன். அங்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பயிற்சிக்கென வந்துசேர்ந்த சாரண ஆசிரியர்கள் பலரைக் கண்டேன். நானும் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களோடு சேர்ந்து கொண்டேன். குடிசையில் ஒரு பக்கத்தில் சிலர் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் சாரண கீதங்களை இசைத்த வண்ணமிருந்தனர். நடந்து வந்த களைப்பும் சோர்வுமாக நின்றும், இருந்தும், கிடந்தும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த பயிற்சிச் சாரணர்கள், மதியபோசனம் என்ற குறிப்புடன் அறிவிப்புக்கேட்டதும் தத்தமது கோப்பையையும் கிண்ணத்தையும் எடுத்துக்கொண்டு ஓட்டமாக ஓடி வரிசையில் நின்ற காட்சி, இளம் சாரணரின் நடவடிக்கையை அப்படியே ஒத்திருந்தது. பாசறையின் முதற் போசனம் அருந்திக்கொண்டிருந்த வேளையில் '' உங்கள் பாசறைப் பணத்தில் ஒரு ரூபாய் முடிந்தது. இன்னும் 59 ரூபாய் பாக்கியிருக்கிறது, என்று ஒரு பயிற்சியாளர் சொன்னதும் அனைவரும் வாய்விட்டுச் சிரித்தனர்,

போசனம் முடிந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்த வேளை கொடி மரத்தடியிலிருந்து விடுக்கப்பட்ட ஊது குழற் சத்

தம் அனைவரையும் எழுந்து விரையச் செய்தது. கொடி மரத்தண்டை நாம் குதிரை லாடன் வடிவத்தில் நிற்க, நமக்கு முன்பாக பாசறைப் பதி தளபதி சி. பி. ஜயவர்த்தனா. சாரண ஆசிரியர் திரு. ஐ. கே. ஜீ. சந்திரசேனா, இன்னும் பல துணைச் சாரண ஆசிரியர்களும் நின்று கொண்டிருந்தனர். பாசறைப் பதி அனைவரையும் வரவேற்றுப் பேசிய பின் சாரண ஆசிரியர் பாசறையின் நோக்கம், செயல் நடவடிக்கை, ஒத்துழைப்பு ஆகியவை குறித்து தெளிவுபடுத்தினர்.

சகல பயிற்சியாளர்களும் ஒன்பது பேர்கள் கொண்ட நான்கு அணிகளாகப் பிரிக்கப்பட்டோம். எல்லோருக்கும் பொதுவான கழுத்துப்பட்டி வழங்கப்பட்டது. மத, இன, மொழி வேறுபாடின்றி அணிகள், பிரிக்கப் பட்டிருந்தமை ''சகோதரத்துவத்தை'' வளர்க்கும் பெரியதொரு முயற்சியில் பயிற்றுவிப்பாளர் குழு முற்றும் அனுபவமுள்ளவர்கள் என்பதை தெளிவுபடுத்தியது. அணியில் இருந்த முகங்கள் அனைத்தும் அறியாதவையாக இருந்த போதும், முதல் இரு நாட்களுக்கு உள்ளாகவே பல காலம் கலந்து பழகிய முகங்களாகப் பரிச்சியப்பட்டுவிட்டன. ஒவ்வோருவரதும் சாரணீய அனுபவங்களைப் பரிமாறிக்கொண்டோம்.

பாசறையின் தினசரி நடைமுறைகள் பற்றிச் சில வார்த்தைகள் கூறவேண்டியது அவசியம் எனக் கருதுகிறேன். காலை உணவும், இரவு உணவும் அணிகளே தயார் செய்ய வேண்டி இருந்ததால் பாத்திரங்கள் சுத்தம் செய்வது, சமைப்பது, பகிர்ந்துண்பது அனைத்திலுமே அதிக இன்பதைக் கண்டோம். காலை ஆறு மணிக்கு குழலோசை சத்தத்துடன் எழுந்ததும் தேநீர் தயாரிப்பது, காலை ஆகாரம் தயாரிப்பது, கூடாரப் பகுதி சுத்தம் செய்வது அவசியமான கருமங்களைச் செய்வது இப்படியாக வேலைகளைப் பகிர்ந்து கொண்டோம். எட்டு மணிக்குப் பாசறைப் பரிசோதனை. ஒன்பது மணிக்கு வகுப்பு. பகல் 12-30 க்கு மதிய போசனம், மதிய போசனம் ஒரு மணி நேர இடைவேளையிலும் ''ஒய்வு நேர நடவடிக்கை'' என்று தினமும் வேலைகள் இருந்து கொண்டேயிருக்கும். மாலையில் வகுப்புகள். குழுக் கூட்டம் நடைபெறும். குழுக் கூட்டவேளைகளிலெல்லாம் சிறிய சாரணரைப் போன்று பல வகைப்பட்ட விளையாட்டுகளையும் விளையாடிக் கழித்த மகிழ்வான நாட்களை நாம் மறக்க முடியாது. இரவில் கண்ணிய நீதிச்சபைக் கூட்டங்கள், சாரண அஞ்சலி, பாசறைத் தீ நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

சாரண அஞ்சலி செலுத்தப்பட வேண்டிய முறையை அவர்கள் காட்டிய விதம். மனதில் ஆழப் பதிந்தது, அமைதியான சூழலும், சூழலுக்கேற்றபடி சாரணவிதிகள் படிக்கப்பட்ட முறையும், பேடன் பவல் துரையை ஞாபகப்படுத்திக் கொண்ட அழகும், அஞ்சலியின் முடிவில் அமைதியாக இடத்தை விட்டு கலைந்து சென்ற விதமும் மனதில் பயமும் பக்தியும் கலந்த ஒரு நிறைவான எண்ணத்தை ஏற்படுத்தியது.

அவதானப் பயிற்சி வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் மனதைத் திகில்கொள்ளச் செய்யும் ஒரு நிகழ்ச்சி நடந்தது. இரு முறை துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டு நாம் திரும்பிப் பார்த்த போது, சுட்டமனிதன் பாலத்தைத் தாண்டி காட்டினுள் ஓடி மறைந்ததையும், சுடப்பட்ட மனிதன் சுருண்டு விழுந்ததையும் நாம் கண்டு திகில் கொண்டோம். சற்று நேரம் ஒரே பரபரப்பாகவிருந்தது. எமது அவதானத்தை அளவிட தத்ரூபமாக நடத்தப்பட்ட அந்த சம்பவம். நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்ட விதம், அவர்களின் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. அச்சம் அடங்க பல நிமிட நேரம் எடுத்தது.

பாசறையின் மூன்றாம் நாள் காலையில் இலங்கையின் பிரதம சாரணர் மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா அவர்

கள் வருகை தந்து பயிற்சியாளர்களுடன் கலந்துரையாடினார். ''நாட்டின் நற்பிரஜைகளை உருவாக்கும் பணியில் சாரணீயம் எத்துணை பொறுப்பு வாய்ந்தது என்பது பற்றி மகாதேசாதிபதி அவர்கள் எடுத்துரைத்தார்கள். அவருடன் பிரிட்டிஷ் தூதுவரும் கலந்து சிறப்பித்தனர். பயிற்சியாளர், பயிற்றுவிப்பாளர் அனைவரும் பிரதம சாரணருடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

பயிற்றுவிப்பாளர்கள் பற்றி சில வார்த்தைகள். தளபதி சி. பி. ஜயவர்த்தனா அவர்கள்இந்த தள்ளாத வயதிலும் சீருடை அணிந்து சுறுசுறுப்பாக அங்கும் இங்கும் ஓடி ஆடி ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்கள். பாசறைப் பூமியினுள் நீண்டு நிமிர்ந்து வளர்ந்து நிற்கும் மரங்கள் ஒவ்வொன்றையும் எமக்குக் காட்டி அவற்றின் பெயர், காலம், வயது ஆகியவை பற்றி உற்சாகமாக நமக்கு விளங்க வைத்தார். இலங்கைக் காடுகளின் வளம் பற்றி' ''வனவியல்''என்ற தலையங்கத்தில் அவர் எடுத்த வகுப்பும், அதே தலையங்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பிரசுரமும், இலங்கைக் காடுகளின் எழில்பற்றி இவரைவிடத் தெரிந்தவர்கள் வேறு எவருமே இருக்க முடியாது என்ற பேருண்மையும் எமக்குப் புலனாயிற்று.

சாரண ஆசிரியர் திரு. ஐ. கே. ஜீ. சந்திரசேனா அவர்கள் தான் பாசறையின் கதாநாயகன். குறிப்பிட்ட நாட்களில் பயிற்சிக்கான சகல விடயங்களும் முடிக்கப்பட வேண்டும் என்ற ஆவல் காரணமாக நிகழ்ச்சி ஒழுங்குகளை அவர் தயாரித்திருந்த விதமும், நிகழ்ச்சிகளை நடைமுறையில் கொண்டு சென்ற விதமும், எவ்வேளையும் புன்சிரிப்புடனே பயிற்சியாளர்களுடன் கலந்துரையாடிய விதமும் அவர் சாரணீய உலகின் ஒரு சிறந்த கதாநாயகன் என்பதை பறைசாற்றின. அவரின் நற்பணி தொடரட்டும் பல்லாண்டு தொடரட்டும்.

ஏனைய துணைச் சாரணாசிரியர்கள் அனைவரும் சாரணீயத்தில் ஊறித் திளைத்தவர்கள் என்பது அவர்கள் நடத்திய வகுப்பு வேளைகளின் போதும், கேள்வி நேரத்தில் எம்மால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தெளிவாக விடை பகன்ற வேளையின் போதும், தெளிவாயிற்று. குறிப்பாக திரு. ஏ. வி. பாலசுப்பிரமணியம் அவர்கள் பற்றி பின் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிடுகிறேன். உதவிகள் பல புரிந்த திரிசாரணர் நான்கைந்து பேர்களையும் நாம் மறந்து விட முடியாது.

அடுத்து பாசறை வாழ்வின் உச்சக் கட்டமான வெளிப்பயணம் 8 ம் நாள் காலை 9 மணிக்கு பாசறையிலிருந்து புறப்பட்ட நாம் 9 ம் நாள் பகல் 1 மணிக்கு பாசறைக்கு வந்து சேர்ந்தோம். இந்த வெளிப் பயண நிகழ்ச்சி பயங்கர அனுபவமாக இருந்த போதும் உண்மையில் நாம் பெற்ற மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவரவருக்குரிய தனிப்பட்ட பொருட்கள், மூன்று நேர சமையலுக்குரிய சாமான்கள், சமையற் பாத்திரங்கள், தேநீர் தயாரிப்பதற்கான சாமான்கள், இரண்டு கூடாரங்கள் ஆகிய இவைகளுடன் பயணத்தை ஆரம்பித்தோம். வெளிப்பயண நடையாளர்களைப் போன்று முதுகிலே பெரிய பைகளில் சாமான்களைச் சுமந்து கொண்டு கையில் சாரணர் தண்டம் ஒன்றை ஏந்திய வண்ணம் பாசறை உணவு விடுதியின் ஓரமாக உள்ள ஆற்றைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. ஆற்றுக்குக் குறுக்காக விழுந்து கிடந்த மரத்தின் துணை கொண்டு சர்க்கஸ்காரன் கம்பியில் நடப்பது போன்று ஒரு விதமாக மரத்தைத் தாண்டி மறுகரையில் காலை வைத்தோம். கால்கள் இடுப்பு வரை புதை சேற்றினுள் புதையுண்டது, சிறிது தூரம் மிகவும் சங்கடப்பட்டு சமதளப் பகுதிக்கு வந்து சேர்ந்தோம். பயணம் ஆரம்பமாகி பத்து நிமிடங்களுக்குள்ளாகவே காலில் அணிந்திருந்த பூட்ஸ், கால்மேசு, நீளக் காற்சட்டை அனைத்தும் செம்மையாக நனைந்து சேறும் சகதியுமாக ஒட்டிக் கொண்டதால் பத்து

றாத்தல் பாரம் அதிகரித்ததைப் போன்ற உணர்வை நான் பெற்றேன். சமதளப் பிரதேசத்தில் வந்து பார்த்தபோது, மலை நாட்டில் மலிந்துள்ள அட்டைகள் கால் மேசினுள்ளும், பூட்ஸினுள்ளும் தாராளமாக இருப்பதை அறிந்தோம். அவற்றை அப்புறப்படுத்திய பின் பயணம் பக்குவமாகத் தொடர்ந்தது.

சில நிமிட நேரத்திற்கெல்லாம் நமது பாதை அடர்ந்த காட்டினுள் நுழைந்து உயரமாகச் சென்றது. பாதை என்றவுடன் கல்லு மண் போடப்பட்ட வீதி என்று வாசகர்கள் கருதினால் நிச்சயமாக ஏமாறுவீர்கள். இலைச் சருகுகளும், கொப்புகளும் குன்றும் குழியும், மரவேரும் ஆகிய இவைகளினூடாக பாதை வளைந்து நெளிந்து சென்றது. ஏற்றம் வர வர அதிகமாகிச் சென்றது. சற்று தூரம் ஏறியதுமே எனக்கு மூச்சு வாங்க ஆரம்பித்துவிட்டது. சாரண தண்டத்தின் உதவியினால் ஊன்றிக் கொண்டே முன்னேறிக் கொண்டிருந்த நாம் இப்போது கால்களுடன் இரு கைகளையும் பாவித்து மர வேர்களைப் பற்றிய படியே ஏறிக்கொண்டிருந்தோம். உடலை சற்று அதிகமாக வளர்த்து வைத்திருந்த தன் பலனை நான் அப்போது நன்கு அனுபவித்தேன்.

நமது அணியில் முன்னமேயே ஒரு பிரயாண ஒழுங்கு வகுத்துக் கொண்டோம். அதன் படி முதலாவதாக பிரயாணத் தலைவர். இரண்டாவதாக திசை கணிப்போன். மூன்றாவதாக பாதைக் குறிகள் கவனிப்போன், (இது தான் பயணத்தில் எனக்கு தரப்பட்ட வேலை) அடுத்து மற்றவர்கள் இப்படியாக ஒரு குறிப்பிட்ட ஒழுங்கிலேயே நெருக்கமாகச் சென்றோம். பயணத் தலைவரின் கால்கள் சறுக்குண்டு இரண்டாமவர் மீது மோத அவர் எம்மீது மோத, அரை மயக்க நிலையில் ஏறிக்கொண்டிருந்த நான் நிலை தடுமாறி எங்கோ போகவிருந்த வேளை உயரமான ஒரு மரக் கொப்பில் எனது சாமான் பை கொழுவிக் கொள்ள ஒருவாறு சமாளித்துக் கொண்டேன். ஏறிச் சென்ற பாதை இப்போது இறக்கமாக மாறியது, இறக்கச் சரிவு வர வர அதிகமாகவிருந்தது அடேயப்பா! ஏறுவது தான் சிரமம் என்றால் இறங்குவதோ அதைவிட மோசம்.

சில மணி நேரத்தில் ஒரு பாதைக்கு வந்து, அடுத்து வந்த மதகினூடாக இறங்கி கம்பிவேலி ஒன்றினுள் புகுந்து பறட்டைக் காட்டினூடாக பாடியபடியே சென்றோம். பகல் உணவுக்காகக் கொண்டு வந்திருந்த பாணதுண்டுகளை மீன் சம்பலோடு ருசித்துச் சாப்பிட்டபின் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தோம். பாதையின் குறுக்கே விழுந்து கிடந்த மரம் ஒன்றினூடாக, பாதையின் மறுபக்கத்துக்குச் செல்ல வேண்டும். மரத்தின் நடுப்பகுதிக்கு நாம் போய்க்கொண்டிருந்த வேளை 'சரக் கென்று மரம் முறிந்து' கீழே வளர்ந்திருந்த பற்றை முட் செடிகளினூடாக கீழே இறங்கத் தொடங்கியது. அனைவரும் விரைவாகப் பாய்ந்து மறு பக்கத்துக்குப் போனோம், நான் ஒரு நீண்ட பெருமூச் செறிந்தேன்.

மாலை நான்கு மணியளவில் நமது பாதை ஒரு ஆற்றோரத்தில் முடிந்து விட்டது. 'ஓ' வென்ற இரைச்சலுடன் சீறிப் பாய்ந்து ஓடிக்கொண்டிருந்த ஆற்றை நாம் கடந்தாக வேண்டும். நீண்ட காற் சட்டைகளைச் சுருக்கிவிட்டுக் கொண்டு சப்பாத்துகளைக் கைகளில் தூக்கிக் கொண்ட நண்பர் ஒருவர் ஆற்றில் இறங்கினார். இரண்டு அடி வைப்பதற்குள் அவர் பாறையில் வழுக்குண்டு பொத்தென்று தண்ணீரில் விழுந்துவிட்டார். விழுந்தவர் ஒருவாறு எழுந்தார் தெப்பமாக சகலதும் நனைந்த நிலையில், கையில் ஒரு சப்பாத்து மட்டுமேயிருந்தது. மற்றது ஆற்றோடு போய்விட்டது. விரக்தியுற்ற அவர் மற்றதையும் ஆற்றிலே வீசி எறிந்தார். இடுப்பளவு தண்ணீரில் இறங்கி ஒருவிதமாக ஓடும் நீரைக் கடந்து மறு கரை போனோம். இப்போது நாம் ஆற்றின்

மிக ஒரமாக போக வேண்டியிருந்தது. ஒரு அடி தவறினாலும் ஆற்றில் விழுந்து விடவேண்டியதுதான். அத்தனை பயங்கர மான பாதையாக அது இருந்தது. மாலை 5-30க்கு கூடாரம் அடிக்க வேண்டிய இடத்துக்கு வந்து சேர்ந்தோம். கூடார மடித்து இரவுப் போசனம் தயார் செய் யும் வேளையில் பெரிய ஒரு கரு நாக பாம்பொன்று நம்மை நோக்கி ஊர்ந்து வந்தது. அவதானமாக அதை அடித்துக் கொன்று நிலத்தினுள் புதைத்தனர். பாம்பைக் கண்ட நேரம் முதல் ஒரே திகி லாகவிருந்தது. நன்றாக இருட்டிவிட்டது. அடர்ந்த காட்டினூடாக எதையுமே எம் மால் காணமுடியவில்லை. சாப்பிட்ட பின் சிறிது பாசறைத் தீ நிகழ்ச்சியோடு படுக்கைக்குப் போனோம். பலவிதமான சத்தங்கள் கேட்டன. காட்டுப் பன்றிகள் சண்டையிடுவதாக ஒரு நண்பர் கூறியதும் வேறு பேச்சேயின்றி அமைதி நிலவியது. நடந்த களைப்பு காரணமாக கண்ண யர்ந்தோம்.

விடிந்தது. அன்றைய பயணத்திற் கான கடிதத்தை உடைத்துப் பார்த்த பின் காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டு குறிப்பிட்ட பாதையில் தொடர்ந் தோம். அன்றைய பாதையும் ஒரளவு சங்கடமாகவேயிருந்தது.

வெளிப் பயண நிகழ்ச்சி ஒழுங்கு முழு வதும் திரு. ஏ. வி. பாலசுப்பிரமணியம் அவர்களுடையதாகும். 'பாலா' என்று அனைவருமே அன்பொழுக அழைக்கின்ற னர். பயணப்பாதைகளில் பயங்கர அனுப வங்களை அனுபவித்துக் கொண்டிருந்த நாம் எமக்கு முன்னதாகவே குறிப்பிட்ட நான்கு பாதைகளிலும் பயணம் செய்து விட்ட 'பாலா'வின் ஆர்வத்தை நினைத் துப் பூரித்துப் போனோம். ஒரு விடயத் தில் உள்ளன்பான ஆர்வம் வைத்தால் அந்தக் காரியத்தை நாம் ஒழுங்காகச் செய்து முடிக்கலாம் என்பதற்கு திரு. 'பாலா' உதாரணமாவார். பத்து நாட் பாசறையில் அவரது ஒவ்வொரு காரிய மும் அவர் சாரணீயத்தில் 'ஒரு தூங்காத ஓநாய்' என்பதை தெளிவாகக் காட்டிற்று. அவரின் ஆர்வத்தை நாம் அன்பொழுக பாராட்டுகிறோம்.

வெளிப் பயணத்தில் இரண்டாம் நாள் காலை 11 மணி வரையில் நாம் பாதையில் எந்த ஒரு மனிதரைக் கூட காணவில்லை யென்றால் பாதை எப்படிப்பட்டது என் பதை வாசகர்கள் புரிந்து கொள்ள வேண் டும். பகல் 1 மணிக்கு பாசறைப் பூமி யினுள்ளே பிரவேசித்தோம் களைப்பு நீங் கும் படியாக 'சீத எலியா' வில் நீராடிக் கொண்டு மதிய போசனமருந்தினோம்.

அன்று இரவு பயிற்சியாளர்களும், பயிற்றுவிப்பாளர்களும், ஒன்றாகவே போச னமருந்தினோம். முடிந்ததும் மகிழ்ச்சியாக அனைவரும் ஆடிப் பாடிக்களித்த பின் இரவு 10-30 மணிக்கு படுக்கைக்கு ஆயத்தமா னோம். அந்த இரவு பயிற்சியாளர்கள் அனைவரும் ஒன்றாக ரெட்டியார் குடிசை யினுள்ளேயே தங்கினோம். பத்து நாட்கள் பழகிய போதும் பல்லாண்டு காலம் பழகிய வர்களைப் பிரிவது போன்றஉணர்ச்சியோடு ஒவ்வொருவரும் பிரிவைப் பற்றியே பேசி பெரும் துயர் அடைந்தார்கள். விலாசங்கள் பெற்றுக் கொள்பவர்களும், அடுத்த சந்திப்பு பற்றி பேசுபவர்களும், தத்தமது அனுபவங்களைப் பேசுபவர்களுமாக ஒரு சில மணித்தியாலங்கள் அறை அமளிதுமளிப் பட்டது. இரவு 12-30 மணிக்கு அனைவரும் உறங்கி விட்டனர்.

மறு நாட்காலை பாசறை வாழ்வின் இறுதிக் கட்டம். அனைவரும் புறப்படு வதற்கு ஆயத்தமாயினர். வழமையாக இருந்த மகிழ்ச்சி அன்று இல்லை. கவலை தோய்ந்த முகங்களுடன் பிரிய மனமின்றி பிரிந்து சென்றனர்.

இறுதியாக, சகல சாரண ஆசிரியர்க்கும் ஒரு வார்த்தை, ஒரு தரமுள்ள சாரணர் குழுவின் சாரண ஆசிரியனாக நான் இப்பாசறையில் கலந்து கொண்ட போதும் நான் அங்கு கற்றுக் கொண்டவைகள் ஏராளம். எனக்கு உண்டான அனுபவங்கள் மிக மிக அதிகம். குழுவை வழி நடத்தும் நடைமுறையில் சில தவறுகள் செய்து வந்தோம் என்பதை என் அனுபவத்தில் நான் கண்டு கொண்டேன், முறைப்பட்ட பயிற்சி இல்லாத காரணத்தால் சாரணர்கள் சரியான பாதையில் வழி நடத்தப்படாமல் இருப்பதை நாம் காணுகிறோம். எனவே தரு சின்னம் பெறுவதை நோக்கமாகக் கொண்டில்லாவிடினும், சிறந்த வழியைச் சாரணருக்குக் காண்பிக்க வேண்டுமென்ற நோக்குடனே தரு சின்னப் பாசறையில் பயிற்சி பெற வேண்டியது ஒவ்வொரு சாரணாசிரியர்க்கும் மிக அவசியமாகும். அவ்வாறான பயிற்சியை ஒவ்வொரு சாரண ஆசிரியரும் பெற்று இலங்கைச் சாரணியத்தின் தரம் இன்னும் பல மடங்கு அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதே இந்தக் கட்டுரையின் நோக்கமும் எண்ணமும், பொறுமையுடன் இந்தக் கட்டுரையை வாசித்து முடித்துக் கொண்ட சாரணர்க்கும், சாரண ஆசிரியர்க்கும், வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி சிரேஷ்ட சாரண ஆசிரியன் சிரம் தாழ்த்தி நன்றி தெரிவிக்கிறேன்.

*நன்றி: இலங்கைச் சாரணன்; யூன் 1970*

---

சர்வாதிகாரிகளாக இருப்போம் என்று பிடிவாதம் பிடிப்போர் நிச்சயமாக சகல அதிகாரங்களையும் இழந்தே திருவார்கள்.

— மகாத்மாகாந்தி

அரசியல் என்பது ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரி வீசுவதாகும். எவர் அதிகம் சேற்றை வாரி வீசுகிறாரோ அவரே அரசியலில் வெற்றி அடைகிறார்.

— டாக்டர் மு. வரதராசன்

அநீதியைத் தாங்குபவனைவிட, அநீதி இழைப்பவனே என்றும் அதிக அவதியுறுவான்.

— பிளேட்டோ

வல்வை ந. நகுலசிகாமணி

# இயற்றமிழ் போதகாசிரியர் வல்வை ச. வயித்தியலிங்கபிள்ளை (1843 — 1901)



இவர் 1843ம் ஆண்டு மாசித் திங்களில் சங்கர நாதருக்கு மூத்த புதல்வனாக வல்வையில் பிறந்தார். இவர் நாற்பது நூல்களை எழுதியவரும், தமிழ் கூறும் நல்லுலகத்தினால் நன்கு அறியப்பட்டவரும், சிறந்த புலவரும், இலக்கண விளக்க உரையாசிரியரும் உரையாளரும், ஈழத்தில் அதிகமான பிரபந்தங்களைப் பாடிய வருமான உடுப்பிட்டி சிவசம்புப் புலவரிடம் இலக்கண இலங்கியங்களையும் வடமொழியையும் விரைந்து கற்று பண்டிதரானார். சித்தாந்த நூல்களையும், திருமுறைகளையும் கற்று சிவ மதத்தைப் பரப்பினார். 1876ம் ஆண்டு சிந்தாமணிநிகண்டு என்ற நூலை இயற்றி இவ்வுலகிற்கு ஈய்ந்தார். 1878ம் ஆண்டில் நம்பியகப் பொருள் என்ற இலக்கண நூலுக்கு விளக்க உரையினை வெளியிட்டார். கந்தரலங்காரத்திற்கு புதியதோர் உரை விளக்கம் தந்தார். கந்தபுராணம் தெய்வானை திருமணப்படலத்திற்கும், வள்ளியம்மை திருமணப் படலத்திற்கும் நல்ல சிறந்த ஆராய்ச்சி உரைகள் எழுதி வெளியிட்டார். சூரபத்மன் வதைபடலத்திற்கும் உரை எழுதியுள்ளார். வல்வை வைத்தீஸ்வரர் பதிகம் அன்னவரின் இன்னோர் ஆக்கம் ஆகும். மேலும் செல்வச்சந்நிதித் திருமுறை, நல்லூர்ப்பதிகம், மாவைப்பதிகம், முதலிய பாடல்களையும் பாடியுள்ளார். வேறு அண்டகோச படலங்கள் சிவராத்திரி புராணம், சீமந்தனிபுராணம், கஞ்சனமாலை முதலியனவும் அச்சிட்டு வெளியிட்டு வைத்தார்.

''கந்தமலர்ப் பொழில்புடை சூழ் தில்லை
வனத் தறிஞர் திருக்கடைக் கனோக்கி
முந்தவுரைத் தனர்பலரு மாயினும் யாக
மநூன் மொழிவ ழாமற்

பந்தமறுத் திடுசிவராத் திரி விரத சரி
தைதனைப் பாடுகென்னச்
செந்தமிழி னுயர் விருத்தப் பாவதனாற்
றிரட்டி யொன்றாச் செப்ப லுற்றேன்''

என்பது சிவராத்திரி புராணத்தின் பாயிரச் செய்யுள். இப்புராணத்தினை வல்வை ச. வயித்தியலிங்கபிள்ளை சென்னை வித்தியாவர்த்தினி அச்சுக்கூடத்தில் விசு வருடம் ஆவணி (1885) பதிப்பித்து வெளியிட்டு வைத்துள்ளார் என ''ஈழம் தந்த ஆறுமுகநாவலர்'' சரிதத்தில் 159ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதிகாரபீடத்தில் இருந்த அந்நியரின் அரசு, கல்வி வளர்ச்சிக்கு ஒதுக்கிய

தொகையை நேரடியாக கொடுத்திட மனம் வந்திலர். கிறிஸ்தவ மிசனரிகளிடம் கொடுக்கப்பட்டது. அவர்கள் தமிழ் பிரதேசங்களில் பாடசாலைகளை நிறுவி தங்கள் மதப்பிரசாரங்களை வேகமாக இடம் பெறச் செய்தார்கள்.

புரட்டஸ்தாந்து மதந்தவர்களுக்கும் நல்லை ஆறுமுகநாவலர் அவர்களுக்கும் இடையில் வாதப் பிரதிவாதங்களும் கண்டனங்களும் மறுப்புகளும் மும்மரமாக இடம் பெற்றன. பாதர் பிதிற்றோ பாதிரியாரின் அறிக்கைக்கு ஆறுமுகநாவலர் அவர்களால் பதில் பகர முடியவில்லை. காரணம் அவர் தர்க்க சாஸ்த்திரத்தில் வல்லவராக இருக்கவில்லை. நல்லை ஆறுமுகநாவலர் அவர்கள் பிதிற்றோவின் அறிக்கையை தனது சமகாலத்தில் வாழ்ந்த வல்வை இயற்றமிழ் போதகாசிரியர் வயித்தியலிங்கபிள்ளை அவர்களிடம் அனுப்பி பாதர் பிதிற்றோவிற்கு பதில் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். வயித்தியலிங்கபிள்ளையின் காத்திரமான வாதங்களைப் படித்த பாதிரியார் ''நான் யாழ்ப்பாணத்து பனங்காட்டில் நரிகளைத் தான் எதிர்பார்த்தேன். ஆனால் வயித்தியலிங்கபிள்ளை போன்ற சிங்கத்தை எதிர்பார்க்கவில்லை'' என்று வயித்தியலிங்கபிள்ளை அவர்களுக்கு பதில் எழுதி அனுப்பியதோடு நீண்ட காலமாக நல்லை தந்த நாவலர் பெருமானோடு தான் நிகழ்த்திக் கொண்டு இருந்த தர்க்கவாதங்களை தானாகக்கைவிட்டிருந்தார்.

இவர் வல்வை சிவன் கோயில் மடத்தில் அச்சகம் நிறுவி ''சைவ அபிமானி'' என்ற பத்திரிகையைப் பல ஆண்டுகளாக நடாத்தி வந்துள்ளார். ''சைவ அபிமானி'' என்னும் இப்பத்திரிகை பாரதி நிலைய முத்திராட்சரசாலையிலிருந்து மாத வெளியீடாக வெளிவந்தது. இப்பத்திரிகையின் ஆசிரியராக வைத்தியலிங்கபிள்ளையின் மாணவரும் உறவினருமான திரு. பொ. ஞானசபாபதிப்பிள்ளை அவர்கள் பணியாற்றினார். வடமராட்சிப் பகுதியிலிருந்து வெளிவந்த பத்திரிகைகளில் இதுவே மூத்த பத்திரிகை. வயித்தியலிங்கபிள்ளை அவர்களின் படைப்புக்களும் சமூகச்சீர்கேடுகளைச் சுட்டி எழுந்த பாடல்களும், உரைநடை விசயங்களும் வெளிவந்தன. பல்வேறு புனை பெயர்களில் இவற்றை எழுதினார். கிறிஸ்தவ மதம் பரவி வரும் நிலைக்கு எதிராக எழுந்த சைவ எழுச்சிக்கு வல்வெட்டித் துறையைச் சேர்ந்த வயித்தியலிங்கபிள்ளை வெளியிட்ட சைவ அபிமானி என்ற பத்திரிகை பெரும் பங்காற்றியதுடன் வல்வெட்டித்துறை வர்த்தகர்கள் இவருக்கு பின்னணியாக இருந்தார்கள் என ''மகிமை'' என்ற பெயரில் ஆறுமுகநாவலர் வெளியிட்ட சஞ்சிகையில் குறிப்பிட்டுள்ளார். பின்னர் யாழ்ப்பாணத்தில் வேளாளர் மேலாதிக்கம் இருந்த பகுதியில் கரையார்களின் கையோங்கியதற்கு எதிர்ப்பும் ஏற்பட்டது. ஆறுமுகநாவலர் பகிரங்கமாகவே வேளாளர் நலன்களை ஆதரித்தவர். இவர் எழுதிய ''கரையார் வழக்கு'' என்னும் நூலை எதிர்த்து வயித்தியலிங்கபிள்ளை ''சாதி நிர்ணய புராணம்'' என்ற நூலை எழுதினார். அதில் கரையாரின் உயர்வினை உரைத்துள்ளார். இவர் பதினொரு நூல்களை இயற்றியுள்ளார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் இவரின் நூல்களை ஆராய்ந்து கூறியதாவது. வள்ளியம்மை, தெய்வயானையம்மை திருமண படலங்களுக்கு இவரது உரையினை நோக்கும் போது இவரது ஆழ்ந்த இலக்கிய ஞானம் நன்கு புலனாகின்றது. சிறப்பாக வள்ளியம்மை திருமண படலத்திற்கான உரை அகப்பொருள் மரபை நுண்ணியதாக உணர்ந்து எழுதப்பெற்றது தெரியவரும். 122 ம் பாடலான ''நாற்றமும் தோற்றமும்'' எனத் தொடங்கும் பாடலுக்கும் எழுதிய உரைகள் வயித்தியலிங்கபிள்ளை அவரது ஆழ்ந்த தமிழிலக்கிய அறிவிற்கு ஒரு பதச் சோறு ஆக அமைந்துள்ளது எனலாம். நம்பியகப்பொருள் விளக்கவுரையும் இவராற் செய்யப்பட்டது. என்பதை மனங்கொள்ளின் அகப் பொருள் மரபு பற்றி அவரிடமிருந்த ஆழ்ந்த இலக்

கியப் புலமை நன்கு தெரியும். வைத்திய லிங்கபிள்ளை அவர்களால் நிகழ்த்தப்பட்ட புராணபடனங்கள் வெறுமனே அமையாது பொழிப்புரை, விருத்தியுரை, இலக்கணக் குறிப்பு, கிளைக்கதைகள், மேற்கோள்கள் ஒப்பியல் நோக்கு என்பவற்றை அடக்கிய தாக அமைந்துள்ளன.

இவர் தமிழ்நாடு சென்றும் விரிவுரை கள் நிகழ்த்தியுள்ளார். சென்னையில் சி. வை. தாமோதரம்பிள்ளை தலைமையில் நிகழ்ந்த பேரவை இவருக்கு ''இயற்றமிழ் போதகாசிரியர்'' என்னும் பட்டத்தைச் சூட்டியது. இவரது நினைவையொட்டி வல்வையில் உள்ள நூல் நிலையங்களில் அவரது உருவப்படம் திறந்து வைக்கப் பட்டன. வல்வை சனசமூக சேவா நிலை யத்தினரால், கலாநிதி கா. சிவத்தம்பி அவர் களால் எழுதப்பெற்ற 'புலவர் வயித்திய லிங்கபிள்ளை' என்ற சிறு நூலும் வெளி யிடப்பட்டது. வடமராட்சியின் கல்விப் பாரம்பரிய, இலக்கிய வளத்திலும் வைத்திய லிங்கபிள்ளையவர்களுக்கு சிறப்பான பங்கு உள்ளதோடு, வடமராட்சிக்கும், மட்டக் களப்புக்கும் இலக்கியப்பாலம் அமைத்தவர் களில் ஒருவராகவும் விளங்கினார்.

---

தர்மத்தினால் பொருள் குறைந்துவிடாது. மன்னிப்பதனால் சிறப்புக் குறைந்துவிடாது. தாழ்மையினால் உயர்வு குறைந்துவிடாது.


— நாயகம் - ஸல்

அண்டை வீட்டுக்காரனிடம் அன்பு கொள். ஆனால் வேலியை மட்டும் விலக்கி விடாதே.

— பெஞ்சமின் பிராங்கிளின்

எந்தக் கஷ்ட காலத்திலும் கைவிடாத, எந்தக்குற்றச் செயலாலும் அழிக்க முடியாத, எந்தப் பகைவனாலும் பிரிக்கமுடியாத, எந்தக் கொடுங்கோலனாலும் அடிமைப்படுத்தமுடியாத நண்பன் கல்வி. அது வீட்டில் நண்பன், அயல் நாட்டில் அறிமுகம், ஏகாந்தத்தில் நிம்மதி, சமூகத்தில் அணிகலன்.

— சார்லஸ் வான்




ங்கர் அவர்கள் மூன்று தசாப்தங்களுக்கு மேல் கல்லூரி
ச செல்லும் பொழுது நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வந்த
வேகானந்தா மண்டபத்தில் வழங்கிய (1960) பிரிவுபசாரம்.




திரு. எஸ். வண்ணமாமலை ஐயங்கர் அவர்கள் மூன்று தசாப்
அதிபராக கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் பொழுது நாட்டின்
பழைய மாணவர்கள் கொழும்பு விவேகானந்தா மண்டபத்தில்

# Some Notable Students Of Chithambara

*Siva C. Manicavasagar.*



Born on 18th April 1931. Had early education at Chithambara. Entered Sri Lanka administrative service in 1955 and worked in the Department of Local Government as an Assistant Commissioner (A. C. L. G) for a period of 13 years. Functioned as an Additional Government Agent for Hambantota and Ratnapura Districts during the period 1969 to 1974. Was appointed as a Senior Assistant Secretary of the Ministry of Industries and Scientific Affairs and also functioned as the Chairman of the State Graphite Corporation during the periods 1975 to 1977. Subsequently was appointed as an Additional Secretary of the Ministry of Regional Development and the Ministry of Industries and Scientific Affairs and also of the Ministry of Power & Energy. Thereafter held the post of State Secretary to the Said Ministry of Power & Energy, and retired from service. During this Period, functioned also as the Competent Authority of the Ceylon Gas Company and also as the Vice Chairman of the Ceylon Electricity Board. In January 1995, was appoined tby the present Government as Secretary to the Special Presidential Commission for North and East.

*R. S. Sivasubramaniam.*




Born on 8th April 1930. Educated at Chithambara College (Valvettiturai), Central College (Jaffna) and Aquinas University College (Colombo). First Chithambarian to enter the Ceylon Adminisrative Service through a written competitive examination. Honoured by his alma mater, Chithambara College, which declared a holiday and held a reception attended by the Principal, Staff, Students and members of the public. Served in several Government Ministries and Departments beginning with the Department of Health and retiring as Controller of Imports and Exports. Also served as consultant to the Ministry of Trade and Commerce. Functioned as Secretary to a Presidential Commission popularly known as the Sansoni Commission which inquired into the communal disturbances of 1977 Its report was published as a Government Sessional Paper. Revived in 1960 the Old Boys Association of Chithambara College which was defunct for over 15 years and was its live wire for the next decade and now its President. Elected President of the Rigghall Hostel Union of Jaffna Central College, Vice President of the C. A. S Association, Vice President of Sai Baba Samithi of Colombo Central. Serves in Several Social And Religious Organisations.

*S. Patkunarajah.*


Born in 1931. Was a student of Chithambara from 1938 to 1946. He entered Government Service in 1949 and after serving in several departments, he was selected for Task Force to set up the Registration of Persons Department in 1972. He retired from this department as assistant Commisioner in 1955.

C. Kandasamy.



Born on 30-01-1923. Had secondary education at Chithambara. Passed the London Matriculation Examination in the First Division in 1939 and came First in Ceylon and obtained a free studentship to the University. He passed the London B. Sc degree in Engineering with First Class Honours in 1946. He joined the Colombo Municipality and proceeded to London in 1953 to obtain his A. M. I. C. E. He went to the United Statses in 1969 on one year Scolarship to specialise in Sewerage and Water Works. He retired as Chief Superintending Engineer in 1976 and passed away on 5th June 1996.

P. Balavadivel



Born on 8th January 1932. Had secondary education at Chithambara from 1941 to 1951. Entered Government Clerical Service in December 1952 and resinged after three years to enter Ceylon Law College. Took oath as an advocate of the Supreme Court of Ceylon on 28th August 1959. Appointed as District Judge in January 1980. Appointed as High Court Judge on 1st November 1990. Retired in September 1996 Appointed as a member of the All Island Presidential Commission of Inquiry into Disappearence and Involuntary Removal of Persons by her Excellency the President and still serving in that capacity.

*N. Yogasigamany.*



Born in 1942. Had primary education at Sivaguru Vidyalaya and Secondary education at Chithambara College. Joined Government Service in 1961 as Medical Laboratory Technologist. Obtained Law Degree from the University of Colombo as an external student through Aquinas University College in 1971. Passed the Advocate Examination in 1973 and took oaths as an Attorney-at-Law in 1974. Resigned from Government Service in 1975. Joined Judiciary as a Primary Court Judge in 1979. Now serving as Additional District Judge, Colombo.

*C. Motilal Nehru.*



Born on 31st August 1939. Had secondary education at Chithambara. Joined Government Service in the Electricity Department and while working there attended Law College and passed out as an Advocate in 1964. Took his oaths in June 1965. In 1965 he contested the Point Pedro Electorate and was the youngest candidate then to contest in the North and East. In 1977 he contested the Udupiddy Electorate. Later he became the Vice President of the All Ceylon Tamil Congress Party. He was appointed as President's Counsel in 1990. He made immense contributions at various forums towards the enrichment of Law. In 1995 he chaired the meeting on the continuing legal education programme of the BASL on Labour Laws. In 1996 he was appointed as the Chairman of the BASL Superior Courts Complex Committee. As his final project, he chaired the Labour Tribunals Committee convened by the Minister of Justice and Constitutional Affairs to make recommendations for a more effective functioning and administration of Justice. He passed away on 2nd September 1997.

*R. Kathamuttu.*



Born on 9th February 1922.Joined Chithambara in 1931 and left in 1940 after passing the London Matriculation Examination, in the First Division. He joined the Government. Clerical Service on 1 st March 1941. Passed the London B. A. Exam. in 1948 and served as Hospital Secretary, K. K. S. Hospital form 1952 to 1955. Then joined the Government Accountant Service and retired as Chief Accountant, Food Department in 1982.

*S. Gnanamoorthy.*



Born on 1st October 1905. Had his education at Chithambara. He hailed from the family of Ship Builders and Ship Navigators. He joined the Department of Post and Telecommunications and retired as Assistant Superintendent, Postal Traffic Division. He held the posts of Secretary, Vallai Spinning and Weaving Mills Ltd, Secretary, North Ceylon Progressive Society, President, Valvai Community Centre, Unofficial Visitor Government Hospital, Jaffna, Joint Secretary, T. U. L. F., Chairman, U. C. Valvettiturai and Justice of Peace. He was in the forefront in bringing all Tamil political parties together and forming the T. U. L. F. During his tenure as chairman U. C. Valvettiturai, the Water Scheme and New Market Complex were established He passed away on 11th May 1994.

*M. Nadanasigamany.*



Born on 18th August 1917. Joined Chithambara in 1926. and left in 1933. Passed London Matriculation Examination in 1936. Joined the Postmaster's Service on 1st October 1937 and the Accountant's Service on 1st October 1956 and served in the Department of H e a l t h Services and Railways. Retired on 17th August 1974.

*V. Ramasamypillai*



Born on 11th March 1898. He donated the Front Main Block of the College which has since been demolised. He obtained the Ceylon Masters Certificate. Matrias 2nd Captain Certificate and navigated Merchant Ships from 1925 to 1958. He owned the Merchant Ships Sri Sivakamisunthari, Sri Aathiledchumy, Sri Shanmugasuntharaledchumy, Sri Thiruvilainayaki, Sri Mahaledchumy and Narasimmasamy. He was the Chairman of Trusties of the Sri-Muthumari Amman Temple for over half a century. He passed away on 26th September 1986.

A. Ratnasamy.

Born on 1st January 1909. He was not interested in continuing his studies. His ambition was to achieve great heights in navigating Merchant Ships. He passed the Mate Examination in 1934 and joined the crew of the Merchant ship 'ANNAPOORANI' that sailed from Colombo Harbour to America in 1937 and created history. He was honoured with the title 'MAA MANITHAN'. He passed away on 15th April 1994.

V. S. Anandan.



Born on 25th May 1943. Graduated from the Peradeniya University. Instead of practicing his profession as an Advocate, he was bent upon creating records after records to be etched in the Guiness book of records. He was honoured with the title 'AALIKUMARAN' for his swimming feats. His record achievements are-

20-03-1963 Swam the Palk Strait from Valvettiturai to Kodikkarai (S. I.)

29-04-1975 Swam from Talaimannar to Thanuskodi and back.

01-01-1979 Twist danced non stop for 180 hours at Galle Face Green Colombo. This achievement was recorded in the Guiness book of records. Hon J. R. Jayawardene, then President of Sri Lanka was present on this occasion and congratulated him.

May 1979 Cycled non stop for 187 hours covering 1487 miles.

December 1979. Did Ball Punching non stop for 136 hours.

15-05-1980. Dis sit Ups 165 times in 02 minutes.

30-06-1981. Floated non stop for 80 hours at the 'Anna Swimming Pool' Chennai and created a record.

01-01-1983. Pulled up and down 22 ounce billiard stick with one hand non stop for 02 hours 29 minutes and 2520 times.

He was the first Ceylonese to have his name entered in the 'Guiness Book' of records He died under tragic circumstances in August 1984 while practicing in the English Channel.

K. Mohanadas.



Born on 14th September 1945. He became an expert in navigating Merchant Ships. He completed his shipping course at Nugegoda Buhari Navigation Centre and joined as a cadet in the London Bibiline Shipping Company. After four years training he joined the Kuwait Shipping Company as 3rd officer at the age of 21. When the Kuwait Ship weighing 20,000 tons was sailing, the Captain of the ship died suddenly. Mr. Mohanadas took charge of the ship and navigated safely to the harbour and was honoured by the company. He worked as a Harbour Piolet for the Lanka Cement Co-operation. He joined as a share holder of the Singapore Baltic Line Company and bought the ships 'Vela - 6' and 'Isabella'. He died under tragic circumstances on 1st September 1984' being caught in Army firing while returning in his car from Point Pedro to Valvettiturai.

S. R. Ariaratnam.


Born on 12th April 1914. Had secondary education at Chithambara and passed the London Matriculation Examination in 1938. He joined the staff of the College in 1939. He went on study leave to Madras University and obtained B. A. degree in 1949. At Madras University he was the Captain of the cricket team and was awarded colours in 1948. At Chithambara, he was the prefect of games from 1949 to 1960. He introduced Scouting in 1942 - 12th Jaffna Troop. He was the Assistant District Commissioner in 1959 and District Commissioner, Vavuniya in 1969. During his period the College Troop was declared the best troop in Jaffna and best troop in the Island and won the All Ceylon Merit Flag. He was also instrumental in the College Foot Ball and Volley Ball Teams faring well at all Island level. He was promoted to Grade 1 of the Principals Service in 1967 and was transferred as Principal of the Vavuniya M.M.V. He was awarded a memorable farewell by the public of Valvettiturai with a motor car parade from Nediyakadu to Chithambara College and was garlended profusely along the half mile route with flower garlands and also with a gold chain.

*Mrs. Kamala Periyathamby.*



The first student to continue her studies at Chithambara, a male dominated college then, even after puberty. At the age of seven she obtained the 1st prize at the open music competition held at Batticaloa by the East Ceylon Music Mantran. At the age of Sixteen, she was the first from Valvettiturai to give music recital and plays over Radio Ceylon and continued to do so for over a period of 25 years. She is also a frolific writer of short stories, Novels and Poems and has several books to her credit and was honoured with the titles 'KAANAKKUIL', 'SENTHAMIL SELVI', and 'IRUKALAI VALLAVI'. She is also well versed in giving religious discourses. At the Annual Awards presentation by Tamils' Information, Canada, held on 16th February 1997 she was awarded a gold medal for her outstanding contribution to Music.


*V. Velummylum.*



Born on 24th August 1935. Had Secondary Education at Chithambara from 1945 to 1952. Entered the Ceylon Administrative Service through a written competitive examination on 1st June 1976. Appointed as Assistant Government Agent, Point Pedro and held this post over 16 years. Posted as Senior Assistant Secretary of Internal Ministry from 01-04-1991 and held this post till 28-02-1993. Appointed as Divisional Secretary, Trincomalee and Deputy Commissioner of Essential Services from 01 - 03 - 1993 and continue to hold these posts.

*Dr. V. Thiruvadivel.*

Born on 9th May 1942. Was a student at Chithambara from 1951 to 1954. Entered Ceylon University in 1960 and passed out as Dental Surgeon in 1965 with Upper Second Class Honours. Appointed as Dental Surgeon, Government Dental Institute, Colombo. Went on Fellowship to U. K. in 1970 and obtained F.D.S.R.C.S. of England and Edinborough and returned to the Island in 1971. Served in Government Hospitals in Colombo and Jaffna Provincial Hospital till 1984 and retired prematurely. Now doing private practice in Colombo.




*B. Balendran*

Born on 9th July 1944. Studied at Chithambara from 1954 to 1961. Was a member of the First Batch of Queen Scout Troop of Chithambara. Joined Ceylon Technical College, Maradana in 1967 and obtained Diploma in Valuation in 1971. Joined the Department of Valuation as Valuation Inspector in 1972 and was promoted as District Valuer in January 1999 and attached to Jaffna District.

*Dr. T. Koneswaran*

Born on 15th June 1961. Had Secondary Education at Chithambara from 1972 and entered Medical Faculty, Jaffna in the Accademic Year 1983 / 1984. Completed M. B. B. S. course in April 1993 and is serving in the Accidental Service of the Teaching Hospital, Colombo from August 1993.

*Dr. K. Mylerumperumal.*




Born on 23rd June 1941. Studied at Chithambara from 1955 to 1958. Entered Madras University in 1965 and passed out as M. B. B. S. in 1972. Worked for two years at a Private Nursing Home, India and retu-rned to the Island. Served at Base Hospital, Matara from 1974 to 1975 and then as D. M. O. Minipe, Mahaiyangana and M. O. H. Medamahanuwara from 1975 to 1977. From 1977 to 1980 was attached to Base Hospital, Mannar and from 1980 to 1985 served as D. M. O. Point Pedro. He left the Island in 1986 and worked in Saudi Arabia till 1990. Returned to the Island in 1991 and worked as Mobile Doctor of the Sri Lanka Red Cross Society, Kilinochchi from 1991 to 1994. He was posted as D. M. O. Kilinochchi in 1995 and was transferred to District Hospital, Valvettiturai in 1997. Serving as D. M. O Valvetti-turai since then. A very good football player and represented the Jaffna District Football Association in the All Ceylon Competition. ○

*V. Visuvalingam.*

Born on 10th June 1947. Studied at Chithambara from 1967 to 1968. Joined the Gove-rnment Clerical Service and was attached to the Department of Local Government. Entered the Sri Lanka Administrative Service through a written competitive Examination and was Appointed as Administrative Officer, Mini-stry of Food, Trade and Co-operatives on 23-04-1981. Served as Assistant Food Commissi-oner, Mannar from October 1995 to July 1995. Appointed as Addional Government Agent, Mannar from August 1995 and continue to hold this post. ○

K. Ganesh.




Born on 28th September 1942. Had secondary education at Chithambara from 1952 to 1958. Entered the Sri Lanka Administrative Service through a written competitive examination on 1st November 1978 and was appointed as Assistant Government Agent, Cheddikulam. Served as Assistant Commissioner of Agrarian Services, Mannar from 01-01-1982 to 31-05-1991 and as Government Agent, Mannar from 01-06-1991 to 19-02-1995. Appointed as Government Agent, Vavuniya on 20-02-1995 and continue to hold this post.

S. B. Arumanayagam.



Born on 2nd November 1934. Had secondary education at Chithambara. Captained the College 1st Eleven Foot Ball team in 1951. Worked at Oil Fats Corporation and Wellawatte Spinning and Weaving Mills as a Technical Officer. Went on 03 years Colombo Plan Scholorship to Manchester University in 1959 and returned in 1962. Went to U K. in 1966 and obtained A. M. I. Chemical Engineering and joined the Ceylon Imperial Chemical Industries, in 1969. Left in 1977 and started the firm 'Arumanayagam Associates' (Consulting Engineers) and also functioned as the Chairman of Petro Coolers Ltd; and Petro Exports Ltd;

*P. Kandasamy.*



Born on 25th July 1930. Was at Chithambara from 1938 to 1946. Entered the Sri Lanka Accountants' Service in 1962 and held the Post of Deputy Chief Accountant Department of Agrarian Services from 1972 to 1977 and the post of Chief Accountant. D A. S. from January 1980 to January 1983 Also functioned as Director / Finance Land Reform Commission from 1980 to April 1983, including service with 04 Compensation Boards determining compensation to Rupee and Sterling Estate Companies Held the post of Director/Finance, Ministry of Agriculture Development and Research from February 1983 to 1990 and is a Director. State Mortgage and Investment Bank from September 1984 to date. Retired in 1990 and was Re employed as Director / Finance, M / AD & R from August 1990 and held this post till July 1994. Appointed as Director / Finance. Ministry of Agriculture Lands & Forestry from August 1994 and held this post till November 1997. From December 1997 to date, functioning as Consultant, Ministry of Agriculture and Lands. He had extensive training in U K, U. S. A., Thailand, South Korea, Phillipines, Indoenesia, Malaysia and Singapore in various fields related to Agriculture. Irrigation, Water Resourses and Rural Development. He is a Fellow of the Institute of Public Finance and Development Accountancy and an Associate of American Agricultural Economics Association. He also holds a Diploma in Public Financial Management.

*Dr. A. Vijayaranjan.*



Born on 19-08-1961 Had secondary education at Chithambara from 1973 to 1979. Entered the University, Peradeniya in 1981 and passed out as Dental Surgeon in 1990. Entered the Post Graduate Institute of Medicine, University of Colombo in 1993 and obtained M. S. Degree. (Master of Surgery, Dental) in 1995. Went on one year Fellowship to U. K. in 1997 and obtained F. D. S. R C. S. (Eng.) in 1998. Returned to the Island and attached to the Government Dental Institute. Colombo as Oral and Maxillo-facial Surgeon. In sports, he excelled in Cricket and Football.


*S. Namasivayampillai*



Born on 30-07-1911. When he was studying at Chithambara in the 7th Standard, Mr. S. Arunanthi M. Sc, then Education Officer, held a test for all students of the class and Mr. Namasivayampillai came first in the test. Recognising his brilliance Mr. Arunanthi offered him a scolarship to continue his studies at Hartly College, Point Pedro. He passed the Senior Cambridge Examination in 1927 in the First Division and joined the Government Clerical Service. He was very religious and well versed in Saiva Sidthantham. While in service he gave religious discourses and lectured at Saiva Maha Saba, Kandy and at Vivekanda Society, Colombo. He retired from clerical service in 1943 and entered the Maharagama Teachers Training College in 1950, coming first in the entrance examination out of four thousand entrants. After completion of the training, he taught at Udupiddy Girl's College and then at Hartly College, Point Pedro. He retired in 1970. He was a man of quiet disposition, soft spoken and lived a simple life adhering to the precepts of Hindusim. His motto was Service to Humanity is Service to God. He was a disciple of Bahavan Sri Ramanamaharisi and stayed at his Ashramam for some period. He had the fortune to meet Mahathma Gandhi when he visited Valvettiturai in 1927. From then onwards he followed the teachings of Mahathma to the very letter and wore only ' Kathar ' Verty, National and Shawl. He also undertook fasting for good causes and followed nature cure in his life. He had lectured on the teachings of Mahathma Ghandi and on Saiva Sidthantham in various platforms all over the Island till his demise on 20-07-1978.

★

*Dr. S. Rajendran*



Born on 11 th October 1943. Had his Primary education at American Mission School Valvettiturai and Sivaguru Vithiyalaya, Valvettiturai from 1948 to 1951. Had Secondary education at Chithambara College from 1952 to 1959 and at Heartly College from 1960 to. 1962. Entered the Faculty of Engineering, University of Ceylon, Peradeniya in 1963 and graduated with First Class Honours in 1967. Employed as Assistant Lecturer in the University of Ceylon in 1967. Entered University of Cambridge, London in 1969 and obtained Ph. D in 1972. and resumed as Lecturer at the University of Ceylon. Left the Island in 1974 and held the following appointments overseas:

1974 - 1985 Lecturer / Senior Lecturer, National University of Singapore

1982 - 1983: Visiting Associate Professor, Memorial University of Newfoundland, Canada.

1985 - 1987: Professor, Hindustan College of Engineering, Madras and from 1987 to date he is functioning as Senior Lecturer / Associate Professor of the National University of Singapore. In sports he represented the Chithambara College 1 st Eleven Football Team which won the J. S. A competition on more than one occasion. At University he excelled in Sports and Drama. He is an active social worker and continue to play a leading role in Social, Educational and Religious affairs of his native place, Valvettiturai.

முன்னாள் அதிபர்




திரு. ச. சத்தியமூர்த்தி B.Sc., Dip-in-Edu.

முன்னாள் அதிபர்




திரு. எஸ். சிவநேசன் B.Sc., Dip-in-Edu.



திரு. எம். கனகலிங்கம்

இவரது கட்டுரை 60 ஆம் பக்கத்தில்



திரு எல். சிவனருட்சுந்தரம் சட்டத்தரணி

இவரது கட்டுரை 62 ஆம் பக்கத்தில்

பா. மீனாட்சிசுந்தரம்

# வல்வையின் கப்பற்கலை.......

ஈழ மண்ணுக்குப் பெருமை தேடிக் கொடுத்த சாம்ராஜ்யம், உலகத்தின் கவனத்தையெல்லாம் தன்பக்கம் ஈர்க்கும் வெற்றித் திலகங்களையும் சாதனை மைந்தர்களையும் பெற்ற வீரத்தின் விளைநிலம் வல்வெட்டித்துறை. இந்த வீரத்தின் விளைநிலத்திலிருந்து தான் தமது முதல் சாதனைகளை நீச்சல் வீரர் நவரத்தினசாமி, ஆழிக்குமரன் ஆனந்தன் போன்றோர் ஆரம்பித்து வைத்தார்கள். இந்த வகையில் தான் கப்பல் கட்டும் கலையிலும் கப்பல் ஓட்டும் கலையிலும் வல்வை வாசிகள் தமது முத்திரையைப் பதித்துள்ளார்கள். இலங்கையின் கைதேர்ந்த மாலுமிகளையும் கப்பல் கட்டும் மேஸ்திரிமாரையும் வட இலங்கையில் தான் காணலாமென்பது பொதுவாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயமாகும். இத்துறையில் ஏனைய ஊரவர்களை விட வல்வெட்டித்துறை வாசிகளே முன்னணியில் வகிக்கிறார்கள் என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொன்று. ''திரைகடலோடியும் திரவியம் தேடு'' என்பது தமிழருக்கான ஒரு தனிப் பழமொழி. கொழும்பு மாநகரின் கண். அமைந்துள்ள யாழ்ப்பாணத்தார் கதிர் வேலாயுத சுவாமி கோவில் கும்பாபிஷேக மலரில் குறிப்பிட்டுள்ளதை நோக்கும் போது இப்பழமொழி வல்வெட்டித்துறைத் தமிழர்களையே குறிப்பதாக எண்ண இடமுண்டு. ''திரைகடலோடியும் திரவியம் தேடு என்னும் முதுமொழிக்கிணங்க நெடுங்காலமாகச் சிறந்த கலங்களமைத்து கடலோட்டு வணிகத் தொழிலினை மேற்கொண்டு தென்னாட்டிலேயே முன்னோடிகளாக விளங்கியவருள் யாழ்ப்பாணத்தின் வடகோடியிலமைந்த வல்வெட்டித்துறை மக்களை சிறப்பாக எடுத்துக் கூறலாம்'' என்று அந்த மலரில் சிறப்பித்துக் கூறப் படுகிறது. ஒரு காலப்பகுதியில் இலங்கையிலுள்ள துறைமுகங்களில் வல்வெட்டித் துறை வாசிகளும், ஊர்காவற்றுறை வாசிகளுமே இழுவைக்கப்பல் தளபதிகளாயும் (Tug master) உப தளபதிகளாயும் (Mate of tugs) கடமை புரிந்துள்ளார்கள்.

உலக மகாயுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து அரசாங்கம் நீராவிக்கப்பல்கள் மூலம் பொருட்களை கொண்டு வருவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டமையினால் வல்வை வாசிகள் கப்பல் கட்டும் தொழிலையும் பாய்க்கப்பல்களை ஓட்டி வந்ததையும் நிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். கப்பல் கட்டும் கலையைப்பற்றியும் கப்பல் ஓட்டும் கலையைப் பற்றியும் எமது ஊரவர்கள் கூறுவதை விட ஏனையோர் கூறுவனவற்றை நோக்கும் போது எம்மவர்களின் சாதனை அவர்கள் இத்துறையில் அடைந்துள்ள முன்னேற்றம் என்பன பற்றி நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.


வட பகுதியில் கப்பல் கட்டும் தொழில் எப்போது ஆரம்பமானது. இத் தொழில் இடை நடுவே தடைப்படாமல் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா? கப்பல் கட்டும் ஓடாவிமார் யார்? இத் தொழிலின் அறிவை அவர்கள் எப்போது எங்ஙனம் பெற்றுக்கொண்டார்கள்? ஒரு

பெரிய பாய்க்கப்பலைக் கட்டுவதற்கான செலவுத் தொகை என்ன? அதனைக் கட்டி முடிக்க எடுக்கும் காலம் எவ்வளவு? எந்த வகையான மரங்கள், ஒரு கப்பலைக் கட்டுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன? தொலை தூரங்களிலுள்ள எந்தெந்தத் துறைமுகங்களுக்கு இந்தக் கப்பல்கள் சென்று வருகின்றன? என்ன வகையான சரக்குகளை இந்தக் கப்பல்கள் ஏற்றி இறக்குகின்றன? இப்படிப்பட்ட கேள்விகளுக்கான விடையைத் தெரிந்து கொள்வதற்காக நான் வல்வெட்டித்துறையை நோக்கிப் பயணமானேன் என திரு. எஸ். கே. ஞானமுத்து என்பவர் 1946 ம் வருடம் Times என்னும் ஆங்கில நாளேட்டில் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தொடர்ந்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


நான் வல்வெட்டித்துறையைச் சென்றடைந்ததும் ஒருவருடைய உதவியும் இல்லாமலே கப்பல் கட்டும் தளத்தில் கப்பல் கட்டும் வேலை நடைபெறும் போது சுத்தியல் மூலம் எழுப்பப்படும் ஓசையைக் கொண்டே குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைந்தேன். அவ்விடம் பலதரப்பட்ட வயதினைக் கொண்ட கப்பல் கட்டும் மேத்திரிமாரையும் காணக் கூடியதாய் இருந்தது. ஒரு சிறிய வள்ளத்திற்குத் திருத்த வேலைகள் மேற்கொண்டிருந்த மேத்திரியாரிடம் சென்று உரையாடினேன். அவர் சின்னத்தம்பி மேத்திரியார் என்று அறிந்து கொண்டதுடன் இவரே திருத்த வேலைகளுக்குப் பொறுப்பாக இருந்த மேத்திரியார் என்பதையும் தெரிந்துகொண்டேன். அவ்வப்போது வேண்டிய கட்டளைளையும் அறிவுரைகளையும் வேலையாட்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தார். இவரது இயற்பெயர் குமாரசாமி மேத்திரியார் என்பதாகும். உருவமைப்பில் மிகவும் சிறியவராய் இருந்ததுடன் 70க்கும் மேற் பட்ட வயதினை அடைந்தவராயும் இருந்தார். தனது குடும்பத்திலுள்ளவர்கள் 150 வருடங்களுக்கு மேலாக இத்தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும் தான் 50 வருடங்களாக இதனைச் செய்து வருவதாகவும் தெரிவித்ததோடு தனது மூதாதையர் டச்சுகாரர்களின் காலத்தில் இந்தியாவிலிருந்து கப்பல் கட்டுவோரைத்தருவித்து அவர்கள் மூலம் இக்கலையைக் கற்றுக் கொண்டதாயும் இதனை வழிவழியாகத் தனது சந்ததியினர் தொடர்ந்து செய்து வருவதாகவும் தான் தனது சகோதரனிடமிருந்து கற்றுக் கொண்டதாயும் கூறினார்.

வல்வெட்டித்துறை வாசிகள், காற்றோ நீரோ அடிமேல் அடி அடித்தாலும் எதிர்த்து நிற்கக் கூடிய நேர்த்தியான கப்பல்களைக் கட்டியுள்ளார்கள் என்பதுடன் வல்வெட்டித்துறையில் மாத்திரமே இக்கலை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாயும், கடற்பிரயாணம் என்பது வல்வெட்டித்துறை வாசிகளின் இரத்தத்தில் ஊறிப்போன ஒன்று என்பதையும் கப்பல் ஒட்டிகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் தட்டுப்பாடே ஏற்படவில்லை யென்பதையும் மேலும் அறிந்து கொண்டேன் என்று திரு. ஞானமுத்து அவர்கள் கூறியுள்ளார். அத்துடன் வல்வெட்டித்துறையின் கட்டப்பட்ட கப்பல்கள் மலேயா, பர்மா, சீயம், அக்யாப், ரங்கூன், மோல்மீன் போன்ற தேசங்களுடன் சேவையில் ஈடுபட்டதுடன் இந்தியாவுக்கு அடிக்கடி சேவைகள் மேற்கொள்ளப்பட்டதையும் அறிய முடிந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். நான் வல்வெட்டித்துறையில் நின்ற சமயம் சுமாரான அளவுடைய பாய்க்கப்பல் ஒன்று நங்கூரமிட்டு நின்றதையும் இவ்வூரிலேயே கட்டப்பட்ட மூன்று பாய்மரங்களையுடைய கப்பல் ஒன்று துறைமுகத்தின் உள்ளே நுழைவதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

1950 ஆம் வருடம் இலங்கை, டெய்லி நியூஸ், என்ற நாளேட்டில் அக்காலத்தில் பொலிஸ்மா அதிபராக இருந்த சேர் றிச்சாட் அலுவிகாரை அவர்கள் குறிப்பிட்டுள்ளதாவது:-



வல்வெட்டித்துறை வாடியில் கட்டப்பட்டு கடலில்
இறக்கப்படுகின்ற பாய்க்கப்பல்



வல்வெட்டித்துறையில் கடைசியாகக் கட்டப்பட்ட
"பார்வதபத்தினி" என்னும் பாய்க்கப்பல்

வல்வெட்டித்துறைத் துறைமுகம் சுறுசுறுப்பான கடல் வாணிபத்தில் ஈடுபட்டதுடன் இத்தொழிலில் அறுபதுக்கும் மேற்பட்ட பாய்க்கப்பல்கள் ஈடுபட்டிருந்ததுடன் ஏனைய துறைமுகங்களுக்கூடாகவும் வல்வை வாசிகளின் கப்பல்கள் இந்தியா, பர்மா போன்ற இடங்களுடன் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் அனேகமான கப்பல்களில் வல்வை வாசிகளே மாலுமிகளாக இருந்ததை அவதானித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். கப்பல் கட்டும் கலையிலும் வல்வை வாசிகளே ஈடுபட்டிருந்ததையும் அரசாங்கத்தால் வடபகுதித்துறைமுகங்கள் மூடப்பட்டதையடுத்து இந்தக் கடல் போக்குவரத்தும், கப்பல் கட்டும் கலையும் அடக்கி வைக்கப்பட்டதாயும் குறிப்பிட்டுள்ளார். பிறிதொருசமயம் சேர் றிச்சாட் அலுவிகாரை அவர்கள் கடத்தல் தொழிலை ஒழிப்பது தொடர்பாக ஆராய்வதற்காக வடஇலங்கை சென்ற சமயம் உலகமகா யுத்தத்திற்கு முன்னர் வல்வை வாசிகள் கடத்தல் தொழிலைவிட கப்பல் ஓட்டிகளாகவே (மாலுமி) இருந்துள்ளார்கள் என்பதை உணர்ந்து கொண்டதாக 1951ம் வருடத்தில் Times என்ற நாளேட்டில் குறிப்பிட்டுள்ளார்.

''முற்காலத்தில் தமிழர் கட்டிய கப்பல் ஒன்றைக்கூட இன்று காணமுடியவில்லை. பெரிய கப்பல்களைக்கட்டும் கம்மியர் ஓடாவி மரபில் தோன்றிய யாழ்ப்பாணத்தமிழர் திரு. ஜி. சண்முகம் பிள்ளை மேத்திரியார் 1936ம் ஆண்டில் கட்டிய ''பர்வதபத்தினி'' என்னும் கப்பல் நமக்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இக்கப்பல் இன்றும் ஆயிரக்கணக்கான கல் தொலைவுக்கு சரக்கேற்றிக் கொண்டு போய் வருகிறது. பண்டைக்காலத்தில் கட்டிய கப்பலைப்போன்ற உறுதியும் அழகும் வாய்ந்ததாக இருக்கிறது'' என தென்இந்தியாவைச்சேர்ந்த சாத்தான் குளம் அ. இராகவன் என்பவர் தான் எழுதிய ''நம் நாட்டுக் கப்பற்கலை'' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார் இந்த நூலில் இவர் பிற கப்பல்கள் ஒன்றைப் பற்றியுமே குறிப்பிடாது விட்டமையினால் ''பர்வத பத்தினி'' என்ற கப்பலின் மகிமையையும், வல்வை கப்பல் கட்டும் ஓடாவி மார்களின் திறமையையும் வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. திரு. ராகவன் அவர்கள் குறிப்பிட்ட யாழ்ப்பாணத்தமிழர் ஜி. சண்முகம்பிள்ளை என்பவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஞானமூர்த்தி சண்முகம்பிள்ளை என்பவராகும். இலங்கை அரசாங்கத்தினரால் 1958ம் வருடம் தைமாதம் வெளியிடப்பட்ட ''ஸ்ரீலங்கா'' என்னும் கைநூலில் பர்வத பத்தினி கப்பலின் புகைப்படம் வெளியிடப்பட்டதுடன் கப்பலைப்பற்றிப் பின்வருமாறும் கூறப்பட்டுள்ளது. வல்வெட்டுத்துறையைச்சேர்ந்த சண்முகம் பிள்ளை என்பவரால் ஆரம்பிக்கப்பட்டு அவரது மகன் பாலசுப்பிரமணியம் என்பவரால் கட்டிமுடிக்கப்பட்ட ''பர்வத பத்தினி'' என்னும் கப்பல் என்பதாகும்.

1990ம் வருடம் கலாசார தகவல் துறை அமைச்சராக இருந்த கௌரவ W. J. M. லொக்கு பண்டார அவர்கள் பண்டைக்காலத்தில் கப்பல் கட்டும் தொழிலில் வல் வெட்டித்துறையைச் சேர்ந்தோர் ஆற்றிய பங்கு பற்றி கொழும்பில் நடைபெறஇருக்கும் மாநாடு ஒன்றில் ஆராயப்பட இருப்பதாக செய்தியாளர் மத்தியில் தெரிவித்திருந்தார். இதே செய்தியாளர் மாநாட்டில் பங்கு பற்றிய கொழும்பு பல்கலைக்கழக புதைபொருள் ஆராய்ச்சியுடன் தொடர்புடைய பேராசிரியர் திரு. சேனக பண்டாரநாயக்கா அவர்கள் கப்பல் கட்டும் தொழிலில் இலங்கையர் குறிப்பாக வடக்கில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தோர் சிறப்பிடம் பெற்றிருந்தனர் எனவும் தெரிவித்திருந்தார். கொழும்பில், நடைபெற்ற இந்த மகாநாட்டில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பது பற்றித் தெரியவரவில்லை.

மேலே குறிப்பிடப்பட்டதைப்போன்றே வல்வெட்டித்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு அப்போதைய அரச அதிபர் வடமராட்சி நீர்முனைத் தொழிலாளர் சம்மேளனத்தின் (marine worker) செயலாளரிடம் சில புள்ளி விபரங்களை கேட்டிருந்த தாகவும் 1955 வருடம் Times of Ceylon, வீரகேசரி ஆகிய நாளேடுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் போக்குவரத்துச் செய்த 140 பாய்க்கப்பல்களில் 136பாய்க்கப்பல்களுக்கு வல்வை வாசிகளே தண்டையல்களாக இருந்ததாகவும் இவற்றில் 59 கப்பல்களுக்கு வல்வை வாசிகளே அதிபதியாக இருந்தது பற்றியும் செயலாளர் தனது அறிக்கையில் குறிப்பிட்ருந்தார். அத்துடன் வல்வை வாசிகளில் 1600 பேரளவில் கப்பல்களில் பல தரப்பட்ட வேலையாட்களாக இருந்ததாயும் 24 கப்பல் கட்டும் மேத்திரிமார் இருந்ததாயும் 40 கிட்டங்கிகள் வல்வட்டித்துறையில் அமைந்திருந்தாகவும் குறிப்பிட்டிருந்தார்.

வல்வெட்டித்துறை துறைமுகத்தை திறப்பதற்கோ, வல்வெட்டித்துறை மேஸ்திரிமார்களுக்கு கப்பல் கட்டும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவோ இலங்கை அரசாங்கத்தின் எந்த உதவியும் கிட்டாமல் போனது துர் அதிர்ஷ்டவசமானதொன்றாகும்.

கப்பல் கட்டும் தொழிலை எடுத்துக்கொண்டால் வல்வெட்டித்துறையில் இரண்டு கப்பல் கட்டும் தளங்கள் இருந்தன. சிவன் கோவிலுக்குச் சொந்தமான வாடி என்றழைக்கப்படும் இடத்தில் பெரிய கப்பல்கள் கட்டும் தளமும், கொத்தியாலடியில் சிறிய கப்பல்கள் கட்டும் தளமும் அமைந்திருந்தன. உலகின் எப்பாகத்திலாவது கட்டி முடிக்கப்பட்ட கப்பல்களை முழுநாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்ட ''லோயிட்ஸ்'' என்ற உலகஸ்தாபனத்தில்தான் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும். வல்வெட்டித்துறையில் கட்டப்பட்ட கப்பல்கள் யாவும் அந்தக் காலத்தில் அப்படிப் பதிவு செய்யப்பட்டவையே. இதன் காரணத்தினால்தான் British Admiralty என்னும் நிறுவனத்தினால் வெளியிடப்படும் ''Bay fo Bengal'' என்ற நூலில் வல்வெட்டித்துறையை ஒரு கப்பல் கட்டும் தளமாகவும், விசேட துறைமுகமாகவும், கடலோடிகளின் வசிப்பிடமாகவும் குறிப்பிட்டுள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது. பாய் மரக்கப்பல்களைக் கட்டுதலில் கைதேர்ந்த கலைஞர்களில் செல்லத்துரைசாமி என்றழைக்கப்படும் ஞா. சண்முகம்பிள்ளை, அவரது மகன் பாலசுப்பிரமணியம், சின்னத்தம்பி என அழைக்கப்படும் குமாரசாமி, வேலுப்பிள்ளை, வடிவேலு, அமெரிக்கா கொண்டு செல்லப்பட்ட ''அன்னபூரணி'' என்ற கப்பலைக் கட்டிய சுந்தர மேத்திரியார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். கப்பல் கட்டும் கலையில் அகில உலகமுமே வியக்கத்தக்க முறையில் மிக நுணுக்கமாக வேலைப்பாடுகளைச் செய்வதில் வல்வெட்டித்துறை மேத்திரிமார்களே வல்லுநர்களாக விளங்கினார்கள் என்பதை கீழைத்தேசத்தவர்கள் மட்டுமன்றி மேலைநாட்டவரும் ஒப்புக்கொண்ட ஒரு சங்கதியாகும். இலங்கை நாட்டில் 50 தொன்னுக்கு மேற்பட்ட கப்பல்களைக் கட்டி அவற்றைப் பதிவு செய்து கொண்டவர்கள் வல்வெட்டித்துறை மேஸ்திரிமார்கள் என்பதனை சுங்க இலாகாவின் ஆவணங்கள் தெளிவுபடுத்தும். இதுமட்டுமல்லாமல் இந்திய சுங்க இலாகா ஆவணங்கள்கூட எமது மேத்திரிமாரினால் கட்டப்பட்ட கணிசமான கப்பல்களை காக்கிநாடா, மசூலிப்பட்டம், றங்கூன், கல்கத்தா போன்ற துறைமுகங்களில் பதிவு செய்துள்ளதாக வெளிப்படுத்துகின்றன. வல்வெட்டித்துறை மேத்திரியார்களினால் கடைசியாகக் கட்டப்பட்ட பாரிய பாய்க்கப்பல் திரு. சி. குமாரசாமி என்பவருக்குச் சொந்தமான ''பர்வதபத்தினி'' என்னும் கப்பலாகும்.

கப்பல் கட்டும் கலை அருகி விட்டாலும் கூட கப்பல் ஓட்டும் தொழிலில் தொடர்ந்தும் வல்வை வாசிகள் ஈடுபட்டுள்ளார்கள் என்பதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும்.

மாலுமி சாஸ்திரத்தை முற்றுமுழுதாகக் கரைத்துக் குடித்தவர்கள். வான சாஸ்திரத்தைக் கற்றுத் தெளிந்தவர்கள், ஆழ்கடலை வெற்றிகொண்டு கடலோடுவதில் தனிக்காட்டு ராஜாவாகத் திகழ்ந்தவர்கள், கப்பல்கள் நடுக்கடலில் நிற்கும் போது குறைந்தளவு உபகரணங்களைக் கொண்டு கப்பல் எந்த இடத்தில் நிற்கின்றது என்பதை அறியும் திறமை மிக்கவர்கள். கப்பல் ஓட்டும் கலையில் கடல்களையும் நீரோட்டங்களையும் நன்கறிந்திருந்தவர்கள், பாக்கு நீரிணை ஒரு விளையாட்டு மைதானம் என முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் அவர்களால் பாராட்டப்பட்டவர்கள் நிலவு, நட்சத்திரங்களின் அசைவுகள் மூலம் திசைகளையும் கடலில் ஏற்படப் போகும் நீரோட்டங்களின் மாற்றங்களைக் கூறக்கூடிய திறன் பெற்றவர்கள், இந்திய மன்னர்களால் மாத்திரமின்றி ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், ஆங்கிலேயர் போன்றவர்களால் மதிப்பளித்துக் கௌரவிக்கப்பட்ட பெருமைக்குரியவர்கள் வல்வை மாலுமிகள்.

எந்த ஊர் எந்த முதலாளியின் கப்பலாயிருந்தாலும் அந்தக் கப்பலைச் செலுத்துபவர்கள் வல்வைத் தண்டையல்களும் கடலோடிகளுமே. (இலங்கை இந்தியத் துறைமுகங்களுக்கிடையே மாத்திரமன்றி இந்தியாவிலும் ஒரு துறைமுகத்திலிருந்து இன்னொரு துறைமுகத்துக்கு வல்வைக் கப்பல்கள் மூலம் வல்வை மாலுமிகளால் சரக்குகள் ஏற்றி இறக்கப்பட்டன.

வல்வைத்தண்டையல்களைப் பற்றிக் குறிப்பிடுவதாயின் அவர்களைப் பற்றிப் புறம்பானதோர் கட்டுரை எழுதப்பட வேண்டும். அவர்களில் ஒரு சிலரது பெயரை மட்டும் இவ்விடம் குறிப்பிடுதல் வேண்டும். கெச்சுத்தண்டையல் எனப்படும் நா. வேலுப்பிள்ளை அமெரிக்காவுக்கு அன்னபூரணியைக் கொண்டுசென்ற க. தம்பிப்பிள்ளை, தி. சிவசுப்பிரமணியம், பர்மாக் கப்பலில் தண்டையலாக இருந்த நாராயணபிள்ளை, க. காத்தலிங்கம், இ. துரைசாமி, க. பொன்னுச்சாமி, இ. சிவகுரு, பிறநாட்டுக் கப்பலுக்கு தண்டையலாக இருந்த செ. தில்லையம்பலம், மு. பொன்னம்பலம் செல்லமாணிக்கம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கப்பல் கட்டிச்சாதனை புரிந்தவர்கள். ஒரு சில மேத்திரிமார்கள். அடுத்து கப்பல் ஓட்டிச்சாதனை புரிந்தார்கள் சில மாலுமிகள். கடலில் மூழ்கிய கப்பலை மூழ்கிய நிலையிலேயே விலைக்கு வாங்கிச் சாதனை படைத்தார் கப்பல் முதலாளி ஒருவர். பிரித்தானியருக்குச் சொந்தமான ''அத்லாந்திக் கிங்'' என்ற 12,000 தொன் எடையுள்ள கப்பல் ஒன்று திருகோணமலைக்குச் சமீபமாக 1850ம் வருடம் கடலில் மூழ்கிவிட்டது. உரிமையாளர்களும் ஊழியர்களும் சகல வழிகளிலும் கப்பலை மீட்க முயற்சித்து தோல்வியுற்ற சமயம் கை கொடுத்து உதவியவர் வல்வைக்கப்பல் முதலாளிகளில் ஒருவரான பெரியவர் என அழைக்கப்படும். திருமேனியார் வெங்கடாசலம் என்பவராகும். இவர் இக்கப்பலை மூழ்கிய நிலையிலேயே விலை கொடுத்து வாங்கி மீட்டெடுத்து வேண்டிய திருத்தங்களை மேற்கொண்டு இக்கப்பல் மூலம் வியாபாரம் செய்து பொருளீட்டி அதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருவாயில் வல்வை சிவன் கோவிலைக்கட்டினார்.

இன்னொரு கப்பல் முதலாளியும் கப்பல் கட்டும் மேத்திரியாருமான வடிவேலு என்பவர் 1916ம் வருடம் காங்கேசன் துறைக்குச் சமீபமாக கடலில் மூழ்கிப் போன S. S. St. John என்ற நீராவிக்கப்பல்

ஒன்றை மிதக்கச் செய்து அதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருவாயில் ஒரு பகுதியைக் கொண்டு கீரிமலையில் ''நகுலகிரி நாராயண சுவாமி'' என்னும் கோயிலையும் ஸ்தாபித்தார்.

இன்னொரு கப்பல் முதலாளி ஒல்லாந்தர் இந்நாட்டை ஆட்சி செய்த சமயம் நாட்டில் ஒரு முறை ஏற்பட்ட கொடிய பஞ்சத்தின் போது தமது கப்பல்கள் மூலம் உணவைத் தருவித்து பஞ்சத்தில் பரிதவித்த மக்களுக்கு உணவு கொடுத்துக் காப்பாற்றியமைக்காக ஒல்லாந்த அரசினரால் ''முதலியார்'' என்னும் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டார். இப்பெரியார் திருமேனியார் என்பவரின் தாயாரின் கூடப்பிறந்த சகோதரர் பொன்னம்பலம் என்பவராகும்.

கப்பல் முதலாளிமார்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஞா. சங்கரப்பிள்ளை, க. கதிரிப்பிள்ளை, அவரது மகன் அருளம்பலம் சி. குமாரசாமி, ச. சின்னத்தங்கம், வ. இராமசாமி, தொண்டைமானாறு சி. வீரகத்திப்பிள்ளை, குட்டிப்பிள்ளை, அவரது மகன் அப்பாத்துரை, த. சுப்பிரமணியம், கு. சரவணமுத்து, கா. வயித்திலிங்கம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். ச. சின்னத்தங்கம் சொந்தமாக வைத்திருந்த கப்பல்கள் நாகரித்துல்லா, சௌபாக்கிய லட்சுமி, திருப்பதி வெங்கடாசலபதி, மதுரைமீனாட்சி, காசி அன்னபூரணி, ஐதிறோஸ், என்பனவாகும். திரு. வ. இராமசாமியின் வசம் மகாலெட்சுமி, நரசிம்மசாமி, திருநிலைநாயகி, சண்முகசுந்தரி என்ற கப்பல்களும், தொண்டைமானாறு சி. வீரகத்திப்பிள்ளை வசம் ஆதிபூரணி பருபத பாக்கியலட்சுமி, சிவசுப்பிரமணிய புரவி, வள்ளி நாயகி, தெய்வ நாயகி, கோக்கநாடா, பேரானந்தவல்லி, என்ற கப்பல்களும் இருந்ததாகத் தெரிய வருகிறது.


சூறாவளி மற்றும் இதர அனர்த்தங்களினால் கப்பல்களுக்குச் சேதமேற்பட்டு கப்பல்களும், மாலுமிகளும் கடலில் மூழ்கிய சம்பவங்களுமுண்டு.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஜப்பானியரின் குண்டு வீச்சுக்கு இலக்காகியும், நீர் மூழ்கிக் கப்பலால் தாக்கப்பட்டு கப்பல்கள் சிதறடிக்கப்பட்டபோதும் கடலுக்கு அர்ப்பணமான வல்வை மாலுமிகள் பலர். இப்படிச் சிதறடிக்கப்பட்ட கப்பலின் துண்டுகளைப் பிடித்துக் கொண்டு தப்பியவர்களும் உண்டு. இப்படி உயிர் தப்பியவர்களில் சாமிக்கண்டு மேஸ்திரியார் என்பவரும் ஒருவராவர். ''இலட்சுமி கோவிந்தா'' என்னும் கப்பல் ஜப்பானிய நீர் மூழ்கியால் தாக்கப்பட்ட சமயம் உயிர் தப்பியவர்களில் இன்னொரு மாலுமி பொ. பாலசுந்தரம் என்பவராகும்.

''எச். ஏ. காட்டுன்'' என்ற கப்பல் சூறாவளியினால் தாக்குண்டு சின்னாபின்னமாக்கப்பட்டபோது கப்பலில் கடமையாற்றிய மாலுமிகள் சிறிய படகொன்றில் ஏறித்தத்தளித்துக் கொண்டிருந்த சமயம் சீனக்கப்பல் ஒன்று காப்பாற்றிக் கரை சேர்த்த சம்பவமும் உண்டு. தப்பியவர்களில் ஒருவர் சீனியம்மான் என்பவரும் ஒருவராகும்.

செல்வமாணிக்கம் தண்டையல் 1934ம் வருடத்தில் மலபாரிலிருந்து கொழும்பு நோக்கி ஜெயலட்சுமி என்ற கப்பலை செலுத்திக் கொண்டிருந்த போது கப்பல் சூறாவளியால் தாக்கப்பட்ட சமயம் கடலில் மூழ்கியது. இதில் கடமை பார்த்த வல்வை மாலுமிகள் அனைவரும் கடலுடன் சங்கமமானார்கள்.

வல்வைக் கடலோடியான திரு. க. குணசுந்தரம் என்பவர் கிரேக்கக் கப்பல் ஒன்றில் பணியாற்றியவர். கனடாவுக்குச்



வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவுக்கு கொண்டு செல்லப்பட்ட **"அன்ன பூரணி"** என்னும் பாய்க் கப்பல் அமெரிக்க துறைமுகமொன்றில் நங்கூரமிட்டிருக்கும் காட்சி.

சமீபமாக அவரது கப்பல் சென்றுகொண்டிருந்த சமயம் கப்பல் இரண்டாகப் பிளந்து கடலினுள் மூழ்கியது. திரு. க. குணசுந்தரம் உட்பட அனைவரும் கடலினுள் மூழ்கடிக்கப்பட்டார்கள்.

ஏர்லக்கட்டு முதலாளிக்குச் சொந்தமான ''சீதாலட்சுமி'' என்னும் கப்பல் கல்கத்தாவுக்குச் சமீபமாக கடலில் மூழ்கியது. கப்பல் தண்டையல் பொன்னுச்சாமி உட்பட அனைத்து மாலுமிகளும் கடலுடன் சங்கமமானார்கள்

வல்வெட்டித்துறை மேத்திரிமாரினால் கட்டப்பட்ட, வல்வெட்டித்துறை முதலாளிமாருக்குச் சொந்தமான, வல்வெட்டித்துறை மாலுமிகளினால் செலுத்தப்பட்ட கப்பல்கள் இந்தியாவின் அதிராம் பட்டினம் காக்கிநாடா கல்கத்தா அந்தமான் நாகப்பட்டினம், காரைக்கால், கடலூர், புதுச்சேரி முத்துப் பேட்டை, கொல்லம் மங்களூர் சிட்டாகொங், ரங்கூன், பினாங்கு பர்மா, மோல் மீன், நிக்கோபார், ஜாவா, சுமத்திரா, போர்னியோ, சிங்கப்பூர் போன்ற நாடுகளுடன் சேவையில் ஈடுபட்டிருந்தன. இப்படியாகத் திரைகடலோடித் திரவியம் தேடச்சென்ற வல்வை வாசிகளின் கப்பலெல்லாம் முத்துமாரி அம்மன் கோவில் திருவிழா ஆரம்பித்து விட்டால் வல்வை திரும்பிவருவதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தன.

இந்தியாவின் வ. உ. சிதம்பரம் என்ற தமிழர் ஆங்கிலேயருக்குச் சொந்தமான கப்பலை விலை கொடுத்து வாங்கினார். வல்வை மேத்திரிமாரினால் கட்டப்பட்ட ''அன்னபூரணி'' என்ற பாய்க்கப்பலை அமெரிக்கர் ஒருவர் விலைகொடுத்து வாங்கி வல்வை மாலுமிகளைக்கொண்டு அமெரிக்காவரை கொண்டு சென்றாரென்றால் எம்மவர்களின் சாதனையை என்னவென்று எழுதுவது. அன்னபூரணி அமெரிக்கா சென்றடைந்ததும் ''Boston Globe'' என்ற பத்திரிகை ''இலங்கைத் தீவின் உத்தியோகப் பற்றற்ற முதற்தூதுவர்கள் அமெரிக்க நாட்டுக்கு வந்துள்ளார்கள். வல்வெட்டித்துறையில் இருந்து அமெரிக்காவரை கப்பலோட்டி வந்த இவர்கள் இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள்'' எனச் செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால் இந்த வரலாற்றுச்சம்பவம் இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் முழு இருட்டடிப்புச் செய்யப்பட்டது. ○

---

நூல்களை விட நுட்பமான நோக்குதல், ஆட்களைவிட அனுபவம். இவையே கல்வி புகட்டும் தலையாய ஆசான்கள்.

— ஏமாஸ் பிரான்சன் ஆல்காட்

காரியம் ஆகுமட்டும் காலைப்பிடிப்பவன் காரியம் ஆனபின் குடுமியைப் பிடிப்பான்.

— தமிழ்ப் பழமொழி

# எங்கள் சிதம்பரா

இமிழ் திரைப் பரவை வளைவுறு புவிக்கண்
இலகுறு வல்வையாம் பதியில்
உமிழ் சுடர்ப் பரிதி எனஒளி பரப்பி உமாபதி
தோழனின் னருளால்
அமிழ்தினைப் பொருவு தமிழ் மொழி அதனோ
டாங்கிலம் வடமொழி இவையும்
தமிழ் உறப் பரப்பு ''சிதம்பரன்'' எனவே தலைமிசை
ஏற்றிநாம் தொழுவோம்
இதந்தரு படியிற் பசுபதி திருத்தாள் இதயமேல்
இருத்திய மேலோன்
நிதம் புகழ் தமிழிற் குறுமுனி நிகர்த்தோன் நிறையருள்
ஆண்மையும் நிறைந்தோன்
சிதம்பரப் பிள்ளை நினைவினில் தோன்றிச் சிவநெறி
ஞானமும் வளர்க்கும்
சிதம்பரப் பெயர்சேர் கழகமேற் பிறந்த ''சிதம்பரன்''
வாழிய மாதோ.

அலைகடல் அருகே அமரனின் பெயரால்
அரும்பதி தனக்கே அணியாய்த் திகழ்ந்து
அன்பும் அறனும் அருளொடு பொதிந்து
ஆயகலைகள் அனைத்தும் தந்து
பண்பொடு பாலர் பயிலச் செய்து
வற்றா வளங்கள் பலவும் ஊட்டி
வல்வைப் புகழை வானெலாம் பரப்பும்
பல்கலைச் ''சிதம்பரா'' பாரில் என்றும்
சிந்தாமணியாய்த் திகழவென்று
சிரமே தாழ்த்தி வணங்குதும் யாமே.

# கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி




சமீபத்தில் கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய வீரர் களுடன் முன்னாள் அதிபர் திரு. சி. தங்கராஜா, ஆசிரியர் திரு. இ. ஸ்ரீ நடராஜா ஆகியோர்.



சமீபத்தில் கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த இல்ல விளையாட்டு நிகழ்வில் விநோத உடைப்போட்டியில் கல்லூரி மாணவன்.

டாக்டர். க. மயிலேறும்பெருமாள்
மாவட்ட வைத்திய அதிகாரி,
வல்வெட்டித்துறை.

# சர்க்கரை வியாதி (Diabetes Mellitus)

சர்க்கரை வியாதி, நீரிழிவு நோய், இனிப்பு நீர் நோய், சலரோகம் எனப் பல பெயர்களாலும் அழைக்கப்படும். இந் நோய் மனிதனுக்கு கெடுதியினை விளைவிக்கும் நோய்களில் ஒன்றாகும். இந் நோயில் இருவகை உண்டு. ஒன்று ''டயாபிடிஸ் மெலிட்டஸ்'' (Diabetes Mellitus) இன்னொன்று 'டயாபிடிஸ் இன்சிபிடியஸ்' (Diabetes Insipidius) சர்க்கரை வியாதி என்பது சர்க்கரை சேர்ந்த திரவம் நமது உடலில் கலந்து செல்கிறது என்பதே அர்த்தம். நாம் உண்ணும் உணவில் உள்ள கொழுப்பு, புரதச் சத்துக்கள், மாவுப் பொருட்கள் முதலானவை சேமிக்கப்பட்டும், செரிக்கப்பட்டும் ஆற்றலாய் வெளிப்பட எமது உடலில் உள்ள ஹார்மோன்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. நமது உடலிலுள்ள சர்க்கரைச் சத்தை சரியான அளவில் கட்டுப்படுத்திவைக்கவும் அதைச் சரியானபடி உபயோகிக்கவும் ''இன்சுலின்'' ஹார்மோன் தேவைப்படுகிறது. நமது உடலிலுள்ள கணையம் என்னும் சுரப்பி இந்த இன்சுலினை உற்பத்தி செய்கிறது. இந்த இன்சுலின் சுரப்பது தடைப்பட்டாலோ, குறைவாகச் சுரக்கப்பட்டாலோ இரத்தத்தில் சர்க்கரையின் (Glucose) அளவு மிகைப்படுகிறது. இரத்தத்தில் சர்க்கரையின் அளவு வெறும் வயிற்றுடன் இருக்கும் போது 100மி. கி. இரத்தத்தில் 140 - 160 மில்லிகிறாம் இயல்பானது. 180 மி.கி. பரவாயில்லை. 180 மி.கி. இற்கு மேல் இருந்தால் சர்க்கரையின் அளவு அதிகமாகிவிட்டது என்று அர்த்தம். நீரிழிவின் ஆரம்பநிலையில் இரத்தத்தில் மட்டும் சர்க்கரை மிகுந்து காணப்படும். இரத்தச்சர்க்கரை அளவு 180 மி. கிறாமுக்கும் அதிகமானால் அது சிறுநீருடன் வீணாகிறது.

சர்க்கரையானது நாம் உட்கொள்ளும் உணவிலிருந்து நன்றாகச் செமிபாடடைந்த பின் கிடைக்கக்கூடிய கடைசிப் பொருளாகும். இது இரத்தத்தில் கலந்து உடலில் உள்ள எல்லா உறுப்புக்களுக்கும், பாகங்களுக்கும், அணுக்களுக்கும் உணவாகச் சென்றடைகின்றது. இந்தச் சர்க்கரைதான் சக்தியாக மாற்றப்பட்டு செல் அணுக்களால் அதன் தன் இயக்கத்திற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. இந்தச் சர்க்கரையானது செல் அணுக்களால் உபயோகிக்கப்படவில்லை யெனில் இரத்தத்தில் அதன் அளவு அதிகமாகிறது. இன்சுலின் சுரப்பது தடைப்படுவதால் நீரிழிவு நோய் ஏற்படலாம். இன்சுலின் சார்ந்த நீரிழிவு நோய்களுக்கு இன்சுலின் ஊசிதேவை. இரண்டாவது வகை 40 வயதுக்கு மேற்பட்டோருக்கும் வயது முதிர்ந்த நிலையிலும் வரலாம். பெண்களுக்கு வருவதற்கும் வாய்ப்புகள் அதிகம். பருமனான உடலமைப்பு உள்ளவர்களிடமும், உடல் உழைப்பு இல்லாதவர்களிடமும் நீரிழிவு நோய் அதிகமாகக் காணப்படுகிறது. சிறுவயதில் கூகைக்கட்டு (Mumps) என்ற நோய் வந்தவர்களுக்கும்.

சிலவகை மருந்துகளின் பின்விளைவுகளாலும், சில இரசாயனப் பொருட்கள் கலந்த உணவு வகைகளாலும், அடிக்கடி குழந்தைகளைப் பெற்றெடுப்பதினாலும் பெருந்தீனி இனிப்புப் பண்டங்களை உண்பதினாலும் நீரிழிவு நோய் தோன்றுகிறது. ஆஸ்துமா நோய்ச் சிகிச்சைகளுக்குக் கொடுக்கப்படும் ஸ்டீராய்டு (Steriods) மருந்துகளாலும் உடல் நலத்துடன் இருப்பவர்களுக்கு நீரிழிவு வர வாய்ப்புண்டு. இரத்த அழுத்தம், தைரோயிட் சுரப்பிக் கோளாறுகள் போன்ற நோய்களுக்குப் பாவிக்கப்படும் சிலவகை ஆங்கில மருந்துகளை எடுக்கும் போதும் அவை இரத்தத்தில் சர்க்கரையின் அளவை அதிகப்படுத்தி நீரிழிவு நோயை உண்டாக்கலாம். சிறு குழந்தைகளுக்கு உடல் பருமனாக வர வேண்டுமென்ற நோக்கில் சிலவகை மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. இதனாலும் நீரிழிவு நோய் வர வாய்ப்புண்டு. அதிக பீதி, பதற்றம், தீராத மனக்கவலை, மன அழுத்தம் (Stress), மன உளைச்சல் (Strain) போன்ற காரணங்களினாலும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமாகி நீரிழிவு உண்டாகின்றது. கணையத்தில் (Pancreas) கல் உண்டாவதினாலும் ஒருவகை நீரிழிவு வருகிறது. இது பரம்பரையாக வருவதில்லை. இந்த நோய் ஏற்பட்டவர்களுக்குப் பிறக்கும் குழந்தை குண்டாக இருப்பதுடன் பிரசவமும் சிரமமாகலாம். கருவுற்றிருக்கும் போதே நீரிழிவு உள்ளதா என்பதைப் பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும். தாய்க்கு நீரிழிவு இருந்தால் கருச்சிதைவு ஏற்படவும் அன்றேல் ஊனமுற்ற குழந்தை பிறக்கவும் வாய்ப்புண்டு. பிறக்கும் குழந்தையின் எடை 4 கிலோவுக்கும் அதிகமாகவும் இருக்கும். குழந்தை இயல்பாகப் பிறப்பதற்கும் கடினமேற்படுவதுடன் சிலருக்கு அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையை வெளியே எடுக்கவும் வேண்டி ஏற்படும்.

எமது உடம்பில் குளுக்கோகான், அட்ரினலின் என்ற வேறோர் இரண்டு ஹார்மோன்கள் சுரக்கப்படுகின்றன. இரத்தத்தில் சர்க்கரையின் அளவுகுறையும்போது இரண்டு ஹார்மோன்களில் குளுக்கோகன் என்ற ஹார்மோன் ஈரலில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். கிளைக்கோஜனை குளுக்கோசாக மாற்றி இரத்தத்தில் சர்க்கரையின் அளவை உயர்த்துகிறது. அடுத்தபடியாக எமது உடம்பில் தசைநார்களில் (Muscles) சேமித்து வைக்கப்பட்டிருக்கும் கிளைக்கோஜனை குளுக்கோசாக மாற்றி இரத்தத்தில் சர்க்கரையின் அளவை உயரச் செய்யும் வேலையை அட்ரினலின் என்ற ஹார்மோன் செய்து வருகிறது. தீராத மனக்கவலை, மன அழுத்தம் மனஉளைச்சல் போன்ற செயல்களை மேற்சொன்ன இரண்டு உஹார்மோன்களும் தேவைக்கு மீறி செயற்படுவதால் ஒருவர் உணவு உண்ணா நிலையிலும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு உயர்ந்து விடும் நிலை ஏற்படுகிறது. நடைப்பயிற்சியின் மூலம் மேற்சொன்ன இரண்டு ஹார்மோன் சுரப்பிகளின் இயக்கங்களைக் கட்டுப்படுத்தி இரத்தத்தில் சர்க்கரையின் அளவை தேவைக்கு மேல் உயர விடாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

நீரிழிவு நிலையைக் கணிப்பிடுவதற்கு மிகவும் சிறந்த முறை குருதிக்குளுக்கோசின் அளவை (Blood Glucose) கணிப்பிடுவது தான். இதனை அடிக்கடி கணிப்பதனால் அதற்கு ஏற்ற வகையில் மருந்துகளின் அளவில் மாற்றம் செய்து கொள்ளலாம். இதன் பிரகாரம் குருதியில் உள்ள குளுக்கோசின் அளவு நீரிழிவு நோய் இல்லாதவர்களின் அளவிற்குக் கொண்டுவரப்படுகிறது. இல்லையேல் நீரிழிவு நோயாளியின் கண்கள், சிறு நீரகம், இதயம் போன்ற பகுதிகள் பாதிப்படைய நேரிடும். சிறு நீரை மட்டும் பரிசோதனை செய்துகொள்வதில் கூடிய பலன் கிட்டாது. இரத்தத்தினையும் பரிசோதனை செய்வதே சிறந்தது. வசதியுள்ளவர்கள் (Gluco meter) என்ற சிறிய கருவியின் உதவியுடன் தாங்களாகவே வீட்டில் இதனைச் செய்து கொள்ளலாம். நோய்க்காக உப

யோகிக்கும் இன்சுலின் அல்லது மாத்திரையின் வகை, பெயர், அளவு ஆகியவற்றைத் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும். குறிப்பிடப்பட்ட மருந்துகளைப் பாவித்த பின் எவ்வளவு நேரத்தில் அதன் பலனைத் தரத் தொடங்குகிறது எவ்வளவு நேரத்தில் அதன் வேலைத்திறன் உச்சக் கட்டத்தில் இருக்கிறது போன்ற விபரங்களை அனுபவத்தின் மூலம் தெரிந்து அவற்றை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

குருதியில் குளுக்கோசின் அளவு மருந்து உட்கொள்வதன் மூலம் அல்லது ஊசியின் மூலம் மிகக் குறைந்தால் கடும்பசி, வியர்வை, படபடப்பு, தள்ளாட்டம், சோர்வு போன்ற அறிகுறிகள் தோன்றும். அப்படி ஏற்படும் சம்பவங்களில் சிறிது இனிப்பை உட்கொண்டால் குருதிக் குளுக்கோசின் அளவு சீரடையும். குருதிக் குளுக்கோசின் அளவு மிகக் குறைந்தால் மயக்கம் கூட ஏற்பட வாய்ப்புண்டு. இச்சந்தர்ப்பத்தில் உடனடியாக நாளத்தினூடாக ஊசிமூலம் குளுக்கோஸ் செலுத்தவேண்டி வரும். காய்ச்சல், இருமல், வயிற்றோட்டம் போன்ற இதர நோய்கள் ஏற்பட்டாலும்கூடமருந்தின் அளவைக் குறைக்கக் கூடாது. ஏற்பட்டிருக்கும் இதர நோயின் காரணமாக உணவு உட்கொள்ள முடியாத போதிலும் வழமையான அளவு மருந்தை எடுப்பதே நல்லது. குருதியில் குளுக்கோஸ் சரியான அளவில் இருந்தால் நீரிழிவால் ஏற்படும் பக்க விளைவுகளைத் தடுக்க முடியும். நீரிழிவு கட்டுப்பாட்டில் இல்லாவிட்டால் கண்பார்வைக் குறைவு ஏற்பட வாய்ப்புண்டு. நீண்ட கால நீரிழிவு நோயாளிகளில் பலர் இரத்த அழுத்தம் உடையவர்களாக இருக்கிறார்கள். கட்டுப்பாடில்லாத இந்நோயால் இரத்தக் குழாய்கள் சுருங்கிவிடுவதும் இதற்கு ஒரு காரணமாகும். சிலருக்கு பாதங்களில் விறைப்புத் தன்மை ஏற்படுவதுடன் இரத்தச் சுற்றோட்டமும் குறைகிறது. இதனால் கால்களின் உணர்வு குறைவடைகின்றது. கால்களில் இலகுவில் காயங்கள் ஏற்படுவதுடன் வலி உணர்வு தெரியாமையினால் அவை பெருகி அழுகல் (Gangrene) ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் அதிகமாகின்றன. இதன் காரணமாக விரலையோ அன்றிக் காலையோ சத்திரசிகிச்சை மூலம் அகற்ற வேண்டிய நிலை ஏற்படும். கால்களை கண்ணைப்போலப் பாதுகாப்பதுடன் எந்நேரமும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இறுக்கமான பாதணிகளை அணிவதைத் தவிர்ப்பதுடன் புதிய பாதணிகளை அவதானத்துடனும் அணிய வேண்டும். அத்தோடு கால்களுக்கு இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்வதற்காக நடைப்பயிற்சி அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டும். குறைந்தபட்சம் 45 – 60 நிமிடங்கள் வரை வேகமாக காலையிலும், மாலையிலும் நடைப்பயிற்சி செய்ய வேண்டும். இந்த நடைப்பயிற்சியினை மேற்கொள்வதால் கால்களுக்கு இரத்த ஓட்டம் அதிகரிக்கச் செய்வது மட்டுமல்லாமல் நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன் உபயோகிக்கும் மருந்தின் அளவையும் குறைக்கலாம்.

நீரிழிவு நோயாளர்கள் கட்டுப்பாடான உணவு முறை, தகுந்த சிகிச்சை முறை, முறையான உடற்பயிற்சி, கவலை இல்லாத மனநிலை, புகைபிடிப்பதைத் தவிர்த்தல் ஆகியவற்றின் மூலம் இந்நோயிலிருந்து முழுமையாக விடுபடலாம், அலட்சியமாக இருந்தால் நீரிழிவு பேரழிவைத் தந்துவிடும்.

நீரிழிவு நோயாளிகள் சுண்ணாம்புச் சத்துள்ள உணவுவகைகளையும், நார்ச் சத்துள்ள உணவுப் பொருள்களையும் முக்கிய உணவாகக் கொள்ள வேண்டும். இவர்களுக்கு இயற்கையாகவே இன்சுலின் சுரக்கப்படுவதற்காக மாங்கனீஸ் தாது அதிகமாகஉள்ள பச்சைப்பட்டாணி, காரட், மீன், ஈரல், வாழைப்பழம், கீரைவகைகள் உதவுகின்றன. நீரிழிவு நோய் காரணமாகக் கண்பார்வை பாதிக்கப்படுவதனால் விற்றமின் ''ஏ'' யுள்ள உணவு வகை பால், பீன்ஸ் போன்றவை இன்றியமையாதவை.

*கலாநிதி சபா. ஜெயராசா*
முதுநிலை விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்,

# அறிகை ஒவ்வாமைக் கோட்பாடு ஒரு மீள்நோக்கு
# Cognitive Dissonance Theory

சமூக உளவியற் புலத்தில் மனித உளப்பாங்கின் மாற்றங்கள் பற்றிய பகுப்பாய்வில் ''அறிகை ஒவ்வாமை'' என்பது தனித்துவம் பொருந்திய ஒரு கோட்பாடாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. லியோன் பெஸ்ரின்யர் (LEON FESTINGER) உருவாக்கிய இக்கோட்பாடு சமகால மனிதரின் மனமாற்றங்களை விளக்குவதற்கும் விளங்கிக்கொள்வதற்குமுரிய பரிணாமங்களைக் கொண்டுள்ளது.

*அறிகை ஒவ்வாமைக் கோட்பாட்டின் அடிப்படை எடுகோள்கள் வருமாறு-*

அ) மனிதமனம் தொடர் உறுதிக்குலைவை (INCONSISTENCY) அனுமதிப்பதில்லை-அதாவது சீர்மை பாதிக்கப்படுதல் தவிர்த்துக் கொள்ளப்படுகின்றது.

ஆ) அறிகை தொடர்பான தொடர் உறுதிக்குலைவை நீக்குவதற்கு அல்லது குறைப்பதற்கு ஒவ்வொருவரும் முயல்கின்றனர்.

இ) பலவகைப்பட்ட தொடர் உறுதிக்குலைவுகள் மனிதரிடத்தே காணப்படுகின்றன. அதாவது பலவகைப்பட்ட அறிகைப் பொருத்தப்பாடின்மைகள் மனிதரிடத்து விரவியுள்ளன.

ஒருவரிடத்துக் காணப்படும் உளவியல் சார்ந்த தொடர் உறுதிக்குலைவு பற்றி அறிகை ஒவ்வாமைக் கோட்பாடு கவனம் செலுத்துகின்றது. ஓர் அறிகைக் கூறு இன்னோர் அறிகைக் கூறுடன் முரண்பாடு கொள்ளுமிடத்து அறிகை ஒவ்வாமை தோன்றுகிறது.

*அறிகை ஒவ்வாமை பின்வருவனவற்றை அடியொற்றி எழுகின்றது.*

அ) கருத்துச் சார்ந்த ஒவ்வாமை

ஆ) நம்பிக்கை சார்ந்த ஒவ்வாமை

இ) விருப்பு வெறுப்பு சார்ந்த ஒவ்வாமை ஏற்க முடியாதிருக்கும் நிலை, பொருத்தமற்றதாக இருக்கும் நிலை என்ற உளநிலைகள் மனிதரால் அனுபவிக்கப்படுகின்றன.

*அறிகை ஒவ்வாமை சார்ந்தசில நடைமுறை எடுத்துக்காட்டுக்கள் வருமாறு.*

அ) ''எனக்குத் தேர்வுகளில் நம்பிக்கை இல்லை, ஆனாலும் தேர்வில் பங்கு கொள்ள வேண்டியுள்ளது.''

ஆ) ''எனக்கு மூடநம்பிக்கைகளில் நம்பிக்கையில்லை, ஆனாலும் நான்

வெளிக்கிளம்பும் போது யாராவது பின் நின்று கூப்பிட்டால் பயணத்தை நிறுத்திக் கொள்வேன்.''

இ) ''நான் புகை பிடிக்கிறேன். ஆனால் புகைபிடித்தல் தவறானது என்று எனக்குத் தெரியும்.

எப்பொழுது ஒவ்வாமை தோன்றுகிறது? கருத்து உள்வாங்கலின் முக்கியத்துவம் என்ன? இணங்காநிலை ஏன் ஏற்படுகின்றது? முதலாம் வினாக்கள் அறிகை ஒவ்வாமை தொடர்பான ஆய்வில் முன்னெடுக்கப்படுதலுண்டு.

ஒவ்வாமை வலுக்கள் அல்லது ஒவ்வாமை விழுக்காடுகள் கூடுதலாக இருக்கும் பொழுது அறிகை ஒவ்வாமை உளவியல் சார்ந்த தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. உள்வாங்கிக் கருத்தமைவு செய்ய முடியாத இடர் அறிகை ஒவ்வாமையின் பரிணாமங்களுள் ஒன்றாகக் குறிப்பிடப்படுகின்றது.

*அறிகை ஒவ்வாமையின் போது எதிர்க்கருத்தை மறுதலிக்கும் நேர்க் கருத்துக்கள் பல ஒருவரால் முன்னெடுக்கப்படும் - எடுத்துக்காட்டு ஒன்று வருமாறு.*

அ) நான் புகைபிடிக்கிறேன், (எதிர்க் கருத்து)

ஆ) நான் பொது இடங்களில் புகை பிடிப்பதில்லை (நேர்க் கருத்து)

இ) நான் தாய் தந்தையர் முன் புகை பிடிப்பதில்லை. (நேர்க்கருத்து)

ஈ) நான் மாணவர்முன் புகை பிடிப்ப தில்லை. (நேர்க்கருத்து)

இவ்வாறாகப் பல நேர்க்கருத்துக்கள் கிளர்ந்தெழுதலுண்டு.

ஒவ்வாமையைக் கண்டறிவதில் அறிகை மேற்பதிகை (COGNITIVE OVER LAP) சிறப்பான காரணியாகக் கருதப்படுகின்றது. ஒவ்வோர் அறிகையின் மீதும் பதிகின்ற அதனோடு தொடர்புடைய தொழிற்படும் அனுபவங்கள் ''அறிகை மேற்பதிகை'' எனப்படும். ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய செயல்களில் அறிகை மேற்பதிகை கூடுதலாகக் காணப்படும். எடுத்துக் காட்டாக பிரயோகக கணிதம், பௌதிகவியல், என்ற இரண்டு பாடங்களில் ஒன்றைத் தெரிவு செய்யும் பொழுது அப்பாடங்களிடையே காணப்படும் அறிகை மேற்பதிகை காரணமாக ஒவ்வாமை என்பது வலிதாக எழ மாட்டாது. ஆனால் முன் அனுபவம் இன்றி தொடர்பற்ற பாடம் ஒன்றைத் தெரிவு செய்து கற்கும்படி ஒரு மாணவர் வற்புறுத்தப்படும் பொழுது அறிகை ஒவ்வாமை வளர்ச்சியடைகின்றது. இதற்கு மேலும் ஓர் எடுத்துக் காட்டைக் குறிப்பிடலாம். விஞ்ஞான பட்டதாரிகள் அரசாங்கத்தின் பொதுத் தேர்வுகளில் கலைப்பாடங்களை எதிர் கொள்ளும் பொழுது அறிகை ஒவ்வாமையை அனுபவிக்கின்றனர். அதாவது விஞ்ஞான பாடங்கள் மீது கலைப்பாடங்கள் மேற்பதிகையை ஏற்படுத்துவதில்லை.

நாளாந்த வாழ்க்கையிலே தீர்மானங்களை மேற்கொள்ளும் பொழுதும் அறிகை ஒவ்வாமை தோன்றுதல் உண்டு. பேச்சு வழக்கில் இது ''மனதுக்குப் பிடிக்காத தீர்மானம்'' எனப்படும். மனிதர்களது அக நடத்தைக்கும் புற நடத்தைக்குமிடையே காணப்படும் முரண்பாடுகளுக்கும் அறிகை ஒவ்வாமைக்குமிடையே நேரடியான தொடர்புகள் உண்டு. பொதுவாகப், புறத் தாக்கங்களால் உள்ளார்ந்த அறிகைக் கோலம் மாற்றியமைக்கப்படும் என்று கொள்ளப்படுகின்றது.

அறிகை ஒவ்வாமை தோன்றும் பொழுது அதைத் தணிப்பதற்குரிய தேவையும் எழுகின்றது. அதனுடன் தொடர்பு

டைய பல்வேறு நடத்தைக் கோலங்கள் வளர்ச்சியடையத் தொடங்கும். அறிகை ஒவ்வாமைத் தணிப்பு நடவடிக்கைகள் எவ்வாறு அமைகின்றன என்பதைப் பகுத்து ஆராயும் பொழுது அறிகை ஒவ்வாமையின் இயல்பையும் செறிவையும் அறிந்து கொள்ள முடியும்.

ஒருவரிடத்தே அறிகை ஒவ்வாமைத் தணிப்பு நடவடிக்கைகள் பொதுவாகப் பின்வரும் வழிகளிலே நடைபெறும் என்பதனைச் சமூக உளவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அ) மேற்கொண்ட தீர்மானங்களை மீளாய்வு செய்தலும், மறுதலித்தலும்.

ஆ) அறிகை ஒவ்வாமை ஏற்படுத்திய நிலவரங்களின் முக்கியத்துவத்தைத் தாழ்த்துதல்.

இ) மேற்பதியும் அறிகை மூலகங்களைக் கூட்டுதல்.

ஈ) முரண்பாட்டு வலுக்களைச் சமப்படுத்துவதற்கான சேர்மானங்களைக்கூட்டுதல்.

கற்கை நெறித் தெரிவு, தொழிற் தெரிவு, இருப்பிடத் தெரிவு, இல்வாழ்க்கைத்தெரிவு,கருத்தியல தெரிவு போன்றவற்றை அடியொற்றிய அறிகை ஒவ்வாமை ஒருவரிடத்தில் ஏற்படலாம். இந் நிலையில் அவரது நடத்தை எவ்வாறு அமையலாம் எனபதறகு சில எடுத்துக்காட்டுகள் வருமாறு.

அ) தெரிவைத் தற்காலிகமாகக் கருதுதல்.

ஆ) விரும்பிய ஒரு தெரிவுக்குப் போகலாம் என்று உள்ளத்தைச் சாந்தப் படுத்துதல்.

இ) மாற்றுவழிகளை உசாவுதல்.

ஈ) ஒவ்வாமையோடிணைந்த நேர்ப்பண்புகளை அல்லது எதிர்ப் பண்புகளை வளர்த்துக் கொள்ளல்.

உ) இடர்களைத்தரும் தாக்கங் களைக் குறைத்தல் அல்லது நீக்குதல்.

அ) தாமாக விரும்பி ஒன்றைத் தெரிவு செய்தல்,

ஆ) திணிப்புக்கு உள்ளாகித் தெரிவு செய்தல் ஆகிய இரண்டு தெரிவுகளுக்குமுரிய அறிகை ஒவ்வாமை எவ்வாறு வேறுபடுகின்றது என்பது பற்றியும் உளவியலாளர் ஆராய்ந்துள்ளனர். ''திணிப்பு'' என்பது ஒவ்வாமையிலே பெருந் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். திணிப்பை மேற்கொள்பவர் ஒவ்வாமையைக் குறைப்பதற்குரிய கவர்ச்சிகளை முன்னெடுத்தல் பொதுவான ஒரு தோற்றப்பாடாகும். இதனால் திணிப்பை ஏற்பவர்களுக்கு விருதுகளும் சலுகைகளும் வழங்கப்படுதல் உண்டு.

திணிப்பின் பொழுது திணிக்கப்படாத பொருள் மீது கவர்ச்சி வீழ்ச்சியை அல்லது வெறுப்பை ஏற்படுத்துதலும் உண்டு. உதாரணமாக பொப் இசையைத் திணிப்பவர் சாஸ்திரிய இசை தேக்கமடைந்து விட்டது என்று கவர்ச்சிக் குறைப்பை மேற் கொள்ளலாம்.

ஒவ்வாமைக்கும் அதன் தணிப்பு நடவடிக்கைக்குமிடையே நேர்த் தொடர்பு உண்டு. அதாவது ஒவ்வாமையின் செறிவு கூடுதலாக இருக்கும் பொழுது அதன் தணிப்புச் செயலும் கூடுதலாக இருக்கும். அதன் செறிவு குறைவடையும் பொழுது இந்தச்செயல் முறை நிகழாவிடில் ஒருவரது மனநலம் பாதிப்புக்கு உள்ளாகும்.

அறிகை ஒவ்வாமையோடு தொடர்புடைய பிறிதொரு தோற்றப்பாடு எதிர் உளப்பாங்கு நடத்தை (COUNTER ATTITUDINAL BEHAVIOUR) ஆகும். நம்பிக்கைக்குரிய உரையாடல்களும், உரையாடுவோரும் நேர் உளப்பாங்கு நடத்தைக்கு உதவலாம். ஆனால் தொடர்பு கொள்வோரின் பொருத்தமற்ற நடத்தைகள் எதிர் உளப்பாங்கை வளர்க்கும். அந்நிலையில் அறிகை ஒவ்வாமை மேலும் சிக்கலடையும். தமிழரது பாரம்பரிய உளவியலில் இவ்வகை எதிர் உளப்பாங்கை வளர்ப்போர் ''சபை குழப்பிகள்'' ''கல்லுக்குத்திகள்'' என அழைக்கப்பட்டனர்.

எதிர்ப் பண்புள்ள தொடர் பாடல் செய்வோர் நேர்ப்பண்புள்ள தொடர் பாடல் செய்வோர் என்ற இருசாராரும் உருவாக்கும் தாக்கங்களை ஆராய்ந்த பொழுது அறிகை ஒவ்வாமையைத் தீர்ப்பதில் நேர்ப் பண்புள்ள தொடர் பாடலின் ஒப்பீட்டளவு முககியத்துவம் சுட்டிக் காட்டப்படுகின்றது. (EBBESEN, 1970. P .73)

***சமூக உளவியலில் ஒரு கோட்பாட்டின் முக்கியத்துவம் பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மாணிக்கப் படுகின்றன.***

1) அது புதிய புலக் காட்சிக்கும் ஆய்வு முன்னெடுப்புக்கும் இட்டுச் செல்லக் கூடிய தாயிருத்தல் வேண்டும்.

2) அக் கோட்பாட்டைப் பொதுமையாக்கக் கூடியதும், பிரயோகிக்கக் கூடியதுமான திறன் இருந்தல் வேண்டும்.

3) மனித நடத்தைகளை எதிர்வு கூறக் கூடிய திறன் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

4) தேவையற்ற அல்லது மேலோட்டமான எண்ணக் கருக்களுடன் தொடர்பு கொள்ளாதிருத்தல் வேண்டும். இதனை ஆய்வாளர்கள் ''நொதுமலகல்வு'' என்று குறிப்பிடுவர். (PARSIMONY)

5) கோட்பாட்டை அடியொற்றிய பரிசோதனைகளையும் மதிப்பீடுகளையும் செய்யக் கூடியதாக இருத்தல்.

மேற் கூறிய கட்டளையங்களை அடியொற்றி அறிகை ஒவ்வாமைக் கோட்பாட்டை நோக்கும் பொழுது அது பல சமூக உளவியல் பரிமாணங்களைத் தருதல் குறிப்பிடத்தக்கது. கணிதவியற் சூத்திரங்களைப் பயன்படுத்தி அறிகை ஒவ்வாமையின் தர அளவுகளை அளவீடு செய்யும் முயற்சிகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளன. மரபு வழிப்பட்ட உளப்பாங்கு ஆய்வுகளில் இருந்து விடுபடும் புதிய அணுகு முறைகளை அறிகை ஒவ்வாமைக் கோட்பாடு முன்னெடுத்துள்ளது.

நடத்தை மாற்றங்களையும் மனோபாவ மாற்றங்களையும் விளக்கிக் கொள்வதற்குரிய புதிய முன்மொழிவை இக் கோட்பாடு தந்துள்ளது. நடத்தை மாற்றங்களுக்கும் உளப்பாங்கு மாற்றங்களுக்குமுள்ள தொடர்புகளை இக்கோட்பாடு இணைத்துக் காட்டியுள்ளது. சிறப்பாக ''எதிர் உளப்பாங்கு நடத்தை'' ''சுதந்திரமான தெரிவுகள்'' ''நியாயப்படுத்தலுக்கான நடவடிக்கைகள்'' ''ஒவ்வாமை தணிப்பு நடவடிக்கைகள்'' ''தொடர் பாடற் செல்வாக்குகள்'' முதலிய எண்ணக் கருக்கள் மீது இக்கோட்பாடு ஆழ்ந்த கவனம் செலுத்தியுள்ளது.

சமூக உளவியலில் இது புதிய புலக் காட்சிகளைத் தோற்றுவித்தாலும், சமூக இயங்கியல், சமூக வாக்கம், சமூக முரண்பாட்டு வலுக்கள், உற்பத்தி உறவு முறைமையின் தொடர்புகள், சமூக சுரண்டற் கோலங்கள் முதலாம் துறைகளை இக்கோட்பாடு பொருத்தமாக உள்வாங்காதிருக்கும் மட்டுப்பாடுகளையும் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

இத்தகைய முரண்பாடுகளிருப்பினும், இக் கோட்பாடு சாராம்சமாகப் பின்வரும் சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது.

1) தமது நம்பிக்கைகள், அறிகைகள் தொடர்பாகஎழும் சம நிலைப் பிறழ்வுகள், முரண்பாடுகள் ஒருவரிடத்தே உணர்வு நிலைப்பட்டதாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

2) அவ்வாறான பிறழ்வு தொடர்பான புலக்காட்சி தோன்றும் பொழுது, அவற்றைச் சீர் செய்வதற்குரிய ஊக்கலும், உபாயங்களும் ஒருவரிடத்தே தோன்றுகின்றன.

3) புதிய விசைகளைத் தமது அறிகை அமைப்புக்கு ஏற்றவாறு ஒருவர் மாற்றியமைக்க முற்படலாம் அல்லது தமது நடத்தைகளை மாற்றியமைக்க முற்படலாம்.

4) தமது நடத்தைகளை ஒருவர் நியாயப் படுத்தலும், அதீத நியாயப்படுத்தல் விளைவுகளை ஏற்படுத்தலும், தோன்றுகின்றன.

நம்பிக்கைகளும், உளப்பாங்குகளும் தொடர்பான சமூக உளவியல் ஆய்வுகளை கோட்பாட்டை அடியொற்றி மேலும் முன்னெடுக்கலாம்.

## REFERENCES


1. Bandura, A and Walters, R. H. Social Learning and Personality Development, New York, Holt, Rinehart and Winston, 1963.

2. Festinger, L. A. Theory of Cognitive Dissonance, Illinois, Row Peterson, 1957.

3. Insko, C. I, Theories of Attitude Change, New York, Appleton Century Crofts, 1967.

4. Lena, Hugh. F and Others. Contemporary Issues in Society, New York, Mccraw Hill, Inc, 1992.

5. Willim D. Crano and Lawrence A Messe, Social Psychology, Home Wood Dorsey Press, 1982.

6. Zimbardo Ebbesen, Influencing Attitudes and Changing Behaviour, London, Addison - Wesley Publishing Company, 1970.

## கரப்பந்தாட்டக் குழு 19 வயதின் கீழ்



இருப்பவர்கள்: திரு. செ. யோகச்சந்திரன் (அதிபர்), செல்வி கி. தேவகி(உடற்கல்வி ஆசிரியர்), வெ. இராஜநந்தன்(தலைவன்), செல்வி லூ ஞா. மாசலீன்பிள்ளை (உப அதிபர்), திரு. மு. இரவீந்திரன்(விளையாட்டுப் பொறுப்பாசிரியர்). நிற்பவர்கள்: த. சுரேஸ்குமார், க. சுகிர்தரன், த. சுதர்சன், செ. மோகனதாஸ், றி. மயூரதரன், சி. சிவசெல்வன்.


## கரப்பந்தாட்டக் குழு 17 வயதின் கீழ்



இருப்பவர்கள்: செல்வி லூ. ஞா. மாசலீன்பிள்ளை (உப அதிபர்), திரு. செ. யோகச்சந்திரன் (அதிபர்), மு. சதீஸ்குமார்,(தலைவன்), திரு. மு. இரவீந்திரன் (விளையாட்டுப் பொறுப்பாசிரியர்) அ. தயாஹரன், கி. தேவகி (உடற்கல்வி ஆசிரியர்). முன்வரிசையில் இருப்பவர்கள்: ஆ. ரதன், பா. சிவச்செல்வன், க. ஜெயதாஸ், ர. பவானந்.

பேராசிரியர் கார்த்திகேசு
சித்திரவடிவேலு

# தொண்டைமானாறு ஏரியை நன்னீர் ஏரியாக மாற்றும் திட்டம் ஓர் மீள்பார்வை




கடல் நீரானது தொண்டைமானாறு உவர்நீர் ஏரியினுள் செல்வதைத் தடுக்கும் நோக்குடன் 1943 இல் உருவாக்கப்பட்ட ஒரு திட்டமே தொண்டைமானாறு ஏரித் திட்டம் ஆகும். இத்திட்டத்தின் பிரகாரம் உவர் நீரேரிக்குக் குறுக்கே கதவுகள் கொண்ட நீர்ப்பாசன அணை ஒன்று எழுப்பப்படும் என்றும், குறிப்பிட்ட காலங்களில் இப்பகுதியில் இருந்து உப்பானது மழை நீருடன் சேர்ந்து வெளியேற்றப்படும் என்றும் இதன் காரணத்தினால் படிப்படியாக இது ஓர் நன்னீர் ஏரியாக மாறும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. இது அருகிலுள்ள நீர்நிலைகளை நன்னீராக மாற்றுவதுடன் நிலத்தின் அடியிலுள்ள ஊற்றுக்களையும் புத்துயிர்ப்பு அடையச் செய்யும். உப்பகற்றப்பட்ட பகுதிகள் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற நிலங்களாக மாறுவதுடன், இக்கடல் நீரேரித்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டால் பரிசோதனை ரீதியில் வேறு இது போன்ற திட்டங்களுக்கு ஒரு முன்னோடியாக அமையும் எனவும நம்பப்பட்டது. இதற்கான ஆரம்பத்திட்டம் 1943 ல் Webb என்பவரால் உருவாக்கப்பட்டது. அதிலிருந்து மாற்றியமைக்கப்பட்ட ஓர் திட்டமே 1953 ல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

கிட்டத்தட்ட 40 சதுரமைல் (102 சதுர கிலோமீற்றர்) பரப்பளவிற்குள் அடங்கும் தொண்டைமானாறு கடல் நீரேரியும், உப்பாறு கடல் நீரேரியும் இத்திட்டத்திற்கு எடுக்கப்பட்டன. 1963ம் ஆண்டிலிருந்து 10 வருடங்களிற்கும்மேலாக தாவரங்களிலும், விலங்குகளிலும் பௌதிக தரவுகளிலும் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் ஒரு படிப்படியான உப்பு நீக்கல் நடைபெற்றதற்கு சான்றுகளைக் காட்டின. எனினும் அணையிலிருந்த தொழிற்பாட்டுச் சீர்கேட்டினால் 1977ம் ஆண்டளவில் இத் திட்டம் தோல்வி கண்டது

இதற்கிடையில் அங்கு வாழும் மக்களில் ஒரு சாரார் இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். தொண்டைமானாறு கடல்நீரேரியின் அமைப்பை மாற்றாது இருப்பதன் மூலம் அதிலுள்ள கடல் வளத்தைப் பேணலாம் என்பது அவர்களின் கருத்தாக இருந்தது. எனினும் கடல்மீன் பிடியில் ஏற்படும் இழப்பானது வடமாகாணத்தில் கரையோர மீன் உற்பத்தி உடன் ஒப்பிடும் போது புறக்கணிக்கத் தக்கது என்பதைத் தரவுகள் காட்டின. அத்துடன் நன்னீரில் வளரக்கூடிய மீனினங்களையும் (Chanos Chanos) இறால் இனங்களையும் (Macrobrachium rosenbergii) இங்குள்ள நீர்நிலைகளில் வளர்த்து மக்களிற்கு கிடைக்கச் செய்தால் இவ்விழப்பை ஈடுசெய்யலாம்.

ஆகவே தொண்டைமானாறு திட்டத்தின் மறுமலர்ச்சிக்கும், எதிர்காலத்தில் வேறு ஏதேனும் இது போன்ற அபிவிருத்தித் திட்டமிடலுக்கும் முன்னர் இத்திட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்களை விளங்கிக் கொள்வது பேருதவியாக அமையும்.




உரு 1: யாழ் குடாநாட்டின் ஏரிகள்.

*அறிமுகம்:*

வடமராட்சி கடல்நீரேரித்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் 1879 ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டாலும், 60 ஆண்டுகளிற்கும் மேலாக எடுத்த தரவுகளை ஆழ்ந்து பரிசீலனை செய்ததன் அடிப்படையில் 1943 ம் ஆண்டில் தான் சில கடல் நீரேரிகளையாவது நன்னீர் ஏரிகளாக மாற்றுவது குறித்த இத்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டது. இதற்கு 06 சதுர கிலோமீற்றர் பரப்புள்ள வடக்கு கடல் நீரேரியும் 24 சதுர கிலோமீற்றர் கிழக்கு கடல் நீரேரியும் 10 சதுர கிலோமீற்றர் பரப்புள்ள தெற்கு கடல் நீரேரியும் தேர்ந்தெடுக்கப்பட்டன. வடக்கு, கிழக்கு கடல்நீரேரிகள் இரண்டையும் சேர்த்து வடமராட்சி கடல்நீரேரி என்றும், தெற்கை உப்பாறு கடல்நீரேரி எனவும் அழைத்தார்கள் (உரு 1). கடல் நீரேரியும் அதன் மண்ணையும் உப்பு நீக்கம் செய்வதும், மழைவீழ்ச்சியின் நேரடி உதவியுடன் மீட்கப்பட்ட பிரதேசங்களை பயிர் செய்கைக்கு உட்படுத்துவதும் இத்திட்டத்தின் பிரதான நோக்கங்களாக இருந்தன.

*வரலாறு:*

வடமராட்சி உவர்நீரேரியை நன்னீர் ஏரியாக மாற்றும் முன்மொழிவு Sir william Twynam என்பவராலேயே முதலில் முன்வைக்கப்பட்டது. ஆனால் 1884 ம் ஆண்டு 16 ம் திகதி குடாநாட்டில் ஏற்பட்ட பெரும் வெள்ளப்பெருக்கு காரணமாக அவரே தன்னுடைய முன்மொழிவுக்கு எதிராக நடக்கும்படியான சூழ்நிலை உரு

வானது. எனினும் கடல்நீரேரிக்குக் குறுக்கே கட்டப்படும் எந்த அணையும் குடாநாட்டில் இயற்கையாகக் காணப்படும் நீர்வழிந்தோடுகின்ற தன்மைக்கு பாதகமாக அமையலாம் என்ற கருத்தை இவர் கொண்டிருந்தார். ஆனால் இவர் ஒரு பொறியியலாளர் அல்ல என்பதும் பொறியியல் அறிவு எதனையும் கொண்டிராதவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அடுத்து, யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த Festing என்பவர் 1914 ம் ஆண்டு நவம்பரில், இத்திட்டத்தை பற்றிய ஆராய்ச்சிகள் தொடரத் தேவையில்லை எனப் பணித்தார். பின்னர், 1916 ம் ஆண்டில் அரசாங்க அதிபராக பதவியேற்ற Mr. Horsburg என்பவர் இத்திட்டத்தை ஆதரிக்கவில்லை. அதற்கு பின்வரும் காரணங்களைக் கூறினார். இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் உள்ளூர் உப்பு உற்பத்தி பாதிக்கப்படும் என்பது இவரின் கருத்தாகும். கடலை உவர் நீரேரிப்பகுதியிலிருந்து முழுமையாக தடுக்கமுடியும் என்றும், உப்பு உற்பத்திக் கைத்தொழிலைத் தொடர்ந்தும் இயங்க வைக்கலாம் எனவும் ஆய்வுகள் மூலம் எடுத்துக் காட்டப்பட்டன. அத்துடன் இதற்கு வெளிநாட்டுச் சந்தை எதுவும் இல்லாததால், அரசாங்கம் இலங்கை மக்களின் தேவைக்குரிய உப்பை விளைவிப்பதிலேயே கவனம் செலுத்தியிருந்தது. ஆகவே கிடைக்கும் வருமானம் பாதிக்கப்படமாட்டாது என்பதுடன் ஆனையிறவு மற்றும் இதர பகுதிகளில் இருந்து யாழ்ப்பாணத்திற்குத் தேவையான உப்பு அனுப்பப்படலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது.

எனினும் 1916 ம் ஆண்டு மார்ச் 30 ம் திகதி Horsburg முதலில் கிழக்கு கடல் நீரேரி பகுதித்திட்டம் தனியாக நிர்மாணிக்கப்பட வேண்டும் என்ற மாற்றப்பட்ட ஒரு யோசனையைத் தெரிவித்தார். இதனால் 8,500 ஏக்கர் பரப்புள்ள அரசாங்கக் காணியும், 3000 ஏக்கர் பரப்புள்ள தனியார் நிலங்களும் நன்மையடைவதுடன் முதலில் குறிப்பிட்ட உபயோகமற்ற அரசாங்க காணிகளை விற்பதால் கிடைக்கும் வருமானம் அவற்றைச் சீர்படுத்துவதற்குச் செலவாகும் தொகையிலும் கூடுதலாக இருக்கும் எனவும் மதிப்பிட்டார்.

இம் முன்மொழிவின்படி பருத்தித்துறை - சாவகச்சேரி வீதியூடான மதகானது அடைக்கப்பட்டு அதற்குப் பதிலாக புதிய தொடரான அணைகளும் கதவுகளும் கட்டப்படும். இதனால் கிழக்குக் கடல் நீரேரி பிரிக்கப்படுவதுடன் கடல்நீர் உட்புகுவதைத் தடுக்கமுடியும். இம்முன்மொழிவானது பதில் நீர்ப்பாசன இயக்குனராய் இருந்த Baker என்பவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது இதற்காகப் பாவனையில் இருந்துவரும் மதகின் மேல் நீண்ட மரப் பலகைகளை உட்செலுத்தி தற்காலிக அணை ஒன்றை எழுப்பி முயற்சித்து பார்க்க வேண்டும் என்றும் இந்த ஆரம்ப ஏற்பாடு நிரந்தரவேலைக்கு முன்னோடியாக உதவும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அதேவேளை அது தொடர்பான தரவுகளும் சேகரிக்கப்பட்டன.

இந்தத் தற்காலிகத் திட்டம் கிழக்கு கடல்நீரேரிப் பகுதியில் 1919 ம் ஆண்டு டிசம்பரில் ரூபா 5,300 செலவில் முடிக்கப்பட்டு, 1920 ம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. துரதிஷ்டவசமாக அவ்வாண்டு பெய்த அசாதாரண மழைவீழ்ச்சி காரணமாக பயிர்கள், வீடுகள், கால்நடைகள், வீதிகள், புகையிரதப் பாதைகள் என்பன பாரிய அழிவுக்குள்ளாகின. இவ்வழிவுக்குக் காரணமாக இத்திட்டத்தின் ஆரம்பத்தில் ஏற்பட்ட குறைபாடுகள் தொடர்புபடுத்தப்பட்டன. ஆகவே, இத்திட்டத்தை திறமையாக அமுல்படுத்த தேவையான அறிவையும் தொழில்நுட்பங்களையும் பெற்றுக் கொள்வதற்கு மேற்பார்வையாளர்கள், அடுத்து சில வருடங்களை செலவழித்தனர். அதன் அடிப்படையில் பார்த்த போது வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட இழப்புகள் அசாதாரண மழைவீழ்ச்சி

யினால் நிகழ்ந்ததேயன்றி இத்திட்டத்தை அமுல்ப்படுத்தியதால் அல்ல என்பது தெரிய வந்தது. எனினும் உள்ளூர் விவசாயிகள் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதன் பின்னர் 1921, 1922, 1923ம் ஆண்டுகளில் வெற்றிகரமாக இத்திட்டம் இயங்கத் தொடங்கும் வரை விவசாயிகள் பயிர் நிலங்களை கைவிட, அவை தரிசாக மாறின.

இந்தத் தற்காலிகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, கிட்டத்தட்ட நான்கு வருடங்கள் கழிந்தே, 1923ல் இதனாலான நன்மைகள் வெளிவரத் தொடங்கின. முன்னர் பயிர்ச்செய்கைகளிற்கு உதவாமல் கைவிடப்பட்ட பல நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்ட கரவெட்டி கிழக்கிலும், துன்னாலை தெற்கிலும் முற்றிலும் புதிதான நிலங்கள் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டன. முன்னர் பயன்படுத்திய விளைநிலங்கள் அதிக விளைச்சலைக் காட்டின. வரண்ட காலப்பகுதியில் இவ் ஏரியிலிருந்து முன்னர் எப்போதும் இல்லாதவாறு கால்நடைகள் நீரைப்பருகின. அத்துடன் கடல் நீரேரியின் எல்லைப்பகுதியில் இருந்த மேய்ச்சல் புல் நிலங்கள் பாரிய அளவில் விருத்தி அடைந்தது. கிழக்கு கடல்நீரேரிக்குரிய இந்தத் தற்காலிகத் திட்டம் பெரும் வெற்றியை நிலைநாட்டியதுடன் உவர்தன்மை, மழை வீழ்ச்சி, நீர்பாயும் தன்மை, காற்று ஏரியுள் காணப்படும் நீரின் அளவு, அதிலுள்ள அலையடிப்பு ஆகியவை பற்றிய மிகுந்த பயனுடைய தரவுகளையும்தந்தது.

கிடைக்கப்பெற்ற தரவுகளைக் கொண்டு Webb என்பவர், 1943ல் ஒரு முழுமையான உத்தரவாதம் மிக்க திட்டமொன்றை உருவாக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார். இத்திட்டம் நிச்சயம் வெற்றியுறும் எனவும், மீட்கப்பட இருக்கும் பகுதிகளில் இருந்து கூடிய நன்மைகள் கிடைக்கும் எனவும், பாரதூரமான இழப்புக்கள் எதுவும் ஏற்படாது எனவும் அவர் திருப்தியடைந்தார்.

மேற்குறிப்பிட்டவையாவும் பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட அவதானங்களையும், எடுக்கப்பட்ட முயற்சிகளையும், அதிக கவனத்துடன் போடப்பட்ட திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு Webb என்பவரும் அவருக்கு முன் அப்பதவியில் இருந்தவர்களும் இத்திட்டத்தை வரைவதில் எதிர்நோக்கிய பிரச்சனைகளையும் எடுத்துக் காட்டுகின்றனர்.

1943ல் Webb என்பவரால் முன் வைக்கப்பட்ட திட்டத்தின் சுருக்கம் வருமாறு:-

1) தொண்டைமானாறு பாலத்திலிருந்து 1/2 மைல் நீளமான அணை ஒன்றை உவர்நீரேரிக்கு குறுக்காக எழுப்பி அதனூடு வால்வுகளைப் பொருத்துதல். அதாவது ஒரு பக்கம் மாத்திரமே திறக்கக்கூடிய கதவுகள் கொண்ட அமைப்பை நிர்மாணித்தல், இக்கதவுகளின் நீளம், எண்ணிக்கை, அளவு என்பன அப்போது காணப்படும் நீர் வெளியேறும் வீதத்திற்கு ஏற்றதாக அமைக்கப்படும்.

2) அரியாலைப்பாலத்திற்கும் அதன் அயலிலுள்ள சிறு பாலத்திற்கும் இடையில் உள்ள இடைவெளிகளுக்கு குறுக்காக தெற்குப் பகுதியில் அரைவட்ட வடிவமான கொங்கிறீட் சுவர்களை எழுப்புதல்.

3) இவ்விரு அணைகளும் மிக அரிதாக நடக்கும் வற்றுப்பெருக்கு தோற்றப்பாடு தவிர்ந்த ஏனைய வேளைகளில் உவர்நீரேரியுள் கடல்நீர் புகுவதை முற்றாக தடுக்கும்.

4) உவர்நீரேரியில் இருந்த நீரானது படிப்படியாக சற்று குறைவான அளவிலேயே வெளியேற்றப்படும். காரணம் மழைவீழ்ச்சி நின்றவுடன், இதனுள் சேகரிக்கப்படும் நன்னீர் சில

வாரங்களிலேயே மண்ணால் உறிஞ்சப் படுவதாலும், வடிவதாலும், ஆவி யாதலும் குறைந்துவிடும்.

5) உண்மையான நீர்ப்பாசன சேமிப்புத் திட்டம் இதில் சேர்க்கப்படவில்லை. ஏனெனில் யாழ்ப்பாண விவசாயிகள் மழைவீழ்ச்சியை நம்பியே நெல் பயி ரிட்டனர். இத்திட்டம் ஆரம்பிக்கப் பட்ட பின்னரும் இதுவே எதிர் பார்க் கப்படுகின்றது. காரணம், இத்திட்டம் நீர்த்தேக்கங்களை உருவாக்க மேற் கொள்ளப்படவில்லை.

6) இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கடல்நீரேரியையும் அதன் மண்ணினு டைய உப்புத்தன்மையையும் நீக்குதல். அதன் மூலம் பாரிய நிலப்பகுதிகளை நேரடி மழையின் உதவியுடன் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தல்.

முழுத்திட்டத்திற்கும் கிட்டத்தட்ட ரூபா 655,000 செலவு செய்ய வேண்டி வரும் என கணிக்கப்பட்டது. (Webb, 1943) தற்போதுள்ள கதவுகளுடன் கூடிய அணை யானது 1953 ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட் டது.

எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள

1) 20,000 ஏக்கர்களும் (8,000 ஹெக்) உவர்நீர் வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உள்ளாக மாட்டாது.

2) 11, 000 ஏக்கர்களைக் (4, 400 ஹெக்) கொண்ட புதர்களினால் மூடப்பட்ட நிலமானது அதன் மண்ணில் இருந்து உப்புத்தன்மை அகற்றப்படுவதன் காரணமாக பயன்தரக்கூடிய விளைவுகளை தரக் கூடிய நிலமாக தரம் உயர்த்தப்படும்.

3) உப்பினால் மிகையாக நிரப்பப்பட்ட 25,000 ஏக்கர்களிலுள்ள (10,000 ஹெக்) நீரானது நன்னீராக மாற்றப் பட்டு சேமிக் கப்படுவதன் மூலம் இக்கடல் நீரேரியை அண்டிய பகுதி களிலுள்ள விளைநிலங் களுக்கு, மழை இல்லாக் காலங்களில் நீரை வழங்கக் கூடியதாக இருக்கும்.

4) கடல் நீரேரியின் கரையோரங்களில் காணப்படுகின்ற உவர்த்தன்மை வாய்ந்த நீரைக் கொண்ட கிணறுகள் யாவும், கடல் நீருக்குப் பதிலாக நன்னீரால் ஈடுசெய்யப்படுவதால் அவை விவசாயத்திற்கும்வீட்டுப் பாவ னைக்கும் உகந்த நீரைக் கொண்ட கிணறுகளாக மாறும்.

5) இத்திட்டத்தின் மிக முக்கியம்வாய்ந்த நன்மை யாதெனில் இது பரிசோதனை ரீதியாக மிக முக்கிய பெறுமதியை உடையதாகும்

எதிர்பார்க்கப்பட்ட பாதிப்புக்கள்

1) உப்புத்தொழில் வாய்ப்பு இழப்பு:

வடக்கு கடல் நீரேரியைச் சேர்ந்த சுமார் 200 ஆண்களும் பெண்களும் கடல் நீர் ஏரியில் விளைந்த உப்புக்களை சேகரித்தல், ஒன்று சேர்த்தல், இடம் மாற்றம் செய்தல் போன்ற வேலை வாய்ப்புக்களை முன்னர் பெறக்கூடியதாக இருந்தது. ஆனால் இக்கடல் நீரேரி நன்னீர் மயமாக்கப்பட்ட பின்னர், அவர் கள் மேற்குறிப்பிட்ட வேலை வாய்ப்புக் இழக்கநேரிட்டது. ஆனால் வேறு நிலையங் களில் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு மூலமும், 1000 ஏக்கர் நிலத்தை பயிர்ச் செய்கை நிலமாக மாற்றியதன் மூலமும், இழக்கப்பட்ட வேலை வாய்ப்புக்களானது ஈடுசெய்யப்பட்டது.

2) மீன் பிடி:-

பருவகால மீன்பிடியில் ஈடுபட்டு இருந்த சுமார் 250 குடும்பங்கள் மீன்பிடி மூலம் பெறப்பட்ட வருமானத்தை இழந் தனர். எனினும், இத்துறைக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களை அப்போது அவர்கள் கணித்திருக்கவில்லை.

ஆனால் இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகளுடன் ஒப்பிடும்போது மீன்பிடிக்குரிய பாதிப்பானது புறக்கணிக்கக்கூடியதாக இருக்கும் என கருதப்பட்டது.

## 1963ம் ஆண்டின் பின்னர் இத்திட்டத்தின் நிலைப்பாடுகள்

1963ம் ஆண்டு தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் (Field Work Centre, Thondaimannar - Formerly Hydro Biological Survey, Research Council (HBSRC) of the Northern Province Science Teacher's Association) உவர்நீர், நன்னீராக மாற்றுவதில் ஏற்படும் சூழலியல் பிரச்சனைகள் பற்றிய ஆராய்ச்சி ஒன்றினை மேற்கொண்டது. இவ்வாராய்சியில் ஆசிரியர்களும் மாணவர்களும் பங்கேற்றுக் கொண்டனர்.

இவ்வாராய்ச்சியை மேற்கொண்டதன் நோக்கங்கள் பின்வருவன:

1) வகுப்பறையில் கற்றவற்றையும் செயன்முறைகளில் அவதானித்தவற்றையும் ஒருங்கிணைந்து நோக்குவதன் மூலம் பாடசாலைகளில் விஞ்ஞானம் கற்பித்தலையும், கற்றலையும் அபிவிருத்தி செய்தல்.

2) ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஆராய்ச்சி பற்றிய பயிற்சிகளை வழங்குதல்.

3) சமூக அபிவிருத்திக்கான புதிய கருத்துக்களை மக்களுக்கு அறிமுகம் செய்தல்.

1963 தொடக்கம் 1967ம் ஆண்டு வரை வருடத்திற்கு இருமுறை என ஓர் தொடரான ஒழுங்கில் இவ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.


பின்வரும் அட்டவணை 1, 1963- 1969 ஆண்டுக்குரிய சராசரி தரவுகளை உள்ளடக்கியது.

| | தொண்டைமானாறு | | நாகர் கோவில் | |
|---|---|---|---|---|
| | பெப் | யூலை | பெப் | யூலை |
| பௌதிக காரணிகள் | | | | |
| ஆழம் | 8.0-8.5' | 6.0' | 5.5' | 2.0' |
| தணீர்ப்பு | 1.005 | 1.025 | 1.000 | 1.002 |
| உவர்த்தன்மை | 14.4ppt | 21.2ppt | 3.7ppt | 20.60ppt |
| தாவரங்கள் | Halophylla ovalis<br>Cymodocoea ciliata<br>Laurentia sp<br>Grasilaria corticata | | Cynodon dactylon<br>Bacopa monnieri<br>Paspalum sp.<br>Najas marina, Chara sp.<br>Fimbrystylis ferruginea.<br>Cyprus corymbosus<br>Nymphaea nouchali<br>Blue greens and diatoms | |
| விலங்குகள் | | | | |
| இறால் | Penaeus monodon<br>Penaeus indicus<br><br>Penaeus dobsoni<br>Machrobrachium sp. | | இறால் இல்லை | |

மீன்கள்: கட்டுப்படுத்தப்பட்ட இனங்கள் 33 ; கட்டுப்படுத்தப்பட்ட இனங்கள் 04

Ophiocephalus striatus
Panchax panchax blochi
Puntis filamentosus
Puntis sarana

அட்டவணை 1;
பௌதிக உயிரியல் தரவுகள் (தொண்டைமானாறு கடல் நீரேரி 1963 - 1969):
(Atputhanathan and Chitravadivelu, 1969)




உரு 2: 1970 இல் தொண்டைமானாறு ஏரியில் மாதாந்த சராசரி உவர்ப்புத்தன்மையின் வேறுபாடுகள்.

மேற்குறிப்பிட்ட ஆய்வின் முடிவுகளில் இருந்து நாகர்கோவிலிலுள்ள ஏரிப் பகுதியானது நன்னீராகவும் தொண்டைமானாறு முகத்துவாரம் நோக்கிய பகுதி படிப்படியாக உவர்த்தன்மை கூடியும் காணப்பட்டது. தொண்டைமானாறில் ஏரியின் ஆரம்பப்பகுதியின் உயர்ந்த உவர்த் தன்மை, கதவுகள் ஊடாக கடல்நீர் கசிவதனாலேயே ஏற்பட்டுள்ளது.

தொண்டைமானாறு கடல்நீரேரியின் பிரதான அடித்தளத்திற்குரிய, விலங்குகளுக்கு ஆதாரம் அளிக்கின்ற தாவரங்களான, Halophylla ovalis உம் Cymodocoea ciliata உம் அவதானிக்கப்பட்டன. கடலுக்கு மட்டுமே உரிய இனங்களான Acetabularia granulata, Polysiphonia sp., Laurentia sp. Gracilaria cortica, Penaeus monodon. Penaeus indicus and Penaeus dobsoni என்பனவும் 33 இனத்துக்குரிய மீன்களும் அவதானிக்கப்பட்டன. இம்மீன்களில் 18 இனமானவை கடலுக்கு மட்டுமே உரியவை (Atputhanathan and, Chitravadivelu 1968; Chitravadivelu and Selvavinayagam, 1969).

நாகர்கோவில் கடல்நீரேரியை நோக்கின் அங்கு இறால்கள் காணப்படவில்லை. வழமையான நன்னீர்வாழ் மீன்இனங்களான **Ophiocephalus striatus, Panchax blochii, Puntis filamentosus and Puntis sarana,** என்பனவும் அங்கு அவதானிக்கப்பட்டன. இந்நீரேரியில் அல்லிச் செடியின் தோற்றமானது **(Nymphaea nouchali)** இந்நீரிலிருந்து உவர்த்தன்மை அகற்றப்பட்டதற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. தாவரங்களினதும் விலங்குகளினதும் பரம்பல் ஆனது உவர்த்தன்மை, தன்னீப்பு போன்றவற்றுடன் இயைபாக்கமாக அமைந்திருந்தன.

## 1977ம் ஆண்டிலும் அதன் பின்னரும் உள்ள நிலைமைகள்

உவர்த்தன்மையானது ஈரமான கால நிலைகளில் தாழ்வாகவும் வறண்ட கால நிலைகளில் உயர்வாகவும், கடல்நீரேரி முழுவதுமே அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால், அணைக்கு அருகாமையில் இந்நிலை காணப்படவில்லை. இங்கு வருடம் முழுவதுமே உவர்த்தன்மை உயர்வாகவே காணப்பட்டது. கிட்டத்தட்ட கடல்நீரேரியின் வாய்ப்பகுதியில் இருந்து 15 மைல்களுக்கு (24 கிலோமீற்றர்) அப்பால் உவர்த்தன்மையானது குறைவாகவே காணப்பட்டது.

உவர்த்தன்மையானது கடல்நீரேரியின் முடிவுப்பகுதியில் (மருதங்கேணி) மீண்டும் உயர்வாகவே அவதானிக்கப்பட்டது (உரு 2) (Atputhanathan et al. 1979). இதற்கு காரணம் இப்பகுதியானது தாழ்வாக காணப்படுவதுடன் இப்பகுதிக்கு இடையே உள்ள நிலப்பரப்பானது உயர்ந்து காணப்படுவதும் ஆகும். மேலும் இப்பகுதியை சூழவுள்ள பரப்பின் நிலத் திணிவுகளில் இருந்து உப்பானது இப் பகுதிக்குள் கசிதலும் இப்பகுதியில் உவர்த்தன்மை உயர்ந்து காணப்படுவதற்கு ஓர் காரணமாகும் (Kugathasan, 1977)

தாவரங்களினதும் விலங்குகளினதும் அசாதாரண பரம்பலானது, அதாவது கடலுக்கு உரியவை அணைக்கு அருகிலும், சற்று உவர்த்தன்மையில் வாழக்கூடியவை வல்லையிலும், நன்னீருக்கு உரியவை நாகர் கோவிலிலும் அவதானிக்கப்பட்டன இதற்கு காரணம், கடல்நீரானது. தொண்டைமானாறு அணையின் மூலம் உட்புகுந்தமையால் ஆகும்.

அணையைக் கட்டியதில் உள்ள முழுமை பெறாத தன்மை, பராமரிப்பு போதாமை, தகுதி குறைந்த செயற்பாட்டு

முறைகள் என்பவற்றினால் கதவுகளின் தொழிற்படும் தன்மை தரம் குறைந்து அணைகளுடாக நீர் ஒழுக ஆரம்பித்தது.

பொதுவாக வடக்கு கடல் நீரேரியின் முகத்துவாரப்பகுதியில் மணற்றிட்டு உருவாக்கத்திற்கு உட்படுகிறது. இயற்கையான திட்டுவின் உருவாக்கமானது, தடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்வாறு செய்யாவிடின் கடல்நீரேரியின் வடிகால் திட்டமானது வெள்ளப்பெருக்கு குறைந்த பின்னர் திறமையாக செயற்படுபவையாக இருக்க மாட்டா.

கடல் நீரேரியின் வாய்ப்பகுதியானது இவ்வாய்ப்பகுதியிருந்து உருவாகி, கடல் வரை செல்லும் இரு பாதுகாக்கும் கரங்கள் போன்ற திட்டுக்களை ஆண்டு பூராவும் திறந்திருக்கக் கூடியதாக உருவாக்கப்பட வேண்டும் என 1943ம் ஆண்டு Webb என்பவரால் எடுத்துரைக்கப் பட்டதாக இருந்ததேயொழிய இது செயன் முறைப் படுத்தப்படவில்லை.

இத்திட்டத்தினை வரைந்த போது இதனால் பாதிப்புறும் மீனவர்கள் குடும்பங்களின் எதிர்கால நிலைமைகள் கருத்திற்கொள்ளப்படவில்லை. அவர்களுக்கு இழப்பீடும், மாற்று வழிகளும் ஏற்படுத்திக் கொடுத்திருக்க வேண்டும். திட்டத்தின் தோல்விக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

*நிலகீழ் நீர*

இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த நீர் நிலையியல் நிபுணரான Dr. Arnon Arad என்பவரின் அறிவுரையின் படி நிலக்கீழ் நீர் பற்றிய ஆராய்ச்சியானது ஓர் ஒழுங்கான முறையில் யாழ் நீர்வள நிலையத்தினால் 1965ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. யாழ்.மாவட்டத்தில் இவ்வாராய்ச்சிக்கென 411 கிணறுகள் தெரிவு செய்யப்பட்டன.

இவற்றிலிருந்து பின்வரும் தரவுகள் பெறப்பட்டன.

1) கிணறுகளில் நீர்மட்டத்தின் நிலை அளக்கப்பட்டது.

2) கிணறுகளில் அடிப்பகுதியானது நீரானது, இரசாயன இயல்புகளை தெரிந்து கொள்வதற்கான பரிசோதனைகளுக்காக சேகரிக்கப்பட்டது.

இரசாயன பரிசோதனைகள் யாவும் அவ்வப்பகுதியைச் சேர்ந்த பாடசாலை விஞ்ஞான ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்பட்டன. எல்லா ஆசிரியர்களும் ஒரே வகையான பரிசோதனை முறைகளையே பயன்படுத்தினர், இப்பரிசோதனை முறைகள் யாவும் வடமாகாண ஆசிரியர் சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்டவை ஆகும். சமஉவர்ப்புக்கோட்டு வரைபடங்கள (Balendram et al, 1968) திரு. பாலேந்திரன் என்பவராலும் அவரைச் சேர்ந்தவர்களாலும் 1965, 1966, 1967 ஆண்டுகளில் பெற்ற முடிவுகளில் இருந்து தயாரிக்கப்பட்டன.

இவ்வாராய்ச்சியின் மூலம் பெறப்பட்ட முடிவுகளாவன

1) உவர்த்தன்மை முற்றாக நீக்கப்பட்ட நிலப்பரப்பளவானது 128,000 ஏக்கர்களில் (51,200 ஹெக்) இருந்து 145,000 ஏக்கர் (58,000 ஹெக்) வரை சென்றது. அதாவது இது 13% தினால் அதிகரித்தது.

2) நடுத்தரமான உவர்த்தன்மை உள்ள பரப்பானது 64,200 ஏக்கர்களில் (25,600 ஹெக்) இருந்து 64,000 ஏக்கர் (25,680 ஹெக்) ஆக குறைந்து பின்னர் இறுதியாக 60,350 ஏக்கர்களாக (24,140 ஹெக்) வந்துள்ளது. அதாவது 6% குறைந்தது.

3) வரட்சியான காலத்தில் மட்டும் உவர்த்தன்மையாக காணப்படும் பரப்பளவானது 46,480 ஏக்கர்களில் (18,592 ஹெக்) இருந்து 43,800 ஏக்கர் (17,520 ஹெக்) வரை குறைந்து, பின்னர் 47,800 (19,120 ஹெக்) ஏக்கராக அதிகரித்தது.

4) உவர் பரப்புக்கள் 17,290 ஏக்கரிலிருந்து (6,916 ஹெக்) 11,000 ஏக்கர்களாக (4,400 ஹெக்) குறைந்து பின்னர் 12,450 ஏக்கர்களாக (4,980 ஹெக்) கூடியதுமுற்று முழுதாக எடுத்து நோக்கும் போது 28% த்தினால் குறைந்தது.

இம்முடிவுகள் நீர் உயிரியல் ஆராய்ச்சி நிலையத்தின் (HBSRC) முடிவுகளை உறுதிப்படுத்தின.

*அண்மைக்கால அபிவிருத்தி*

1989ல் ஐக்கிய அமெரிக்காவின் (US AID) உதவியுடன் தொண்டைமானாறு ஏரித்திட்டத்தினை புனருத்தாரணம் செய்வதற்கான புத்தாய்வுத்திட்டம் முன்மொழியப்பட்டது. வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் 1989ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஓர் பொறியியலாளர் இத்திட்டத்திற்கு ஆலோசக நிபுணராக நியமிக்கப்பட்டார். இவர் இப்புனருத்தாரண நடவடிக்கை பற்றி ஓர் செயல் சாத்திய அறிக்கை (Visvalingam, 1989) சமர்ப்பிக்க வேண்டும் என பணிக்கப்பட்டார். இவ்வறிக்கையை ஐக்கிய அமெரிக்காவின் உதவிகளைப்பயன்படுத்தி சாதகமான முடிவுகளை பெற முடியுமா என அவர் தெரிவிக்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டார். ஆனால், இவ்வறிக்கையானது முற்றுப் பெறவில்லை, ஏனெனில் வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சினால் இந்நிபுணரின் சேவை 1990ம் ஆண்டு பெப்பிரவரி மாதத்திற்கு பின்னர் தொடரவில்லை.

இதன் பின், இதற்கு பின்வரும் இரு அறிக்கைகள் பெறப்பட்டன.

1) யாழ்ப்பாண கடல்நீரேரித்திட்டம் 1991 - ஆகஸ்ட்.

2) யாழ் மாவட்டத்தில் காணப்படும் நன்னீர் நிலைகளை மீள அமைத்தலும் புனருத்தாரணம் செய்வதும் சம்பந்தமான திட்டம் - 1991 அக்டோபர்

இவை இரண்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னைநாள் பொறியியற்துறை பேராசிரியர் நவரட்ணராஜாவின் தலைமையிலான சபைகள் மூலமே தயாரிக்கப்பட்டன.

*தொண்டைமானாறு திட்டத்தின் தாககங்கள்*

1) ஆரம்பத்தில், உவர்த்தன்மை, நிலங்களில் இருந்து அகற்றப்பட்டதால் அவை விவசாயத்திற்கு உகந்தன எனவும் கிணறுகளில் காணப்பட்ட நீரின் தரம் உயர்ந்தமை என்பன அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இதற்கு ஆதாரங்களும் காணப்பட்டன.

2) 1967-1968 ல் இருந்த 47 வகையான மீன் இனங்கள் 1978 ல், 15 இனங்களாக குறைக்கப்பட்டன. (Chitravadivelu, 1978).

3) இக்கடல்நீரேரியின் ஜீவனோபாயத்திற்குத் தங்கியிருந்த ஏறக்குறைய 250 மீனவக் குடும்பங்கள் வேலை வாய்ப்பை இழந்தனர். (Chitravdivelu, 1979).

4) மீனின் மொத்த உற்பத்தியில் இழப்பு அவதானிக்கப்பட்டது. ஆனால், இதற்கு சரியான நம்பத்தகுந்த மதிப்பீடுகளை பெறக்கூடியதாக இருக்கவில்லை.

5) வகுப்பறைப் பாடங்களையும், வெளிக்கள செயன்முறைப்பயிற்சிகளையும் தொடர்புபடுத்தி மேற்கொண்ட கல்வி, கற்றல் கற்பித்தல் இரண்டிலும் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியைக்காட்டியது. (Atputhanathan, 1971).

கடல்நீரேரித்திட்டம் முற்றாக கைவிடப்பட்டு, 1953 ம் ஆண்டிற்கு முற்பட்ட நிலைமையை மீள நிலைநிறுத்தி மீன்வளம் இவ்வேரியில் முன்னைய நிலைக்கு வரும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என

சிலரால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள் பின்வரும் காரணங்களால் தகுதியான யோசனையாக கருதப்படவில்லை.

1) இத்திட்டத்தின் மூலம் மாத்திரமே யாழ் மாவட்டத்தில் ஒரு நன்னீர் நிலையை உருவாக்க முடியும்.

2) வடமாகாணம் இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியில் அண்ணளவாக 1/3 பங்கை வழங்குகிறது. இந்நிலையில் இத்திட்டத்தினால் மொத்த கடலக மீன் உற்பத்தியில் ஏற்படும், இழப்பை நாம் கணிப்பிடுதல் வேண்டும். ஆனால் இக்கடல் நீரேரியின் மொத்த மீன் உற்பத்தி பற்றிய நம் பத்தகுந்த தரவுகள் இல்லாததன் காரணமாக இதன் உற்பத்தியானது வேறு தரவுகளில் இருந்து கணிப்பிட வேண்டியுள்ளது.

Jhingran and Gopalakrishnan *(1973)* இந்தியாவின் நதிமுகத்துவாரத்தின் மீன் வளங்களையும் அதன் அருகிலுள்ள கடலுடன் இணைந்த பிரதேசங்களையும் ஆராய்ச்சி செய்தபோது புவிகட்கடல் நீரேரியின் உற்பத்தியானது 21.7 கி, கி/ஹெக்/வருடம் எனக் கணிப்பிட்டனர். Kapetsky *(1984)* ஓர் ஒப்பீட்டு ஆராய்ச்சியினை உலகிலுள்ள 128 கரையோர கடல் நீரேரிகள் மீது மேற்கொண்டார். இதிலிருந்து அதி உஸ்ண, வெப்ப மண்டலங்களில் உள்ள கடல்நீரேரிகளின் உற்பத்தியானது 51 கி. கி/ஹெக்/வருடம் எனத் தெரிவித்தார். Jhingran and Gopalakrishnan*(1973)* ஆராய்ச்சியின் உற்பத்தி வீதத்தின்படி தொண்டைமானாறு ஏரியின் முழுமையான 40 சதுர மைல்களும் (10, 360 ஹெக்டேயர்), ஒரு வருடத்தில் 225 மெற்றிக்தொன்களையே மொத்த உற்பத்தியாக வழங்கக்கூடியதாக உள்ளது. Kapetsky *(1984)* ன் தரவுப்படி வருட உற்பத்தி 528 மெற்றிக்தொன்கள் ஆகும். 1983 ன் வடமாகாண அண்மைக்கால உச்ச மொத்த மீன் உற்பத்தியான 75,698 மெற்றிக் தொன்னில் முதற் குறிப்பிட்ட உற்பத்தி 0.3% ஆகவும் இரண்டாவதாக குறிப்பிட்ட உற்பத்தி 0.7% மாகவும் இருக்கின்றது. இதிலிருந்து பார்க்கும் போது கரையோர மீன்பிடியுடன் ஒப்பிடுகையில் தொண்டைமானாறு ஏரியின் மீன்பிடியில் ஏற்படும் உற்பத்தி இழப்பு புறக்கணிக்க கூடியதாக உள்ளது.

3) மேலும் பின்வரும் நன்மைகள் கடல் நீரேரித்திட்டத்தினால் மீன் உற்பத்தியில் ஏற்படும் உடனடி இழப்பை ஈடு செய்யக்கூடியதாக இருக்கும்.

அ) கடல் நீரேரியை அண்டிய சுற்றுப்புற சூழலானது பாவனைக்கு ஒவ்வாத வறண்ட நிலங்களில் இருந்து புல் மேயும் நிலங்களாகவும், புதர்களிலிருந்து பூங்காக்களாகவும் மாற்றப்படும்.

ஆ) ஏரியின் ஓரங்களில் உள்ள தோட்ட நிலங்கள் அதிக விளைச்சலைக் கொடுக்கும் எனவும், கிணறுகளில் உள்ள நீரின் அளவும் தரமும் உயரும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

இ) நெல் வயல்கள் அதிக விளைச்சலைக் கொடுக்கக்கூடியனவாகவும் மேலதிக நிலங்களை பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்தக்கூடியதாகவும் இருக்கும்.

ஈ) மேய்ச்சல் நிலங்கள் அதிகரித்ததன் காரணமாக கால்நடைகள் அதிக உற்பத்தியை கொடுக்கும் எனக் கருதப்பட்டது.

உ) பெருமளவான நன்னீர் நிலைகள் இறால்களினதும் மீன்களினதும் வளர்ப்பிற்கு பெறக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

1973, 1974ம் ஆண்டுகளில் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் **Chanos chanos** இன பாலை மீன் குஞ்சுகள் இக்கடல் நீரேரியின் புகுத்தப்பட்டதன் காரணமாக, இக்கடல் நீரேரி அதன்பின் ஏராளமான இவ்வின மீன்களால் பிடிக்கப்பட்டன. **Chanos chanos** மீனானது பெருமளவான உவர்த் தன்மை வேறுபாட்டை தாக்குப்பிடித்து வாழக்கூடியதாகையால் இது நன்னீரிலும் உயிர் வாழக்கூடியதாக உள்ளது. மேலும், பாரம்பரிய வளர்ப்பு முறையில், இது ஒரு வருடத்தில் ஒரு ஹெக்டேயருக்கு 50-500 கி.கி உற்பத்தியை வழங்கக்கூடியதாகவும் காணப்படுகிறது (Samaranayake, 1982 - Amandakoon, Shantha and Perera 1983) என்பவர்களினால் நீர்கொழும்பிலுள்ள பிற்றபன கடல் நீரேரியின் உற்பத்தியானது 1148கி கி ஹெக்டேயர்/ 5மாதங்கள் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. **Macrobarachium rosenbergii** ஆகிய நன்னீருக்குரிய இறால் வகையானது, வளர்ப்புக்கு உரிய இன்னொரு இனமாகும். இது 700 - 3000 கி.கி/ ஹெக்/ வருடம் உற்பத்தியை கொடுக்கத்தக்கது. மிகக்குறைந்த ஸ்தாபன முகாமைத்துவ செலவுடன் இவ்வகை இறாலானது 168 - 448 கிகி/ ஹெக்/ வருடம் என்றும் உற்பத்தியை பங்களாதேஷில் கொடுத்தது என Khan (1980) தெரிவித்தார்.

வளங்களின் முகாமைத்துவத்தில் ஏற்படும் வெற்றியானது இத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் புரிந்துணர்வு மூலமும், ஒத்துழைப்பின் மூலமும் பெறப்படும் என அனுபவரீதியாக அறியக்கூடியதாக உள்ளது. வளங்களை எவ்வாறு நிலையாகப்பேணலாம் என்ற முடிவு எடுக்கும் நிகழ்வுகளில் பொதுமக்களை பங்கு பெறச் செய்தல் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். துரதிஷ்டவசமாக, இத்திட்டத்தினை எதிர்க்கும் சக்தி வாய்ந்த ஒரு தொகுதி மக்கள், கடல் நீரேரி பழைய நிலைக்கு கொண்டு வரப்படவேண்டும் என்பதுடன், தொண்டைமானாறு செயல் திட்டத்தை முழுமையாக மறுபடி புத்துயிர் ஊட்டும் முயற்சியை எதிர்ப்பவர்களின் மனதிலுள்ள ஐயங்களை நீக்குவதற்காக சூழலியலாளர்களின் நோக்கில், பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

1) பல வருட அவதானங்களை வைத்து கவனத்துடன் திட்டமிட்டு நடைமுறைபடுத்தினாலும், தொடர்ந்து நன்றாக பராமரிக்கப்பட்டால் எத்திட்டமும் தோல்வி அடையும் என்பதனையே இது காட்டுகின்றது. நல்ல நிதி வளமும், அதிகாரமும் கொண்ட நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டால், இத்திட்டம் பூர்த்தி அடைய வாய்ப்புண்டு.

2) ஒரு சூழலியல் சார்ந்த ஆராய்ச்சிக்கு சிறப்பாக நிலைமாறும் காலப்பகுதியில் இத்திட்டம் ஒரு சிறந்த சூழலை அளிக்கிறது.

3) இது போன்ற பரிமாணம் உள்ள ஒரு வளத்தை வெற்றிகரமாக செயலாட்சிப்படுத்துவதற்கு பாதிக்கப்பட்ட மக்களின் புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் அவசியமாகும். அடுத்து இத்திட்டத்தினால் கிடைக்கக்கூடிய நன்மைகள் பற்றி அறியவைத்து இத்திட்டமிடல் செயன்முறைகளில் மக்களையும் கலந்து கொள்ளச் செய்தலும் முக்கியமான தொன்றாகும்.

இத்திட்டத்தினால் உண்மையாக பாதிக்கப்படுவோர் யார் என்பது இனங்காணப்படவேண்டும். இவ்வாறு இனங்காணப்படுவோருககு இத்திட்டத்தின் பலாபலன்கள் பற்றியும் விளக்குவதுடன், அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை நிவர்த்தி செய்யப் பொருத்தமான மாற்றுவழிகளைக் கண்டு ஆவனசெய்ய உறுதிவழங்க வேண்டும். குறிப்பாக மீன்பிடியில் ஈடுபடுவோர் பிரதான கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

மேலே குறிப்பிட்ட விடயங்களை கருத்திற் கொள்வது தொண்டைமானாறு திட்டத்தின் மறுமலர்ச்சிக்கும், இவை போன்ற வேறு திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கும் உதவியாயிருக்கும்.

## REFERENCES


Amanandakoon, H. P., Shantha, K.B and Perera, B.N.B.O., 1983; Culture of Milk fish Ponds of Pitipana. J,Inland fish., vol 2; pp. 112- 120.

Atputhanathan, M. and Chitravadivelu, K., 1968: Fisheries of the Thondaimannaru Lagoon. proc. Sri Lanka Assoc. Advmt sci. 24(1): 50.

Atputhanathan, M., 1971: Out - of school activity through field problems connected with development. paper presented at the UNESCO regional seminar for leaders of Youth Science Activites New Delhi, India. 14th- 18th Dec 1971.

Atputhanathan, M Chitravadivelu, K., Duruvasangary, V., Ponnam palam, K Selvavinayagam, M., and Sivapathasudram, K., 1979: Final report of the Hydrobiological Survey of Thondaimannar Lagoon. -A Component of the National work shop on Shop on Science Education to design and 1 Innovative science and Technology Curricula Based on real life experiences and environment. 19-22 Nov, 1979: PP. 2.

Balendram, V., Srimanne, C. H L., and Arumugan, S. 1968, Ground water in Jaffna. Presented at the 1968 Annual Session of CAA publi shed by water Resources Board, Colombo.

Chitravadivelu, K., and Selvavinayagam, K., 1960: prawns of the Thodaimannar Lagoon. Proc. Sri Lanka Assoc. Advmt Sci. 25(1) : 68.
Chitravadivelu, K., 1978: Fishery potential of the Thondaimannar Lagoon and a way of developing it. FWC- News Letter, vol. IX, NO 01, pp 9- 13.

Jhingran, V. G. and Gopalakrishnan, V. M., 1973: Estuarine fishery resources of India in relation to adjacent seas. J. Mar. Biol. Assoc. India, 15(1): 323-334.

Kepetsky, J. M, 1984: Coastal lagoon fisheries around the world some prospectives on fishery characteristics. In: management of coastal Lagoon fisheries No. 61; Vol 1; pp 98-116. edited by: N. Kepetsky Inland water Resources and Aquaculture service. FAO.

Khan, A. A., 1980: present status of fisheries in Bangladesh. In: report of the training course on prawn farming for Asia and the pacific. South China Sea Fisheries Development and co- ordinating programme Manila, Philippines. scs / scs / GEN / 81 / 28 / . pp 105-106.

Kugathasan. K. S., 1977: Memorandum on the History Devlopment and Activities of the Thondaimanar Field Work Centre. FWC- News Letter. Vol. VIII. NO. 1 pp 10- 15.

Samaranayake, R. A. D. B., 1982: Chanos chanos (milk fish) farming the Philippines. J. Inland Fish Vol 1; pp 126 - 137.

Visvalingam, K., 1989: Reports on the Jaffna lagoon scheme. No 3A/ w/ M/ 19 Irrigation Office Jaffna Division, Navatkuli, Kaithady.

Webb, E. R. C., 1943: Report on Jaffna peninsula Lagoon. scheme printed at the Ceylon Government Press.

If a man owns land,
the land owns him.


— Emerson

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்




திருமதி ஞா. சைவஇறைமணி, திரு. இ. இராதாகிருஷ்ணன், திரு. செ. யோகச்சந்திரன் (தலைவர்), திரு. பா. மீனாட்சிசுந்தரம் (செயலாளர்), திரு. மு. இரவீந்திரன் (பொருளாளர்), திருமதி சா. அரியரட்ணம்.
சமூகமளிக்காதவர்கள்: திரு. பொ. வெங்கடேஸ்வரன், திரு. கே. திருக்கேதீஸ்வரநாதன், திருமதி பா. விஜயராஜா, திரு. க. பாஸ்கரன்.

## சாரணர் மன்றம்



இருப்பவர்கள்: அ. தயாஹரன் (அணித்தலைவர்), செல்வி ஹா. ஞா. மாசலீன்பிள்ளை (உபஅதிபர்), மு. சதீஸ்குமார் (அணித்தலைவர்), திரு. மு. இரவிந்திரன் (பொறுப்பாசிரியர்), வி. விஜயவசந்தன் (அணித்தலைவர்), திரு. செ. யோகச்சந்திரன் (அதிபர்).
நிற்பவர்கள்: க. பிறேம்நாத், க. குருபரன், மோ. சங்கர், நி. விமல்ராஜ், க. ஜெயதாஸ், சி. சிவசெல்வன் பா. சிவச்செல்வன், ஆ. ரதன், வி. நாகநீதன், த. கோபாலகிருஷ்ணா, வி. நிஷாந்தன், இ. இரஜிந்தரா

*K. S. Krishnan M. A.*
— From: College Magazine
(December 1959)

# Thiruvalluvar and Education

What is Education? This question has been asked many a time and answered by the wise in various countries and at various times. "Of what use is one's learning if one does not worship the Almighty who is an embodimen of Pure Intelligence?" Says Thiruvalluvar. The fear of the Lord is the beginning of Knowledge, says the Holy Bible. The fear of the Lord is also the end of knowledge. Whether it is Science or Literature, the end of knowle-dge is to appreciate the vast and varied nature of this creation at which the human mind simply staggers. Then only it realizes that there must be some Power behind all this phenomenon which is beyond the ken of man's mind

That is the end of Education or learning. Then what to learn? The Tamil Sage says that: Learn-ing must be worthy: must be through and must guide people in their life. This is very general. It is so. For the content of education may vary from age to age, from country to country. But it must be worthy of acquisition and it must be thorough; for a little learning is a dangerous thing. It must be useful in one's life to the individual and to the Society.

What ever a man learns or does not learn, Thiruvalluvar mentions two key subjects which are to be learnt by every one. They are Numbers and Letters They are as it were the eyes fo human beings. They are, in fact the three R's, the writing being included in the other two. This knowledge of Numbers and Letters Mathematics and Literatur — is essential for all in all countries and at all times. These two are representative of Science and Arts. Mathematics is truly called the handmaid of Science and it will

unravel the complicated problems of Pure and Applied Science. Literature will widen the comprehension of the human mind and guide the same to the understanding of History, Economics, Politics and other Social Sciences.

If Numbers and Letters are the real eyes of man, then what about the Physical eyes of the unlettered? Thiruvalluvar answers it with his characteristic and subtle humour: — 'Only the learned are said to possess eyes; the unlettered have but two sores in their face. Learning gives one ability to perceive; that is the aim of education. The Physical eyes, instead of helping one to see, may even misguide and give pain. These eyes, may have defects. diseases and colour blindness. Learning is the real eye of man.

What is an educated man? Thiruvalluvar answers in his happy way:— The learned meet in great joy and part from one another with a hearty expectation to meet again'. In other words, an educated man is a gentleman. There will not be any ill feeling or jealousy of any kind among the truly learned. As they find good conduct among one another, as the meeting is sweet now, they heve an eager expectation to meet again. As the Gita says the learned will have their minds centred in Truth; their senses will be absorbed in lofty ideals: they will enlighten one another and be satisfied and delighted. This is also one of the aims of education.

Why should there be Education at all? Here is the Tamil Seer with his answer so 'modern' though it was given nearly two-thousand years ago:—'A learned man is at home in any country and in any place. Then why should one neglect learning even unto the day of one's death?: How true this statement of Thiruvalluvar is in this mo-dern Jet Age! Real education is trai-ning in adjustability, in understanding and respecting others' view points A man of such education will be respected in any country and in any place. He will make friends wherever he goes. The learned who visit other countries are the unofficial ambassadors of their mother land.

In this context it may be useful to remind ourselves of the observasion of Sir Richard Livingstone in one of his Lectures on Education. He says:- Men areborn to four Citizenships; they should be able to live as good members of their family, of their community, of their nation, and of the whole

human Society. How many of the world's troubles can be traced to a failure in one or other of these Citizenships to our never mastering the art of living with others, in the family, in the community in the nation, and in international relations'. Thiruvalluvar's ideal is to make educated men good members of the human society—or Citizens of the world. The idea of 'one world' is as old as our Tamil Sage.

The world is sane and believes in right thinking, right speaking and in right doing. That is what the learned desire. That is why education is valued every where. Where ever human beings live. Customs and manners may vary, philosophy and religion may vary, political systems and economic set-up may vary; but earning is valued as such, all over the world and learned men are at home every where because of the sterling character which their learning has bestowed on them.

Thiruvalluvar answers the same question—why education — in another way. He says: The learned love their learning all the more, because they find that the world also loves what they love?. If there is any one thing loved by the entire human race. it is learned and those who hear them. It is that which brings about real appreciation between the author and his critic or the dramatist and his audience As Prof. Gerrard observes. It was the people who wrote Shakespeare and acted too. Similarly, it may be said of any great poet Homer or Virgil, Viyasa or Valmiki, Kampan or Kalidasa, Thiruvlluv-ar or Bharati In other words, they were the representatives of the people and spoke their words. Humanity being the same in spite of differences in time and clime, these great learned men are for all time and for all countries. They belong to theentire humanity

Polytechnics and Vocational guidance are good and essential for increasing employment opportunities, for raising the standard of living of the masses and for advancing the industrial potentialities. But no system of education can neglect or ignore character building which is possible only by the study of the humanities. That is the greatest aim of Education according to Thiruvalluvar. Indeed the discipline of the mind is chara-cter. And only a diseiplined mind can appreciate the variety and vastness of God's Greation. We come to where we began. The end of all knowledge is the worship of the Lord.

கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை

# வடமராட்சிப் பாரம்பரிய கலைகள்



உலக நாடுகள் அனைத்திலும்பாரம்பரியக் கலைகள் உள்ளன. அவை இன்று பேணப்படுவதோடு அவற்றின் முக்கியத்துவமும் பேசப்படுகின்றன. அதே போல ஈழத் தமிழர்களுக்கெனவும் பாரம் பரியக் கலைகள் பல உள்ளன. அவை தனித்துவம் மிக்கவையாகவும், உயிர்த்துடிப்புள்ளனவாகவும் இன்று வரை பேணப்பட்டு வருகின்றன அந்த வகையில் யாழ்ப்பாணத்தின் ஒரு முக்கிய பகுதியாக விளங்கும் வடமராட்சியிலும் பாரம்பரியக்கலைகள் பல இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றுட் சில வழக்கொழிந்து விட்டன.

வடமராட்சியில் சிறப்புற்று விளங்கி வரும் கலைகளாக உடுக்குடிகதை, காவடி, கரகம், கும்மி, கோலாட்டம், நாட்டுக் கூத்து, இசை நாடகம் என்பனவுள்ளன. ஒரு காலத்தில் புரவியாட்டம் (பொய்க் கால் குதிரையாட்டம்), வசந்தனாட்டம் என்பனவும் இருந்ததாகத் தெரியவருகிறது. அவை இப்பொழுது பயில்நிலையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இக்கலைகள் பற்றித் தனித்தனியே ஆராய்வதன் முன் கலைகள் பற்றிச் சிறிது நோக்குவோம்.

## கலை ஒரு விளக்கம்

கலையென்பது கருத்தின் உறைவிடமாகவும் அழகின் சிறப்பிடமாகவும் உள்ளது. இன்பம் அதன் பயனாகும். 'ஒருவன் முன்பு அனுபவித்த உணர்வைத் தன்னுள்ளத்தில் மீண்டும் எழுப்பி அசைவுகள், கோடுகள், வர்ணங்கள், ஒலிகள் அல்லது சொல் வடிவங்கள் மூலம் அந்த உணர்வைப் பிறரும் உணரும்படி செய்ய வேண்டும். இதுவே கலையின் செயலாகும்' என்பர் இரஷ்யப் பேரறிஞர் டால்ஸ்ராய்.

'கலைகள் மனித சமூகத்தின் தொழிற் போக்கில் தோன்றியவை. அதனால் அவை மனித சமூகமயமானவை. இவற்றின் இயல்புகள் மனித சமூக அமைப்பின் பொதுவான தன்மைகளைப் பொறுத்து அமைகின்றன' என்பர் தொம்ஸன் எனும் அறிஞர்.

'எந்த ஒரு மனிதன் ஒரு கல்லைத் தனக்குப் பயன்படும் ஒரு கருவியாக அமைத்துப்பயன்படுத்த ஆரம்பித்தானோ அந்த மனிதனே உலகின் முதலாவது கலைஞனாவான்' என்பர் இன்னோர் அறிஞர் ஏர்னஸ்ட் பிஷர். இவ்வாறுதான் கலைகள் வடிவம்பெறத் தொடங்கின.

கலையின் செயல், பயன், திறமை, அழகு, சுவை என்ற அம்சங்கள் உண்டு. பயன் அம்சம் அதிகப்படுமானால் அது கைவினை என்ற பிரிவில் அடங்கும். அழகு அல்லது முருகியல் அம்சம் அதிகப்படுமானால் அது அழகுக் கலையாக அல்லது நுண்கலையாக வடிவம் பெறுகிறது. இவற்றுள் நுண்கலைகளை இரு பிரிவுக்குள் அடக்கலாம். அவை செந்நெறிக் கலைகள், கிராமியக்கலைகள் என்றழைக்கப்படும்.

கல்வியறிவு மிக்க நகரப்புற உயர் மட்ட மக்களால் பேணப்பட்டு வரும் கலைகள் செந்நெறிக் கலைகளாகும் (CLASSICAL ART) படிப்பறிவில்லாப் பாமர, நாட்டுப்புற, கிராமிய மக்களாற் பேணப்பட்டு வருவன கிராமியக்கலைகளாகும் (FOLK ART). எனினும் இரு கலைகளுமே கொண்டும், கொடுத்தும உறவாடி வந்துள்ளன என்கின்ற உண்மையையும் ஏற்கத்தான் வேண்டும். அந்த வகையில் வாழையடிவாழைபாக வளர்ந்து வரும் பாரம்பரியக் கலைகளாகிய கிராமியக் கலைகள்பற்றியும் அவை எவ்வாறு இங்கே வந்தன என்பது பற்றியும் நோக்குவோம்.

## வடமராட்சித் துறைமுகப் பட்டினங்கள்

வடமராட்சியில் இருபெரும் துறைமுகப் பட்டினங்கள் உள்ளன. ஒன்று வல்வெட்டித்துறை மற்றையது பருத்தித் துறை, இவைதவிர தொண்டமானாறும் துறைமுகப்பட்டினமாக இருந்ததென்பர். ''யாழ்ப்பாண பட்டினமேய பெருமாளே'' என அருணகிரியார் குறிப்பிடுவது செல்வச்சந்நிதி முருகனையே என்பர் பேராசிரியர் சண்முகதாஸ் போன்றோர், இது உண்மையெனில் தொண்டமானாறும் ஒருகாலத்தில் சிறந்தவோர் துறைமுகப் பட்டினமாக விளங்கியதென்பதில் ஐயமில்லை. கருணாகரத் தொண்டமான் காலத்தில் இது வணிகர்களால் பயன் படுத்தப்பட்ட துறைமுகமாக விளங்கிய தென்பது வரலாற்றுண்மையாகும்.

மேற்படி துறைமுகங்களூடாக இந்தியாவிலிருந்து பற்பல கலைஞர்கள் வட இலங்கைக்கு வந்து சென்றனர். காரைநகரில் உள்ள துறைமுகத்தினூடாகவும் (ஐயனார் கோவிலடி) காங்கேசன்துறைத் துறைமுகத்தினூடாகவும் இசைநாடகக் கலைஞர்கள் பலர் இலங்கைக்கு வந்துசென்றனர் என்பதை நாடக ஆய்வியலாளர்கள் நிறுவியுள்ளனர். அவ்வாறே வடமராட்சியில் இருந்த துறைமுகங்களூடாகக் கலைஞர்கள் பலர் வடமராட்சிக்கும் வந்து சென்றனர் என ஊகிக்கமுடிகிறது. ஏனெனில் வடமராட்சியில் இப்பொழுதும் பயில் நெறியில் உள்ள சில கலைகள் இந்தியக் கலைகளுடன் நெருங்கிய தொடர்புடையனவாகவுள்ளன. உதாரணமாக காவடி, கரகம், கும்மி, கோலாட்டம், புரவியாட்டம், உடுக்கடிகதை என்பனவற்றைக் கூறலாம்.

